# காலம்



மு.பொ
சிறப்பிதழ்



ISSN -1715 - 4030

இதழ் 36 மார்கழி 2010

# காலம் 36 ஆவது இதழ்...
# வாழ்த்துகின்றோம்!





## Murugadas Narayanasamy (Das)

Mortgage Broker, LIC # M08007147

Brokerage, Lic: 10464

*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*



ப.77

# மு.பொ. பக்கங்கள்

மு.பொவும் அவரது கவிதைகளும் — பேரா.சிவத்தம்பி
சாம்பலில் பிறந்து விண்ணில் பறக்கும் ... — என்.கே.மகாலிங்கம்
பண்ணாய் விசும்பில் படரும் சுருதி — மு.புஸ்பராஜன்
முரண்பட்டும் உடன்பட்டும் ... — அ.யேசுராசா
மையம் உடைக்கும் மனத்தளம் ... — மெலிஞ்சிமுத்தன்
மு.பொ. நேர்காணல் — ச.இராகவன்
அரைநாள்பொழுது — மு.பொ

| | | |
|---|---|---|
| மறுபக்கத்தின் குரல்கள் | 3 | ஜெயமோகன் |
| லைலா | 7 | சோபாசக்தி |
| எதை நான் உனக்குத் திருப்பித் தருவது | 15 | சேரன் |
| படசாரா காத்திருக்கின்றான் | 16 | எஸ்ராமகிருஷ்ணன் |
| வெ.சா.வித்தியாசமான மனிதர் | 20 | அ.முத்துலிங்கம் |
| செங்கடல் திரப்படமுன்னோட்டம் | 24 | |
| ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு | 27 | மணிவேலுப்பிள்ளை |
| கவிதைகள் | 31 | மயூ |
| கவிதைகள் | 33 | திருமாவளவன் |
| தமிழில் பல்லூடக ஆவணப்படுத்தல் | 34 | நற்கீரன் |
| என் ஆதர்ஸம் என் ஆசான் என் நண்பன் | 37 | பொ.கருணாகர மூர்த்தி |
| கவிதைகள் | 39 | புஸ்பராஜன் |
| ஒரு நாடக ஆசிரியர் நாடகமாகிறார் | 40 | சச்சிதானந்தன் சுகிர்தராஜா |
| சிறகு வளர்ந்த குரல்களுடன் பறந்தவன் | 44 | இளங்கோ |
| கவிதைகள் | 50 | தமிழச்சி தங்கபாண்டியன் |
| அழிக்கப்படும் பெண்குழந்தைகளும் ... | 53 | அருண்மொழிவர்மன் |
| கவிஞனின் மனைவி | 56 | பொ.கருணாகரமூர்த்தி |
| கவிதைகள் | 59 | தமிழ்நதி |
| Tamil Identity and Multiculturalism in Canada | 60 | Kirubhalini Giruparajah |
| 'காவல்கோட்டம்' | 64 | தேவகாந்தன் |
| சட்டநாதனின்சிறுகதைகள் | 67 | என்.கே.எம் |
| அம்பர்தோ எகோ: நேர்காணல் | 68 | எஸ்.வி.ர:.பேல் |
| அண்மைக்காலக் கவிதையும் அழகியலும் | 72 | செல்வா கனகநாயகம் |
| இலங்கை-இந்தியா-ஈழம்: ... | 77 | தா.சிவதாசன் |
| மிகு உணர்ச்சியும் விமர்சனப் பிறழ்வும் | 79 | பிரபஞ்சன் |

கவிதைகளுக்கும் பிற இடங்களிலும் அருந்ததி யின் ஓவியங்கள் பயன் பட்டுள்ளன. நன்றி! (www.oodaru.com)

# காலம்

இதழ் 36 மார்கழி 2010

**ஆசிரியர்**
செல்வம்

**ஆலோசனைக் குழு**
என்.கே.மகாலிங்கம்
செழியன்

**வடிவமைப்பு**
எஸ்.வி.ர்.'.பேல்

**முகப்பு ஓவியம்**
வாசுகி (நன்றி: www.oodaru.com)



**தொடர்பு முகவரி:**

KALAM
16 Hampstead crt,Markham ON
Canada L3R 3S7
Email: kalam@tamilbook.com

KALAM
44,First Floor, 5th Street
Om Sakthi Nagar, Valasarvakkam
Chennai 60 00 87, TamilNadu
Email: kaalammmagazine@gmail.com
Tel: 94 44 42 74 205



விலை: இந்திய ரூபாய் 50
சந்தாவிபரம்
இந்தியா:
ஓராண்டு 200 ரூபாய்
ஈராண்டு 400 ரூபாய்
ஐந்தாண்டு 1000 ரூபாய்

பிறநாடுகள்:
ஓராண்டு 1000 ரூபாய்
ஈராண்டு 2200 ரூபாய்
ஐந்தாண்டு 5000 ரூபாய்
சந்தாவுக்கு மேற்கண்ட தொலைபேசியில்
அல்லது மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்


முப்பத்தி ஆறு இதழ்களை கடந்துள்ளோம். எந்தவித உபகாரமும் எதிர்பாராமல் எத்தனையோ இலக்கிய ஆளுமைகள் தொடர்ந்து எழுதுகின்றார்கள். காலத்தின் கருத்துகளுடன் முழுமையாக உடன்படாதவர்கள் கூட காலத்தில் எழுதுகின்றார்கள் என்பது ஒரு உண்மையான இலக்கியத்துக்கு வெற்றிதான்.

உண்மையான இலக்கியம் மனிதர்களின் வாழ்வை சொல்லும். அவர்களின் வரலாற்றை கலாபூர்வமாக பதிவு செய்யும். எல்லாவற்றையும் விட மனித வாழ்வை உய்விக்கும்.

காலம் சஞ்சிகையை ஒரு முற்று முழுதான இலக்கிய சஞ்சிகையாகக் கொண்டு வருவதுதான் நமது நோக்கம். ஆனால் எம் மீது வன்முறையாக திணிக்கப்பட்ட அரசியலில் இருந்து எம்மாலும் கடக்க முடியவில்லை.

இந்த இதழ் மு.பொ சிறப்பிதழாக வருகின்றது.

'நீரோடு முத்தம் நிகழ்த்தும் அழிவானின், ஓரத்தே ஆடி ஒளிரும், ஒரு சுழிப்பில் தன்னை இனங்கண்டு தாவும் மனப்பேடு' தன் சிறகுகளை விரித்து வானில் பறந்து தன் இறகால் எழுதி படைப்புத் தொழிலில் ஈடுபட்டு வருபவர், கவிஞர் மு.பொ.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, கவிதை, கட்டுரை, நாவல், விமர்சனம், பத்திரிகாசிரியம் என்று அவர் எழுத்துக்கள் விரிந்து கொண்டே செல்பவை. அவருடைய 'மதிப்பீடு', மார்கழிக்குமரி', 'காலி லீலை' போன்ற கவிதைகளை இன்றும் நினைவில் வைத்திருக்கும் வாசகர்கள் பலர். ' அரை நாள் பொழுது', 'தவம்', 'கணங்களை விழுங்கிய யுகங்கள்' என்ற சிறு-கதைகள் தமிழில் படைக்கப்பெற்ற சிறந்த கதைகளில் சில. 'யதார்த்தமும் ஆத்மார்த்தமும்' தொகுப்பில் வெளிவந்த கட்டுரைகள் இன்றும் பலரால் பேசப்படுபவை. அவை தமிழ் விமர்சனப் போக்குக்கு எடுத்துக்காட்டுக்கள். 'திசை' என்ற பத்திரிகை யுத்த காலத்திலும் துணிவுடன் பத்திரிகைச் சுதந்திரத்துடன் சில காலமாவது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தது. அதன் ஆசிரியர் அவர். மேலாக, அவருடைய சமூக சேவைகள் அவர் கிராமத்தில் இன்னும் பேசப்படுபவை. அவை அனைத்துக்கும்மே ஆத்மீகவே அடிப்படை என்று நம்புகிறார். அதை நாம் அதற்குரிய மரியாதையோடு அணுகுவதே அவரின் படைப்புக்களை மதிப்பிடுவதற்கு அடிப்படை என்று பணிவுடன் நம்புகிறேன்.

'எங்கும் அலைகள் எறியும் கடல் நடுவே, பேரறியா நச்சுப் பிரண்டை விளைகின்ற ஓர் தீவில் ஒதுங்கிக் கிடக்கின்ற' மு.பொ. என்ற கவிஞரைக் கௌரவித்து இச்சிறப்பிதழை வெளியிடுவதில் காலம் பெருமைப்படுகிறது. அவர் மேலும் பல்லாண்டுகள் சுகத்துடன் வாழ்ந்து தமிழன்னைக்கு வளம் சேர்க்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

**செல்வம் அருளானந்தம்**

கட்டுரை

# மறுபக்கத்தின் குரல்கள்

ஜெயமோகன்

...என் கவனத்தைக் கவர்ந்த மூன்று பெண் கவிஞர்கள் ஆழியாள், அனார், பஹீமா ஜகான். மூவருக்குமான பொதுக்கூறுகள் என்றால் போர் மற்றும் இடம்பெயர்தலின் சூழலை அவர்கள் எதிர்கொள்கிறார்கள் என்பதே. மென்மையான நுட்பமான கவிமொழி அனுபவங்களுக்கு நேர்மையாக இருத்தல், வாசகனின் கற்பனையை நோக்கிப் பேசுதல் ஆகிய அம்சங்களில் இம்மூன்று கவிஞர்களும் எனக்கு முக்கியமானவர்களாகப் படுகிறார்கள்...

1992ல் ஒரு டெல்லி கருத்தரங்கில் யூ ஆர். அனந்தமூர்த்தி பேசும்போது சொன்னார் 'வரவேற்பறைகளில் இருந்து அறிக் கைகள்தான் வரமுடியும், இலக்கியம் சமையலறைகளில் இருந்தும் கொல்லைப் பக்கங்களில் இருந்தும் தான்வரும். மொத்த ஐரோப்பாவே மெல்ல மெல்ல அதன் சமையலறையையும் கொல்லைப் பக்கத்தையும் இழந்து கொண்டிருக்கிறது. இங்கிலாந்து அதன் கொல்லையை இழந்தபின் அயர்லாந்தின் கொல்லையைவைத்து நெடுநாள் சமாளித்தது. இப்போது அதுவுமில்லை. இந்தியாவின் கதை அதுவல்ல. நமது கொல்லைப் பக்கத்தை நாம் எட்டித்தான் பார்த்திருக்கிறோம். இன்னமும் உள்ளே நுழைந்து பார்க்கவில்லை'


நெடுநாள் என்னைக் கவர்ந்த கருத்தாக இருந்து வந்தது இது. பின்பு ஒரு கட்டுரையில் சுந்தர ராமசாமியும் ஏறத்தாழ இதே கருத்தைச் சொல்லியிருந்ததை வாசித்தேன். 'கூடத்தில் நாம் விசிறிமடிப்பு அங்கவஸ்திரங்களையும் வாங்கோக்களையும் உருவாக்கி வைத்திருக்கிறோம், அதில் கலைஞனுக்கு என்ன அக்கறை இருக்கமுடியும்' என்று அவர் எழுதியிருந்தார் 'ஜி.நாகராஜன் கதைகளுக்கு எழுதிய முன்னுரை' நம்முடைய வரவேற்பறைக்கு இன்னும் ஒரு தனித்தன்மை உண்டு. இங்கே நம்முடைய பொருட்கள் மிகமிகக் குறைவு. மேல்நாட்டுத் தலைவர்களின் காலண்டர்கள் தொங்கும் சுவர்கள் மேலை நாடுகளை போலிசெய்த வீட்டுப்பொருட்கள் மேலைநாடுகளில் இருந்து வந்த தொழில்நுட்பப்பொருட்களால் ஆனது அது.

நம்முடைய அரசியல் என்பது ஒரு வரவேற்பறை விவாதமே. அங்கிருந்து கட்டுரைகளும் துண்டுப் பிரசுரங்களுமே வரமுடியும், இலக்கியம் அல்ல. இலக்கியமாக வேண்டுமென்றால் அது கொல்லைக்குச் சென்றுசேரவேண்டும். நம்முடைய அரசியல் கவிதைகள் பெரும்பாலும் சுருக்கப்பட்ட துண்டுபிரசுரங்களோ விரிக்கப்பட்ட கோஷங்களோ மட்டுமே. அவற்றை இலக்கியம் என்று என்னால் ஒருபோதும் ஒத்துக்கொள்ள முடிந்ததில்லை.

இலக்கியத்தில் சொல்லப்படும் அரசியலைப்பற்றி ஆழமான அவநம்பிக்கையை நான் உருவாக்கிக்கொண்டது சுந்தர ராமசாமியின் வழியாகவே. 'இலக்கியத்தில் அரசியல் கூடாதா என்ற கேள்விக்கே இடமில்லை, அரசியல் இருக்கலாம், இருக்கும். ஆனால் இலக்கியத்தில் மிகமுக்கியமான ஒன்றுண்டு, அங்கே பிரக்ஞைபூர்வமாகச் சொல்லப்படும் எதுவும் நம்பகத்தன்மை இல்லாததே' என்றார் சுந்தர ராமசாமி.

ஆம், மிக அந்தரங்கமான, நுட்பமான, ஆழமான ஒன்றை நேரடியாகச் சொல்லிவிடமுடியாது என்ற மானுடநிலையில் இருந்தே இலக்கியம் என்ற மொழிவடிவம் பிறவிகொண்டது. இலக்கியத்தின் அத்தனை உத்திகளும் அழகியல் சாத்தியங்களும் இந்த சிக்கலில் இருந்தே உருவாகின்றன. காதல் முதல் பிரபஞ்சப்பேருணர்வு வரை மரணபீதிமுதல் அரசியல் வரை இலக்கியம் அதற்கேயுரிய மறைமுகவழிகளினூடாகவே சொல்லவேண்டியிருக்கிறது.

இலக்கியத்தின் வழி சொல்வதல்ல, உணர்த்துவதே. நேற்று டேவிட் அட்டன்பரோவின் இயற்கை பற்றிய நிகழ்ச்சி ஒன்றை பார்த்துக்கொண்டிருந்தேன். ஒரு குறிப்பிட்ட பூச்சுயிரி ஃபங்கஸ்' எறும்புவகை ஒன்றை பாதிப்பதை காட்டினார்கள். பூச்சுயிரி நேராக எறும்பின் மூளைக்குச் சென்றுவிடுகிறது. அதன்பின்பு அந்த எறும்பை அது செயல்படச்செய்கிறது. பூச்சுயிரி இனப்பெருக்கம் செய்ய என்னென்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் எறும்புசெய்கிறது. அதிகாலையில் மேயவரும் மாடுகளின் வயிற்றுக்குள் பூச்சுயிரியைச் செலுத்துவதற்காக எறும்பு புல்நுனியில் சென்று அமர்ந்திருப்பதைக் கண்டேன். இலக்கியத்தின் வழி அதுவே. அது வாசகனின் தர்க்கமனத்துடன் உரையாடுவதில்லை. அவனுடைய ஆழ் மனதுக்குள் சென்று அமர்ந்து வேலைசெய்கிறது அது.



ஈழக்கவிதைகள் மீதான என் அவநம்பிக்கையை மீண்டும் மீண்டும் பதிவுசெய்துகொண்டே இருக்கிறேன். காரணம் ஈழக்கவிதைகள் மிகப்பெரும்பாலும் வெற்று அரசியல் கூச்சல்கள்தான். அவை அவற்றை எழுதியவர் எவ்வாறாக தன்னைக் காட்டிக்கொள்ள விழைகிறார் என்பதற்கான சான்றுகள் மட்டுமே. அவை கூடத்தில் இருந்து வருபவைகூட அல்ல, தெருமேடைகளில் இருந்து எழுபவை. இந்த அவநம்பிக்கைக்கூற்று என் மீதான கசப்பை நண்பர்களிடம்கூட உருவாக்குகிறது. கவிதை எச்சில் தெறிக்க வெற்றுக் கோஷமிடுவதைக் காணும்போது ஓர் அருவருப்பே உருவாகிறது. அந்த கருவி அதற்கானது அல்ல என்றுதான் கூறவேண்டியிருக்கிறது.

ஆகவேதான் நான் ஈழப்பெண்கவிஞர்களை மேலும் கூர்ந்து கவனிக்கிறேன். அவர்களிடம் ஒரு கொல்லைப்பக்கம் சார்ந்த பார்வை இருக்கும் என்ற நம்பிக்கையில். பொதுவாக பெண்ணெழுத்து என்றாலே அது பெண்ணியம்தான் என ஆகிவிட்டிருக்கிறது. அந்த அரசியலுக்கான நிலைபாடுகளும் வாய்ப்பாடுகளும் இப்போது வகுக்கப்பட்டுவிட்டன. நிலைக்கட்டங்களில் சொற்களையும் படிமங்களையும் நிரப்பினால் போதும் என்ற நிலை வந்திருக்கிறது. அந்த பொறியில் சிக்காமல் தான் உணர்ந்தது எதுவோ அதை மட்டுமே உணர்த்த முயல்கிற, தன் அகத்துக்கு மட்டுமே கட்டுப்பட்ட குரல்களுக்காக எப்போதும் தேடிக்கொண்டிருக்கிறேன்

அவ்வகையில் என் கவனத்தைக் கவர்ந்த மூன்று பெண் கவிஞர்கள் ஆழியாள், அனார், பஹீமா ஜகான். மூவருக்குமான பொதுக்கூறுகள் என்றால் போர் மற்றும் இடம்பெயர்தலின் சூழலை அவர்கள் எதிர்கொள்கிறார்கள் என்பதே. மென்மையான நுட்பமான கவிமொழி அனுபவங்களுக்கு நேர்மையாக இருத்தல், வாசகனின் கற்பனையை நோக்கிப் பேசுதல் ஆகிய அம்சங்களில் இம்மூன்று கவிஞர்களும் எனக்கு முக்கியமானவர்களாகப் படுகிறார்கள்.

நெடுங்காலம் படிமங்களில் கவிதைகள் எழுதப்பட்டும்கூட அனார் கவிதைகளின் படிமங்கள் ஈர்க்கின்றன. அவை படிமங்களை இன்னொரு மொழிக் கட்டுமானத்தில் வைப்பதுதான் காரணம் என்று படுகிறது. உதாரணமாக தியாகம், அர்ப்பணம் ஆகியவற்றுக்கான படிமமாக மெழுகுவத்திகள் நெடுங்காலமாகவே சொல்லப்பட்டுவருகின்றன. ஆனால் அவற்றை மௌனமான எரிமலைகளாக காண்பது முற்றிலும் புதியது

"கொதி நிலை விதிக்கப்பட்டிருக்கும்
எரிமலை நெருப்பு உங்கள் முன்
மெழுகுவர்த்திகளில் ஏற்றப்பட்டும்
ஊதுபத்தியில் புகையவிடப்பட்டும்
அவமானத்துக்குள்ளாவதன் சித்திரவதை நான்..."

இந்த மொழியமைப்பு வழியாக வெளியாகும் மௌன எரிமலையையே நான் பெண்ணியத்தின் அழகியல் பூர்வமான குரலா கக் கொள்வேன். இப்படிமம் வழியாக நான் செல்லக்கூடிய தூரம் மிக அதிகம் என்பதனால்.

அனாரின் இவ்வரிகளில் ஒலிப்பது தன்னை அடையாளப் படுத்திக்கொள்ள முன்வைக்க முயலும் ஒரு மனம். பொதுவாக இந்த அம்சத்தை இந்தியப்பெண்கவிஞர்களின் ஆக்கங்களில் முழுக்க காணமுடிகிறது. 'நான்....' என்று அவை கூற முனைகின்றன. ஒன்று தன்னைப்பற்றிய ஒரு வரையறையை மறுப்பதாக அல்லது புதிய ஒரு வரைமுறையை உருவாக்கி அளிப்பதாக அவை அமைந்துள்ளன. அனாரின் வரிகளில் ஒரு வரையறை உள்ளதென்றால் ஆழியாளின் கவிதை வரிகளில் அவ்வரையறையை அழிக்கும் விழைவு

"வெகு இயல்பாய்
என் தடமழியும்
வள்ளம்
பதித்த நீர்ச் சுவடு போல
காற்றுக்
காவும்
மீன் வாசம் போல
கடற்கரைக் காலடியாய்
வெகு இயல்பாய்
என் தடமழியும்
நாலு சுவருள்
ஒற்றப்படும்
மென் உதட்டு முத்தம் போலவும்
எட்டுக்கால் படும் ஒற்றைச் செருப்படி
போலவும்.
வெகு இயல்பாய்





என் தடமழியும்
ஒளி விழுங்கின வானவில்லாய்."

தன்னை முன்வைக்கும் அதேகுரலில் தன் இன்மையை முன் வைப்பதாகவும் பெண் கவி தைகள் ஒலிப்பதன் முரண்பாட்டை புரிந்து கொள்வது எளிதல்ல போலும். அனாரின் வரிகளில்

என்னுடைய வரிகளில்
என்னைத் தந்து முடிவதும் இல்லை
எடுக்கவும் முடிவதில்லை

என்று அந்த இயலாமை பதிவாகிறது.

ஒரு புரிதலுக்காக இவ்வாறு சொல்லிப் பார்க்கலாம். பெண்ணின் அடையாளம் என்பது இங்கே நேர்நிலைச் செயல்பாடுகள் வழியாக இயல்பாக உருவாகி வந்ததாக இல்லை. அது அவள்மேல் பல்லாயிரம் வருடத்துப் பண பாட்டால் ஏற்றப்படடதாக உள்ளது. அவளுடைய உடலாக அல்ல உடையாகவே அவளுடைய சுயம் உள்ளது. ஆகவேதான் இது நானல்ல நானல்ல என்ற உணர்வு நமது பெண்க விஞர்களின் குரலாக மளமீள ஒலிக்கிறதுபோலும். தன் அடை டயாளத்தை மறுக்கும் பிறிதொன்றை நிறுவும் அடையாளங களுக்கு அப் பாற்பட்ட இன்மையை உணர்ந்து துணுக்குறும் மனநிலைகள் மாறி மாறி ஒரே கவிக்குரலில் ஒலிக்கின்றன.

இப்பெண்கவிகளுக்குள் உலவுகையில் மீண்டும் மீண்டும் என்னை உவகை கொள்ளச்செய்யும் அம்சம் இவை முழுக்கமுழுக்க கவிமொழியில் எழுதப்பட்டிருக்கின்றன என்பதே. கவிதையாக அக எழுச்சி பெறாத வெற்று வரிகள் நிகழ் வதே இல்லை. உண்மையான கவிஞரின் அகம் என்பது எந்தவிதமான செயற்கைக் கட்டுமான மும் இல்லாத காட்டுவெளி போன்றதென்று தோன்றுவதுண்டு

தூறலாய் சாரலாய்
பெரும் துளிகளாய் மாறித்
தன்னை நிகழ்த்திக் காட்டிக் கொண்டிருந்தது
அந்தி மழை

என்று பஹீமா ஜகானின் வரிகளை வாசிக்கும் போது அது உருவாக்கும் அர்த்தத்தின் தூண்டுதல் நிகழ்வதற்குள்ளேயே அச்சொல்ல மைப்பு உருவாக்கும் ஒரு அக எழுச்சி நிகழ்ந்து விடுகிறது. கவிதை நிகழ்வது அங்குதான், கருத்துப்பதிவு என்பது அதிலிருந்து விளையும் ஒரு இரண்டாம்கட்ட செயல்பாடுதான்

அதனாலென்ன
அவன் வாளுறைக்குள்
கனவை நிரப்புவது எப்படியென்று
எனக்குத் தெரியும்

என்று அனாரின் வரிகளில் அந்த கனவுத் தொழில்நுட்பத்தைக் காணமுடிகிறது. மிக எளி மையானது அந்த தொழில்நுட்பம். கவிஞனா கும் தருணம் அமையுமென்றால் கவிதை மிகமிக எளியது என்று ஒரு கட்டுரையில் தேவதேவன் சொல்கிறார். ஒரு குழந்தையின் மலர்ந்த விழிகளுடன் வாழ்க்கையை நோக்க முடிந்தால் கவிதை சொற்களில் இயல்பாக வந்தமைகிறது. பஹீமா ஜகானின் கவி தையில்

அசைந்து வரும் கரிய யானைகளைப்
பார்த்தவாறு
கைவிடப்பட்ட தனது கூட்டை எண்ணிக்
கண்ணீர் உகுத்திடலாயிற்று

என்று ஒரு குருவியின் தினத்தில் அந்தியின் வருகை யானைக-ளின் அசைவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த எளிய குழந்தை நிலையே கவிதைகளின் பிறப்பிடம். கொள்கைகள் கோட்பாடுகள் அல்ல. அரசியலும் தத்துவமும் அல்ல.

பொதுவாக, இந்தியப் பெண்கவிஞர்களின் கவிதைகளில் காணும் ஒரு சிறப்பம்சத்தையும் இவர்களில் காண்கிறேன். என் அழகியல் நோக்கில் அதை ஓர் எதிர்மறை அம்சமாகவே எண்ணுவேன். ஆனால் கிட்டத்தட்ட அத்தனை கவிஞர்களிலும் இக்கூறு உள்ளது என்னும்போது அதன் வேர்களைப்பற்றியே யோசிக்கவேண்டியிருக்கிறது. அதை கவியுருவகம் 'மெட்ட..பர்' எனலாம்.

கவிதையில் கவியுருவகங்களை பயன்படுத்துவது சற்று காலாவ தியான விஷயம். எப்படி அணிகளும் உவமைகளும் ஒரு கால கட்டத்து அழகியலுடன் தொடர்புள்ளனவோ அதைப்போல. கவி யுருவகங்கள் வாசகனுக்கு கற்பனைக்கான சாத்தியங்களைக் கொடுக்காமல் தங்களை அழுத்தமாக நிறுவிக்கொள்ளக்கூடி யவை. ஆகவே அவற்றை கவிதை சென்ற கால்நூற்றாண்டுக் கும் மேலாக தவிர்த்தே வருகிறது. அவற்றுக்குப் பதிலாகத்தான் படிமங்கள் கவிமொழியாக ஆயின. கவியுருவகங்கள் நாவலுக் குரியவை என்றாயிற்று. நாவலில் தரிசனங்களை பல கோணங் களில் வளர்த்து பல தளங்களுடன் தொடர்புபடுத்தி முன்னெடு

த்துச்செல்ல அவை உதவக்கூடியவை.

அள்ளிடும் தருணமெலாம்
மண்ணையும்
குறுணிக்கற்களையும்
அவள் கரங்களில்
எஞ்சவைத்து விட்டு
நெல் மணிகளோடு
நிலத்தில் ஒழுகிக் கொண்டிருந்தது காலம்

என்று பஹீமா ஜகானும்

ஓடிச் சுழித்து ஒன்றிணைந்தாடுகின்றன
தசையணிந்த நீர்ச் சுனைகள்

என்று அனாரும் இயல்பாகவே கவியுருவகங்களைப் பயன்படுத்துவதைக் காணலாம். சொல்லவந்ததை அழுத்த அடிக்கோடிட பெரிதாக்கிக்காட்ட இந்த கவியுருவகங்கள் அவர்களுக்கு தேவையாகின்றன போலும்.

சமகால ஈழக்கவிதையின் முக்கியமான குரல்களாக இவர்களை நான் காண்கிறேன். இச்சொற்களின் கவித்துவம் அளிக்கும் புத்துணர்ச்சியும் ஒளிவிடும் துயரமும் கவிதை என்ற வடிவத்தின் சாத்தியங்களை என்னுள் மீண்டும் புதுப்பித்தன. அரசியல் கூச்சல்கள் ஒலிக்கும் ஈழத்தின் திண்ணைகளுக்கு அப்பாலிருந்து மௌனம் கனத்த விம்மல்கள் போல, விணையதிர்வுகள் போல இவை ஒலிக்கின்றன.

www.tamilbook.com

அண்மையில் கிடைத்த புத்தகம்!




சிதைந்துபோன தேசமும்
தூர்ந்துபோன மனக்குகையும்
**சண்முகம் சிவலிங்கம்**

வாழும் தமிழ்
kalam@tamilbook.com

சிறுகதை

# லைலா

ஷோபாசக்தி

…பாரிஸ் நகரத்தின் ஒரு கபேயில் நான் செல்லத்துரையைச் சந்தித்தேன். நான் அவரிடம் 'அண்ணே, ராஜரத்தினம் இலங்கை நாயகி எண்டு பெயர்… அய்ம்பது வயசிருக்கும், லண்டனிலயிருந்து எண்பத்தி மூண்டில புளொட்டுக்கு வந்தவவாம். இப்ப பிரான்ஸில் இருக்கிறா. ஆளை உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டேன்….

…இலங்கை நாயகி தனது பேச்சை முடிக்கும்போது தனது கையிலிருந்த படத்தை உயரே தூக்கிக்காட்டி 'எங்கள் தலைவர் பிரபாகரன்' என்றார். அப்போது அவரது குரல் கணீரென ஒலித்தது. அன்று மே எட்டாம் தேதி…

இந்தக் கதையை படித்துக்கொண்டிருக்கும்போது எந்த இடத்திலாவது நீங்கள் ஒரு புன்னகையைச் செய்தால் இந்தக் கதைசொல்லியின் ஆன்மா வக்கிரத்தால் நிறைந்துள்ளதாக அர்த்தம். அல்லது புன்னகை செய்த உங்களது ஆன்மா அவ்வாறு சிதைந்து போயிருக்கலாம். ஒருவேளை நம்மிருவரது ஆன்மாக்களுமே வக்கரித்துப் போயிருக்கவும் கூடும்.

பிரான்ஸின் தற்போதைய அதிபர் நிக்கோலா சார்க்கோஸி நான்கு வருடங்களிற்கு முன்பு தனது தேர்தல் பிரச்சார உரையின்போது பாரிஸின் புறநகர்ப் பகுதியான ஸெயின் துறுவா மூலின் பெயரைக் குறிப்பிட்டு, தான் பதவிக்கு வந்தால் அந்தப் பகுதியைச் சுத்திகரிக்கப் போவதாகச் சொன்னார். அந்தப் பகுதியில்தான் நான் கடந்த பத்து வருடங்களாக இருக்கிறேன்.

உண்மையிலேயே இந்தப் புறநகர்ப் பகுதி ஓங்கிய சிறு மரக்காடுகளையும் பரந்த புல்வெளிகளையும் குறுக்கறுத்து ஓடும் ஸெயின் நதியையும் கொண்ட அழகிய நிலப்பகுதி. பிரான்ஸில் ஆபிரிக்கர்களும் அரபுக்களும் சிந்தி ரோமா நாடோடிகளும் ஆசிய நாட்டவர்களும் செறிந்து வாழும் பகுதியும் இதுதான். ஜனாதிபதி நிக்கோலா சார்க்கோஸி சூழலியலில் பெரும் அக்கறைகொண்டவர் எனப் பத்திரிகைகள் எழுதியுமுள்ளன. அவர் அந்த மரக்காடுகளையும் புல்வெளிகளையும் ஸெயின் நதியையும் எங்களிடமிருந்து காப்பாற்ற நினைத்திருக்க வேண்டும். எதிர்பார்த்தது போலவே அந்தத் தேர்தலில் நிக்கோலா சார்க்கோஸி வெற்றியும் பெற்றார். ஆனால் அவர் நினைத்திருந்தது போல எல்லாம் சுத்திகரிப்பை எங்கள் பகுதியில் நடத்திவிட முடியாது.

நிக்கோலா சார்க்கோஸி என்ன அந்த மாவீரன் நெப்போலியனே மறுபடியும் உயிர்பெற்று வந்தால் கூட எங்களது பகுதியில் மயிரைப் பிடுங்க முடியாது. இந்தப் பகுதியில் எவரும் பிரஞ்சு அரசாங்கத்தின் சட்டங்களை ஏற்றுக்கொள்வதில்லை. இங்கே எங்களுக்கான அறங்களையும் சட்டங்களையும் விதிகளையும் தண்டனைகளையும் நாங்களே எங்களுக்காக விதித்து வைத்துள்ளோம்.

பாரிஸ் நகரத்தில் வாழும் எனது நண்பர்கள் "நீ எப்பிடி அந்த ஏரியாவில சகிச்சுக்கொண்டு இருக்கிறாய்" என என்னைக் கேட்கும்போது நான் அவர்களிடம் திருப்பி "நீங்கள் எப்பிடித்தான் பரிஸில சகிச்சுக்கொண்டு இருக்கிறீங்களோ" எனக் கேட்பேன். எனது பகுதியில் வாழ்ந்தவர்களால் ஒருநாள் கூட பிரான்ஸின் வேறு பகுதிகளில் வாழ முடியாது. ஆனால் எங்களது பகுதியில் வந்து குடியேறியவர்கள் இறந்தால் அல்லது பொலிஸாரால் நாடு கடத்தப்பட்டால் தவிர இந்தப் பகுதியிலிருந்து வேறு இடங்களுக்குச் செல்வதில்லை.

பதின்மூன்று மாடிகளைக் கொண்ட தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றின் பத்தாவது தளத்தில் எனது வீடு இருந்தது. ஒரு மிகச்

சிறிய வரவேற்பறையையும் ஒரு சிறிய படுக்கை அறையையும் கொண்டது எனது வீடு. அந்த தொடர்மாடிக் குடியிருப்பில் இருந்த எல்லா வீடுகளுமே அவ்வகையானவைதான். எனது மாதச் சம்பளத்தில் சரிபாதி வாடகைக்குப் போயிற்று. பாரிஸ் நகரத்தில் இதேபோன்ற ஒரு வீட்டில் வாடகைக்கு இருப்ப தென்றால் முழுச் சம்பளத்தையுமே வாடகைக்காகத் தாரைவார்க்க வேண்டியிருக்கும்.

வேலைக்குச் செல்லாத நாட்களிலும் மாலை நேரங்களிலும் அநேகமாக நான் எங்களது தொடர்மாடிக் குடியிருப்பின் கீழ்த் தளத்திலிருக்கும் வாசற்படிக்கட்டில் குந்தியிருப்பேன். என்னோடு அந்தக் குடியிருப்பில் இருக்கும் இளைஞர்களும் குந்தியிருப் பார்கள். பலதும் பத்தும் பேசுவோம். எங்களிடையே அடிக்கடி கைகலப்பும் வரும். எல்லாமே ஒருநாள் கோபம்தான். அடுத்த நாள் கைகொடுத்துச் சமாதானமாகிவிடுவோம். இரவு நேரங்க ளில் அந்தப் படிகளில் உட்கார்ந்திருந்து பேசியவாறே குடிப் போம். எங்கள் குடியிருப்புக்குத் தனியாகக் காவலாளி தேவையி ல்லை. எந்த நேரமானாலும் யாராவது சிலர் வாசற்படிகளில் உட்கார்ந்திருப்போம். சிலர் அங்கேயே உட்கார்ந்தவாறே தூங்கி விடுவார்கள்.

எங்களை மிகவும் இடைஞ்சல் செய்வது பொலிஸ்காரர்கள்தான். திடீரெனச் சுற்றிவளைத்துக் கைகளை உயர்த்துமாறு கட்டளை யிட்டு எங்களைச் சுவரோடு நிறுத்தி வைத்துச் சோதனையிடு வார்கள். கத்தி, கஞ்சா, போலி விசா, திருட்டு செல்போன் என ஏதாவது அவர்களுக்குச் சிக்கும். எங்கள் குடியிருப்பே திரண்டு நின்று பொலிஸ்காரர்களைத் திட்டும். ஒருமுறை பொலிஸ் வாகனத்துக்குத் தீ வைத்த கதையும் இங்கே நடந்தது. பிரான் ஸில் போலிஸ்காரர்களுக்குக் காதலிகள் கிடைப்பதில்லை எனச் சொல்வார்கள். அத்தகைய ஒரு வெறுப்பு இங்கே பொலிஸ்காரர் கள்மீது மக்களுக்கு உண்டு. எங்கள் பகுதியில் பொலிசாருக்குக் காதலி அல்ல, தவித்த வாய்க்குக் குடிக்க ஒரு மிடறு தண்ணீர் கூட யாரும் கொடுக்கமாட்டோம்.

ஜனாதிபதி நிக்கோலா சாக்கோஸி எங்களது குடியிருப்புப் பகுதியைச் சுத்திகரிக்கப் போவதாகச் சொன்ன சில நாட்களில் எங்களது தொடர்மாடிக் கட்டடத்திற்கு அய்ம்பது வயதுகள் மதிக்கத்தக்க ஒரு தமிழ்ப் பெண்மணி வந்து சேர்ந்தார். முன்பு எங்களது தொடர்மாடிக் கட்டடத்தில் சில தமிழ்க் குடும்பங்கள் இருந்தன. பிள்ளைகள், குட்டிகள் பெருக அவர்கள் இங்கேயே அயலில் வேறு வீடுகளுக்குப் போய்விட்டார்கள். அதன் பின்பு இந்தப் பெண்மணி அங்கே வரும்வரை நான் ஒரேயொரு தமி ழன்தான் அங்கிருந்தேன். அந்தப் பெண்மணி நானிருந்த பத்தா வது தளத்திலேயே ஏழாம் இலக்கத்தில் குடியேறினார். எனது கதவு இலக்கம் அய்ந்து.

அந்தப் பெண்மணியைப் பார்த்தவுடனேயே அவர் பாண்டிச்சேரித் தமிழா அல்லது சிங்களப் பெண்மணியா என்ற சந்தேகங்கள் ஏதும் எனக்கு வரவில்லை. பொதுவாக அய்ரோப்பாவில் வாழும் அய்ம்பது வயது மதிக்கத்தக்க ஒரு ஈழப் பெண்மணி எப்படியி ருப்பாரோ, எவ்வாறு ஆடையணிவாரோ, எப்படித் தலை முடியை யைப் பின்னால் கூட்டிக் கட்டியிருப்பாரோ அப்படியே அவர் இருந்தார். ஆனால் அவர் தனியாக அங்கே குடிவந்ததும், கையில் ஒரு நாயைப் பிடித்தபடி வெள்ளைக்காரி மாதிரி வெளியே உலாவச் செல்வதும்தான் என்னைக் கொஞ்சம் குழப் பியது. அந்த அழகிய நாய் இரண்டு உள்ளங் கைகளுக்குள்ளும் அடங்கி விடுமளவிற்கு மிகச் சிறியதான ஓர் இனத்தைச் சேர்ந்தது. அந்த வெண்ணிற நாயின் உடல் சடைத்த முடிகளால் மூடப்பட்டிருந்தது. நாயின் காலெங்கே, வாலெங்கே எனக் கண்டு பிடிப்பதே சிரமம். நாயின் கண்கள் மட்டும்தான் வெளியே தெரிந்தன. அந்தக் கண்கள் எப்போதும் ஒளிர்ந்தவாறேயிருந்தன. மூக்குக் கண்ணாடியில் வரைந்து ஒட்டப்பட்ட கண்களைப்போல அந்தப் பெண்மணியின் கண்கள் மரத்திருந்தன. அந்தப் பெண்ம ணியின் கண்களில் ஒருபோதும் உணர்ச்சிகளை நான் பார்த்ததே கிடையாது.

நாங்கள் கட்டடத்தின் வாசற்படியில் உட்கார்ந்திருக்கும்போது அந்தப் பெண்மணியை எதிர்கொள்வதுண்டு. அவர் நாயுடன் எங்களைத் தாண்டிச் செல்லும் போது நாங்கள் "பொன்யூ மேடம்" என வணக்கம் தெரிவிப்போம். அவரும் பதில் வணக்கம் சொல்லிவிட்டுப் போவார். சில தடவைகள் "எப்படி நலமாயிருக் கிறீர்களா" என ஒன்றிரண்டு வார்த்தைகள் எங்களிடம் பேசுவார். அந்த ஒன்றிரண்டு வார்த்தைகளிலேயே அவர் பிரஞ்சுமொழி யைப் பிரஞ்சுக்காரர்கள் மாதிரியே உச்சரித்துப் பேசக் கூடியவர் எனத் தெரிந்தது. கீழ்த்தளத்தில் நாங்கள் அமர்ந்திருக்கும் படிக ளின் அருகிலேயே தபாற் பெட்டிகள் பொருத்தப்பட்டிருந்தன. ஒருநாள் அந்தப் பெண்மணி தனது தபாற் பெட்டியைத் திறந்து கடிதங்களை எடுப்பதைப் பார்த்துக்கொண்டிருந்த நான் அவர் சென்றதும் அந்தப் பெட்டியருகே சென்று அதில் எழுதப்பட்டி ருந்த பெயரைப் படித்துப் பார்த்தேன். அதில் ராஜரத்தினம் இலங்கை நாயகி எனப் பெயர் எழுதப்பட்டிருந்தது.

இலங்கை நாயகி அங்கு வந்து ஒருமாதம் கழிந்ததன் பின்னாகத்தான் எனக்கு அவரோடு பேச வாய்ப்புக் கிடைத்தது. நாங்கள் இருவரும் கீழ்த்தளத்தில் லிப்டுக்காகக் காத்திருந்த போது நான் அவரைப் பார்த்துப் புன்னகைத்தேன். அவர் என்னைப் பார்த்து மெதுவாகத் தலையசைத்தார். லிப்டுக்குள் ஏறியதும் நான் அவரின் கையிலிருந்த அந்த நாயைக் காட்டி "நல்ல வடிவான நாய்...என்ன பேர்?" என்று கேட்டேன். இலங்கை நாயகி ஒரு புன்னகையுடன் "லைலா" எனச் சொல்லிவிட்டு தனது கையிலிருந்த அந்த நாயைத் தடவிக் கொடுத்தார்.

நாய்க்கு யாராவது லைலா எனப் பெயர் வைப்பார்களா? எனக்குத்தான் அவர் சொன்னது சரியாகக் காதில் கேட்கவில்லை என்று நினைத்துக்கொண்டேன். நாய்க்கு லைக்கா எனப் பெயர் வைப்பவர்களுண்டு. முதன் முதலில் ரஷ்ய விஞ்ஞானிகள் விண்வெளிக்கு அனுப்பிய நாய்க்கு லைக்கா என்று பெயர். எனவே நான் இலங்கை நாயகியிடம் மறுபடியும் 'லைக்காவா' என்று கேட்டேன். அவர் வாயை அகலத்திறந்து 'லைலா'என அழுத்தமாக உச்சரித்துவிட்டு நாயை எனக்கு முன்னே ஒரு குழந்தையைத் தருவதுபோல நீட்டினார். நான் நாயைத் தடவிக் கொடுத்தேன்.

இருவரும் பத்தாவது தளத்தில் இறங்கினோம். நான் இலங்கை நாயகியிடம் "அக்கா, நாட்டிலயிருந்து வெளிக்கிட்டு கனகால மோ" என்று கேட்டேன்.

இலங்கை நாயகி என் முகத்தைப் பார்த்தவாறே "ஓம் தம்பி, எண்பதாம் ஆண்டு லண்டனுக்கு படிக்கவெண்டு போனது. எண்பத்தி மூண்டில அங்கயிருந்து திரும்பி இந்தியாவுக்கு போயிற்றன். பிறகு திரும்பியும் எண்பத்தாறில இஞ்ச வந்தனான்" என்றார்.

"லண்டனிலயிருந்து ஏன் திரும்பிப் போனீங்கள், படிப்பு முடிஞ்

சுதா இல்லாட்டி லண்டன் பிடிக்கயில்லையோ?"

இலங்கை நாயகி நாயை இறக்கித் தரையில் விட்டுக்கொண்டே "நான் லண்டனிலயிருந்து இயக்கத்துக்குப் போனனான் தம்பி" என்று சொல்லிவிட்டுத் தனது கதவை நோக்கி நடக்கத் தொடங்கினார். நான் இவ்வாறான ஒரு பதிலை ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை. மெதுவாக நடந்து கதவைத் திறந்து எனது வீட்டுக்குள் நுழைந்தேன்.

என்ன இந்த மனுசி ஒரு ரைப்பாக் கதைக்கிறதே என்று யோசித்தேன். முன்பின் தெரியாத ஆளிடம் தான் இயக்கம் என்று சொல்வதென்றால் இலங்கை நாயகியின் பேச்சில் ஏதோ உள்நோக்கம் இருக்கக் கூடும் என நான் எச்சரிக்கையானேன். என்னை அவர் உளவு பார்க்கிறாரா? இன்னொரு புறத்திலே "அந்த மனுசி இயல்பாகச் சொல்லியிருக்கவும் கூடும், அது உண்மையாகவுமிருக்கலாம், எதைப் பார்த்தாலும் தவறாகவே நோக்கிச் சந்தேகமும் அச்சமும் கொள்ளுமளவிற்கு உனக்குத்தான் மூளை வக்கிரமடைந்துவிட்டது" என்று என் மனம் குறுக்காலே சொல்லிற்று.

அடுத்தநாள் நான் வாசற்படியில் உட்கார்ந்திருந்தபோது தூரத்தே நாயுடன் இலங்கை நாயகி நடந்து வருவதைக் கண்டதும் நான் எழுந்து லிப்டுக்கு அருகாக வந்து நின்றுகொண்டேன். அவர் லிப்டின் அருகே வந்ததும் அவரைப் பார்த்துப் புன்னகைத்தேன். அவர் மெதுவாகத் தலையசைத்தார். லிப்டுக்குள் சென்று லிப்டின் கதவுகள் மூடிக்கொண்டதும் நான் இலங்கை நாயகியிடம் "அக்கா, நீங்கள் இயக்கத்துக்குப் போனதாச் சொன்னீங்கள்..எந்த இயக்கத்துக்குப் போனீங்கள்" என்று கேட்டேன். அதைக் கேட்காவிட்டால் எனக்குத் தலைவெடித்திருக்கும். அவர் பதில் சொல்வதானால் சொல்லட்டும்.

இலங்கை நாயகி நெற்றியைச் சுருக்கி உதடுகளைக் கடித்து மேலே பார்த்தார். பின்பு "அது.. புளொட்டோ என்னவோ ஒரு பேர் சொன்னாங்கள், நான் அங்க சமையலுக்கு நிண்டனான்" என்றார். லிப்டின் கதவுகள் திறந்ததும் அவர் என்னைத் திரும்பியும் பாராமல் தனது கதவை நோக்கிக் கால்களை அகல வைத்து விறுவிறுவென நடந்தார். எனக்கு மறுபேச்சு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. ஏதாவது திருப்பிப் பேசக் கூடிய மாதிரியா இலங்கை நாயகி பேசுகிறார். அவர் வாயைத் திறந்தாலே அவரின் வாயிலிருந்து முளைத்து ஒரு பாம்பல்லவா என்னைத் தீண்டுகிறது.

எனக்குக் கடி விஷம் ஏறிப் போய்விட்டது. இலங்கை நாயகிக்கு கொஞ்சம் மூளைப் பிசகு என்பதைத் தவிர வேறெதுவும் எனக்குத் தோன்றவில்லை. ஒரு எதிர்பாராத நேரத்தில் லிப்டுக்குள் வைத்து இலங்கை நாயகி என்னைத் துப்பாக்கியால் சுட முயற்சிப்பது போல எனக்கு எண்ணங்கள் வர ஆரம்பித்தன. அவர் துப்பாக்கியை எங்கிருந்து உருவுவார், அப்போது லிப்டுக்குள் எனக்கும் அவருக்கும் எவ்வளவு இடைவெளியிருக்கும், நான் எப்படி அவரிடமிருந்து துப்பாக்கியைத் தட்டிப் பறிப்பது, பறித்தவுடன் அவரை நான் சுட வேண்டுமா, அவரைச் சுட்டால் மட்டும் போதுமா அல்லது அவரது நாயையும் சுட வேண்டுமா என்று என் மனதிற்குள் கேள்விகள் ஒன்றின் பின் ஒன்றாகத் தோன்றி என்னை அலைக்கழித்தன.

உனக்கென்ன மனம் வக்கரித்துவிட்டதா? எதற்காக அந்த அழகிய நாய் லைலாவை நீ சுட வேண்டும் என என்னையே நான் கேட்டுக்கொண்டேன். ஜார் மன்னனை ட்ரொஸ்கி சுடும்போது ஜாரின் நாயையும் சுட்டுக் கொன்றார் என்ற விஷயம் அந்த நேரத்தில் என் ஞாபகத்திற்கு வந்தது. அடுத்து வந்த நாட்களில் நான் இலங்கை நாயகியின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஆரம்பித்தேன்.

அதுவொன்றும் இலேசமான காரியமாக இருக்கவில்லை. அவர் திடீரென தனது வீட்டிலிருந்து நாயோடு வெளியே வருவார். எங்களது குடியிருப்பின் அயலில் நாயோடு உலாவுவார். கொஞ்ச நேரம் நாயோடு புல்வெளியின் ஓரத்தில் போடப்பட்டிருக்கும் வாங்கில் உட்கார்ந்திருப்பார். வேறங்கும் அவர் போய் வருவதாகத் தெரியவில்லை. அருகிலுள்ள சீனாக்காரனின் மலிவு சுப்பர் மார்க்கெட்டுக்குள் அவர் நுழைந்து வெளியே வரும்போது கையில் நாய்க்கான உணவு அடைக்கப்பட்டிருக்கும் பேணிகளுடன் வருவார். இலங்கை நாயகி எங்கே வேலை செய்கிறார்? என்ன சாப்பிடுகிறார் சமைப்பதற்குப் பொருட்களை எங்கு வாங்குகிறார் என்பது ஒன்றுமாக விளங்கவில்லை.

என்னுடைய கண்காணிப்பிலும் குறைபாடுகள் இல்லாமலில்லை. வேலைக்குச் செல்லும் நாட்களில் அதிகாலையில் புறப்பட்டுச் சென்று மாலையில்தான் திரும்பி வருவேன். இரவு எட்டு மணிக்குப் பிறகு என் தலையில் இடியே விழுந்தாலும் உணராத அளவுக்குப் போதையிலிருப்பேன். வேலையில்லாத நாட்களில் நான் தூக்கத்தால் எழுவதே மதியம் கழிந்த பிறகுதான். ஆனால் இப்போது நான் இலங்கை நாயகியுடன் லிப்டில் தனியாகச் செல்லும் தருணங்களைக் கவனமாகத் தவிர்த்துக்கொண்டேன்.

விரைவிலேயே எனக்கு ஒரு வழி கிடைத்தது. உண்மையில் இலங்கை நாயகி புளொட் இயக்கமா, இல்லை மனுசி புத்தி பேதலித்துப் பிதற்றுகிறதா, இல்லை மனுசி கள்ள மனதோடு என்னுடன் பேசுகிறதா என அறிய ஒரு வாய்ப்புக் கிடைத்தது. நான் செல்லத்துரையைப் போய்ச் சந்தித்தேன். செல்லத்துரை புளொட் இயக்கத்தில் முக்கியமானவராக இருந்தவர். மத்திய குழுவில் கூட இருந்தவர் என்று யாரோ சொன்னதாக ஞாபகம். எண்பத்தாறிலோ எண்பத்தேழிலோ புளொட்டின் தள மாநாடு நடக்கும்வரை இயக்கத்திலிருந்து மாநாட்டோடு இயக்கத்திலிருந்து வெளியேறியவர். இப்போது அவருக்கு அரசியல் ஈடுபாடெல்லாம் கிடையாது. இடைக்கிடையே இலக்கியக் கூட்டங்களிற்கு செல்லத்துரை வருவார். அப்படி எனக்கு அவர் பழக்கம்.

பாரிஸ் நகரத்தின் ஒரு கபேயில் நான் செல்லத்துரையைச் சந்தித்தேன். நான் அவரிடம் "அண்ணே, ராஜரத்தினம் இலங்கை நாயகி எண்டு பெயர்.. அய்ம்பது வயசிருக்கும், லண்டனிலயிருந்து எண்பத்தி மூண்டில புளொட்டுக்கு வந்தவவாம். இப்ப பிரான்ஸில் இருக்கிறா. ஆளை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டேன்.

செல்லத்துரை கொஞ்சமும் யோசிக்காமல் " ஓ நீங்கள் லைலா தோழரைச் சொல்லுறீங்கள்" என்றார்.

"அண்ணே, லைலாத் தோழரா இல்லை லைலாவின்ர தோழரா? தெளிவாச் சொல்லுங்கோ, நான் ஏற்கனவே போதுமான அளவுக்குக் குழம்பியிருக்கிறன்"

"அவவுக்கு லைலா எண்டுதான் இயக்கத்தில பேர்"

"லைலா, மஜ்னு எண்டெலாம் ரொமான்டிக்கா உங்கிட இயக்கத்தில பேர் வைக்க மாட்டீங்களே! மெண்டிஸ், சங்கிலி,

மொக்கு மூர்த்தி எண்டு திகிலாத்தானே நீங்கள் பேர் வைப்பீங்கள்.”

“உமக்கு லைலாவெண்டா ஆரெண்டு விளங்கயில்ல. பாலஸ்தீன விடுதலை இயக்கம் முதல்முதலாய் ப்ளேன் கடத்தயிக்க அந்த ஒப்பிரேஷனைச் செய்த ஒரு பெண் போராளிக்கு லைலா எண்டு பெயர்”

“அண்ணே ஒரு பியர் குடிப்பமா, தலையிடிக்குது” என்று செல்லத்துரையிடம் கேட்டேன். அவருக்கு சீனி வருத்தமென்று சொல்லி பியர் வேண்டாம் என்றார். அவருக்கு ஒரு கறுப்புக் கோப்பியும் எனக்கு ஒரு பியரும் ஓடர் செய்தேன்.

“அண்ணே அவ லண்டனிலயிருந்தா இயக்கத்துக்கு வந்தவ?”

“ஓமோம்..அதென்னண்டா இவ லண்டனுக்கு படிக்கத்தான் போனது. அங்கதான் கீர்த்தி மாஸ்டரோட லவ்வானது. கீர்த்தி மாஸ்டர் அப்ப லண்டனில புளொட்டுக்கு வேலை செய்தவர். நல்ல அரசியல் தெளிவுள்ள ஆள். ரெண்டு பேரும் லண்டனிலயிருந்து ஒண்டாத்தான் வெளிக்கிட்டவை. கீர்த்தி மாஸ்டர் நேர பி. எல் ஓ. ட்ரெயினிங்குக்காக லெபனானுக்குப் போயிட்டார். லைலா இந்தியாவுக்கு வந்திற்றா. இந்தியாவில கே. கே. நகர் புளொட் ஒப்பிஸிலதான் இரண்டு வருசமா இருந்தவ.”

“அப்ப இவ லைலா இயக்கத்தில் பெரிய பொறுப்பில இருந்தவவா?”

“ஒப்பிஸில வேலை செய்தவ. கிட்டத்தட்ட உமாமகேஸ்வரனுக்கு செகரட்ரி மாதிரித்தான். இங்கிலீஸ் நல்லாத் தெரியும். அதால வெளிநாட்டுத் தொடர்புகள், மொழிபெயர்ப்புகள் எண்டு கன வேலை செய்தவ. இவவுக்கு அங்க மஞ்சள் குருவியெண்டு பட்டம்.”

“அதென்ன மஞ்சள் குருவி?”

“ஆம்பிள பொம்பிளை எண்டு வித்தியாசம் பாராம எல்லாரோடயும் நல்லாச் சிரிச்சுப் பழகுவா. உடுப்புகளும் அப்பிடி இப்பிடி லண்டன் ஸ்டைலிலதான் போடுவா. ஒருக்கா உமாமகேஸ்வரன் கூட உங்கிட லண்டன் பழக்கத்தை இஞ்ச காட்டாதீங்கோ, கட்டுப்பாடு தேவையெண்டு இவவ ஏசினது. ஆரைப் பார்த்தாலும் வழியிற கேஸ் எண்டு அவவுக்கு ஒரு பேரிருந்தது. லைலாத் தோழர் எங்களுக்கு முதலே இயக்கத்திலயிருந்து விலத்திற்றா.”

“ஏன் இயக்கத்திலயிருந்து வெளியில வந்தவ?”

“அது எனக்குச் சரிவரத் தெரியேல்ல, ஆனால் இயக்கம் உடையத் தொடங்கின உடனேயே கெட்டிக்காரங்கள் ஓடித் தப்பிற்றாங்கள். லைலா லண்டன் படிப்பெல்லா.. நாங்கள் அரை குறையள் நிண்டு இழுவுண்டு வந்தது. மொக்குகள் எல்லாம் அங்கயிருந்து செத்துப்போனாங்கள். புலி போட்டது அரை வாசி...எங்கிட ஆக்களே போட்டது அரைவாசி.”

“அந்தக் கீர்த்தி மாஸ்டர் இப்ப எங்க?”

“ஆருக்குத் தெரியும்! பி.எல்.ஓவுக்குப் போன ஆளை பிறகு ஒருதரும் கண்டதாத் தெரியேல்ல. அவர் லெபனானிலேயே அடிபாட்டில செத்துப்போனார் எண்டு ஒரு கதையிருக்கு. அப்பிடியில்ல லெபனானில மாணிக்கத்தோட பிரச்சினைப்பட்டுத் திருப்பி இந்தியாவுக்கு வந்துதான் காணாமல் போனவர் எண்டும் ஒரு கதையிருக்கு.”

செல்லத்துரையிடம் பேசிவிட்டுத் திரும்பி வரும் வழியெல்லாம் எனக்கு இலங்கை நாயகி குறித்த சித்திரங்களே மனதிற்குள் வந்து போயின. ஆனால் இப்போது மனது கொஞ்சம் நிம்மதியாயிருந்தது. அடுத்தநாள் கீழ்த்தளத்தில் லிப்டின் அருகே காத்திருந்து அவருடன் லிப்டில் ஏறி அவரைப் பார்த்துப் புன்னகைத்தேன். அவர் வழமைபோலவே தலையைச் சிறிது அசைத்து வைத்தார்.

நான் புதிதாகப் பார்ப்பதுபோல ஓரக் கண்ணால் இலங்கை நாயகியைக் கவனித்தேன். அவர் தலை குனிந்து கையிலிருந்த நாயைத் தடவிக்கொண்டிருந்தார். இலங்கை நாயகி எலுமிச்சம் பழ நிறம். அதனால் கூட அவருக்கு மஞ்சள் குருவியென்று பெயர் வந்திருக்கலாம் என நினைத்துக்கொண்டேன். சற்றுப் பருமனான உடல்வாகு, அல்லது அவரது குள்ளமான தோற்றம் அவரைப் பருமனாகக் காட்டுகிறது. தலையில் ஒரு நரை முடி கூடக் கிடையாது. லிப்ட் கதவுகள் திறந்ததும் விறுவிறுவென அவர் கால்களை அகற்றி வைத்து வேகமாக நடந்து போனார். இப்படிக் கால்களை எறிந்து விறுக்காக நடந்துபோகும் பெண்களை ஊரில் ஆண்மூச்சுக்காரி என்பார்கள்.

ஒருநாள் காலையில் நான் கீழ்த்தளத்து வாசற்படியில் உட்கார்ந்திருந்தபோது தபாற்காரி வந்து தபாற் பெட்டிகளிற்குள் கடிதங்களைப் போட்டுக்கொண்டிருந்தாள். திடீரென ஒரு யோசனை உதிக்க நான் போய் தபாற்காரியின் அருகில் நின்று இலங்கை நாயகிக்கு ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா எனக் கவனித்தேன். அன்று இலங்கை நாயகிக்குக் கடிதம் வந்திருந்தது. அதைத் தபாற்காரி இலங்கை நாயகி என்று எழுதப்பட்டிருந்த பெட்டிக்குள் போட்டுவிட்டுச் சென்றதும் நான் கீழே கிடந்த ஒரு நீளமான மெல்லிய குச்சியை எடுத்து அந்தக் குச்சியைப் பெட்டிக்குள் விட்டு லாவகமாகக் கடிதத்தை வெளியே எடுத்தேன். எங்கள் தொடர்மாடிக் குடியிருப்பில் இவ்வாறு குச்சிவிட்டு ஆட்டும் வேலையை ஒளிவு மறைவாகச் செய்ய வேண்டிய அவசியமில்லை. பொதுவாகவே தபால் பெட்டிக்குச் சாவியிருக்கிறதோ இல்லையோ அநேகமானோர் இவ்வாறு குச்சி விட்டுத்தான் கடிதங்களை எடுத்தார்கள். தபால் பெட்டிகளுக்குக் கீழே நீளமான குச்சிகள் எப்போதும் கிடக்கும்.

நான் அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு பத்தாவது தளத்திற்கு வந்தேன். எங்கே வேலை செய்கிறார், என்ன வருமானம், அவரின் தொடர்புகள் எத்தகையவை என எந்தவொரு தடயத்தையும் எனக்குத் தராமல் புகையால் வரைந்த ஒரு சித்திரம் போல இலங்கை நாயகி எங்களது குடியிருப்பில் இருந்தார். இந்தக் கடிதத்தைக் கொடுக்கும் சாட்டில் இலங்கை நாயகியின் வீட்டிற்குள் நுழைவது, குறைந்த பட்சம் அவர் கதவைத் திறந்து கடிதத்தை வாங்கும்போது கதவு இடைவெளிக்குள்ளால் அவரது வீட்டின் உள்ளே எட்டியாவது பார்த்துவிடுவது என்பதுதான் எனது திட்டம். உண்மையில் எனக்கு இதுவொரு தேவையில்லாத வேலைதான். ஆனால் யாரைப் பார்த்தாலும் எதைப் பார்த்தாலும் சந்தேகத்துடனும் எச்சரிக்கையாகவும் இருக்குமாறு எனது மனம் என்னை வழிநடத்திற்று.


நான் ஏழாம் இலக்கக் கதவின் முன்னே நின்று அழைப்பு

மணியை அழுத்திக் கையை மணியிலிருந்து எடுக்கவில்லை சடா ரெனக் கதவு திறந்தது. இலங்கை நாயகி கதவுக்குப் பக்கத்தி-லேயே நின்றிருக்க வேண்டும். அல்லது இவ்வளவு சடுதியில் கதவு திறபட வாய்ப்பேயில்லை. திறந்த கதவு நான்கு அங்குலங் கள் மட்டுமே திறந்தது. கதவுக்கும் நிலைக்கும் இடையே உட்புற மாக ஒன்றுக்கு இரண்டாக இரண்டு சங்கிலிகள் இணைக்கப்பட் டிருந்தன. அந்த நாய் கீச்சிடும் சத்தம் கேட்டது. திறந்த கதவு இடைவெளிக்குள்ளால் மூக்குக் கண்ணாடியணிந்த இலங்கை நாயகியின் கண்கள் என்னைப் பார்த்தன.

"எக்ஸ்கியூஸே முவா மேடம், உங்கிட பெயர் ராஜரத்தினம் இலங்கை நாயகியா?"

கதவின் இடுக்கு வழியே பதில் ஏதும் வரவில்லை.

"இலங்கை நாயகி எண்ட பேருக்கு வந்த கடிதம் ஒண்டு என்ர பெட்டிக்க கிடந்தது. தபால்காரி மாறிப் போட்டுட் டாள் போல" என்று கடிதத் தைக் கதவு இடுக்கை நோக்கி நீட்டினேன்.



"கடிதத்தைக் கொண்டுபோய் என்ர தபால் பெட்டிக்குள்ள போடுங்கோ" என்று இலங்கை நாயகி சொன்னதும் கதவு சாத்தப்பட்டதும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன.

ஒரு ஞாயிற்றுக்கிழமை நான் பகல் தூக்கத்திலிருந்தபோது அழைப்பு மணி ஒலித்தது. மாதத்தின் முதல் ஞாயிறு. எங்களது குடியிருப்புப் பகுதிக்கு இயக்கப் பொடியன்கள் பத்திரிகைகள் விற்கவும் பணம் சேர்க் கவும் வரும் நாள். நான் எழுந்து சென்று கதவைத் திறந்ததும் எனது கையைப் பற்றிக் குலுக்கியவாறே இரண்டு பொடியன் களும் உள்ளே வந்து அமர்ந்தார்கள்.

"சொல்லுங்க தம்பியவ, நாட்டில என்ன புதினம்?" என்று நான் அவர்கள் எதிரே அமர்ந்தவாறே கேட்டேன்.

"சொன்னா நீங்கள் என்ன உதவியா செய்யப் போறீங்கள்" என்று அவர்களில் ஒருவன் கசப்புடன் சொல்ல, மற்றவன் என்னை வலு தீவிரமாகப் பார்த்துக்கொண்டே "அண்ணன், இப்ப உலக நாடுகள் எல்லாம் எங்கிட போராட்டத்தக் கவனிக்குது. தமிழீழ அரசு அமைஞ்சிற்றுது. எங்களட்ட முப்படையுமிருக்கு, ஒரு நீதி நிர்வாகம் இருக்கு, காவல்துறை இருக்கு, வங்கி இருக்கு. எங்கிட அரசை உலகம் அங்கீகரிக்கிறதுதான் மிச்சம். உங்களப் போல ஆக்கள எல்லாம் இந்த நேரத்தில எங்களுக்கு உதவி செய்ய வேணும்." என்றான்

நான் அவர்களைப் பார்த்து எனது முகத்தைப் பாவமாக வைத்தவாறே "தம்பி நீங்கள் என்ன சொன்னாலும் தாறதுக்கு என்னட்டக் காசில்ல. இந்தப் புத்தகம் பேப்பருகளைத் தாங்கோ அதுக்கு மட்டும் காசுதாறன்" என்றேன். அவர்கள் என்னிடம் ஒரு சஞ்சிகையையும் பத்திரிகை ஒன்றையும் தர நான் எண்ணிச் சில்லறைகள் கொடுத்தேன்.

சில்லறைகளை வாங்கிக்கொண்டு பொடியன்கள் புறப்படும்போது எனக்கு அந்த எண்ணம் திடீரெனத் தோன்றியது. நான் அந்தப் பொடியன்களைப் பார்த்து "தம்பி இஞ்ச ஏழாம் நம்பரில புதுசா ஆக்கள் வந்திருக்கினம், அங்க போனீங்களா?" என்று கேட்டேன். பொடியன்கள் பிரேக் அடித்து நின்றார்கள்.

"என்ன பேர்?"
"இலங்கை நாயகி"
"சிங்களப் பேர் மாதிரியெல்லோ கிடக்கு"
"இல்லைத் தம்பி தமிழ்தான். இலங்கை நாயகி எண்டது தமிழ்ப் பேர்தான், சிங்களமெண்டா லங்காராணியெண்டல்லோ பேர் இருக்கும்."

பொடியன்கள் வெளியே போனதும் நான் கதவைச் சாத்திவிட்டு உள்ளே நின்று கதவில் இருக்கும் வெளியே பார்க்கும் துவாரம் வழியாக வெளியே நடப்பதை அவதானித்தேன். அந்தப் பொடி யன்கள் ஏழாம் இலக்கக் கதவருவே போய் நின்று அழைப்பு மணியில் கை வைக்கவும் கதவு சடாரெனத் திறந்தது. பொ-டியன்கள் உள்ளே பாரத்துப் பேசுவது தெரிந்தது. ஆனால் அவர் கள் பேசுவது இங்கே எனக்குக் கேட்காது. திறந்த வேகத்தி-லேயே இலங்கை நாயகியின் கதவு மூடப்பட்டது.

நான் மெல்ல எனது கதவைத் திறந்து வெளியே வந்து இயக்கப் பொடியன்களிடம் "தம்பி மனுசி என்ன சொன்னது?" எனக் கேட்டேன். ஒரு பொடியன் சலித்துக்கொண்டே "மனுசி கதவே திறக்கமாட்டன் எண்டு சொல்லிப் போட்டுது. இயக்கப் பத்திரிகை வாங்குங்கோ எண்டு கேட்டதுக்கு பேப்பரைக் கொண்டு போய்க் கடையில போடுங்கோ வாங்குறன், வீட்டை வரக் கூடாது எண்டு சொல்லிப்போட்டுது" என்று சொல்ல, அடுத்தவன் "இலங்கை

நாயகி எண்டது மனுசிக்குப் பொருத்தமான பேராத்தான் கிடக்குது" என்றான்.

எனக்கு இலங்கை நாயகி மேல் மெது மெதுவாக ஆர்வம் குறையலாயிற்று. ஏனெனில் அதுக்கு மேலே தலைபோகிற பிரச்சினைகளெல்லாம் என்னைச் சூழ நடந்துகொண்டிருந்தன. பிரான்ஸில் வாழும் ஒரு இலட்சம் தமிழர்களில் எனக்கு இலங்கை நாயகியும் ஒருவரானார். எப்போதாவது அவர் எதிர்ப்பட நேரிடுகையில் நான் வணக்கம் சொல்வதும் அவர் தலையசைப் பதும் தொடர்ந்தது. நான் புன்னகைக்கும்போது அவர் எனக்குத் தான் தலையசைக்கிறாரா அல்லது எப்போதுமே கையிலிருக்கும் தனது நாயோடு தலையசைத்து அவர் செல்லம் கொஞ்சுகிறாரா என்று எனக்கு வரவரச் சந்தேகமாயிருந்தது.

ஒருநாள் எனது அழைப்பு மணி ஒலிக்கக் கேட்டு நான் கதவைத் திறந்தபோது அங்கே இலங்கை நாயகி நின்றிருந்தார். நான் "உள்ளுக்க வாங்க அக்கா" என்று கூப்பிட்டுவிட்டு அறைக்குள் வந்து நின்றேன். அவர் ஓரடி முன்னால் வந்து திறந்திருந்த கதவைப் பிடித்தவாறே நின்றார். எனக்கும் அவருக்கும் இடையே இருந்த மேசையில் எனது சிகரெட் பெட்டிகிடந்தது. எதற்கு இவர் என்னிடம் வந்திருக்கிறார் என்று நான் மண்டையைக் கசக்கியவாறே சிகரெட் பெட்டியை எடுக்க ஓரடி முன்னால் சென்றபோது இலங்கை நாயகி பதறிப்போய் பின்னால் நகர்ந்து வெளியேசென்றார். "நான் மஞ்சள் குருவிய ரேப் செய்யப் போறனாக்கும் அதுதான் பயப்பிடுறா" என்று ஆத்திரத்துடன் நான் மனதிற்குள் சொல்லிக்கொண்டே ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தேன். அவர் என்னைப் பார்த்து அவ்வாறு பதறியடித்தது எனக்குக் கொஞ்சம் அவமானமாயுமிருந்தது. இலங்கை நாயகி மறுபடியும் முன்னால் வந்து கதவைப் பிடித்துக்கொண்டு நின்றார்.

"அன்ரனிதாசன் நீங்கள் எனக்கொரு உதவி செய்வீங்களா?"

என்னுடைய பெயர் எப்படி இவருக்குத் தெரியும்..? சரி அவரும் தபாற் பெட்டியில் பார்த்திருப்பார்போல என்று நினைத்துக் கொண்டே "சொல்லுங்கோ அக்கா என்ன செய்ய வேணும்" என்று கேட்டேன்.

"எனக்குச் சரியான சுகமில்லாமல் கிடக்குது. வெளிய போக ஏலாமக் கிடக்கு. லைலாவுக்கு சாப்பாடு வாங்கவேணும் வாங்கிக்கொண்டுவந்து தருவீங்களா என்று கேட்டார். நான் தலையாட்டியதும் அவர் மெதுவாக நடந்து வந்து கையில் வைத்திருந்த பணத்தையும் உணவுப் பொருட்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்த தாளையும் மேசையின் விளிம்பில் வைத்து விட்டுச் சென்றார்.

நான் நாய்க்கான உணவுப் பொருட்களை வாங்கிக்கொண்டு வரும்போது இலங்கை நாயகி என்ன சாப்பிடுவார், அவருக்கு ஏதும் தேவையில்லையா? என யோசித்துக்கொண்டே வந்தேன். இலங்கை நாயகியின் கதவின் முன்னால் நின்று நான் அழைப்பு மணியில் கை வைத்ததும் நான் எதிர்பார்த்தது போலவே கதவு உடனே திறக்கப்பட்டது. அந்த நான்கு அங்குல இடைவெளிக் குள்ளால் நான் பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுக்க இலங்கை நாயகி ஒவ்வொன்றாக வாங்கி வைத்துக்கொண்டார். நான் அத்தோடு வந்திருந்தால் மரியாதை. நான் பேச்சை வளர்க்கும் ஆர்வத்தில் "நாட்டில் என்ன செய்தியெண்டு ஏதாவது அறிஞ்சியளோ" எனக் கேட்டேன். "எனக்கு ஒண்டும் தெரியாது.

என்ற பதில் வந்ததும் கதவு மூடப்பட்டதும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன.

அது ஸ்ரீலங்காவில் யுத்தம் உக்கிரமாக நடந்துகொண்டிருந்த நேரம். புலிகளின் விமானங்கள் கொழும்பில் குண்டு வீசியதாகச் செய்திகள் வந்துகொண்டிருந்த நேரமது.

நான் இலங்கை நாயகியின் உடல்நிலை குறித்து ஏதாவது கேட்டிருந்தால் அவர் பதில் சொல்லியிருக்கலாம் என நினைத்துக்கொண்டேன்.

கொடும்பனி கொட்டிக்கொண்டிருந்த காலமது. புல்வெளிகள் எல்லாம் பனிப் பாலைகளாக மாறியிருந்தன. ஜனவரி மாதத்தில் கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றிவிட்டதாகச் செய்திகள் வந்தன. பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் என எல்லா மாதங்களுமே அவலச் செய்திகளுடன் பிறந்து மடிந்துபோயின. மே மாதத் தொடக்கத்தில் குளிர் மடியத் தொடங்கிற்று. நான் கீழ்த்தளத்து வாசற்படியில் குந்தியிருந்தபோது இலங்கை நாயகி சுமக்க முடியாத சுமையுடன் தூரத்தே நடந்து வருவது தெரிந்தது. நான் எழுந்து அவரை நோக்கி நடந்தேன். அவரின் கைளில் இருந்த இரண்டு பைகள் நிறையப் பாண் துண்டங்கள் இருந்தன. அவரின் பின்னே லைலா மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தது. நான் அவரின் கைகளிலிருந்த பைகளை வாங்கிக் கொண்டேன்.

லிப்டில் போகும்போது நான் இலங்கை நாயகியிடம் "எதுக்கு இவ்வளவு பாண்?" என்று கேட்டுச் சிரித்தேன்.

இலங்கை நாயகி தனது நாவால் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு "குளிருக்க நிண்டு எங்கிட பிள்ளையள் போராடிக் கொண்டிருக்குதுகள். அதுகளுக்கு சாண்ட்விச் செய்துகொண்டுபோய்க் குடுக்கப் போறன்" என்றார்.

நான் இலங்கை நாயகியின் கதவுவரை சென்று பாண் துண்டங்கள் நிறைந்த பைகளைக் கீழே தரையில் சுவரோடு சாய்த்து வைத்தேன். இலங்கை நாயகி நான் அங்கிருந்து நகரும்வரை காத்திருந்துவிட்டு, தனது கதவைத் திறந்து பைகளை இழுத்துக்கொண்டு உள்ளே போனார். லைலா உள்ளே நுழைந்ததும் கதவு மூடப்பட்டது.

நான் இரவு தொலைக்காட்சியில் செய்திகளைப் பார்த்துக்கொண்டிருந்தபோது ஈழத் தமிழர்கள் பாரிஸ் நகரில் ஈபிள் கோபுரத்தின் கீழே நாற்பது நாட்களாகத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கும் போராட்டத்தைக் காண்பித்தார்கள். மேலேயிருந்து ஒளிப்பதிவு செய்திருக்கிறார்கள். எப்படியும் முப்பதாயிரம் சனத்துக்குக் குறையாது என் நினைக்கிறேன். இப்போது தொலைக்காட்சியில் இலங்கை நாயகி தோன்றினார். அவரின் கையில் பிரபாகரனின் படம் இருந்தது. செய்தியாளரிடம் அவர் பிரஞ்சு மொழியில் துல்லியமாகப் பேசினார். "இலங்கையில் போரைத் தடுத்து நிறுத்தி அங்கே விமானத் தாக்குதல்களாலும் கொத்துக் குண்டுகளாலும் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களைக் காப்பாற்றுங்கள், ஒரு தாயாகக் கேட்கிறேன்..சர்வதேசமே எனது பிள்ளைகளைக் காப்பாற்று" என்று விம்மிய குரலில் பேசினார் இலங்கை நாயகி. பேசும்போது அவரின் உடல் பதறிக்கொண்டிருந்தது. அவரின் கைகள் தொலைக்காட்சிச் செய்தியாளரை அடிப்பதுபோல முன்னும் பின்னும் போய்வந்தன. அவர் ஒரு நிமிடத்திற்கும் குறைவாகத்தான் பேசியிருப்பார். ஆனால் அவ

ரின் குரலும் ஓலமும் கேட்பவர்களின் ஆன்மாவை உலுக்கக் கூடியவை. இலங்கை நாயகி தனது பேச்சை முடிக்கும்போது தனது கையிலிருந்த படத்தை உயரே தூக்கிக்காட்டி "எங்கள் தலைவர் பிரபாகரன் என்றார். அப்போது அவரது குரல் கணீரென ஒலித்தது. அன்று மே எட்டாம் தேதி.

அதற்குப் பின்பு ஒரு மாதம் கழிந்திருக்கும், நான் எனது கதவைத் திறந்து லிப்டை நோக்கிச் சென்றபோது அங்கே நாயுடன் லிப்டுக்காகக் காத்திருந்தார் இலங்கை நாயகி. லிப்ட் கதவுகள் முடிக்கொண்டன. இருவரும் ஒரேதளத்தில் பக்கத்துப் பக்கத்து வீடுகளில் இருக்கிறோம், ஆனால் நம்முடைய பேச்சு வார்த்தைகள் என்னவோ லிப்டில்தான் நடக்கின்றன. இயக்கமும் அரசாங்கமும் சொந்த நாட்டில் பேசாமல் முன்றாவது நாடொன் றில் பேசிக்கொள்வதுபோல நமக்கு லிப்ட் முன்றாவது தளம்.

"அக்காவ கொஞ்ச நாளைக்கு முன்னம் நான் பிரஞ்சுச் செய்தியில் பார்த்தனான்.'

இலங்கை நாயகி மெதுவாகத் தலையசைத்தார். அது நாய்க்கா அல்லது எனக்கா என்பது தெரியவில்லை. நான் அவரின் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டே "கையிலயிருந்த படத்தை யெல்லாம் தூக்கிக்காட்டி அடிக்குமாப்போல பேசினீங்கள்.' என்றேன்.

இலங்கை நாயகி உதட்டைச் சுழித்து மேலே பார்த்துக்கொண்டே "அந்தப் படமோ, அது பிரபாகரனோ என்னவோ எண்டு சொன் னாங்கள்' என்றார். லிப்ட் கதவு திறந்ததும் இலங்கை நாயகி கால்களை அகல வைத்து நடந்து வெளியேபோனார். நாய் அவரின் பின்னாலே ஓடிற்று. நான் லிப்டிற்குள் அப்படியே நின்றிருந்தேன். லிப்ட் மூடிக்கொண்டது.

நேற்று நான் வெளியே பெரும் சத்தங்களைக் கேட்டு "லீவு நாளிலகூடப் படுக்க விடுறாங்களில்லை' எனத் திட்டிக்கொண்டே படுக்கையிலிருந்து எழுந்தேன். நேரம் காலை பத்துமணியாகியி ருந்தது. கதவைத் திறந்து வெளியே என்ன சத்தம் எனப் பார்த்தேன். இலங்கை நாயகியின் கதவு முன்னே கூட்டமாயி ருந்தது. பொலிஸார் வந்து கதவை உடைத்துக் கொண்டி ருந்தார்கள். அங்கே நின்றிருந்த ஆறாம் இலக்கத்தில் குடியி ருக்கும் அந்த ஆபிரிக்கப் பெண்மணியிடம் "என்ன விசயம்?ஸ்ரீ என்று கேட்டேன். தான் இரண்டு மூன்று நாட்களா கவே ஏழாம் இலக்க வீட்டின் உள்ளேயிருந்து துர்நாற்றம் வீசு வதை உணர்ந்ததாகவும் இன்று துர்நாற்றம் அளவுக்கு மீறிப் போகவே தான் பொலிஸாருக்கு அறிவித்ததாகவும் அவர் சொன்னார். நான் என் நாசியை விரித்து ஆழமாக மூச்சை இழுத் து விட்டேன். அப்படி ஒரு துர்நாற்றத்தையும் நான் உணரவில் லை. நான் எப்போது கடைசியாக இலங்கை நாயகியைக் கண்டேன் என்பது எனக்குச் சரியாக ஞாபகத்தில் வர மறுத்தது. ஆனாலும் கடந்த பத்துப் பதினைந்து நாட்களாகவே நான் அவ ரைக் காணவில்லை என்பது எனக்கு உறைத்ததும் எனக்கு நெஞ்சுக்குள் தண்ணீர் வற்றிப்போயிற்று.

கதவு உடைக்கப்பட்டதும் பொலிசார் அந்தப் பகுதியை யாரும் நெருங்காதவாறு சிவப்புப் பிளாஸ்டிக் நாடாக்களைக் குறுக்கே கட்டினார்கள். உள்ளே இலங்கை நாயகியின் உடல் கண்டுபிடிக் கப்பட்டது. அவர் இறந்து பத்து நாட்களாகியிருக்கலாம் எனச் சொன்னார்கள். நான் ஒரு பொலிஸ்காரனைக் கூப்பிட்டு அவனி டம் மெல்லிய குரலில் "உள்ளே ஒரு நாயும் இருந்தது அது உயிரோடு இருக்கிறதா எனப் பாருங்கள்' என்றேன்.

உள்ளே போன பொலிஸ்காரன் திரும்பிவந்து என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "உள்ளே நாய் எதுவும் இல்லை என்றான்.

"அதுவும் செத்திருக்கலாம்' என்றேன்.

"எல்லாம் தேடிப் பார்த்தாயிற்று அப்படியெல்லாம் எதுவுமில் லை' என்றான் பொலிஸ்காரன்.

இலங்கை நாயகியின் உடல் பிளாஸ்டிக் பையில் பொதியப்பட்டு வெளியே எடுத்துவரப்பட்டது. நான் கண்களை இறுக முடிக் கொண்டேன். லிப்டுக்குள் அவர்கள் இலங்கை நாயகியின் உடலை வைக்கும் சத்தம் கேட்டது. நான் கண்களைத் திறந்தபோது லிப்ட் போய்விட்டிருந்தது. நான் மெல்ல நடந்து எனது கதவைத் திறந்து உள்ளே வந்து படுக்கையில் விழுந்தேன். படுக்கையில் அப்படியே கண்களை மூடியவாறே கிடந்தேன்.

இரவு ஏழு மணியளவில் மறுபடியும் கதவைத் திறந்து வெளியே வந்து பார்த்தேன். இப்போது இலங்கை நாயகியின் வாசலின் முன்னே யாருமில்லை. நான் மெல்ல நடந்துபோய்ப் பாரத்த போது உடைக்கப்பட்ட கதவு அடைக்கப்பட்டு பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டிருந்தது. இப்போது நான் துர்நாற்றத்தை அங்கே உணர்ந்தேன். உடனே ஆறாம் இலக்கக் கதவைப் போய்த் தட்டினேன். அந்த ஆபிரிக்கப் பெண் கதவைத் திறந்து வெளியே வந்தார். நான் பதற்றத்துடன் அவரிடம் "நீங்கள் துர்நாற்றத்தை உணர்கிறீர்களா?' எனக் கேட்டேன்.

அந்தப் பெண் என்னைக் கவலையோடு பார்த்து 'காலையி-லேயே சடலத்தைக் கொண்டுபோய் விட்டார்களே...இப்போது துர்நாற்றம் எதுவுமேயில்லையே' என்றார்.

"அவர்கள் ஒரு சடலத்தை மட்டும்தான் கொண்டு சென்றார்கள்' என்று நான் முணுமுணுத்தேன். அந்த ஆபிரிக்கப் பெண் என்னை இரக்கத்தோடு பார்த்து "இறந்துபோன அந்தப் பெண்மணி உன்னுடைய நாட்டைச் சேர்ந்தவரா?' எனக் கேட்டார்.

நான் ஆம் என்று தலையாட்டினேன்.

"நீங்கள் எந்த நாட்டவர்கள்?' என அந்தப் பெண் கேட்கவும் "ஸ்ரீலங்காவோ என்னவோ ஒரு பேர்' என்று சொன்னேன்.

எனது மூளை முழுவதும் லைலாவுக்கு என்ன நடந்தது என்ற கேள்வியே நிரம்பியிருந்தது. அந்த நாயை இலங்கை நாயகி யைத் தவிர வேறு யாரும் கொன்றிருக்கவோ அழித்திருக்கவோ வாய்ப்பில்லை என்று திடீரென என் மனதில் ஒரு எண்ணம் தோன்றியது. அதை நான் நம்பவும் ஆரம்பித்தேன். ஆரம்பம் முதலே இலங்கை நாயகி மீது எனது அடி மனதிலே மண்டிக் கிடந்த சந்தேகமும் வெறுப்பும் இப்போது முழுவதுமாகத் திரண்டு மேலே வரலாயிற்று. மஞ்சள் குருவி ஒரு வெண்ணிற நாயைக் கொன்றது.


அதுதான் இந்தக் கதையின் ஆரம்பித்திலேயே நான் சொன்னேனே, இந்தக் கதைசொல்லியின் மனது வக்கிரத்தால் நிரம்பியிக்கிறது!

**T.Jegatheesan**

Barrister,Solicitor & Notary Public (ON)

2620 Eglinton Ave. E # 201
Scarborough ON
Canada

T: 416 266 6154 | F: 416 266 4677




எதை நான் உனக்குத் திருப்பித் தருவது?
வேட்கையில் விளையும் கோபத்தையா?
குளிர் உலர்த்தி வீசிய புன்னகையையா?
கணினியில் பகிர்ந்த காமச்சுவையின் ஒளிப் பதிவையா?

எதை நான் உனக்குத் திருப்பித் தருவது?

நேசத்தையா?
அது திரும்பி வராதது என்று தெரிந்தாலும்
அதன் முறையீட்டையா?
கண்ணீரும் அற்றுப் போனபின் வருகிற வெறுப்பையா?
அல்லது
அன்பின் வடி நிலம் கசப்பு என்கிற
கட்டில் ஞானத்தையா?
முறிந்த உறவின் வீரியமற்ற தீக்கனலையா?

எப்படி உன்னிடம் திரும்பி வருவது?

அலைந்துழலும் முகில்களில்
ஒளிந்திருக்கும் முகங்களின் பின்னால் நடந்து வரவா?
பனிப் புயலில் கப்பல் கவிழ
வழி தப்பி மிதந்த அகதியின் நிழலோடு வந்து
உன் கதவைத் தட்டவா?
எல்லையற்றுப் பெருகிய
உன் அன்பின் இழைகளை
பின்ன மறுத்த என் மலர்க் கரங்களை
வெட்டி அனுப்பவா?

மதுக்கிண்ணங்களில் பொங்கும் கனவுகளை
நீர் அறியாது
நீரில் கரந்துறையும் வண்ணங்களை
நாம் அறியோம்

போடி, போ.

சேரன்

சிறுகதை

# படசாரா காத்திருக்கிறான்

எஸ்.ராமகிருஷ்ணன்

...படசாராவால் நம்பமுடியவில்லை. இத்தனை ஆண்டுகாலம் இந்த விருட்சங்களின் அடியில் காத்திருந்தும் அவர் இன்னமும் சொர்க்கத்தை காணவேயில்லையா..? அவர் யாருக்காக காத்திருக்கிறார் என்று புரியாமல் அவரையே பார்த்து கொண்டிருந்தார். பிக்குணி தனது குருவை போலவே தானும் ஆகாசத்தை ஏறிட்டபடியே அருகில் உட்கார்ந்துகொண்டாள்...

மணிகர் என்ற ஹம்சாவதி ஆற்றின் கரையில் உள்ள நகரினை படசாரா ஆண்டுவந்தான். அந்த ஆற்றின் வடகிழக்கில் நிப்பா என்ற பெரிய ஆரணயம் ஒன்றிருந் தது. அங்கே சிலந்திவலை போல மரங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து ஒன்று சேர்ந்திருந்தன. ஆகவே அதை கடந்து செல்வது ஒரு சவாலாக இருந்தது. அந்த வனத்தை பற்றி எண்ணிக்கையற்ற கதைகள் இருந்தன.

வனத்தின் ஊடாக திருமணம் ஒன்றிற்காக மணப் பெண்ணை அழைத்து சென்ற காணிகுல கூட்டம் ஒன்று வெளியேற வழிதெரியாமல் பலஆண்டுகள் காட்டின் உள்ளாகவே அலைந்து திரிந்தனர் என்றும் அந்த மணப்பெண் வயதாகி காட்டின் உள்ளேயே செத்துபோனாள் என்றும் அவளது சகோதர்கள் இருவர் முதிர்ந்து பழுத்த இலை போலாகி காட்டிலிருந்து எப்படியோ வெளியே வந்து சேர்ந்தனர். ஆனால் சாகும்வரை அவர்கள் யரோடும் ஒரு வார்த்தை பேசாமல் கண்ணீர் வடித்தபடியே இருந்தனர் என்றும் மக்கள் சொன்னார்கள்.

அந்த காட்டின் உள்ளே ஒரு பறவைகூட கிடையாது. மிருகங்களும் சப்தமிடுவது கிடையாது. அங்குள்ள குகையொன்றில் கெஷா என்ற திருடனும் அவனது பிள்ளைகளும் வாழ்ந்து வருகிறார்கள் எனவும், அந்த காட்டில் விபாசி என்ற பௌத்த பிக்கு ஒருவன் பல ஆண்டு காலமாக ஒரே மரத்தடியில் உட்கார்ந்து ஆகாசத்தை பார்த்தபடியே இருப்பதாகவும் கதைகள் சொல்லப்பட்டன. இந்த கதைகளை நம்பாத சிலர் ஆரண்யத்தை கடந்து செல்ல முயன்று வெளிவராமல் இறந்து போயிருக்கிறார்கள். அன்றிலிருந்து சிராவதிக்கு செல்லும் மக்கள் காட்டினை விலக்கியே கடந்து போயினர். வனத்தில் எவரும் நுழைந்துவிடாதபடியே இரண்டு பக்கமும் காவல் வீரர்கள் தடுப்பு அரணிட்டு காவல் புரிந்து வந்தனர்.

படசாராவின் அரண்மனைக்கு ஒருநாள் சீஹா என்ற முதியபிக்குணி அவரை காண வந்திருந்தாள். படசாரா அவளை வரவேற்று அருள் உரைகள் அருளுமாறு கேட்டுக்கொண்டார். அவளோ தான் நிப்பாவனத்தின் உள்ளே போக விரும்புவதாகவும் படசாராவின் வீரர்கள் அதை தடுத்தி நிறுத்திவிட்டதாகவும் சொன்னாள்.

அந்த காட்டின் உள்ளே சென்றவர் எவரும் வெளியே திரும்பியதேயில்லை. எதற்காக அங்கே போக விரும்புகிறீர்கள் என்று படசாரா கேட்டான்.

அதற்கு சீஹா என்ற பிக்குணி வனத்தின் உள்ளே விபாசி என்ற துறவி யை தரிசனம் செய்வதற்காக தான் அவசியம் போயே ஆக வேண்டும் என்றாள். விபாசி எதற்காக அந்த ஆரண்யத்தில் இருக்கிறார் என்று படசாரா கேட்டான். அதற்கு சீஹா என்ற பிக்குணி! அங்கே இரண்டு விருட்சங்கள் இருக்கின்றன. தோற்றத்தில் ஒன்று போல உள்ள அந்த இரண்டு மரங்களும் மிக உயரமானவை. இரண்டும் புத்தர் பிறந்த அதே நாளில் உலகில் தோன்றியவை. அவரது வாழ்நாள் முழுவதும் அவை கூடவே வளர்ந்திருக்கின்றன.

அதன் உயரம் இப்போது இருபத்தியொன்பதாயிரத்து இருநூற்று இருபது அடிகள். அதாவது புத்தரின் மொத்த வாழ்நாள்களின் எண்ணிக் கையும் அதன் உயரமும் ஒன்று. இந்த இரண்டு

விருட்சத்தில் ஒன்றின் உயரத்தில் ஏறி நின்றால் சொர்க்கத்தை காண முடியும் என்றும் இன் னொரு விருட்சத்தில் ஏறினால் நகரம் தென்படும் என்றும் நம்பிக்கையி ருக்கிறது. ஆனால் எந்த மரத்தில் ஏறினால் சொர்க்கம் தெரியும். எதில் ஏறினால் நகரம் தெரியும் என்று மரங்களை பார்த்து எந்த அடையாள மும் தெரிந்து கொள்ள முடியாது. ஏறி உச்சியை அடைந்தால் மட்டுமே அறிய முடியும். ஆனால் அப்படி மரமேறிய எவரும் இதுவரை கீழே வரவேயில்லை என்றாள்

படசாராவால் நம்பவேமுடியவில்லை. சொர்க்கம் நரகம் எப்படியிருக்கும் என்று உயிரோடு இருந்தபடியே கண்ணால் பார்க்கமுடியுமா. அது நிஜமானதுதானா என்ற வியப்போடு அந்த மரத்தில் ஏறி விபாசி சொர்க்கம் நரகம் இரண்டையும் கண்டிருக்கிறாரா என்று கேட்டார். சீஹா என்ற பிக்குணி ஆமாம் அதன் பொருட்டே தான் அந்த வனத்தினுள் போய் அந்த மகானை தரிசிக்க விரும்புவதாக சொன்னாள்.

படசாரா தானும் அவளுடன் வருவதாக சொல்லி உடனே ஏற்பாடுகளை துவங்க ஆணையிட்டாள். பிக்குணி அதை மறுத்து படைபட்டாளங்களுடன் நுழைந்தால் காட்டின் அமைதி கெட்டுவிடும் ஆகவே படசாரா விரும்பினால் அவனை மட்டுமே தான் அழைத்துபோக முடியும் என்றாள். படசாரா அன்றிரவெல்லாம் யோசித்தான். மறுநாள் காலை அரச பொறுப்பை அவனது தம்பி நிகுந்தனிடம் ஒப்படைத்துவிட்டு சீஹாவுடன் வனத்தை நோக்கிப் புறப்பட்டான்.


மன்னர் எதற்காக திடீரென கானகம் செல்கிறார் என்று எவருக்குமே புரியவில்லை. படசாரா இதைப் பற்றி தனது மனைவி பிள்ளைகளிடம் கூட சொல் லிக் கொள்ளவில்லை. அவர்கள் நிப்பான வனத் தினை அடைந்த போது இரவு துவங்கியிருந்தது. படசாரா வன முகப்பில் உள்ள ஒரு இடிந்த மடா லயம் ஒன்றில் தங்கி போகலாம் என்றான். பிக்கு ணியோ வனத்தை இரவில் கடப்பது எளிதானது என்று சொல்லி அவனை உள்ளே அழைத்து கொண்டு போனாள்.

அவர்கள் வடகிழக்கு திசையில் நடக்க துவங்கினார்கள். ஆகாசத்தில் அன்று நிறைய நட் சத்திரங்கள். அவையும் அவர்கள் கூடவே காட்டிற் குள் வந்துகொண்டிருந்தன. இருள் நீரலை போல அவர்கள் முன்னால் ததும்பி போய்க்கொண்டிரு ந்தது. விடிகாலை வரை அவர்கள் மெதுவாகவே நடந்தனர். விடிகாலையில் வனம் விழித்துகொண்டது. காட்சிகள் மாறத்துவங்கின படசாரா தன்முன்னே சென்று கொண்டிருக்கும் பிக்குணியை பார்த்தான். அவளுக்கு தன் தாயின் வயதைவிட அதிக மிருக்கக்கூடும். ஆனால் ஓய்வு எடுக்காமல் நடந்து அலைந்து கொண்டேயிருக்கிறாள் என்று வியந்தபடியே அவள் பின்னாடி நடந்தான்.

ஆறுநாட்கள் அவர்கள் காட்டின் உள்ளாகவே நடந்து திரிந்தனர். மிக உயரமான மரம் என்றால் அது தொலைவில் இருந்தாலும் தெரிந்துவிடும் தானே என்று படசாரா கேட்டான். பிக்குணி பதில் பேசாமல் நடந்தாள். அவர்கள் இறந்து கிடந்த மனித எலும்பு களை கடந்து காட்டின் உள்புறத்திற்குள் நடந்தனர்.

காடு மிக அமைதியாக இருந்தது. காய்ந்து போன இலைகள் ஒன்றை கூட காணவில்லை. வேறு எந்த வனத்திலும் காணமுடி யாதபடி ஈரமும் பசுமையும் அடர்ந்து போயிருந்தது. படசாரா பாறைகளின் மீதேறி இறங்கி நடந்து கொண்டிருந்தான். கோடை காலம் முழுவதும் அவர்கள் நடந்து கொண்டேயிருந்தனர். காட்டு பழங்களை பிடுங்கி தின்றபடியும். ஆங்காங்கே பாறைகளில் படுத்து உறங்கிவிழித்து நடந்தபடியே இருந்தனர். காற்றுதான் காட்டை ஆள்கிறது என்பதை படசாரா சில நாட்களில் புரிந்து கொண்டுவிட்டான்

படசாராவிற்கு ஆரம்ப நாட்களில் இருந்த ஆசையும் உத்வே கமும் மெல்ல வடிந்து போக துவங்கியது. அவன் எரிச்சலோடு நிஜமாகவே விபாசி என்ற துறவி இருக்கிறானா என்று கேட்டான். பிக்குணி அதற்கும் பதில் சொல்லவேயில்லை. அவர்கள் திரும்ப வும் நடந்து கொண்டேயி ருந்தனர். காடு உருமாறிக் கொண் டேயி ருப்பதை படசாரா பார்த்தான். உதிர்காலம் போய் மழைக் காலம் துவங்கியது. அவர்கள் உருவம் தளர்ந்து காட்டு விலங் கின் சாயலை கொண்டிருந்தது. ஆரம்ப நாட்களில் வழியெல் லாம் படசாரா பேசிக் கொண்டே வந்தான். இப்போது அவன் பேசுவதேயில்லை.



மகாமௌனத்துடன் அவன் கண்கள் தரையை பார்த்தபடியே நடந்து வந்தன. அவர்கள் காற்று நுழைவதைபோல மிக இயல்பாக காட்டினுள் சென்று கொண்டிருந்தனர். காட்டுகொ டிகள், முறிந்த விருட்சங்களை கடந்து முன்சென்றனர். மழை பகலிரவாக பெய்ய துவங்கியது.

மழையில் அவர்கள் ஒதுங்கி கொள்ளவேயில்லை. நடந்தபடியே இருந்தனர். காட்டில் பெய்யும் மழை உரத்தது. அது பசி தாளாத ஒரு அசுரனை போல கத்தி ஓய்கிறது. ஈரமான உடலுடன் அவர்கள் மரங்களை தாண்டி, புதர்பாதைகளில் ஏறிஇறங்கி சிற்றோடைகளின் ஓரம் கடந்து சென்றனர். காடு நீண்டு கொண்டேயிருந்தது. முடிவில் மழைக் காலமும் நிறைவுற்றது. காட்டில் பனி பெய்ய துவங்கியது. கால்நரம்புகளை பனி சுண்டி இழுத்தது. கண்கள் உறைந்துபோய்விட்டது போலிருந்தது. புருவம் நெறிகட்டியது போல வலித்தது. பாதி கண்களை

மட்டுமே திறக்க முடிவது போல வேதனை கொண்டது. எவர் கையோ அசைத்து செல்லும் துடுப் பென இயற்கை தன்னை முன்நடத்தி கூட்டிப் போவதை போல படசாரா உணர்ந்தான். வழியில் ஒரு வண்ணத்துபூச்சி அவனை கடந்து போகையில் ஒரு நிமிசம் திரும்பி பார்த்து சென்றது. அது தன்னை நகைக்கி-றதோ என படசாரா நினைத்தான்.

பனிக்காலத்தின் முடிவில் அவர்கள் யானைப்பாறையின் மீதேறி யபோது தொலைவில் இரண்டு மகாவிருட்சங்களை கண்டனர். பிக்குணி நின்ற இடத்திலே மண்டியிட்டு வணங்கினாள். படசாராவால் நம்பமுடியவில்லை. அந்த மரங்கள் கண்ணில் அடங்காதபடியே உயர்ந்து சென்று கொண்டேய-ிருந்தன. அதில் ஏறி மேலே போனால் சொர்க்கத்திற்குள் நுழைந்துவிட முடியும் என்பது நிஜம் தான் என்று தொலைவிலே உணர்ந்தான். பிக்குணி புன்சிரிப்போடு படசாராவை பார்த்தாள். அதன் மூனறு நாள் நடைக்கு பிறகு அவர்கள் அந்த இரண்டு விருட்சங்களின் அருகாமையை அடைந்தனர்.

அதை மரம் என்று சொல்லி சுருக்கிவிட முடியாது தான். அந்த மரத்தை ஒரு முறை சுற்றிவருவதற்கு ஒரு நாளாகிவிடும் போல அகன்று இருந் தது. கிளைகளே கண்ணில் தென்படவில்லை. பல ஆயிரம் வருசமாக அது வனத்தில் இருந்திருக்ககூடும். செம்பழுப்பு நிற பட்டைகள் இறுக்க மடைந்து போயிருந்தன. அந்த இரண்டு மரங்களும் தோற்றத்தில் ஒன்று போலவே இருந்தன. அந்த மரத்திலிருந்து நறுமணம் கசிந்து வந்து கொண்டேயிருந்தது. விபாசி அண்ணாந்து பார்த்தபடியே இருந்தார். அந்த மரங்களின் சற்று தூரத்தில் இருந்த சரிவில் நீரோடை ஒன்று காணப்பட்டது. அங்கே ஓடிச்சென்று இறங்கி நின்று மரத்தை ஏறிட்டு பார்த்தான். அப்போதும் பாதி மரம் கூட தெரி யவில்லை.

அந்த மரங்களின் அடியில் அமர்ந் தபடியே வானை நோக்கியபடியே இருந்த அந்த முதிய துறவி அவர்களை திரும்பிபார்க்கவே யில்லை. படசாரா அது தான் விபாசி என்று கண்டுகொண்டான். விபாசி முதிர்ந்து ஒரு விதை போலிருந்தார். உடல் சுருங்கியிருந்தது. தலை மயிர்கள் ஒட்டிப்போயிருந்தன. கைகால்கள் வளைந்து ஒடுங்கியிருந்தன. படசாரா அவர் முன்பாக மண்டியிட்டு வணக்கம் சொன்னான். விபாசி திரும்பவேயில்லை. பிக்குணி மணிமந் திரங்களை சொல்லி அவரை வணங்கி தொழு-தாள். சீஹா நீ வந்திருக்கிறாயா என மிக மெல்லிய குரல் கேட்டது. அவள் தலை யசைத்தாள். உட்கார். இன்னும் சில நாட்களில் மரத்தில் இருந்து கெஷா இறங்கி வந்துவி டுவான். அடுத்த நிமிசம் நான் இந்த மரத்தின் மீதேறி சொர்க்கத்தை எட்டி பார்த்துவிடுவேன் என்றார் விபாசி படசாராவால் நம்பமுடியவில்லை. இத்தனை ஆண்டுகாலம் இந்த விருட்சங்களின் அடியில் காத்திருந்தும் அவர் இன்னமும் சொர்க்கத்தை காணவேயில்லையா? அவர் யாருக்காக காத்திருக்கிறார் என்று புரியாமல் அவரையே பார்த்து கொண்டிருந்தார். பிக்குணி தனது குருவை போலவே தானும் ஆகாசத்தை ஏறிட்டபடியே அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

படசாராவிற்கு உடனே அந்த மரங்களில் ஒன்றில் ஏறி மேலே போய் விட வேண்டும் என்று துடிப்பாக இருந்தது. ஆனால் பிக்குணி அவனை காத்திருக்க சொன்னாள். அந்த மரங்களின் அடியில் மூவரும் காத்து கொண்டேயிருந்தனர் பிக்குணியின் வழியாக படசாரா முன்பு நடந்த கதைகளை அறிந்து கொள்ள துவங்கினான். விபாசியும் தன்னை போலவே



// படசாராவும் அதன்பிறகு காத்தி ருக்க துவங்கினான். அவர்கள் மூவரும் மரத்தின் அடியில் அமர்ந்தபடியே ஆகா சத்தை ஏறிட்டு கொண்டி ருந்தனர். //

இளைஞனாக இருந்த காலத்தில் இந்த வனத்திற்கு வந்திருக்கிறார். இரண்டு விருட்சங் களை தேடி அலைந்து கண்டுபிடித்த போது எதில் ஏறினால் சொர்க்கத் திற்கு போ-கலாம் என்று தெரியவில்லை. தன்னிடம் இருந்த ஒலைச்சுவடி யின்படி எந்த மரத்தில் ஏறுகிறோமோ அந்த உலகிற்குள் நுழைந்துவிடு வோம், அங்கிருந்து பின்பு திரும்பிவரவே

முடியாது என்ற உண்மை அவருக்கு நன்றாக புரிந்திருந்தது. இதுவரை அதில் ஏறிய யாரும் திரும்பி வரவேயில்லை. ஆகவே எப்படி சரியான மரத்தை கண்டுபிடிப்பது என்று புரியாமல் அவர் மரங்களின் அடியில் உட்கார்ந்தபடியே யோசனை செய்து கொண்டிருந்தார்.

அப்போது ஒரு நாள் காட்டில் ஒளிந்துவாழ்ந்து கொண்டிருந்த திருடனான கெஷா மரம் வெட்ட செல்லும் வழியில் அவரை காண வந்திருந்தான். தன்னை கண்டு அந்த துறவி பயம் கொள்ளவேயில்லை என்பது அவனுக்கு வியப்பாக இருந்தது. அவன் துறவியிடம் எதற்காக அவர் இந்த மரங்களின் அடியில் நாளும் பொழுதும் உட்கார்ந்து கொண்டேயிருக்கிறார் என்று கேட்டான்.

அதற்கு விபாசி இவை சொர்க்கம் நரகம் இரண்டிற்கும் செல்லும் மரங்கள். இதில் ஏறிச்சென்றுவிட்டால் வான் உலகம் போய்விடலாம் என்றார். சொர்க்கத்தில் என்ன இருக்கிறது என்று கெஷா கேட்டான்.

சொர்க்கம் நரகம் பற்றி கூட தெரியாமல் இருக்கி-றானே என்று அவன் அறியாமையை கண்டு நகைத்த பிக்கு அவனிடம் நீ விரும்பிய அத்தனையும் சொர்க்கத்தில் இருக்கின்றன. பொண்ணும் பொருளும் மதுவும் மங்கையும் ஏன் இந்த மானிட வாழ்வில் உன்னால் அனுபவிக்க சாத்தி யமே இல்லாத அத்தனையும் அங்கே கிடைக்ககூடும் என்றார். உடனே கெஷா நரகத்தில் என்ன இருக்கிறது என்று கேட்டான். அது இருண்ட உலகம். தண்டனையும் வலியுமே கிடைக்கும் என்றார்.

இந்த மரத்தில் ஏறி சொர்க்கத்தில் நுழைவது சரி. அங்கிருந்து இதே மரத்தின் வழியாக கிழே வர முடியுமா என்று கெஷா கேட்டான். உண் மையை சொல்ல விருப்பமற்று நிச்சயம் முடியும் என்றார் பிக்கு. அப்படியானால் இப்போதே இந்த மரத்தில் ஏற துவங்கிவிடுகிறேன் என்று சொன்னான்.

பிக்கு அவன் சொர்க்கத்தை எட்டிவிட்டால் இந்த எழுத்தாணியை மேல இருந்து கீழே வீசி எறி நான் அடையாளம் கண்டு கொள்கிறேன். ஒரு வேளை நீ நரகத்தை எட்டிவிட்டாலோ உனது கத்தியை கிழே தூக்கி போடு. நான் புரிந்து கொள்கிறேன் என்றார்.

திருடன் அந்த மரங்களை பார்த்தபடியே யோசனை செய்தான். விபாசி உனக்கு பயமாக இருக்கிறதா என்று கேட்டார். அதற்கு திருடன் பயமில்லை. உன்னை பற்றி யோசித்து கொண்டிருந்தேன். ஒருவேளை இது பொய்யாக இருந்தால் நான் கீழே இறங்கியதும் உன்னை கொன்றுவிடுவேன் சம்மதமா என்று கேட்டான். விபாசி சம்மதம் தெரிவித்தார்.

திருடன் உடனே தனது மரம்வெட்டும் கோடாரியை அங்கேயே வைத்து விட்டு இடப்புறம் இருந்த மரத்தில் விடுவிடுவென ஏறத்துவங்கினான். இன்று வரை அவன் கீழே வர வேயில்லை. அந்த மரத்தில் இருந்து எழுத்தாணியோ, கத்தியோ கீழே விழவேயில்லை. கெஷாவிற்கு என்ன ஆனது என்று விபாசிக்கு புரியவில்லை. ஒருவேளை இன்னமும் அவன் மரமேறிக் கொண்டேயிருக்கிறானோ என்னவோ என்றாள் பிக்குணி.

படசாராவால் நம்பமுடியவில்லை. ஆனால் திருடன் விட்டு சென்ற கோடாரி வெளிறிப்போய், முனைமழுங்கி அதே இடத்தில் அப்படியே இருந்தது. திருடனை தேடி அவன் மனைவி பிள்ளைகள் வரவில்லையா என்று படசாரா கேட்டான். அவர்களுக்கு திருடன் சொர்க்கத்தை தேடி சென்றது தெரியாது என்றாள் பிக்குணி.

விபாசி அண்ணாந்து பார்த்தபடியே இருந்தார். எந்தநேரமும் வானில் இருந்து கத்தியோ, எழுத்தாணியோ கிழே விழந்துவிடும். உடனே தான் சொர்க்கத்தை நோக்கி ஏற துவங்கி விடலாம் என்ற நம்பிக்கை அவரது கண்களில் ஒளிர்ந்து கொண்டிருந்தது

படசாராவும் அதன்பிறகு காத்திருக்க துவங்கினான். அவர்கள் மூவரும் மரத்தின் அடியில் அமர்ந்தபடியே ஆகாசத்தை ஏறிட்டு கொண்டி ருந்தனர். வானில் இருந்து எந்த அதிசயமும் வரவேயில்லை. இப்படி காத்திருப்பதற்கு பதிலாக தானே ஒரு மரத்தில் ஏறி பார்த்துவிட்டால் என்னவென ஒரு நாள் வலப்புறம் இருந்த மரத்தில் ஆத்திரத்துடன் ஏறத்துவங்கினான் படசாரா. ஆனால் கொஞ்ச உயரத்தின் பிறகு அவ னுக்கு பயம் பிடித்து கொண்டது. ஒருவேளை இந்த மரம் தன்னை நரகத்தில் கொண்டுபோய்விட்டுவிட்டால் என்னசெய்வது.

அச்சத்தில் மரத்தில் இருந்து அப்படியே தாவி கிழே குதித் தான். முழங்காலில் நல்ல அடி. முதுகும் பாறையில்பட்டு வலித்தது. ஒருவார காலம் படுத்தே கிடந்தான்.

அந்த விருட்சங்களை காற்று கூட நெருங்குவதில்லை. அவர்கள் காத்து கொண்டேயிருந்தனர். விபாசியின் கண்கள் ஒரு சிறுவனை போல ஏக்கத்துடன் இருப்பதை பிக்குணி கவனித் தாள். எத்தனையோ ஆண்டுகாலம் அங்கேயே காத்துகிடக்கிறார். இன்னமும் வானில் இருந்து அழைப்பு வரவேயில்லை. மீண்டும் கோடையும் உதிர்காலமும் மழையும் பனியும் அவர்களை கடந்து போனது.

நிப்பா வனத்திற்குள் சென்ற அரசன் திரும்பிவர வேயில்லை என்பதற் காக நாட்டுமக்கள் துக்கம் அனுஷ்டித்தனர. படசாராவின் மனைவியும் பிள்ளைகளும் அழுது தீர்த்தனர். பின்பு அவர்களும் அவனை மறந்து வாழ துவங்கினர்.

நீண்டபல வருசங்களின் பிறகு ஒருநாள் காலை படசாரா நீரோடையில் இருந்து தாமரை இலைகளில் தண்ணீர் அள்ளி கொண்டுவரும் போது விபாசி அண்ணாந்து பார்த்தபடியே இறந்துகிடந்ததை கண்டான். அவரை அதே விருட்சத்தின் அடியில் புதைத்து வைத்தனர். பின்பு பிக்குணியும் படசாராவும் மட்டுமே காத்துகிடந்தனர். அவர்கள் தங்களுக்குள் ஒரு சொல்கூட பேசிக்கொள்ளவேயில்லை. இரண்டு பாறைகள் அருகாமையில் உறைந்து கிடப்பதை போல அவர்கள் காத்திருந்தனர். முடிவில் ஒருநாள் பிக்குணியும் இறந்து போனாள்.

தனிமைப்பட்ட படசாரா அடர்ந்து சிக்குபிடித்துபோன தலைமயிருடன் காட்டுவிலங்கு ஒன்றை போல அந்த மரத்தின் அடியில் உட்கார்ந்து வானை நோக்கியபடியே இருந்தான். அவனுக்கும் வயதேறியது. காட்டு வாழ்வு மிக இனிமையாகவும் மிக கொடுந்துயராகவும் மாறிமாறி இருந்தது.

பின்பு ஒருநாள் இனியும் அங்கே காத்திருக்க முடியாது என்று அவன் விரக்தியுற்றான். சொர்க்கமோ நரகமோ இரண்டுமே இந்த கானகவாழ் வில் கிடைக்காத எதையும் தந்துவிடப் போவதில்லை என்று உணர்ந்தான். காட்டில் இருந்து வெளியேறி தனது நகரிற்கு சென்றுவிடுவது என்று அவன் அங்கிருந்து நடக்க துவங்கினான்.

மகாவிருட்சங்களை விட்டு விலகி நடந்து தட்டாம்பாறை மீது ஏறி நின்றபோது விருட்சங்கள் தனித்து தெரிந்தன. அப்போது வானில் இருந்து ஏதோவொரு பொருள் பூமியை நோக்கி விழுந்து கொண்டிருப்பது தெரிந்தது. என்ன அது, எழுத்தாணியா. இல்லை கத்தியா? விபாசி காத்திருந்தது போல திருடன் உச்சியை கண்டுவிட்டானா? ஒடிப்போய் அந்த பொருளை தேடிஎடுத்து பார்க்கவேண்டும் போலிருந்தது. படசாரா அந்த மரத்தையே வெறித்து பார்த்துகொண்டிருந்தான். பிறகு அமைதியாக காட்டிலிருந்து வெளியேறி நடக்கும் பாதையில் மெதுவாக நடந்து செல்ல துவங்கினான்.

கட்டுரை

# வெ.சா. - வித்தியாசமான மனிதர்

அ.முத்துலிங்கம்

...அவருக்கு ஏமாற்றங்களும் இழப்புகளும் பழகிப போனவை. அவற்றை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் இருந்தது. அவர் வாழ்க்கையில் ஒன்றையும் பெரிதாக எதிர்பார்க்காமலிருக்கப் பழகிக்கொண்டவர். மகாராஜா ஆடையில்லாமல் வருகிறார் என்று கத்திய சிறுமிபோல அவர் உண்மையை எழுதினார்....

...வெ.சா. கனடா வரும் முன்னரே நண்பர்கள் எங்களை எச்சரித்திருந்தார்கள். 'இவருடன் கவனமாகப் பழகவேண்டும். நிறைய எதிரிகள் இவருக்கு. கறாராக இருப்பார். எப்பவும் முறைப்பாடுகள் செய்வார். இவரிடம் நல்ல பெயர் எடுக்க முடியாது' என்று...

எனக்குப் பிடித்த எழுத்தாளர்களை நினைக்கும் போது பல்வேறு சித்திரங்கள் தோன்றும். அசோகமித்திரனை நினைத்தால் என்ன காரணமோ சமிக்ஞை விளக்குகள் ஞாபகத்துக்கு வருகின்றன. புதுமைப்பித்தன் என்றால் மாம்பழம். பிரமிள் என்றால் இறகு, லா.ச.ரா என்றால் ஊஞ்சல், எஸ்.ராமகிருஷ்ணன் - மகாபாரதம், நாஞ்சில்நாடன் - பாம்பு, ஜெயமோகன் - மேப்பிள் இலை. வெங்கட் சாமிநாதன் என்றால் எனக்கு Crimson Gold திரைப்படம்தான் நினைவுக்கு வருகிறது.

எந்தப் புத்தகக் கடையை எங்கே கண்டாலும் உள்ளே நுழைந்து புத்தகங்களை தட்டிப் பார்ப்பது என் வழக்கம். புத்தகத்தை வாங்குகிறேனோ இல்லையோ பின்னட்டைகளை தவறாமல் படித்துவிடுவேன். அவை புதுமையாக இருக்கும். சிலவேளைகளில் புத்தகத்தைவிட சுவாரஸ்யமாக அமைவதும் உண்டு. அந்தப் புத்தகத்தை பற்றியும் அதை எழுதிய எழுத்தாளரை பற்றியும் அங்கே விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். முக்கியமாக பின்னட்டைகளில் அந்தப் புத்தகத்தைப் பற்றி வேறு பிரபலமான எழுத்தாளர்களும் பத்திரிகைகளும் விமர்சனமாகச் சொன்னது பதிவாகியிருக்கும்.

'ஒவ்வொரு வீட்டு புத்தக அலமாரியிலும் கட்டாயமாக இருக்கவேண்டிய புத்தகம்.'

'இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த ஆகச் சிறந்த 100 புத்தகங்களில் இதுவும் ஒன்று.'

'புத்தகத்தை கையிலெடுத்தால் மறுபடியும் முடித்துவிட்டுத்தான் கீழே வைக்கமுடியும்.'

இப்படியான புகழுரைகள் பின்னட்டைகளை அலங்கரிப்பதில் அதிசயம் இல்லை. எந்தவொரு நேர்மையான எழுத்தாளர்கூட புத்தகத்துக்கு கிடைத்த பாதகமான ஒரு வரியை பின்னட்டையில் போடுவது கிடையாது. பின்னட்டைகள் புகழ்ந்து பேசுவதுதான் வழக்கம்.

'இது இப்படியிருக்க பல வருடங்களுக்கு முன்னர் வெசா எழுதிய 'அக்கிரகாரத்தில் கழுதை' என்ற நூலை படித்தபோது எனக்கு முதல் அதிர்ச்சி கிடைத்தது. அந்த நூலிலே வெங்கட் சாமிநாதன் அந்த நூலைப்பற்றி சில எழுத்தாளர்கள் எழுதிய விமர்சனக் கடிதங்களை வெளியிட்டிருந்தார். அதிலே சில கடிதங்கள் புத்தகத்தில் உள்ள குறைகளை பெரிதாக்கி விமர்சித்திருந்தது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. இது யார் இந்த வெசா, வித்தியாசமானவராக இருக்கிறாரே என்று என்னை யோசிக்க வைத்தது. பாதகமாக வந்த கடித்தத்தை அவர் வெளியிடவேண்டிய அவசியமே இல்லை ஆனாலும் துணிச்சலுடன் இணைத்திருந்தார். அது எனக்கு பிடித்தது.

பல வருடங்கள் கழித்து வெளிவந்த அவருடைய 'இச்சூழலில்' நூலை படித்தபோது மேலும் அதிர்ச்சி கிடைத்தது. இந்த மனிதர் வித்தியாசமானவர்தான் என்ற என்னுடைய எண்ணம் உறுதிப் பட்டது. அந்தப் புத்தகம் வெளிவர முன்னர் அவருடன் சுமுக உறவு இல்லாத, பகைமைக் காய்ச்சல் கொண்ட, கருத்து மோதல்களை பெரிதாக்கும் எழுத்தாள நண்பர்களைத் தேடிச் சென்று அவர்களிடம் நூலின் கையெழுத்துப் பிரதியை கொடுத்து

அவர்கள் அபிப்பிராயத்தை எழுதி நேரே பதிப்பாளருக்கு அனுப்பச் சொல்லி வெசா கேட்டுக்கொண்டிருக்கிறார். அவர்கள் அந்த முன்னுரையில் என்ன எழுதியிருப்பார்கள் என்பது வெசாவுக்கு தெரியாது. புத்தகம் வெளிவந்த பின்னரே அவரும் வாசகர்கள்போல அதைப் படித்துப் பார்ப்பார். இதை அவரே அந்த நூலில் கூறுகிறார். இப்படி வேறு யாராவது எங்கேனும் உள்ளனரா? இந்த உலகத்திலேயே அப்படி ஒருவர் இருந்தால் அது வெசாவாகத்தான் இருக்கும்.

வெசா கனடா வந்தபோது நானும் ஒரு நண்பரும் அவரை ஓர் ஈரானியப் படத்துக்கு அழைத்துச் சென்றோம். பீட்ஸா விநி-யோகிக்கும் ஒரு சாதாரண மனிதனைப் பற்றிய படம். அவ-னுடைய தொழில் நிமித்தம் அவன் செல்வந்தர்களுடைய வீடுக ளுக்கும் வறியவர்களின் வீடுகளுக்கும் செல்கிறான். படம் விறுப்பாக முடிவை நோக்கிப்போய் இன்னும் சில நிமிடங்களில் முடிந்துவிடும் என்ற நிலை. அப்பொழுது நாங்கள் எதிர்பாராமல், முடிவதற்கு சரியாக ஒரு நிமிடம் இருந்தபோது படம் அறுந்து திரையிலே ஓர் அறிவிப்பு வந்தது. 'தயவுசெய்து மன்னியுங்கள். இன்னும் பதினைந்து நிமிடங்களில் சரியாக்கிவிடுகிறோம்.' நாங்கள் காத்திருந்த நேரத்தில் படம் எப்படி முடியும் என்று கற்பனையில் பூர்த்திசெய்யப் பார்த்தோம், இயலவில்லை. திரும்ப படம் ஓடத்தொடங்கியதும் ஒரேயொரு காட்சியுடன் முடிச்சு அவிழ்ந்து, படம் முற்றிலும் புரிந்தது. அந்தக் கதையை எழுதியவர் புகழ்பெற்ற ஈரானிய இயக்குநர் அபாஸ் கிரொஸ்தாமி. காரிலே திரும்பும்போது வழியெல்லாம் அந்த திரைப்படத்தை பற்றியே வெசாவிடம் பேசினோம். அது எப்படி 95 நிமிட படத்தில் நாங்கள் 94 நிமிடங்கள் பார்த்தபிறகும் படத்தின் முடிவை ஊகிக்கமுடியவில்லை. வெசா திரைப்படக் கதை எழுதி அனுபவம் பெற்றவர். ஒரு திரைக்கதையை எப்படி அமைக்கவேண்டும் என்பது அவருக்கு தெரியும். ஒரு கதையை சொல்வது அல்ல திரைப்படம். எதை முதலில், எதை இடையில், எதை கடைசியில் சொல்வது என்ற கட்டமைப்புத்தான் திரைக் கதை. அன்று அந்தப் படத்தை தொடர்ந்து நடந்த விவாதங்கள் அந்த நாளை என் மனதில் என்றும் அழியாமல் நிறுத்திவிட்டது.

வெசாவை எனக்கு தெரியாது. அவர் எழுதிய நூல்களையும் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளையும் தொடர்ந்து படித்து வந்ததுண்டு. அவற்றை படிக்க படிக்க அவருடைய பிம்பம் வளர்ந்தது. வழக்கமான தமிழ் எழுத்தாளரின் பிம்பத்துக்குள் அவர் அடங்காதவராகவே இருந்தார். கனடாவின் தமிழ் இலக்கி யத் தோட்டமும் தென்னாசிய கல்வி மையமும் இணைந்து 2003ம் ஆண்டு இயல்விருது அளிப்பதற்காக அவரை ரொறொன் ரோவுக்கு அழைத்திருந்தார்கள். விமான நிலையத்தில் அவரை வரவேற்க நானும், பேராசிரியர் செல்வா கனநாயகமும், காலம் ஆசிரியர் செல்வமும், கவிஞர் செழியனும் சென்றிருந்தோம். அவரை படத்தில் பார்த்ததேயன்றி நேரில் நாங்கள் ஒருவரும் பார்த்ததில்லை. ஆகவே நல்ல அழகான பூங்கொத்து ஒன்றை வாங்கி கையிலேபிடித்துக்கொண்டு பயணப்பெட்டியுடன் வெளி யேவரும் ஒவ்வொரையும் உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றோம். அன்றைக்கு பயணித்த எல்லோரும் வெசாவின் முகத்தோற்றம் கொண்டவர்களாகவே காணப்பட்டார்கள். ஒருமுறை ஒருவரிடம் நெருங்கி கிட்டத்தட்ட பூங்கொத்தை நீட்டிவிட்டோம் அவரோ மிரண்டுபோய் ஓர் அடி பின்னுக்குப் போய் எங்களிடமிருந்து தப்பித்துக்கொண்டார். சற்று நேரங்கழித்து வெசா பெரிய தள்ளுவண்டி ஒன்றில் சிறிய பயணப்பெட்டியை வைத்து தள்ளிக் கொண்டு வெளியே வந்ததைப் பார்த்தபோது எங்களுக்கு ஒருவித சந்தேகமும் எழவில்லை. குடிவரவில் ஏதாவது பிரச் சினை இருந்ததா என்று வினவினோம். 'பல்கலைக்கழகம் அனுப்பிய கடிதத்தை நீட்டினேன். அவர்கள் திறந்துகூட பார்க்க வில்லை. நல்வரவு என்று சொல்லி என்னை அனுமதித்தார்கள்' என்று சொன்னார்.


வெசா கனடா வரும் முன்னரே நண்பர்கள் எங்களை எச்சரித்தி ருந்தார்கள். இவருடன் கவனமாகப் பழகவேண்டும். நிறைய எதிரிகள் இவருக்கு. கறாராக இருப்பார். எப்பவும் முறைப்பாடு கள் செய்வார். இவரிடம் நல்ல பெயர் எடுக்க முடியாது என்று பலவிதமாக சொல்லிவைத்திருந்தார்கள். ஆனால் முதல் சந்திப்பிலேயே பத்து வருடம் பழகியதுபோல வெசா நட்புடன் நடந்துகொண்டார். ஒரு குழந்தைப் பிள்ளைபோல நிறையக் கேள்விகள் கேட்டார். அடிக்கடி தன்னை விருதுக்கு தேர்வு செய்தவர்களை குறை கூறினார். 'என்னிலும் பார்க்க தகுதியான வர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். என்னை போய் தேர்வு செய்தார்களே' என்று அங்கலாய்த்தார். நட்பானவராக, அன்பா கப் பழகுபவராக, மனிதநேயம் மிக்கவராக எங்களுக்கு அவர் தெரிந்தார்.

வெசா மூன்று நாட்கள் ரொறொன்ரோ பல்கலைக் கழகம் ஏற்பாடுசெய்த விடுதியில் தங்கி, மீதி நாட்களை நண்பர் மகாலிங்கம் வீட்டில் கழித்தார். மகாலிங்கம் வேலைக்கு போனபின்னர் வெசா தனியே இருக்கும் சமயங்களில் அவரை என் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்து வருவேன். இதிலே எனக்கு பெரும் பிரச்சினை இருந்தது. என் மனைவி முறையாக சமையல் செய்யக் கற்றுக்கொண்டது கனடா வந்த பிறகுதான். இன்றுகூட சமைக்கும்போது அவருக்கு அடிக்கடி ஐயம் எழுந்தபடியே இருக்கும். கடுகு தாளிப்பது எப்போது? கடைசியி லா முதலிலா போன்ற அடிப்படை சந்தேகங்கள். இலங்கை சமையலுக்கே இந்தப்பாடு என்றால் எப்படி இந்திய சமையல் செய்து வெசா போன்ற பெரிய எழுத்தாளரை திருப்திப்படுத் துவது. எங்கள் வீட்டில் தோசை, இட்லி, சாம்பார் எல்லாம் கற்பனை பொருள்கள். வீட்டிலே தோசைக் கல்லோ இட்லிப் பானையோ கிடையாது. இடியப்பம், புட்டு வெளியே இருந்து வருவிக்கப்படும். பெரும் நடுக்கத்துடன் தனக்கு தெரிந்த முறை யில் மனைவி சமைத்து பரிமாறினார். அந்த உணவை வெசா சாப்பிட்டுவிட்டு மகிழ்ந்து பாராட்டினார். வெசாவை உற்று நோக்கினேன். அவர் உண்மை பேசுவதுபோலத்தான் இருந்தது. என் மனைவி வேதியியல் பாடத்தில் முதல்தரமாக பாஸ் செய் ததுபோல பெரும் சந்தோசம் அடைந்தார். அதற்கு பின்னர் அவராக 'உங்கள் நண்பரை இன்றைக்கு உணவுக்கு அழைத்து வாருங்கள்' என்று அடிக்கடி சொல்லத் தொடங்கினார். அப்படி வந்து சாப்பிடும் ஒவ்வொரு தடவையும் வெசா புகழ்ந்தார். என் மனைவிக்கு இலக்கியத்தைப் பற்றிய மதிப்பீடுகள் பல மடங்கு கூடியது அந்தக் காலத்தில்தான்.

வெசா இந்தியா திரும்பிய பிறகு ஒவ்வொரு தடவையும் கடிதம் எழுதும்போது மனைவியின் சமையலை ஞாபகமூட்டி நன்றி சொல்வார். என் மனைவி என்னிடம் 'உங்கள் எழுத்தாள நண்பர்களில் வெசா வெளிப்படையானவர். உண்மையானவர்' என்று பலதடவை கூறியிருக்கிறார். வெசாவின் 'சில இலக்கிய ஆளுமைகள்' நூலைப் படித்தபோது அதிலே வெசாவை சந்திக்க வந்த இருளாண்டி சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. 'நாங்கள் வந்தது உங்களோடு சண்டைபோட. அன்று நீங்கள் எவ்வித தற்காப்பு உணர்வுமின்றி மனம் திறந்து பேசியது எங்கள் மனதை மாற்றிவிட்டது. ஒளிக்க உங்களிடம் ஏதுமில்லை. பயப் படவும் ஏதுமில்லை.' என் மனைவியின் உள்ளுணர்வு பொய்ப்பதில்லை.

மௌனியின் எழுத்து முறைபற்றி வெசா வர்ணித்திருக்கிறார். மௌனி கடுமையாக உழைப்பார். பலமுறை திருத்தி திருத்தி எழுதுவார். பேனாவை கையில் எடுத்ததும் தீவிரமான சிரத்தை அவருக்கு வந்துவிடும். ஏதோ ஒன்றை ஒருமுறை எழுதி அத்துடன் அவர் திருப்தியடைந்தார் என்பது கிடையாது. கடைசித் தேதி நெருங்கும்வரை பிரசுரகர்த்தரின் பொறுமை எல்லை கடக்கும்வரை திருத்தம் செய்துகொண்டே இருப்பார். இதற்கு நேர்மாறானது வெசாவின் முறை. அவரிடம் நான் கட்டுரை கேட்டு பலதடவை வாங்கியிருக்கிறேன். ஒருமுறைகூட அவர் சொன்ன நேரத்திற்கு கட்டுரை தராமல் கடத்தியது கிடையாது.

நியூட்டன் என்ற பெரிய விஞ்ஞானி காலையில் படுக்கையிலிருந்து எழும்பி ஒரு காலை தரையிலே ஊன்றிவிட்டு அடுத்த காலை எடுத்துவைக்காமல் பல மணி நேரம் அசையாமல் உட்கார்ந்திருப்பார். அவர் மூளையில் விஞ்ஞான சித்தாந்தங்கள் பிரவாகமாக ஓடிக்கொண்டிருக்கும். அந்தப் பிரவாகம் நின்றுவிடக்கூடும் என்ற பயத்தில் அசையாமல் இருப்பாராம். வெசாவின் அனுபவமும் இப்படித்தான். கட்டுரைக்கான கருத்துக்கள் மூளையில் திரண்டு கரை புரண்டு ஓடிக்கொண்டிருக்கும். நாட்கள் தள்ளிப்போகும். கடைசி தினம் நெருங்கியதும் உட்கார்ந்து, கருத்துக்கள் உருண்டு ஒவ்வொன்றாகவர எழுதி முடிப்பார். அவரே சொல்கிறார். 'மனம் சஞ்சரித்ததெல்லாம் எழுதவேண்டுமே என்று உட்காருவேன். எழுத ஆரம்பித்தால் அதுவரை மனம் சஞ்சரித்ததெல்லாம் பாதி போய்விடும். புதிதாக அதன் இடத்தில் வேறு ஏதோ பாதிவந்து நிரப்பும். புதிய சஞ்சாரங்கள் ஆச்சரியமாக இருக்கும். பின்னால், விட்டுப்போனதெல்லாம் எதுஎன்று யோசித்து மனதில் தோன்றத் தோன்ற இடைச் செருகுவேன். அப்படியும் அநேகம் விட்டுப்போகும்.' அவர் எழுதுவது ஒருமுறைதான். சில சமயம் திரும்ப படிப்பதும் கிடையாது. அப்படியே அனுப்பிவிடுவார்.



அவருடைய கட்டுரைகளை படிக்கும் போது கிடைக்கும் அனுபவமே புதிது தான். எண்ணங்கள் பாய்ந்து பாய்ந்து போகும் அதிசயத்தை காணலாம். ஒன்றைச் சொல்லிவிட்டு இன்னொன்றுக்கு தாவிவிடுவார். ஆறஅமர இருந்து யோசித்து பார்க்கும் போதுதான் கட்டுரை புரியும். அவர் விட்டுச் செல்லும் இடைவெளிகளை நிரப்பிக்கொண்டே படிக்கவேண்டும். அது நல்ல அனுபவமாக அமையும்.

இப்படிச் சிந்திக்கும் திறனால்தான் பிறிதொரு கலைஞரின் மனதை அவரால் ஆழமாகப் புரிந்துகொள்ள முடிகிறது. உலகப் புகழ் பெற்ற சித்திரங்களையும் திரைப்படங்களையும் இலக்கியங்களையும் கலை உள்ளத்துடன் ரசிக்கும் ஒரு மன நிலையை அவரால் உருவாக்க முடிகிறது. எனக்கு தெரிந்த ஒரு புகைப்பட நிபுணர் இருக்கிறார், உலகப் புகழ் பெற்றவர். பல பரிசுகள் வென்றவர். அவரிடம் இருக்கும் 10,000 டொலர் காமிராவை அவர் மத்தியான நேரத்தில் வெளியே எடுக்கமாட்டார். காலை அல்லது மாலைதான் புகைப்படத்துக்கு உகந்தநேரம் என்பது அவர்கருத்து. புகைப்படம் என்றால் என்ன? அது ஒளியின் விளையாட்டுத்தான் என்று அடிக்கடி கூறுவார்.

உலகப்புகழ் சைத்ரீகர்களும் இதையே சொன்னார்கள். ரெனவார் என்ற சித்திரக்காரர் சூரியஒளியில் ஒரு வைக்கோற்போர் அடையும் நிறமாற்றங்களை தொடர்ந்து 16 - 17 சித்திரங்களாக இடைவிடாது வரைந்துதீர்த்தாராம். ஒளி இருப்பதும் இல்லாததும் ஓர் உயர்ந்த சித்திரத்தை தருவது போல, வார்த்தை இருப்பதும் இல்லாததும் ஓர் உயர்ந்த இலக்கியத்தை சாத்தியமாக்குகிறது. உதாரணத்துக்கு தி.ஜானகிராமனின் நாவலை எடுத்து வெசா விளக்குகிறார். பாலி என்னும் பெண் சிறுவயதிலிருந்தே தங்கராஜுவுக்கு நிச்சயிக்கப்பட்டவள். ஆனால் அவளுக்கு அவனிடம் ஈடுபாடு கிடையாது. தனக்கு என்று ஒரு மனம், இச்சை, வாழ்க்கை இருக்கிறது என்று நினைக்கிறாள். தன்னை தாறுமாறாகப் பேசினான் என்பதற்காக வையன்னாவை கொலைசெய்துவிட்டு வந்து நிற்கிறான் தங்கராஜு. அவனை பாலி ஏமாற்ற வேண்டுமா? அண்ணாந்து பார்த்த பாலியின் கண்களில் தஞ்சை கோபுரத்தின் உச்சியில் இரண்டு காக்கைகள் உட்கார்ந்திருப்பது தெரிகிறது. அவள் நினைக்கிறாள், 'இரண்டு காக்கைகள் உட்காரத்தானா இவ்வளவு பெரிய வானளாவிய கோபுரத்தை ஒருவர் நிர்மாணித்தார்.' அதன் பின்னர் வார்த்தைகள் இல்லை, பெரிய பாய்ச்சல் கதையில் நிகழ்கிறது.

'அப்பா, நீங்கள் சொல்றது சரின்னு தோன்றுதப்பா' என்கிறாள். ஒளியின்மையும், ஒளியும், வார்த்தையின்மையும், வார்த்தையும்.

இவைதான் நேர்த்தியான கலைப் படைப்பாக உருமாறுகின்றன. இப்படி நுட்பமாக கலைஞனின் படைப்பு மனதுக்குள் சென்று, அவன் உணர்ந்ததை உணர்ந்தபடி வெளிக்கொணர்வதுதான் வெசாவின் பேனா.

விமர்சகராக இருந்தாலே பகைவர்கள் உண்டாகிவிடுவார்கள். அதிலும் நேர்மையாக ஒருவர் இருந்தால் சொல்லவே வேண்டாம். தன்மானம், நேர்மை இவரது உதார குணங்கள். இவர் எழுதிய பல நூல்களை நான் படித்திருந்தாலும் அமெரிக்க தகவல் மையத்துக்கு இவர் எழுதிய கடிதம் ஒரு classic என்று சொல்வேன். அவரிடமே அதை சொல்லியுமிருக்கிறேன். 1997ல் எழுதிய அந்தக் கடிதம் இன்றுவரை பேசப்படுகிறது. அமெரிக்க காங்கிரஸ் நூலகத்துக்கு நூல்கள் தேர்வு செய்யும் பணிக்கு வெசாவை அழைத்திருந்தார்கள். இவர் கேட்டுக் கொண்டதால் அல்ல, அமெரிக்க தகவல் மையம் தானாகவே இவரை அணுகி யிருந்தது. இவர் அங்கே அவர்களைச் சந்திக்க போனதும் அவர்கள் ஒரு விண்ணப்ப படிவத்தை கொடுத்து அதை நிரப்பி வரச் சொன்னார்கள். ஏதோ வெசா அவர்களிடம் வேலை கேட்டு வந்ததுபோல அவரை அவமதித்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் எழுதிய கடிதம்தான் அது. '40 வருட பொதுவாழ்வில் என் சுதந்திரத்தையும், என் நேர்மையையும் என் வழியில் மிகுந்த ஆக்ரோஷத்துடனேயே பாதுகாத்து வந்தேன்.
'உன் நேர்மையையும் சுதந்திரத்தையும் காப்பாற்ற வேண்டினால் உன் எழுத்தோடு சம்பந்தப்படாத ஒரு வேலையை, இரவு நடன விடுதியில் பியானோ வாசிப்பதுபோன்ற வேலையை செய்.' இது ஓர் அமெரிக்கர், வில்லியம் ஃபாக்னர் சொன்னது. என் தகுதியை அளக்கும்படி நான் உங்களிடம் கேட்கவே இல்லையே.' வெசா எழுதிய அந்த நீண்ட கடிதத்தில் நேர்மையையும் சுதந்திரத்தை யும் வலுயுறுத்தி இப்படி முடித்திருக்கிறார்.

வெசா ரொறொன்ரோ பல்கலைக் கழக அரங்கில் இயல் விருது ஏற்புரையில் சொன்னது நினைவுக்கு வருகிறது. ஒரு ஞானியிட மிருந்து மட்டுமே அப்படியான வார்த்தைகள் வெளிவரும். நாற்பது வருடங்களுக்கு முன்னர் அவருடைய அலுவலகம் அவருக்கு நாடு நாடாக சுற்றி பணியாற்றும் ஒரு வாய்ப்பை கொடுத்தது. ஆனால் அந்த வாய்ப்பின் பெறுமதி தெரியாத ஒருவர் கொடுத்த நிர்ப்பந்தத்தால் அந்த வேலையை அவர் இழக்க நேரிட்டது. ஆகவே அவருக்கு ஏமாற்றங்களும் இழப்புகளும் பழகிப்போனவை. அவற்றை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் இருந்தது. அவர் வாழ்க்கையில் ஒன்றையும் பெரிதாக எதிர்பார்க்காமலிருக்கப் பழகிக்கொண்டவர். 'மகாராஜா ஆடை யில்லாமல் வருகிறார்' என்று கத்திய சிறுமிபோல அவர் உண்மையை எழுதினார். அது அவருக்கு இயல் விருதை பெற்றுத் தந்திருக்கிறது. அந்த விருதுக்கு தகுதி பெற்றவராக அவர் தன்னைக் கருதவில்லை. இது பொய்யான அடக்கம் அல்ல என்கிறார். பலர் அவரிடம் 'நீ விமர்சனம் எழுதுகிறாய், ஆகவே உனக்கு ஒரு விருதும் கிடைக்கப்போவதில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். அது பொய்த்துப் போனதில் அவருக்கு சிறு மகிழ்ச்சி. அன்று பேச்சைக் கேட்டவர்களில் ஒருவருக்குகூட அவருடைய வார்த்தைகள் இருதயத்தில் இருந்து வந்தவை என்பதில் ஐயம் இருக்க முடியாது.

சில மாதங்களுக்கு முன் வெசா வழுக்கி விழுந்து மருத்துவ மனையில் அனுமதியாகியிருக்கிறார் என்ற தகவலை நண்பர் சேதுபதி எனக்கு அனுப்பியிருந்தார். நான் உடனே ஒரு மின்னஞ்சல் அனுப்பி அவர் நலத்தை விசாரித்தேன். வெசா ஏற்கனவே முன்பும் ஒருமுறை காலில் முறிவு ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர். அவர் கனடா வந்திருந்தபோது அறுவைச் சிகிச்சைசெய்து சிலமாதங்களே ஆகியிருந்தன. காலிலே உலோகம் வைத்து பொருத்தியிருந்தார்கள். எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும் கனடாவில் கல் பதித்த மேடு பள்ளமான பாதைகளில் தடுக்கிவிழுந்துவிடுவார். உடனேயே எழுந்து நின்று உடையை சரிசெய்துகொண்டு 'ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை' என்று கைகளை அகலமாக விரிப்பார். 'அடுத்தமுறை விருது கொடுக்கும்போது உலோகக்கால் பொருத்தாத ஒருவரை தேடிக் கண்டுபிடித்து கொடுங்கள்' என்று சொல்லி சிரிப்பார்.' இப்படி எதையும் வெசா சுலபமாக நகைச்சுவையாக்கிவிடுவார்.

அவர் தங்கியிருந்த நாட்களில் சில திகில் சம்பவங்களும் நடந்திருக்கின்றன. அடிக்கடி நண்பர்கள் வந்து அவரை விருந்துக்கோ, கூட்டத்துக்கோ அல்லது சந்திப்புக்கோ அழைத்துச் செல்வார்கள். நாங்கள் அவரிடம் இன்ன நேரம் திரும்பி வந்துவிடுங்கள் என்று சொல்லி அனுப்புவோம். ஒரு நாள் எழுத்தாள நண்பர் ஒருவர் அவரை மதிய உணவு சாப்பிட உணவகம் ஒன்றுக்கு அழைத்துப் போனார். பல மணி நேரமாகியும் அவர் திரும்பவில்லை. நாங்கள் காத்துக்கொண்டேயிருந்தோம். கடைசியில் அவர் வந்ததும் என்ன நடந்தது என்று விசாரித்தோம். அவர்கள் சாப்பிட்டபின் நண்பர் பணம் செலுத்த கடன்அட்டையை நீட்டியிருக்கிறார். உணவகம் அந்தக் கடன் அட்டையை ஏற்கவில்லை. வெசாவை அங்கே இருத்திவிட்டு நண்பர் பணம் மாற்றிவர வங்கிக்கு போயிருக்கிறர். போனவர் வர நேரமாயிற்று. வெசாவின் மனம் பயம் கொள்ள ஆரம்பித்தது. அவர் என்னை இங்கே அடகு வைத்துவிட்டு போய்விட்டார். திரும்பி வருவாரா, எப்படி நான் தங்கியிருக்கும் வீட்டுக்கு வழி கேட்டுப் போவது. கனடாவில் பணம் தராவிட்டால் என்ன தண்டனை, மாவாட்டச் சொல்வார்களா? அல்லது சிறையில் அடைப்பார்களா? அல்லது திருப்பி அனுப்புவார்களா? இப்படி எல்லாம் வெசாவின் மனம் கற்பனை செய்தது. சிறிது நேரத்திலேயே நண்பர் வந்து தன்னை மீட்டதை சொல்லி தலையை பின்னுக்கு எறிந்து சிரித்தார் வெசா.

சில பத்திரிகைகள் எழுத்தாளர்களை நேர்காணல்செய்து எழுதும். ஆனால் ஒரு பத்திரிகையும் எழுத்தாளருக்கு உறுதுணையாக இருந்து அவருக்கு உற்சாகமூட்டி அவள் எழுத்துவேலைக்கு ஊக்கமளிக்கும் மனைவியர்பற்றி எழுதுவதில்லை. ஆனால் இந்த வழக்கத்துக்கு மாறாக சமீபத்தில் அமெரிக்க மாத இதழான தென்றல் வெசாவின் நேர்காணலை வெளியிட்டபோது அவருடைய அருமை மனைவியாரின் புகைப்படத்தையும் பிரசுரித்திருந்தது. இது எனக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளித்தது. உடனேயே வெசாவுக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பி என் வாழ்த்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தேன். அந்த நேர்காணல் வந்து சில வாரங்களிலேயே அவருடைய மனைவி காலமானார். இது வெசாவுக்கு மிகப்பெரிய இழப்பு. அவர் அதிலிருந்து இன்று வரை மீளவே இல்லையென்றுதான் நினைக்கிறேன்.

அவர் குணங்களில் உயர்ந்து நிற்பது நேர்மையும், மனித நேயமும். ஐம்பது வருடங்களுக்கு மேலாக எழுதிக்கொண்டிருக்கும் வெசாவை இன்றைக்கும் பலர் பூரணமாக அறிந்திருக்கவில்லை. நான் முன்பு சொன்னமாதிரி எனக்கு வெசா என்றால் Crimson Gold தான் நினைவுக்கு வருகிறது. கடைசி ஒரு நிமிடத்தை தவறவிட்டபோது முழுத் திரைப்படத்தையும் விளங்கமுடியாமல் அன்று நாங்கள் திகைத்து நின்றோம். வெசா போன்ற பெரிய ஆளுமையை அறிய அவரிடமுள்ள நேர்மை, மனித நேயம் பற்றியும் தெரியவேண்டும். அது இல்லாமல் அவரை முற்றிலும் புரிந்துகொள்ளவே இயலாது.

திரைப்பட முன்னோட்டம்

# செங்கடல்



முப்பது வருடப் போர்! போரின் தடயங்கள் வேகவேகமாய் மறைக்கப்படுகின்றன. போர் இறந்த காலமென்றால் விடுதலை எப்போது நிகழ்காலமாகும்?
கடுந்துயரின் சாட்சியாய் காலம்
நம்பிக்கை வெறும் வார்த்தை!
இத் திரைச் சித்திரம் உண்மையின் சலனம்!!

**களம்:**

இனச் சுத்திகரிப்புகளாலும் படுகொலைகளாலும் வதைகளாலும் அகதிகளின் ஓலத்தாலும் கருகிப்போன ஈழத்து நிலத்தின் சாம்பல் `பாக் நீரிணை'யில் மிதந்து வருகிறது. அந்தச் சாம்பலில் செல்லும் தமிழக மீனவர்களின் தோணிகள் கடலில் எரியும் கதைகள் முடிவற்று நீண்டுகொண்டேயிருக்கின்றன. கடல் எரிகிறது. சகல மீட்பர்களாலும் கைவிடப்பட்டிருக்கும் மீனவர்களின் இரத்தமும் கண்ணீரும் இராமேஸ்வரத்தின் கரைகளை நிறைத்துள்ளன.

அப்பாவி மீனவர்கள் கடலின் நடுவே புலிகளெனவும் கடத்தல்காரர்களெனவும் உளவாளிகளெனவும் கொல்லப்படுகிறார்கள். மீனவர்களின் ஓலம் அலைகளின் நடுவே இரகசியமாகப் புதைக்கப்படுகிறது.

கடலைத் தவிர வேறெதையும் அறியாத அந்த மக்கள் மீண்டும் மீண்டும் உயிரைப் பணயம் வைத்து ஒருபிடி உணவுக்காக உப்பு நீரில் இறங்குகிறார்கள். அவர்கள் தமது தோணிகள் செல்லும் பாதையில் மீட்பர்களையோ இரட்சகர்களையோ இதுவரை கண்டதில்லை. ஆனால் ஒவ்வொருநாளும் கொலைகாரர்களை அவர்கள் காண்பதுண்டு.

எப்போதாவது அவர்கள் நடுக் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஈழத்து அகதிகளைக்காணும்போது ஒரு துயரப் புன்னகையுடன் அவர்களை வரவேற்கிறார்கள்.

**கதை**

புயல், நகரின் பெரும்பகுதியைக் கடலில் சுழற்றி எறிய, எஞ்சியிருக்கும் சிதிலங்களையும், அதில் கசியும் உயிர்களையும் ஊரெனத் தாங்கி நிற்கும் தனுஷ்கோடி. இந்தியப் பெருங்கடலும், வங்காள விரிகுடாவும் கலக்கும் அதன் கரையில்,முப்பது வருடங்களாகத் தீராத இலங்கை உள்நாட்டு இனப் போருக்குத் தப்பி ஈழத்து அகதிகள், தங்கள் வாழ்வின் இறுதி நம்பிக்கையைப் பிடித்துக் கொண்டு செத்தோ, உயிரோடோ வந்தவண்ணம் உள்ளனர். ஆயுதமும், இனவெறியும் நொருக்கிய ஈழத் தமிழர்களின் விடுதலைக் கனவை வரலாறு எட்டி நின்று பார்த்துக் கொண்டிருக்கும் காலக்கட்டம்.

சிங்களப் பேரினவாதம், அழித்தொழிக்கப்பட்ட போராளிகள், வீணடிக்கப்பட்ட ரத்தம் உறைந்து நிற்கும் பீரங்கிகள், இன்னும் புதைத்து முடியாத பிணங்கள், வேண்டப்படாத உயிர்களாய் முள்வேலிகளிடையே அடைத்து வைக்கப்பட்ட மனிதவிலங்குப் பண்ணைகள், ஓலமிடவும் சக்தியற்று சிதறடிக்கப்பட்ட தமிழினம்

மிச்சமுள்ள வாழ்க்கையை வாழ்ந்துவிடும் ஆசையில் ஏதோ ஒரு நாட்டின் எல்லையில் தன் கடைசி ஒரு பிடிமூச்சைத் தாங்கிக் கொண்டு நிற்கின்றது.

கடற் தண்ணீரில் சிங்கள நீரெது? தமிழ் நீரெது? என்ற அச்சத்திற்கிடையே தினமும் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள். விடுதலைப் புலியென்றோ, கடத்தல்காரனென்றோ, உளவாளியென்றோ சந்தேகத்தின் பேரில் சிறிலங்கா எல்லைக் கடற்படையால் நாள்தோறும் அடித்தோ, கொல்லப்பட்டோ, கொள்ளையடிக்கப்பட்டோ துன்புறுத்தப்படுகின்றனர். இருந்தும் அடுத்தவேளை உணவுக்காக கடலில் பாயும் வள்ளங்கள் சுழலுக்கும், புயலுக்கும், மழைக்கும் போலவே குண்டடிகளுக்கும், துப்பாக்கிச்சூட்டுக்கும் அஞ்சாமல், எப்படியும் கரைக்குத் திரும்பிவிடும் உறுதியை மீனவர்களுக்கு தருகின்றன.

இந்த சுழலில் தங்கள் இருப்பைத் தக்கவைக்க அலைக்கழிக் கப்படும் மீனவர் முனுசாமி, அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ மையத்தில் பணிசெய்யும் ரோஸ்மேரி மற்றும் ஆவணப்பட இயக்குனர் மணிமேகலை ஒரு மையப் புள்ளியில் சந்திப்பதும், வெளியேறுவதுமாய் கதையைப் பின்னுகின்றனர். யுத்தத்தாலும், சதா துரத்தும் மரணங்களாலும் காலத்தையும் வெளியையும் தன் இழுப்புக்கு வளைத்துக் குறுக்குசால் போடும் ஒரு கிறுக்கனாக அறியப்படும் ஈழத்து அகதி சூரி உண்மையின் மயக்கத்தை முன் னறிவித்த தீர்க்கதரிசி. அதிகாரம் அவனின் நாவுகளைத் துண் டித்து எறிகிறது, மணிமேகலையைச் சட்டத்தின் பெயரால் ஒடுக் குகிறது, முனுசாமியைக் கொன்று போடுகிறது, ரோஸ் மேரியை கடவுளின் கையில் பிடித்துக் கொடுக்கிறது. கடவுள் அடிமைக-ளிற்காகவும் ஏதிலிகளிற்காகவும் செங்கடலை இரண்டாகப் பிளந் தார்.

விடுதலை எங்கே ஒளிந்திருக்கிறது? குருதிச் சகதியில் நொண்டி யடித்து மெல்ல நடக்கிறாள் காலதேவதை

## உருவாக்கம்

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே விரிந்து கிடக்கும் கடலின் நடுவே வதைபடும் மீனவர்கள் குறித்தும்,இந்தக் கடலைத் தாண்டி உயிரைக் காப்பாற்ற ஓடிவரும் ஈழத்து அகதிகள் குறித் தும் எளியவர்களின் துயரங்களை அசட்டுடையுடன் பார்க்கும் அதிகார வர்க்கம் குறித்தும் செங்கடல் திரைச் சித்திரம் ஒளிவு மறைவுகள் ஏதுமின்றி நேரடியாகப் பேசுகிறது.

கம்பிப்பாடு, இது 1964ல் ஆழிப்பேரலையால் நிர்மூலமாக் கப்பட்ட ஒரு தனுஷ்கோடிக் கிராமம். அது இன்றும் தனது சிதை வுகளுடனும், அந்த மண்ணின் மீனவக் குடும்பங்களுடனும் உயிர்ப்புடன் இருக்கிறது. கடல்வழியே ஈழத்து அகதிகள் வந்து நிறையும் அந்த இடமே செங்கடல் திரைச் சித்திரம் நிகழும் இடமாக இருக்கிறது.

இந்தத் திரைச் சித்திரத்தில் இராமேஸ்வர மீனவர்களும் மண்ட பம் முகாமில் தங்கியிருக்கும் ஈழத்து அகதிகளுமே நடித்தி ருக்கிறார்கள். துணைக் கதாபாத்திரங்களில் கிடாத்திருக்கைக் கிராமத்து நடனக் கலைஞர்களும், நாடகக் கலைஞர்களும் பங் கெடுத்திருக்கிறார்கள்.
செங்கடலில் நடித்த பலரும் இதற்கு முன் ஒரு படம்பிடிக்கும் கருவியைத் தங்கள் வாழ்வில் எதிர்கொண்டதில்லை. அந்த ஒட்டுமொத்த சமூகமே மீண்டும் மீண்டும் வரிசையாகத் திரைக் கதையை வாசித்தும் நடிப்புப் பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொண்டும், ஒத்திகை பார்த்தவண்ணமுமிருந்தனர். கப்பிப்பாடு மீனவர்கள் பெரும்பாலும் எல்லா தயாரிப்புப் பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டனர். உணவுத் தயாரிப்பு, வாகனப் போக்குவரத்து, கூட்டத்தைக் கட்டுப்படுத்துதல், படப்பிடிப்பின் போது தொழில் நுட்கக் கலைஞர்களிற்கு உதவுவது போன்ற எல்லாவிதமான பணிகளிலும் அவர்கள் உற்சாகத்தடன் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர்.

நொடிக்கொருதரம் மாறிக்கொண்டிருந்த காலநிலை, புயல் அறி விப்புகள், திடீரெனக் கொந்தளித்துப் பெருகும் திடீரென உள் வாங்கும் கடல், மின்சாரமின்மை, தொலைத்தொடர்பு வசதிக ளின்மை, சீரற்ற மணல் பாதையில் படப்பிடிப்பு உபகரணங்க ளுடன் நீண்ட பயணம் போன்றவையே படப் பிடிப்புக் குழு எதிர்நோக்கிய முதன்மைப் பிரச்சனைகளாயிருந்தன.

ஈழத்து அகதிகள் மண்டபம் அகதி முகாமின் அனைத்து கட்டுப் பாடுகள் மற்றும் பாதுகாப்புநடைமுறைகளையும் அனுசரித்தே படத்தில் நடித்தனர். அவர்கள் காலை எட்டு மணிக்குத் தங்கள் அன்றாட வேலைகளுக்காக மட்டுமே முகாமை விட்டு வெளியேற வேண்டும். மேலும் மாலை ஆறு மணிக்கு முன்னதாகவே முகாமின் வருகைப்பதிவேட்டில் கையெழுத்திட திரும்பியாக வேண்டும். இதில் ஏற்படும் ஏதேனும் சிறுபிழைகூட அவர்களை மோசமான சிக்கல்களுக்கும், கேள்விகளுக்கும் இட்டுச்சென்று விடும். இத்தனை சிரமங்களுக்கு அப்பாலும் அவர்கள் மனப்பூர் வான ஈடுபாட்டுடன் செங்கடலில் நடித்தார்கள். கடலிலும் தீடையி லும் சுடுமணிலிலும் குழந்தைகள் கூட கடும் சிரமத்துடன் நடித்துக் கொடுத்தார்கள்.

தனுஷ்கோடியின்கரை இலங்கையிலிருந்து வெறும் பதினெட்டு கிலோமீட்டர் தொலைவிலிருக்கிறது. தனுஷ்கோடி நிலப்பரப்பு கடலோரக்காவற்படை, காவற்துறை, கடற்படை, மத்திய புலனாய் வுத்துறை, கியூபிரிவு முதலியவைகளால் தொடர்ந்து கண்காணிக் கப்பட்டு வருகிறது. கம்பிப்பாடு கிராமத்தின் சிதைவுகளின் நிழலில் இந்திய உளவுத் துறையினர் மறைந்திருக்கிறார்கள்.

செங்கடல் திரைப்படக்குழு நிழல்களைப் படமாக்குவதில் ஆர்வம் காட்டவில்லை. அது உண்மையை மட்டுமே தேடிச் சென்றது ...அதைப் படமாக்கியுமிருக்கிறது.

| | |
|---|---|
| இயக்கம்: | லீனா மணிமேகலை |
| தயாரிப்பு: | ஜானகி சிவக்குமார், தோல்பாவை தியேட்டர்ஸ் |
| திரைக்கதை: | சி.ஜெரால்ட், ஷோபாசக்தி, லீனா மணிமேகலை |
| வசனம்: | ஷோபாசக்தி |
| கூடுதல் வசனம்: | சி.ஜெரால்ட் |
| ஒளிப்பதிவு: | எம். ஜே ராதாகிருஷ்ணன் |
| இசை: | எல்.வி.கணேசன் |
| படத்தொகுப்பு மேற்பார்வை: | ஸ்ரீகர் பிரசாத் |
| படத்தொகுப்பு: | துஹினாபோ முஜும்தார் |
| கலை: | மாயக்கண்ணன், கே.டி. காந்திராஜன் |
| ஒலிப்பதிவு: | ஹரிகுமார் மாதவன் நாயர் |
| ஒலிவடிவமைப்பு: | சுபதீப் சென்குப்தா |
| தயாரிப்புமேற்பார்வை: | இளங்கோ ரகுபதி |



**வித்துவசிரோமணி கணேசையர் அவர்களின் அறுபதாம் ஆண்டுநிறைவு விழாவில் சுவாமி விபுலானந்தர், க.நடேசபிள்ளை ஆகியோருட்பட தமிழ் அறிஞர்களுடன் சுவாமி ஞானப்பிரகாசர்.**


வளமான வாழ்வின்
அடையாளமாக வீடு
வாங்கவும்விற்கவும்...

416 816 1220

REd Carpet Royal Ralty Ltd. Brokerage
880 Ellesmere Road. 416 284 5555



RED CARPET HERITAGE REALTY

ரஞ்சன் பிரான்சிஸ்

கட்டுரை

# ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு

மணி வேலுப்பிள்ளை

...இடக்கரடக்கல் கருதி, handicap (ஊனம்) என்னும் சொல் பயன்படுத்தப்படுவது குறைவு. அதற்குப் பதிலாக disability (வலுவினம்) என்னும் சொல் பயன்படுத்தப்படுவதுண்டு. அதுவும் தற்பொழுது மங்கி, differently abled (மாற்றுவலுவினர்), special needs persons (தனி வசதியினர்) போன்ற பதங்கள் ஓங்கி வருகின்றன. அவர்களை physically challenged என்று குறிப்பிடும் வழக்கமும் உண்டு. எமக்கு வந்த ஒரு மின்னஞ்சலின்படி, சென்னை விமான நிலையத்தில் இது மெய்ப்புல அறைகூவலர் என்று பொறிக்கப்பட்டுள்ளது! இங்கு physical மெய்யை, அதாவது உடலைக் கருதுகிறது. புலம் என்பது இடம், புலன், மையம் என்றெல்லாம் பொருள்பட வல்லது. எனினும் அறைகூவலர் என்பது இங்கு அறவே பொருந்தாது...

மொழிபெயர்ப்பு என்பது ஒரே சமயத்தில் இரண்டு எசமானர்களுக்குப் பணியாற்றுவது போன்றது. தமிழ், ஆங்கில எசமானர்கள் இருவரும் திருப்திப்படும் வண்ணம், ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பதில், நாம் எதிர்நோக்கக்கூடிய சிரமங்களையும், அவற்றை எதிர்கொள்வதில் எமக்குத் துணைநிற்கக்கூடிய உத்திகளையும் இயன்றவரை இனங்காண்பதே இந்த ஆய்வின் தலையாய நோக்கம். சொல், தொடர், பாணி என்னும் மூன்று உப தலைப்புகளின் கீழ் அவற்றை இங்கு நாம் பகுத்தாராய எண்ணியுள்ளோம்.

(1) சொல்:

ஆங்கிலப் பதங்களை முதற்கண் ஆங்கிலத்தில் விளங்கிக்கொண்ட பின்னரே, அவற்றுக்குத் தமிழில் பொருள்கொள்ளும் விதத்தை, நாம் கருத்தில் கொள்வது நலம் பயக்கும். சாக்கிரத்தீன் தத்துவத்தை மீள் நோக்கத் தலைப்பட்ட ஓர் அமெரிக்க அறிஞர் கூறுகிறார்:

மொழிபெயர்ப்புகளைக் கொண்டு ஏற்புடைய முறையில் அரசியல், தத்துவ அனுமானங்களை எவராலும் மேற்கொள்ள முடியாது என்பதை நான் கண்டுகொண்டேன். மொழிபெயர்ப்பாளர்கள் திறமையற்றவர்கள் என்பதல்ல அதற்கான காரணம். கிரேக்க மொழிப் பதங்கள் – கேத்திர கணிதத்தில் கூறப்படுவது போல் – அவற்றுக்கு நிகரான ஆங்கிலப் பதங்களுடன் முற்றிலும் ஒத்திசையாமையே அதற்கான காரணம். ஆங்கிலத்தில் பருமட்டாகப் பொருந்தும் பல்வேறு பதங்களுள் ஒன்றைத் தெரிவு-செய்யவேண்டிய நிர்ப்பந்தம் மொழிபெயர்ப்பாளருக்கு ஏற்படும். கிரேக்க மொழியிலுள்ள கருதுபொருட் பதம் ஒன்றை விளங்கிக் கொள்ள முற்படும் ஒருவர், கிரேக்க மொழியிலேயே அந்தப் பதத்துடன் மல்லாடி அதனை விளங்கிக் கொள்வதற்குப் போதிய அளவுக்காவது கிரேக்க மொழியைக் கற்றிருக்க வேண்டும். அந்தப் பதம் உணர்த்தக்கூடிய கருத்துகள், நயம் அனைத்தையும் ஒருவரால் அந்த மொழியிலேயே புரிந்துகொள்ள முடியும்.

இதனை உறுதிப்படுத்தும் வண்ணம் தொகுக்கப்பட்டுள்ள க்ரியாவின் தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி, தற்காலத் தமிழ்-தமிழ்-ஆங்கில மரபுத்தொடர் அகராதி, ஒக்ஸ்போர்ட் ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழ் அகராதி, போன்றவை தலைசிறந்த எடுத்துக் காட்டுகள் ஆகும்.

எந்த மொழியிலும் ஒருபொருட் பதங்களை விட, பல் பொருட்பதங்களே அதிகம். சில எடுத்துக்காட்டுகள்:

1. abbreviate = குறுக்கு
2. abide armchair-critics = திண்ணைத் திறனாய்வாளர்களைச் சகித்துக்கொள்
3. abide by the rules = விதிகளுக்கு அமைந்தொழுகு
4. abandon property = உடைமையைக் கைவிடு
5. act with abandon = பராமுகத்துடன் செயற்படு
6. abandon yourself to nostalgia = (1) தாயக வேட்கையில் மூழ்கு (2) மீட்சி வேட்கையில் மூழ்கு
7. address a meeting = கூட்டத்தில் உரையாற்று
8. address card = முகவரி அட்டை
9. address the needs = தேவைகளைக் கவனி
10. address your application to me = உன் விண்ணப்பத்தை எனக்கு அனுப்பிவை

11. peace accord = சமாதான உடன்பாடு
12. in accord with our policy = எமது கொள்கைக்கு இணங்க
13. of my own accord = நானாகவிரும்பியே = நானே உளமுவந்து
14. with one accord = ஒருமனதுடன் = ஏகமனதாக
15. accord importance to education = கல்விக்கு முக்கியம் கொடு

மேற்படி எடுத்துக்காட்டுகளில் பெரிதும் வினை வினையாகவும், பெயர் பெயராகவும், உரிச்சொல் உரிச்சொல்லாகவும்... பெயர்க்கப்பட்டுள்ளன. அதேவேளை abandon வினையாகவும் (4,6) பெயராகவும் (3) பயன்படுத்தப்பட்டுள்ளது. address வினையாகவும் (7,9,10) பெயராகவும் (8) கொள்ளப்பட்டுள்ளது. accord பெயராகவும் (11,12,13,14,) வினையாகவும் (15) இடம்பெற்றுள்ளது. ஒரு சொல்லின் பொருள் இடத்துக்கிடம் மாறுபடும் விதம் இங்கு உணர்த்தப்பட்டுள்ளது. முன்னொட்டுகளையோ, பின்னொட்டுகளையோ கூட ஒரு குறிப்பிட்ட கருத்துக்குள் ஒடுக்க முடியாது. பின்வருபவை -ize என்னும் பின்னொட்டுடன் கூடிய பதங்களின் தமிழாக்கங்கள்:

| | |
|---|---|
| amortize = | தவணைக்கடன் தீர் |
| Capitalize your possessions = | உன் உடைமைகளை விற்றுக் காசாக்கு |
| I realized my mistake = | எனது தவறை நான் உணர்ந்தேன் |
| prioritize = | முதன்மைப்படி வரிசைப்படுத்து |
| Visualize your future = | உன் வருங்காலத்தை எண்ணிப் பார் |

அதேவேளை, -ize பின்னொட்டுடன் கூடிய ஒரே சொல்லையே பல்வேறு பொருள்களில் எடுத்தாளலாம்:

| | |
|---|---|
| I realized my mistake = | எனது தவறை நான் உணர்ந்தேன் |
| We realized our ambition = | எமது குறிக்கோளை நாம் எய்தினோம் |
| Our worst fears were realized = | நாம் மிகவும் அஞ்சியபடியே நிகழ்ந்தது |
| Realize your assets = | உன் சொத்துகளைக் காசாக்கு |
| The stage designs were realized = | மேடை வடிவமைப்புகளுக்கு செயலுருவம் கொடுக்கப்பட்டது = மேடை வடிவமைப்புகள் செயலுருப்பெற்றன |
| Socialize with students = | மாணவர்களுடன் ஊடாடு |
| Socialize the children = | பிள்ளைகளுக்கு சமூக நடத்தை கற்பி |
| Socialize the nation = | நாட்டை சமூகவுடைமை மயமாக்கு |

Capitalism socializes the cost and privatizes the profits = முதலாளித்துவம், செலவை சமூகத்தின்மீது பொறுப்பிக்கிறது, இலாபத்தை தனியாருக்கு அளிக்கிறது.

(2) தொடர்:

பின்வரும் தமிழாக்கங்கள் திரும்பத் திரும்ப எமது கண்ணில் படுபவை அல்லது காதில் விழுபவை:

travel preparation = பயணத் தயாரிப்பு
cultural values = பண்பாட்டுப் பெறுமதிகள்
economic pressure = பொருளாதார அழுத்தம்
reflective mood = பிரதிபலிக்கும் மனநிலை

இவற்றை நாம் கண்ணுற்றோ, செவிமடுத்தோ பழகியபடியால், எமக்கு இவை பொருத்தமானவையாகவே தென்படக்கூடும். எனினும், இவை தேராது தெளிதலின் பாற்படும். இங்கு சம்பந்தப்படும் சொற்களுக்கு வேறு பொருள்களும் உள்ளன. எமது உடனடித் தேவைக்காக, அவை ஒவ்வொன்றுக்கும் இரு பொருள்களை மாத்திரம் கருத்தில் கொள்வோம்:

| | | |
|---|---|---|
| preparation = | 1. தயாரிப்பு | 2. ஆயத்தம் |
| value = | 1. பெறுமதி | 2. விழுமியம் |
| pressure = | 1. அழுத்தம் | 2. நிர்ப்பந்தம் |
| reflective = | 1. பிரதிபலிக்கும் | 2. சிந்திக்கும் |

மேற்படி நிரலை நாம் தேர்ந்து தெளிந்தால், எமது தமிழாக்கம் பின்வருமாறு அமையும்:

| | |
|---|---|
| food preparation = | உணவு தயாரிப்பு |
| travel preparation = | பயண ஆயத்தம் |
| monetary value = | நாணயப் பெறுமதி |
| cultural values = | பண்பாட்டு விழுமியங்கள் |
| blood pressure = | குருதி அழுத்தம் |
| economic pressure = | பொருளாதார நிர்ப்பந்தம் |
| reflective plate = | பிரதிபலிக்கும் தகடு |
| reflective mood = | சிந்திக்கும் மனநிலை |

தேராது தெளிதல் விந்தையான மொழிபெயர்ப்புக்கு இட்டுச்செல்லும் என்பதற்கு இன்னோர் எடுத்துக்காட்டு: பிரித்தானியப் பிரதமர் கேட்பதற்காகவும், கற்றுக்கொள்வதற்காகவும், பிரதிபலிப்பதற்காகவும் பாலஸ்தீனத்துக்கு சென்றார். இதன் தோற்றுவாய்: ...to listen,learn and reflect... மிகவும் கனதி வாய்ந்த இம்மூன்று வினைகளும் மேலே கருத்தூன்றி மொழிபெயர்க்கப்படவில்லை. Lost in translation என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு! இதன் நேரிய தமிழாக்கம்: அவர் ...செவிமடுப்பதற்காகவும், கற்பதற்காகவும், சிந்திப்பதற்காகவும்... பாலஸ்தீனத்துக்கு சென்றார்.

மரபுத்தொடர்கள் (idioms), பழமொழிகள் (proverbs), உருவகங்கள் (metaphors), இடக்கரடக்கல்கள் (euphemisms) முதலியவற்றுள் ஒருசிலவற்றை மட்டுமே சொல்லுக்குச் சொல்லாக மொழிபெயர்க்கலாம். எடுத்துக்காட்டாக:

at a snail's pace = நத்தை வேகத்தில்

People who live in glass-houses shall not throw stones = கண்ணாடி மாளிகையில் வசிப்பவர்கள் கல்லெறியக் கூடாது

a deafening silence = செவிடுபடும்படியான அமைதி

பெரும்பாலான மரபுத்தொடர்களையும், பழமொழிகளையும், உருவகங்களையும், இடக்கரடக்கல்களையும் நாம் நெகிழ்த்தியோ, மாற்றியோ பெயர்க்க வேண்டியுள்ளது:

| | |
|---|---|
| in limbo = | கிடப்பில் |
| Put the cart before the horse = | மாட்டுக்கு முன்னே வண்டியைப் பூட்டு |
| a heart of stone = | கல்நெஞ்சம் |
| an accessible building = | வலுதளர்ந்தோர் உட்புகவல்ல கட்டிடம் |

இடக்கரடக்கல் கருதி, handicap (ஊனம்) என்னும் சொல் பயன்படுத்தப்படுவது குறைவு. அதற்குப் பதிலாக disability (வலுவீனம்) என்னும் சொல் பயன்படுத்தப்படுவதுண்டு. அதுவும் தற்பொழுது மங்கி, differently abled (மாற்றுவலுவினர்), special needs persons (தனி வசதியினர்) போன்ற பதங்கள் ஓங்கி வருகின்றன. அவர்களை physically challenged என்று குறிப்பிடும் வழக்கமும் உண்டு. எமக்கு வந்த ஒரு மின்னஞ்சலின்படி, சென்னை விமான நிலையத்தில் இது மெய்ப்புல அறைகூவலர்

என்று பொறிக்கப்பட்டுள்ளது! இங்கு physical மெய்யை, அதாவது உடலைக் கருதுகிறது. புலம் என்பது இடம், புலன், மையம்... என்றெல்லாம் பொருள்பட வல்லது. எனினும் அறைகூவலர் என்பது இங்கு அறவே பொருந்தாது. ஒரு விவாதத்துக்கு அறைகூவல் விடுப்பது challenge for a debate ஆகும். அதில் எதுவித இடக்கரடக்கலும் இல்லை. Physically challenged என்பது handicap (ஊனம்) என்பதற்கு ஓர் இடக்கரடக்கல் ஆகும். அதனை உடல்வலு தளர்ந்தோர் என்றோ, மெய்வலு தளர்ந்தோர் என்றோ... கொள்ளலாம்.

| தமிழ்ப் பாணி | ஆங்கிலப் பாணி | ஆங்கிலப் பாணியில் தமிழ் |
|---|---|---|
| தமிழரின் அடையாளம் | Tamil identity | தமிழ் அடையாளம் |
| தமிழரின் சைவத்தில் | in Tamil Saivaism | தமிழ்ச் சைவத்தில் |
| தமிழரின் மத அடையாளங்கள் | Tamil religious identities | தமிழ் மத அடையாளங்கள் |
| தமிழரின் மதச்சார்பற்ற அடையாளம் | Secular Tamil identity | மதச்சார்பற்ற தமிழ் அடையாளம் |

(3)பாணி:

ஆங்கிலம்-தமிழ் மொழிபெயர்ப்புகளில் இழைக்கப்படும் வழுக்களின் தாக்கத்தால், தமிழ்ப் பாணி மங்கி வருகிறது. ஆங்கிலப் பாணி தமிழ்ப் பாணியாய் ஓங்கி வருகிறது. எடுத்துக்காட்டாக, (வேற்றுமை உருபுடன் கூடிய) தமிழரின் அடையாளம் அல்லது (பெயரடை உருவில் அமையும்) தமிழின அடையாளம் உருபிழந்து, அடையிழந்து தமிழ் அடையாளம் ஆகி வருகிறது. அவ்வாறே தமிழரின் சைவம் என்பது தமிழ்ச் சைவம் எனப்படுகிறது:

தமிழின் அடையாளம் வேறு, தமிழரின் அடையாளம் வேறு. Tamil identity என்னும் ஆங்கிலத் தொடரில் Tamil ஒரு பெயர்ச்சொல் அல்ல, ஓர் உரிச்சொல் ஆகும். Identity என்பதன் பெயரடையாகவே இங்கு Tamil அமைந்துள்ளது. ஆங்கிலத்தில் Tamil பெயர்ச்சொல்லாகவோ, உரிசொல்லாகவோ அமையவல்லது:

I am a Tamil (பெயர்ச்சொல்)

A Tamil word (உரிச்சொல் = பெயரடை)

ஆங்கிலத்தில் Tamil பெயர்ச்சொல்லாகவோ, உரிச்சொல்லாகவோ அமையவல்லது என்னும் உண்மை கருத்தில் கொள்ளப்பட்டிருந்தால், தமிழரின் அடையாளம், தமிழரின் சைவம், தமிழரின் தேசியவாதம்... போன்று தமிழ்ப் பாணியில் அமைந்த தொடர்கள் மங்கவோ, தமிழ் அடையாளம், தமிழ்ச் சைவம், தமிழ்த் தேசியவாதம்... போன்று ஆங்கிலப் பாணியில் அமைந்த தொடர்கள் ஓங்கவோ வாய்ப்பில்லை.

பங்கு, பங்குவகி, பங்குவகிப்பு, பங்குவகிக்கை, பங்குவகித்தல்... எல்லாம் ஏற்கெனவே தமிழில் நிலையூன்றிய பதங்கள். தற்பொழுது வகிபாகம் அவற்றை விஞ்சி நிலைகொண்டுள்ளது. கருத்தியல் நிலைப்பாட்டின் வகிபாகம் என்பதன் தோற்றுவாய்: The role of ideological stance. எங்கள் உள்ளத்தில் உறைந்துள்ள தமிழ் வழக்கை ஆங்கில வழக்கு அப்புறப்படுத்தி வருவதை இது உறுதிப்படுத்துகிறது. The role of ideological stance என்பது எத்தகைய ஒரு தமிழ்த் தொடரின் ஆங்கில உருவமாய் அமையத்தக்கது என்னும் வினாவை எழுப்பினால், அது எம்மை கருத்தியல் நிலைப்பாடு வகிக்கும் பங்கு என்னும் தொடருக்கு இட்டுச்செல்லும்.

ஆண்களதும் பெண்களதும் வகிபாகம் என்பதன் தோற்றுவாய்: The role of men and women. இங்கு of, and இரண்டும் சேர்ந்து தமிழாக்கத்தை தடம்புரள வைத்துள்ளன. இதனை ஆண்களும் பெண்களும் வகிக்கும் பங்கு என்று இயல்பாகவும், இலகுவாகவும் பெயர்த்திருக்கலாம். பெயர்க்காத காரணம்: இந்த ஆங்கிலத் தொடரில் வகிக்கும் என்பதற்குரிய சொல் இடம்பெறாமையே! The role of men and women என்பதற்கும் The role played by men and women என்பதற்கும் இடையே கருத்தளவில் எதுவித வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆண்களும் பெண்களும் வகிக்கும் பங்கு என்றே இவ்விரு தொடர்களும் பொருள்படுகின்றன.

பெயர் பெயராகவும், வினை வினையாகவும், உரிச்சொல் உரிச் சொல்லாகவும்... மாத்திரமே பெயரும் என்பதற்கில்லை. எடுத்துக்காட்டாக, flute accompaniment என்னும் தொடரை மிகவும் இலகுவாகவும், சொல்லுக்குச் சொல்லாகவும் குழல் பக்கவாத்தியம் என்று பெயர்க்கலாம். Violence is a common accompaniment to hatred என்னும் வசனத்தையும் கூட, வன்முறை என்பது வெறுப்புக்கு ஒரு பொதுவான பக்கவாத்தியம் என்றோ, வன்முறை என்பது வெறுப்புக்கு ஒரு பொதுவான சேர்மானம் என்றோ... மொழிபெயர்க்கலாம். இத்தகைய மொழிபெயர்ப்பையே பாரதியார், ஆங்கில நடையில் தமிழ் என்று சாடினார். Violence is a common accompaniment to hatred என்னும் ஆங்கிலக் கூற்று ஓர் அரிய உண்மையை உணர்த்தி நிற்கிறது. இதன் தமிழாக்கம் என்ன என்று சிந்திப்பதைவிட, அது எத்தகைய தமிழ்க் கூற்றின் ஆங்கில உருவம் என்பதை இனங்காண்பதே புத்திசாலித்தனம். அந்த வகையில், இதனை இப்படி மொழிபெயர்க்கலாம்:

வெறுப்புடன் வன்முறை சேர்வது வழமை.

Violence is a common accompaniment to hatred.

மேலே violence (வன்முறை), hatred (வெறுப்பு) என்னும் பெயர்கள் இரண்டும் தமிழிலும் பெயர்களாகவே அமைந்துள்ளன. Common என்னும் உரிச்சொல்லுக்கு தமிழில் வழமை என்னும் பெயர் உருவம் கொடுக்கப்பட்டுள்ளது. Accompaniment என்னும் பெயர் தமிழில் சேர்வது என்று வினைப்பெயர் ஆகியுள்ளது. அதாவது, வெறுப்புடன் வன்முறை சேர்வது வழமை எனத்தக்க ஒரு கூற்றே ஆங்கிலத்தில் Violence is a common accompaniment to hatred என்று குறிப்பிடப்பட்டுள்ளது! இனி, வெறுப்புடன் வன்முறை சேர்வது வழமை என்னும் வசனத்தை, It's usual for violence to accompany hatred என்று நாம் மீளவும் மொழிபெயர்க்கலாம்:

வெறுப்புடன் வன்முறை சேர்வது வழமை.

Violence is a common accompaniment to hatred.

It's usual for violence to accompany hatred.

மேற்படி ஆங்கில வசன சோடியின் சொல்தொடரியல் மாறுபட்டாலும், பொருள் மாறுபடாமை கவனிக்கத்தக்கது. ஓர் ஆங்கிலக் கூற்றின் தமிழாக்கம் என்ன என்று சிந்திப்பதைவிட, அது எத்தகைய தமிழ்க் கூற்றின் ஆங்கில உருவமாய் அமையத்தக்கது என்று சிந்திப்பதே, எம்மை இயல்பான தமிழ் நடைக்கு இட்டுச்செல்லும்.

எந்த ஒரு கூற்றையும் ஒன்றுக்கு மேற்பட்ட விதங்களில் மொழிபெயர்க்கலாம் என்பதும் மேற்படி எடுத்துக்காட்டுகளிலிருந்து புலனாகிறது. இதற்கு இன்னோர் எடுத்துக்காட்டு: தற்கால இலக்கியத் திறனாய்வாளர் ஒரு பல்கலைகழகத்தில் வசிப்பது அவர்தம் குணவியல்பாகும். இந்த வசனத்தின் தோற்றுவாய் தமிழே என்பதில் ஐயமில்லை. ஆங்கிலத்தில் இதனைப் பின்வருமாறு எடுத்துரைக்கலாம்: It is characteristic for a modern literary critic to inhabit a university. இதனை வேறொரு விதமாகவும் முன்வைக்கலாம்: The modern literary critic characteristically inhabits a university. உண்மையில் எம் கண்ணில் பட்ட இந்த ஆங்கில வசனத்தையே மேலே, தற்கால இலக்கியத் திறனாய்வாளர் ஒரு பல்கலைகழகத்தில் வசிப்பது அவர்தம் குணவியல்பாகும்

என்று நாம் குறிப்பிட்டோம். "இதன் தோற்று வாய் தமிழே என்பதில் ஐயமில்லை" என்று நாம் குறிப்பிட்டது வேண்டு மென்றே!

(அவள்) மிகவும் சந்தோஷமாக உணர்ந்தாள்

தாத்தா களைப்பாய் உணர்ந்தார்

மேற்படி வசனங்களின் ஆங்கிலத் தோற்றுவாயும், தமிழ்ப் பாணி யும் பின்வருமாறு:

(She) felt very happy = (அவள்) மிகவும் சந்தோஷப்பட்டாள்.

Grandpa felt tired = தாத்தா களைப்படைந்தார்.

I feel good, We feel happy, They feel tired போன்ற வசனங்களில் feel செயப்படுபொருள் குன்றிய வினை (intransitive verb) ஆகும். தெம்பு, மகிழ்ச்சி, களைப்பு போன்ற சொற்களில் சம்பந்தப்பட்ட உணர்வு பொதிந்துள்ளமை கவனிக்கத்தக்கது. ஒருவர் மகிழ்ந்தார் அல்லது மகிழ்ச்சி அடைந்தார் என்பதே உரிய பொருளை உணர்த்த வல்லது. அவர் மகிழ்ச்சியாக உணர்ந்தார் அல்லது களைப்பாய் உணர்ந்தார் என்று கொள்வது தமிழ்ப் பாணி ஆகாது. எனினும் feel என்னும் சொல் செயப்படுபொருள் குன்றா வினயாக (transitive verb) அமையும் இடங்களில் உணர் பொருந்தக்கூடும். எடுத்துக்காட்டாக, I felt something crawl up my leg = என் கால்மீது ஏதோ ஊர்வதை நான் உணர்ந்தேன்.

தமிழ், ஆங்கில எசமானர்கள் இருவரும் நிறைவுறும் வண்ணம் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பதில் எழும் சிரமங்கள், அவற்றை எதிர்கொள்வதில் பயன்படும் உத்திகள் சிலவற்றை சொல், தொடர், பாணி வாரியாக நாம் கருத்தில் கொண்டோம். அன்று பாரதியார் இட்ட முழக்கம் இன்றும் எம் காதில் விழுகிறது:

"தமிழ் நாட்டிலோ முழுவதும் தமிழ் நடையை விட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகிறது. முதலாவது, நீ எழுதப்போகிற வி'யத்தை இங்கிலீஷ் தெரியாத ஒரு தமிழனிடம் வாயினால் சொல்லிக்காட்டு. அவனுக்கு நன்றாக அர்த்தம் விளங்குகிறதா என்று பர்த்துக்கொண்டு, பிறகு எழுது. அப்போ துதான் நீ எழுதுகிற எழுத்து தமிழ்நாட்டிற்குப் பயன்படும்" என்று முழங்கிய பாரதியின் ஆவலையும், "எங்கள் அறி யாமையை நாங்கள் தமிழின் வறுமை ஆக்கக்கூடாது" என்று வலியுறுத்திய ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் அறைகூ வலையும் நாம் கருத்தில் கொள்வோமாக.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.


# எங்கள் அனுபவத்தில் உங்கள் எளிதான பயணம்!



AIR LINK TRAVEL Ltd

5200 Finch Ave. East # 115, Toronto, ON M1S 4Z4
www.airlinktravel.ca | email:sales@airlinktravel.ca

T: 416 292 6200

## நானும் இன்னொன்றாய்...!

மதத்த பொழுதுகளில்
திமுறுதலாகிப் பின் அசைகிறது
உள்ளிருப்பு

தியான வெளிகளின் இடையே விரியும்
குறுகலான ஒற்றையடி பாதையொன்றை
அடியொற்றி நடக்கிறேன்
பிறப்பிலேயே பணிக்கப்பட்டதன்படி

அடுத்த அடியிற்கான பிரயத்தனத்தில்
காற்றில் ஆடும் பாதத்தின்
நொடி நிலை தளும்புதலின் பின்
வெடித்துப் பிளம்புகின்றன எரிமலைகள்

எரி கற்களின் மேல்
உட்கார்ந்தபடி
கரைந்து கொண்டிருக்கும் காகங்களை
அவை அறிமுகப்படுத்துகின்றன

கரு முகிற் கூட்டங்கள்
எனக்கானவை
அவை என்னைப் பொழிபவை
எரி கற்களின் மீதே

வீழ்தலிற்கும் நிலப்படுதலுக்குமான பொழுதில்
நான் காகமாகியிருந்தேன்

# மயூ கவிதைகள்

## இயல்பிருத்தல்....!

என் உணர்ச்சிகளை
அள்ளிக் கொண்டதன் பிற்பாடு
சுழன்றடித்துக் கொண்டிருந்தது
சூறைக் காற்று

அது நேற்றும் என்
மௌனங்களைத் தின்றிருந்தது
அழுகையின் விசும்பல்களை
மூக்குறிஞ்சல்களை
குடித்துக் களிப்பேறி
என்னை அணைத்தபடியே
குறட்டை விட்டது
நான் அன்றிரவும்
அந்தக் கனவைக் கண்டேன்

இயல்பிருப்பதாக அறிவிக்கப்பட்ட
தெருவொன்றில்
அலைந்து கொண்டிருந்தார்கள்
விபச்சாரர்கள்
என்னை விற்க முயல்வதை
தடுத்து
மீண்டும் மீண்டும்
தோற்றுக் கொண்டிருந்தேன்

கனவு விழிக்கையில்
குறட்டை நின்றிருந்தது
மௌனமாக இருப்பதற்கு முயன்ற போது
கைகள் இயல்பாக
மறைத்தன
உடலை



## முள்வேலி

இனித் தரித்தால்
என் உயிர்தரிக்காதென்றுணர்ந்த போது
கலங்கி
மண்தொட்டு வணங்கி கடல் கடந்தவன்
இருபதுதாண்டுகள் கழிந்து
மீள வருகிறேன்

எல்லாம் முடிந்துவிட்டது என்கிறார்கள்
எது முடிந்தது!

மாறி மாறிப் பெய்த மழையால் கூட
கழுவப்படாமல் கறைபட்டுக் கிடக்கிறது
தேசம்

மூச்சில் இன்னும் கந்தக நெடி
பல்லி சொல்வது கூட
எந்திர துப்பாக்கி சத்தம்போல் அதிர்கிறது

அச்சம் கலையாத முகத்துடன்
தங்களுக்கான கூடுகளை முடைகின்றன
தூக்கணாங் குருவிகள்

பல்லாயிரக்கணக்கானவரின் மரண ஓலங்கள்
பூசப்பட்ட
சுவர்களின் மீது
பல்லிழித்தபடி காட்சி தருகிறான்
அரசன்
அவனது பார்வை விலக்கி
சிறுநீர் கழிப்பதற்குக் கூட என்னால் ஒதுங்கமு-
டியவில்லை

விதைக்கப்பட்ட ரவைகளில் இருந்து
முளைவிட்டிருக்குமோ!
என ஐயுறுவண்ணம்
தேசம் முழுவதும் இராணுவச் சிறுவர்கள்

ஏ-9 வீதியின் மேற்கோரம்
ஒற்றைக்காலை போருக்கு காவுகொடுத்தவள்
உயிர்க்கூட்டை இறுகப் பிடித்தபடி குந்தியிருக்கிறாள்
ஏங்கிய விழிகளுடன்

எதிரே
வீதியின் கிழக்கே
அவள் ஊரும்
தென்னைகள் சூழ்ந்த வளவும்
போக முடியாத வீடும்

காட்டுக் குருவிகளால் கூட
என்னிடம் ஒரு இயல்பான காலையை
அழைத்துவர முடியவில்லை

பேயறைந்தவர்கள் போல்
எல்லோரிடமும்
இருள் கனத்த மௌனம்

இருந்தாலும்
எல்லாம் முடிந்துவிட்டதென்கிறார்கள்
முடிந்ததை பேசுதற்கும் அஞ்சுகிறார்கள்

ஒன்றுமே நடக்காததைப் போலவும்
எதையுமே பார்க்காததைப் போலவும்
நிலத்தின் எல்லையில் எழுந்து நிற்கிறது
பாரிய தொலைபேசி விளம்பரம்

முடிவாய்
நான் தவழ்ந்த மண்ணில்
ஒருபிடி எடுத்து வரும் ஆவல் உந்த
ஊர் நுழைய முனைகிறேன்

முள் வேலி
இன்னும் சிறைப்பட்டே கிடக்கிறது
என் சிற்றூர்.

---

## கட்டவிழ்தல்

பெய்துகொண்டிருக்கிறது மழை
நான் சிறு விதை
மழையில் நடந்தேன்
நீர் ஊறி
உடல் பருத்து தலை நிமிர்த்துகிறது
முளை
வேர்கள் இறங்க
பெரும் தளையென கட்டுண்டு போனேன்

சிறை போல் வாழ்வு
காற்றை இறைஞ்சி கைகளை
விரித்தேன்
அகல
தானே வந்தன தளிரும் இலைகளும்
இப்போ
பெருமரமாய் எழும் ஆவல் துளிர்த்தது
எழுந்தேன்
'சும்மா இரு' என்றான் சித்தன்
சும்மா இருப்பது சுமை எனப்பட்டது

காற்றை மீட்டினேன்
இசைந்தது உலகு
பாடல் கேட்டுப் பறவைகள் வந்தன
பசியாறக் கனிகளை தந்தேன்
சுமந்தன பறவைகள்

இப்போ
நான்
நிலத்தில் இல்லை.

ஓகஸ்ட் 18, 2010

# திருமாவளவன் கவிதைகள்

முதுவேனிற்பதிகம்

மண்ணின் மீதும் மனதின் மீதும் மரங்களின் மீதும்
மனிதரின் மீதும் படிந்து கிடக்கிறது
காலத்தின் முதிர்வு

முதிர்வேனில் வெய்யில்
ஒரு கிழட்டு மிருகம்
பசித்து அலைகிறது

பறவைகள் கடித்தது போக
மரங்களின் கீழ்
காயம்பட்டு சிதறுண்டு கிடக்கின்றன கனிகள்
இனி
இலைகள் பழுக்கத் தொடங்கிவிடும்

'பரோல்லில்' விடுமுறை பெற்று
வீடு மீளும் கைதியை ஒப்ப
நான் பெருநகரச் சிறை விலகி
வெளியே வருகிறேன்

என்முன்
பெரும் கடலென விரிந்து கிடக்கிறது
'எரிக்' வாவி
நீரில் பிறந்த சிறு குழந்தைக் காற்று
தளுக்குநடை நடக்கிறது
கைகளை விரித்து அள்ளி ஆழ உறிஞ்ச
வசமிழந்து போயிற்று
மனசு

வாவிக் கரையோரம் ஒதுங்கிக் கிடக்கிறது
மீன் ஒன்றின் பிணம்
எடுத்துச்செல்கிறான் துப்பரவுத் தொழிலாளி
மனசு பதகளித்து
நினைவு அலைந்து
உருகி
கரைந்து
மீள
கரையோரம் நடக்கிறேன்

தொலைவிருந்து வந்த 'கூஸ்' பறவைகளின் குஞ்சுகள்
விடலைகளாகி விட்டன
சிறு தூரப் பறப்புகளை நிகழ்த்தி
இளசுகளுக்கு பயிற்சி கொடுக்கின்றன தாய்ப்
பறவைகள்
இனித் தொடரும் குளிர் காலத்தின் முன்
நெடுந்தூரம் பறந்துவிடும்
சொரியும் பனிக்குள் உழலும் வாழ்வு அவர்க்கில்லை

காலப்பெருங்கடலின் சிறு மிடறு நீரெனப்
பகல் தீர்ந்தது
தீ மூட்டி இருள் விரட்டி சூழ்ந்திருந்து
வாட்டிச்
சுதியேற்றி எடுத்த பறை மீட்டிப் பாடுகிறான்
பாணன்
உயரக்குரலில்
வடமோடிக் கூத்துப் பாடலொன்றை

பறையதிர்வில் வாவி குமுற
அலையெழுந்து நடுங்குகிறது
அதிர்கிறது காடு

மறு காலையில்
வீதியின் இருபுறமும் 'நயாக்கரா' திராட்சை வயல்களை
ஊடறுத்து நடக்கிறேன்
அறுவடை ஆரம்பம்
பழத்தில் வீழும் குருவிகளை விரட்ட
வெறும்
சத்த வேட்டுக்களை தீர்க்கிறது எந்திரம்
குருவிக்கூட்டமென மனிதர் வீழ
கொடும்போர் நிகழ்ந்த தேசத்திருந்து வந்தவன் நான்

திடுக்குற்று நிமிர்கிறேன்

பயத்தில் உறைந்து
இருள் கரியெனப்படிந்த என் முகம் பார்த்து
கெக்கலித்து சிரிக்கிறாள்
இவ்வூர் சிறுமி

முடிந்தது விடுமுறை
பசிகொண்ட பூதமென வாய்பிளந்து காத்திருக்கிறது
பெருநகரம்
மீளச்சிறைக்குள்
நான் மீள

செப்டெம்பர் 30, 2010

கட்டுரை

# தமிழில் பல்லூடக ஆவணப்படுத்தல்

நற்கீரன்

...தமிழில் பல்லூடக ஆவணப்படுத்தலில் தன்னார் வலர் திட்டங் களே முதன்மை பெறுகின்றன. இதில் தமிழ் விக்கியூடகங்கள், நூலக அறக்கட்டளைத் திட்டங்கள், தமிழம், மதுரைத் திட்டம், தமிழ் மரபு அறக்கட்டளை, தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள் ஆகியவை முக்கிய மானவை. இவற்றோடு தமிழ்நாடு அரசு திட்டங்களான தமிழ் இணையப் கல்விக் கழகம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகி யவை குறிப்பிடத்தக்க பணிகளைச் செய்கின்றன....

தமிழின், தமிழரின், பிறரின் வரலாற்றை, கலை-களை, நுட்பங் களை, அறிவியலை எண்மிய பல்லூடக முறையில் தமிழில் ஆவணப்படுத்திப் பகிர்வது தமிழ்ச் சமூக வளர்ச்சிக்குத் தேவையான முக்கிய செயற்பாடுகளில் ஒன்று. சங்ககாலம், சோழ, பாண்டிய பேரசுக் காலங்களை நோக்கு கையில் தமிழர்கள் பல துறைகளில் உயர்ந்த அறி வைப் பெற்றிருந்ததை அறிய முடிகிறது. உலக நாகரிகங்களின் ஒரு முக்கிய ஊற்றுத் தமிழர்களு டையது. ஆனால் தமிழர்கள் வெல்லப்பட்டு அடக்கி வைக்கப்பட்டபோது நாம் எமது அறிவை இழந் தோம். எமது ஆவணப்படுத்தலின், பாதுகாத்தலின் போதாமைகளும் எமது அறிவை நாம் இழக்கக்கார ணமாயின. இதனால் நாம் கல்வி, பண்பாட்டு, அரசி யல், பொருளாதார முனைகளில் பல பாதிப்புக்களைச் சந்தித் தோம்.

### அறிவுத் தேவை

பிற பல மொழிகள் போல் அல்லாமல் தமிழுக்கு தொன்று தொட்டே எழுதப்பட்ட இலக்கியங்கள் உண்டு. கல்வெட்டுக்கள், சிலைகள், கட்டிடங்கள், கருவிகள், தொல்பொருட்கள் ஆகிய வை தமிழர் அறிவியலைச் அறிய உதவும் சான்றுகளாக உள்ளன. இன்றும் எம்மிடம் நூற்றுக்கணக்கான ஆடற்கலைகள், விளையாட்டுக்கள், கதைகள், கூத்துக்கள், தொழில்கள் உள்ளன. ஆனால் வேகமாக நாம் இவற்றை மறந்து வருகிறோம், இழந்து வருகிறோம். இவை தமிழர் அறிவின் வாழும் ஆதாரங்கள். இன்று இந்த அறிவு எண்மிய பல்லூடக முறையில் ஆவணப் படுத்தப்படுவது ஒரு முக்கிய தேவையாக உள்ளது.

19 ம் நூற்றாண்டில் ஏட்டில் இருந்த தமிழ் இலக்கியங்கள் அச்சுப் பதிக்கப்பட்டமை தமிழரின் மறுமலர்ச்சிக்கு வளங்களாக அமைந்தன. 20ம் நூற்றாண்டில் பலர் மேற்கொண்ட நாட்டாரி யல் ஆய்வுகள் எமது பழமொழிகளை, பாடல்களை, கதைகளை, வழக்கங்களை, இன்னும் பல கூறுகளைப் பதிவு செய்து தமிழ்ச் சமூகத்தின் உயிர்நாடி ஒன்றைப் பாதுகாத்தன. ஆனால் இதே போன்ற செயற்பாடுகள் தமிழர் தொழில்நுட்பங்கள், அறிவியல் நோக்கிச் செயற்படுத்தப்படவில்லை. இன்று எமது சூழல், அது சார்ந்த உற்பத்திகள் பற்றி நாம் கொண்டிருந்த இயல்பான அறிவை இழந்து நிற்கிறோம். மீண்டும் மேற்கு நாடுகள் வழியே இயற்கை வேளாண்மை, பேண்தகு மீன் பிடிப்பு, மர வேலை, கட்டிடக் கலை போன்ற அறிவுக்கூறுகளை அறிய தள்ளப்பட்டி ருக்கிறோம். இனியும் காலம் தாழ்த்தாமல் நாம் எமது அறிவை ஆவணப்படுத்தல் அவசியமாகும்.

எமது அறிவு மட்டும் அல்லாமல் விரைவாக மாறும் உலகின் பல்துறை அறிவும் தமிழில் உருவாக்கப்பட வேண்டும். உலகில் பரந்து வாழும் தமிழர்கள் அந்த அந்த நாட்டுப் புவியியல், பண்பாடு, கலைகள், இலக்கியங்கள் பற்றி மட்டும் அல்லாமல், அங்கு உள்ள சமூக அமைப்புகள், சட்டங்கள், தொழில்நுட் பங்கள் பற்றிய அறிவையும் பகிரவேண்டும். பிறரதும், எமதும் சிறந்த எடுத்துக்காட்டுக்களை, மாதிரிகளை, முறைமைகளைத் தொகுத்து ஆராய எமக்கு இன்று ஓர் அரிய வாய்ப்பு உள்ளது.

**வழிமுறை**

இந்த அறிவுகளை நாம் இணையம் மூலம், பல்லூடக வழிகளில் ஆவணப் படுத்திப்பகிர முடியும். இன்று காட்சி ஊடகமே முக்கியம் பெற்றுவருகிறது. பல பத்திகளில் சொல்வதை, ஒரு காட்சியில் காட்டி விட முடியும். ஒலிக் கோப்பு (audio), நிகழ் படம் (video), இயங்குபடம் (animation), நிகழ்த்தல் (ppt), ஒளிப் படம் (photograph), தரவுகள் (data), எழுத்து (text), வலைத்த ளங்கள் (websites) என எண்மிய பல்லூடக முறையில் நாம் ஆவணப்படுத்தி, எளிய முறையில் பகிர வேண்டும்.

பல்லூடக ஆவணப்படுத்தல் பணி நான்கு முக்கிய கூறுகளைக் கொண்டது. பல்லூடக மூலங்களைச் சேகரித்தல், ஒழுங்குப டுத்தல், எண்மியப்படுத்தல், பகிர்தல் ஆகியனவாகும். இதைச் செயற்படுத்தும் தளமாக இணையம், குறிப்பாக வலை 2.0 உள்ளது. நான்கு நிலைகளிலும் இணையம் எமக்கு உதவக் கூடியது. எனினும் ஆக்கர்களை ஆக்கங்களைக் கண்டடைவது, எண்மியப்படுத்தல், ஒருங்கிணைப்பு, அறிமுகப்படுத்தல் (out-reach), நிதிச் சேகரிப்பு போன்ற இணையத்துக்கு அப்பாலான பல பணிகளும் உள்ளன.

இந்த கூட்டறிவு (Collective intelligence) ஆவணப் படுத்தலை, உற்பத்தியை நாம் கூட்டாக, பரவலான முறையில், சேர்ந்தியங்க உதவும் நுட்பங்களைப் (distributed collaboration tools) பயன் படுத்திச் செய்யலாம். எமது விளைச்சல்களை கூட்டாக உரி மைப்படுத்தி அனைவரும் பயன் பெறலாம்.

**திட்டங்கள்**

தமிழில் பல்லூடக ஆவணப்படுத்தலில் தன்னார்வலர் திட்டங் களே முதன்மை பெறுகின்றன. இதில் தமிழ் விக்கியூடகங்கள், நூலக அறக்கட்டளைத் திட்டங்கள், தமிழம், மதுரைத் திட்டம், தமிழ் மரபு அறக்கட்டளை, தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள் ஆகியவை முக்கியமானவை. இவற்றோடு தமிழ்நாடு அரசு திட்டங்களான தமிழ்இணையப் கல்விக்கழகம்(www.tamilvu.org/), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் (www.agritech.tnau.ac.in/ta/index.html) ஆகியவை குறிப்பிடத்தக்க பணிகளைச் செய்கின்றன.

தமிழ் விக்கியூடகங்கள் பொது விக்கியூடக திட்டத்தின் ஒர் அங்கமாகும். விக்கியூடகத் திட்டம் எல்லோரும் இணையம் ஊடாகப் அவர்களுக்கு ஈடுபாடு உள்ள வகையில் பங்களிக்கக் கூடிய விக்கிக் கட்டமைப்பைக் கொண்டது. கட்டற்ற உரிமம் கொண்ட படைப்புகள் இதில் கூட்டாக உருவாக்கப்படுகின்றன. இதில் முதன்மையானது கலைக்களஞ்சியத் திட்டமான தமிழ் விக்கிப்பீடியா ( www.ta.wikipedia.org/) ஆகும். இதில் தற்போது 25,000 குறு, நெடுங்கட்டுரைகள் உள்ளன. நாளாந்தம் பல நாடுக-ளில் இருந்து பங்களிக்கும் தமிழர்களின் கூட்டு முயற்சியால் வளர்ந்து வருகிறது. இன்னுமொரு விக்கியூடகத் திட்டமான தமிழ் விக்சனரி ( www.ta.wiktionary.org/) ஒரு பன்மொழி இணைய அகராதி. இதில் 121,000 சொற்களுக்கு தமிழில் விளக்கம் காணலாம். தமிழ்நாடு அரசு மேலும் இரண்டு இலட்சம் சொற்களை இங்கு பதிவேற்ற தந்துள்ளது. தமிழ் விக்கி செய்திகள் ( www.ta.wikinews.org/) உலகளாவிய விக்கி செய்தி-களைத் தொகுத்துத் தருகின்றது. தமிழ் விக்கி மூலத்தில் ( www.ta.wikisource.org/) மூல ஆவணங்கள் பதிவேற்றிப் பகிரப்படுகின்றன. இவற்றோடு விக்கி நூல்கள் ( www.ta.wiki-books.org/), விக்கி மேற்கோள்கள் ( www.ta.wikiquote.org/) ஆகிய திட்டங்களும் உள்ளன. இணையத்தில் தமிழில் பல்துறை உள்ளடக்க உருவாக்கத்தில் தமிழ் விக்கியூடகங்களின் பங்கு முக்கியமானது.

இலங்கைத் தமிழர் படைப்புகளை, அடையாளங்களை, அறி வைப் பேணுவதையும் வளர்ப்பதையும் நோக்கமாக் கொண்டு நூலக அறக்கட்டளைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. நூலகத் திட்டம் ( www.noolaham.org/) ஊடாக 7000 மேற்பட்ட எழுத்து ஆக்கங்களைக் கொண்ட எண்ணிம நூலகம் ஒன்று இயங்குகிறது. எழுத்தாவண வரையறையைத் தாண்டி ஆக்கங்களைக் சேர்க்கவும் தற்போது செயற்திட்டங்கள் உள்ளன. நூலகத் திட்டத்தின் இன்னுமொரு முக்கிய திட்டம் அறிவு/தக வல் வலைப்பின்னல் ( www.noolahamfoundation.org/) ஒன்றை உருவாக்குவது ஆகும். "எண்ணிம நூலகம், ஆவணக் காப்பகம், மரபறிவுப் பாதுகாப்பு, தகவல் அறிதிறன், அறிவுப்பரம்பல்,

**பல்லூடக ஆவணப்படுத்தல் பணி பல்லூடக மூலங்களைச் சேகரித்தல், ஒழுங்குபடுத்தல், எண்மியப்படுத்தல், பகிர்தல் ஆகிய நான்கு முக்கிய கூறுகளைக் கொண்டது.**

ஆய்வுச் செயற்பாடு மற்றும் கல்வி மேம்பாடு ஆகியவை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அவை தொடர்பில் வழிகாட்டுவதோடு தன்னிறைவானதும் சுதந்திரமானதுமான செயற்பாட்டு வினைதிறனுடைய தன்னார்வக் குழுக்களை உருவாக்குதல்" இதன் நோக்கமாகும்.

மதுரைத் திட்டம் ( www.projectmadurai.org/) பண்டைத் தமிழ் இலக்கியங்களை ஆவணப்படுத்தி உள்ளது. தமிழம் திட்டம் ( www.thamizham.net/) சிற்றிதழ்கள் மற்றும் நூற்களை ஆவணப் படுத்தும் திட்டம் ஆகும். இது பல வழிகளில் வளர்த்தெடுக்கக் கூடிய ஒரு திட்டம் ஆகும். தமிழ்மரபு அறக்கட்டளை ( www.tamilheritage.org/) தமிழ் ஏட்டுச் சுவடிகளையும், தொல்லியல் பொருட்களையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள் ( www.tamilarangam.net/) ஈழப் போராட்டம் தொடர்பான 2000 மேற்பட்ட எழுத்து ஆக்கங்கள், 1000 மேற்பட்ட ஒளிப்படங்கள், நிகழ்படங்கள் ஆகியவற்றை இதுவரை ஆவணப் படுத்தி உள்ளது.

பிரித்தானிய அருங் காட்சியகம் (www.british museum.org), காங்கிரசு நூலகம் (www.loc.gov), காப்புரிமைப் பட்டய நிறுவனம் (www.uspto.gov), பிபிசி ( www.bbc.co.uk), இணைய ஆவணக்காப்பகம் (www.archive.org/), கூகிள் நூல்கள் (www.books.google.com) போன்று அறிவை உருவாக்கிப்பேணும் பெரிய நிறுவனங்கள் தமிழரிடையே இல்லை. தன்னார்வலர்கள் திட்டங்களில் மட்டுமே தமிழ்ச் சமூகம் பெரிதும் தங்கி இருக்கிறது. இதுவரை இந்தத் திட்டங்கள் எழுத்து முறை ஆவணப்படுத்தலையே முதன்மையாகச் செய்து வருகின்றன. இவை ஒரு நல்ல தொடக்கமே. ஆனால் எமது தேவைகள் இவற்றை மீறியவை. ஆகையால், இந்தத் திட்டங்களை மேம்ப டுத்தி, மேலும் பல களங்களை அமைக்க வேண்டியது எமது இன்றைய தேவையாகிறது. தமிழ் மொழி, அடையாளம், அறிவு பேணப்படுத்தல் அவசியம் என்றால் தமிழில் பல்லூடக ஆவணப்படுத்தல் பணியை நாம் விரைந்து தொடங்க வேண்டும்.

# Sunshine Dental

## Dr.Seshanthri Viswasam

Family Dentist

**416 490 7716 / 416 291 1011**

45 Milner Ave #6
Toronto, ON M1S 3P6
NE corner of McCowan and High way 401

**Super Care Pharmacy**

**3228 Eglinton Ave. East**
**Scarborough, ON M1J 2H6**
**T: 416 298 3784**
**F: 416 298 3052**

**Pharmagrace Drug Mart**

**3850 Finch Ave. East**
**Scarborough ON M1T 3J6**
**T: 416 267 9900**
**F: 416 267 1800**




*Contacts:* Ram *Pharmacist*

கட்டுரை

# என் ஆதர்ஸம் என் ஆசான் என் நண்பன்

கருணாகரமூர்த்தி

...1971 இல் சமத்துவ சமூகசிந்தனையாளரும், சீர்திருத்தவாதியுமான திரு.பொ.கனகசபாபதி அவர்களுக்கு அதன் அதிபராகும் அரிய வாய்ப்புக்கிடைத்தது. இயல்பிலேயே சமத்துவ சிந்தனாவாதியும், புத்தொளிமிக்கதொரு சாத்விகசமூகத்தை அமைப்பதில் வேட்கையுமுள்ள அதிபருக்கு...

நீ வாழுங்காலத்தில் கண்டுபிரமித்த இன்னொரு மனிதனைச் சொல்லு என்றால் எனதுகைகள் உடனடியாக என் அதிபர். திரு பொ.கனக சபாபதி அவர்கள் இருக்கும் திசையைத்தான் சுட்டும். என் ஆசானிடம் மூன்றே ஆண்டுகள்தான் மாணவனாகப்பயிலும் சந்தர்ப்பம்கிடைத்திருந்தாலும் நம் ஆயுள் முழுவதுக்கும் நண்பர்களாக வாழும் பாக்கியதை கொண்டோம்.

அவர் மானிடசமூகத்துக்கு ஆற்றிய பணிகள் எண்ணற்றவையாயினும் ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக எமது புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய காலத்தில் ஆற்றிய தலையாய, வீரம் செறிந்த ஒரு மகத்தான பணியை நினைவுகூர்ந்து போற்றுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

புத்தூர் என்பது கோப்பாய் தொகுதியில் வாதரவத்தை, ஆவரங்கால், நவற்கிரி, ஈவினை, ஏரந்தனை, சிறுப்பிட்டி, அம்போடை, புத்தர்கலட்டி, சொக்கதிடல், அந்திரானை ஆகிய 10 சிற்றூர்களின் தொகுதியாகும். புத்தூர் என்பதுதான் மருவி புத்தூர் ஆனது என்போரும் உண்டு. அது 1970களில் 80,000 குடும்பங்கள் வாழ்ந்த ஒரு பெருங்கிராமம். சதுர மைல் ஒன்றுக்கு 6000 குடிகள் என்றவகையில் இலங்கையிலேயே மக்கள் செறிவான கிராமங்களில் அதுவும் ஒன்று.

ஒரு 'வகை'யான நிலவுடமை - மேட்டுக்குடி- ஆண்டான் அடிமை சமூக அமைப்பின் பெருந்தொட்டிலும், மாதிரியும் எமது கிராமம். புத்தூரில் எப்போது எந்த தேவதை மண்ணிறங்கிவந்து உயர்சாதி என்று சொல்லிக்கொண்ட வேளாளர்களுக்குப் பட்டயம் எழுதிக்கொடுத்தாளோ தெரியவில்லை. அவ்வூரின் வளமான மண்ணின் பெரும்பகுதி அங்கேயுள்ள வேளாளர்களுக்கே சொந்தமாக இருந்தது இருக்கிறது.

இதனால் அம்மண்ணில் பிறக்க நேர்ந்த பஞ்சமர்கள் அந்நிலச் சுவாந்தர்களுக்குச் சொந்தமான நிலங்களில் வாழ்ந்து, அவர்களுடைய புலத்தில் அவர்களுக்கே உழைத்துத் தம் வாழ்க்கையை ஓட்டியதால் அவர்களை மீறி எதனையும் செய்யமாட்டாத ஒரு கையறுநிலையில் / வாழ்க்கையை ஓட்டினார்கள். தீண்டப்படாதவர்களாக மேட்டுச்சமூகத்தால் கருதப்பட்ட அம்மக்கள் இதனால் கல்வியறிவின்றி வாழ நேரிட்டது. கல்வி அறிவில் குன்றிய அச்சமூகம் தாம் சுரண்டப்படுகிறோம் என்கிற பிரக்ஞை இன்றியே வாழ்வைத் தொடர்ந்ததும் பரிதாபம்.

ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியால் புத்தூர் அடைந்த இலாபங்கள் இரண்டு. அவர்களே 18ம் நூற்றாண்டில் இறுதியில் அங்கு மெதடிஸ்த ஆரோக்கியவாச வைத்தியசாலையையும், அதன் வளாகத்தில் பரி.லூகாஸ் தேவாலயத்தையும், எதிரில் மெதடிஸ்த மிஷனரிப் பாடசாலையும் ஸ்தாபனம் செய்தார்கள்.

அக்காலத்தில் மெதடிஸ்த கிறிஸ்தவ திருச்சபையால் மதமாற்றம் செய்யப்பட்ட மக்களையும், பஞ்சமர்கள் அல்லது இப்போது தலித்துக்கள் என்று சொல்லப்படும் ஒடுக்கப்பட்ட மக்களையும் தமது கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலையில் அவர்கள் சேர்த்துப் பாடங்கள் புகட்டினார்கள். இதனால் மேட்டுக் குடிமக்கள் தம்பிள்ளைகளை அப்பாடசாலைக்கு அனுப்பிப் படிப்பதற்குப் பின்னடித்தார்கள். அப்படியும் அனுப்பப்பட்ட சில பிள்ளைகளுக்கு உட்கார வாங்கு மேசைகள் வழங்கப்பட பஞ்சமர்

குழந்தைகள் தரையில் தென்னக்கீற்றுக்களில் உட்கார வைக் கப்பட்டனர்.

பொருளாதார வளங்கொண்ட மேட்டுக்குடியினர் தமது பிள்ளைகளை யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, சுன்னாகம் ஆகிய நகரங்களுக்கு அனுப்பிக் கல்வி பயில வைத்தார்கள்.

19ம் நூற்றாண்டில் தொடக்கப்பகுதியில் இந்நிலையை அவதானித்த, புதுவையூரார் மழவராயர் எனப்படும் புகையிலை வணிகரின் மகன் கந்தையா என்பவருக்கு புத்தூரில் ஒரு பள்ளிக்கூடத்தை உருவாக்கவேண்டும் என்னும் நல்லெண்ணம் தீவிரமாக உருவாகியது. அவர் இன்னும் தில்லைநாதர், பொன் னம்பலம் என்னும் இரு புரவலர்களுடன் சேர்ந்து 1931இல் ஸ்ரீ சோமாஸ்கந்தா தமிழ்வித்தியாலயம் என்கிற பாடசாலை ஸ்தாபித்தார். இலவசக்கல்வி பயிற்றுவிக்கப்பட்ட அப்பாடசா லையின் ஆரம்பகால முதல்வர்களாக திரு.சுந்தராச்சாரியாரும் அவரைத்தொடர்ந்து திரு. வி.வீரசிங்கம் (ஆனந்தசங்கரியின் தந்தை) அவர்களும் பணியாற்றினர். அவர் ஓய்வுபெற அதிபர் பதவியை ஏற்ற திரு குமாரசுவாமி அவர்கள் தன் வாழ்நாள் உழைப்பு அனைத்தையும் கல்லூரிக்கே அர்ப்பணித்தார்.

இப்பாடசாலை 1965 இல் அரசினால் சுவீகரிக்கப்பட்டது. தமிழும் ஆங்கிலமும் பயிற்றுமொழிகளாக இருந்த கல்லூரி அதிபர் திரு.சு.குமாரசுவாமி அவர்களின் அரிய உழைப்பினால் 1956 இல் ஸ்ரீ சோமஸ்கந்தாகல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்டு அரசின் உதவியுடன் கல்லூரியின் ஆய்வுசாலைகள், நூல்நிலை யம் என்பன விஸ்தரிக்கப்பட்டன.


அதிபர் திரு.குமாரசுவாமியின் சிறந்த சேவையினால் கல்விநிலையில் முதல் தரத்தை அடையவும் கல்விக்காக பிற நகரங்களை நாடிய மாணவர்கள் அக்கல்லூரியை நாடலாயினர். நாளடைவில் புத்தூர் மாணவர்களைவிடவும் நீர்வேலி, கோப் பாய், அச்சுவேலி, வசாவிழான், புன்னாலைக்கட்டுவன், மட்டுவி லாகிய அயல்கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து பயின்று பல்கலைக்கழகங்களினுள்ளும் புகலாயினர்.

ஆயினும் அவ் அதிபரும் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரியில் அதன் தர்மகர்த்தாக்களை எதிர்த்துக்கொண்டு பஞ்சமர் குழந்தைகளை அனுமதிக்கத் தயங்கினார். அங்கே நடைமுறைப்படுத்தப்படும் சாதிப்பிரிவினையைச் சாதகமாகப் பயன்படுத்த எண்ணிய அப்போதைய ஸ்ரீமாவோ பண்டார நாயகாவின் அரசு 1966 இல் சொக்கதிடல் என்னும் பகுதியில் தலித்துக்களுக்காகவே பஞ்சசீல பௌத்த பாடசாலை எனும் ஒரு பௌத்தபாடசாலையை ஆரம்பித்தது. அங்கு மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியப் பணிபுரியக்கூட தலித்துக்கள் மட்டுமே நியமிக்கப்பட்டனர். சிங்களமும் பௌத்தமும் அங்கே ஒரு பாடமாகப் பயிற்றுவிக்கப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் ஆலயப்பிரவேசப் போராட்டம், நிச்சாமம் சாதீயக்கலவரங்கள் துப்பாக்கிச்சூடுகள் அன்ன நிகழ்வுகள் யாப்பாணத்தமிழ்ச்சமூகத்தில் நடந்தேறிமுடிந் தாலும் அவைபற்றிய எந்தச் ஸ்மரணைகளுமற்று புத்தூரின் சாதியச்சமூகம் இயங்கிக்கொண்டிருந்தது ஒரு ஆச்சரியம்.

புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தா கல்லூரி தொடர்ந்தும் தனது சாதித் தாய்மையையும் பாகுபாட்டையும் கடைப்பிடித்து வருங்கால் 1971 இல் சமத்துவ சமூகசிந்தனையாளரும், சீர்திருத்தவாதியுமான திரு.பொ.கனகசபாபதி அவர்களுக்கு அதன் அதிபராகும் அரிய வாய்ப்புக்கிடைத்தது. இயல்பிலேயே சமத்துவ சிந்தனாவாதியும். புத்தொளிமிக்கதொரு சாத்வீகசமூகத்தை அமைப்பதில் வேட் கையுமுள்ள அதிபருக்கு இந்த நடைமுறை பிடிக்கவில்லை. தான் பதவியேற்றவுடன் முதற்காரியமாக கல்லூரி தருமகர்த் தாக்களின் எதிர்ப்பினையும் மீறிக்கொண்டு ஒடுக்கப்பட்ட சமூக த்தைச் சேர்ந்த மாணவர்களைக் கல்லூரியில் சேர்த்தார். அன்றும் இதற்காக அவரை தலித்சமூகத்தினரைத்தவிர வேறேவரும் பாராட்டி னார்களில்லை.

புதுவை மக்களின் அதிஸ்டம் அதிபர் திரு.பொ.கனக சபாபதி அவர்களும் கல்லூரியின் கல்வி மேம்பாட்டில் மிகக்கவனம் செலுத்தினார். இலங்கை மருத்துவக் கல்லூரிக்கு ஸ்ரீசோமாஸ்கந்தகல்லூரியின் முதல் மருத்துவ மாணவியும்



புகைப்படம் உதவி: க.நவம்

அவரது காலத்திலேயே அனுப்பப்பட்டார். மேலும் கல்வியில் செலுத்திய அதே கவனத்தை கல்லூரியின் இதர தேவைகளிலும் செலுத்தினார். பெருகிவரும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கல்லூரியின் நிலப்பரப்பும், வகுப்பறைகளின் எண்ணிக்கையும் போதாமல் இருந்தன. வகுப்பறைகளின் எண்ணிக்கையை அதிக ரிப்பதிலும், கல்லூரிக்கான நிலப்பரப்பை விஸ்தரிப்பதிலும் தன் முயற்சியைக்குவித்த அதிபர் ஆசிரியர்களையும், பெற்றோர் களையும், மாணவர்களையும் சேர்த்துக்கொண்டு புத்தூரிலும், அதன் சுற்றாடல்களில்உள்ள அனைத்து ஊர்களிலும் ஒவ்வொரு வீடுகளுக்கும் கால்நடையாகச்சென்று மக்களுடன் பேசி, கல்லூரி யின் தேவையை எடுத்துரைத்து பெருநிதி சேகரித்து கல்லூரி யோடு இணைந்தாற்போலிருந்த நிலங்களை வாங்கிப் போது மான வகுப்பறைகளைக் கட்டுவித்தார். அவரது இன்னவென வகைப்படுத்தமுடியாத ஆயிரம் பணிகளில் முதன்மையாக தலித்து மாணவர்களைச் சேர்த்துக்கொண்ட தீரச்செயல் மானுடவரலாற்றில் என்றும் அழியாது பதியப்படும். என் அதிபர், என் ஆசான், என் நண்பர் செப்டெம்பர் மாதம் 4ம் தேதி தனது 75 அகவைகளை நிறைவுசெய்கின்றார். தற்போது தான்வதியும் கனடாவிலும் தொடர்ந்து இலக்கியம், கல்வி, சமூகம் சார்ந்த துறைகளில் ஓய்விலாது இயங்கிக்கொண்டிருக்கும் அம்மா மனிதரைப் பாராட்டுவதிலும், அவரின் மாணவன் என்றுசொல்லிக் கொள்வதிலும், அவர் பதங்களைப் பணிவதிலும் என்றும் தீராத மகிழ்வடைவேன்.

*13.10.2010* பெர்லின்.

மு.புஷ்பராஜன்

24-05-2010



ஆட்டம் முடிந்த
பின்னர்
முகமதை மாற்றி
பொருத்திக்
கொண்டனர்
நீதியின் காவலர்

காவலர்
கைகள்
வாஞ்சையில் வருடிய
வெண்புறா இப்போது
கழுகாக மாறின

சுற்றிய ஒளிவட்டம்
கொம்புகளாய் உயர
கோரப் பற்றகள்
கடைவாயில் நீண்டன

தாண்டவ முடிவில்
அலையும் சாம்பலின் மேலாய்
பகலின் ஒளியும்
நிலவின் குளிர்வும்
பயத்தில் ஒடுங்கின

இருப்பதெல்லாம்
ஒளியை வழிமறித்து
இறங்கி இறுகிய இருளே

இருளை ஒளியென
இப்போது சொல்லும்
வெற்றிப் பேரிகையுள்
ஒளியிழந்தவர் அழுகுரல்
அடங்கிப் போயின

# ஆட்டம் முடிந்த பின்

அந்த நிலமதில்
இனி
இயல்பாய் எதுவும்
இல்லை
மனச்சாட்சி வேரில்
நியாயத்தின் மலர்வு இல்லை

அந்த நிலமதில் இனி
நச்சுச் சாம்பல் படிவில்
எருக்கும் கள்ளியும்
காஞ்சரமும் நாணலுமே
வாய்ப்பாக வளரும்

அந்த நிலமதில் இனி
வனங்கள் தழுவி
வழியும் ஆறுகள்
கரையைத் தொட்டு
மீளும் அலைகள்
மிதவைகளாக்கப்பட்ட
உடல்களை வழங்கும்

அந்த நிலமதில் இனி
உலவும் காற்றில்
கழுகும் கோட்டானும்
கூகையும் வல்லூறும்
சிறகை விரிக்கும்

அந்த நிலமதில் இனி
இலைகள் உதிர்ந்த மரங்கள்
நூற்றாண்டு நூற்றாண்டு
தலைமுறையின் வேரில்
எரிதளல் மூளும்

# அந்த நிலமதில் இனி

கட்டுரை

# ஒரு நாடக ஆசிரியர் நாடகமாகிறார்

சச்சிதானந்தன் சுகிர்தராஜா

...எதிர்ப்புகளுக்குப் பின்னால் உறுத்திக் கொண்டிருக்கும் செய்தி மிகச்சிறியது. ஆனால் எல்லாச் சின்ன விசயங்கள் போல் மிக குழப்பமானது. கதை சொல்ல, பிரதிகளுக்கு அர்த்தம் தர யாருக்கு அதிகாரமுண்டு? கதை சொல்லிகளுக்கா? அல்லது சமூகத்தின் கலாச்சார காவலாளிகளுக்கா? இதற்கு எளிதான விடையில்லை. சமயங்களும் கற்பனாவாதிகளும் இருக்கும் வரை உண்மை யார் பக்கம் இருக்கிறது என்ற இந்த சச்சரவு மறுபடியும் தலைதூக்கும்...

நான் இங்கே சொல்லப்போகும் விசயத்துக்குப் பின்னால் ஒரு கதை இருக்கிறது. அதை முதலில் சொல்லிவிட்டு இந்த பத்தியின் மையப்பொருளுக்கு வருகிறேன். பிரித்தானிய-வாழ் சீக்கியர்களைப்பற்றிய Behzhti (*அவமதிப்பு*) என்ற நாடகம் பார்மீங்கம் ரேப் நாடக அரங்கில் மேடை ஏற்றப்பட்டது. இந்த ரெப் நாடக அரங்கில் இரண்டு மேடைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றில் ஆயிரம் ரசிகர்கள் பார்க்கக்கூடிய இருக்கை வசதிகள் உண்டு. மற்றது பரிச்சார்த்த நாடகங்களுக்கான ஒரு சிறிய அரங்கு. இந்த சின்ன மேடையில்தான் அவமதிப்பு நடிக்கப்பட்டது. இங்கிலாந்தில் வாழும் சீக்கியர்களின் நாளாந்த அங்கலாய்ப்புகளை சித்தரிக்கும் இந்த நாடகத்தில் அமைக்கப் பெற்றிருந்த ஒரு காட்சி சில சீக்கியர்களிடைய பெரும் பரபரைப்பையும் ஆத்திரத்தையும் எற்படுத்தியிருந்தது. அவர்களை சீரவைத்த காட்சி இதுதான். நாடகத்தில் முக்கிய பாத்திரம் ஏற்கும் ஒரு இளம் சீக்கிய பெண் சீக்கியர்களின் திருக்கோயிலான குருதுவாராவில் சீக்கியாரால் கற்பழிக்கப்படுகிறார். அதுமட்டுமல்ல ஒரு கொலையும் நடக்கிறது. சீக்கியமதகுருவும், குருதுவாரா நிறுவன அதிகாரியும் கறைபட்ட கதாபாத்திரங்களாக காட்சியளித்தார்கள். பிரித்தானிய ராச்சியதத்தை வசிப்பிடமாகக் கொண்ட சீக்கிபர்கள் சும்மாவிடவில்லை. அரங்கத்தை முற்றுகையிட்டார்கள். இது சீக்கியதின் புனிதத்துக்கு களங்கம் விளைவிக்கிறது என்று ஆர்பாட்டம் செய்தார்கள். அதுமட்டுமல்ல இந்த நாடகத்தை தடைசெய்ய வேண்டும் என்று அரங்கத்துக்குமுன் மறியல் செய்தார்கள். வழமைபோல் நாடக ஆசிரியருக்கு உயிருடன் உன்னை இருக்க விடமாட்டோம் என்றுமிரட்டல் கடிதம் எழுதப்பட்டது.

இந்த நாடகம் சீக்கிய மதம் பற்றியதல்ல. சீக்கிய மதவாதிகளின் இரட்டைத் தரத்தை அம்பலபடுத்திறது என்ற நாடக ஆசிரியரின் வாதத்தை சீக்கியர்கள் எற்றுக்கொள்ளவில்லை. நிலைமையை சமாளிக்கமுடியாமல் சட்டமும் ஒழுங்கும் கருதி காவல் துறையினர் நாடகத்தை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டார்கள். அரங்கு உரிமையாளர்கள் மக்கள் பாதுகாப்பே முக்கியம் என்று நாடகத்தை ரத்துச் செய்துவிட்டார்கள். சீக்கியர்களின் ஆக்கினை தாங்காமல் தன்னுடைய உயிரைக் காப்பற்றும் பொருட்டு நாடக ஆசிரியர் காவல் துறை பாதுகாப்புடன் சல்மான் ருஷ்டி பாணியில் தலைமறைவானர்.

கிட்டதட்ட 400,000 சீக்கியர்கள் ஐக்கிய இராச்சியத்தில் வாழ்கிறார்கள். எல்லா சிறுபான்மையினர் போலவே நாளாந்த இனதுவேசத்தை எதிர்நோக்கும் இவர்கள் சினமடையக் காரணம் என்ன? இதற்கு சமூகவியலில் பாண்டித்தியம் வேண்டியதில்லை. பிரித்தானிய பல்லின சமூக செயல்பாடுகளை அதிகளவு நுட்பமில்லாமல் கவனிக்கிறவர்கள்கூட சொல்லிவிடுவார்கள். 1984 தங்கக் கோயில் முற்றுகைக்குப் பிறகு பரவியிருந்த (diasporic) காலிஸ்தான் ஆதரவாளர்கள் தளர்ந்துபோய் இருந்தார்கள். நேரடியான ஆக்கிரமிப்பு அரசியலைவிட மறைமுகமான அரசியலணைவு (political lobby) நாடும் நாட்களில் இந்த பழைய தலைமுறையின் சொல்வாக்கு படிப்படியாக மங்கத் தொடங்கியது. இந்த நாடகம் இவர்களுக்கு ஒரு மீட்டுயிர்ப்பு அளித்திருக்கிறது. இன்னுமொரு சீக்கிய பிரிவினரும் தம் குரலை

வலுப்படுத்த *-அவமதிப்பை-* பாவித்துக்கொண்டார்கள். தங்களின் குழப்பமான தனியான அடையாளத்தை நியாயப் படுத்தவும், ஆங்கில உழைப்புச் சந்தையில் புறக்கணிக்கப்படுவதால் ஏற்படும் சினத்தை தெரியப்படுத்த இரண்டாம் மூன்றாம் தலைமுறை சீக்கியர்களுக்கு இந்த நாடகம் வசதியான அரசியல் கருவியானது. இந்த தலைமுறையினரின் அடையாளத் தேடுதல் களுக்கும், நவீன பல்லின சமுக வாழ்வு எழுப்பும் கேள்விகளு க்கு முந்தைய பரம்பரையினரிடம் பதில் இல்லை. மற்றும் இவர்கள் ஆங்கில பன்முக பண்பாட்டின் அடக்குமுறை அமைப்புகளைத் தினமும் நேருக்குநேர் எதிர்நோக்கியவர்கள். இத்துடன் அன்றைய அரசியல் குறுகீடுகள் கலாட்டா உருவாகுவ தற்கான சூழலை எற்படுத்தியிருந்தது. தொழிற்கட்சி அரசு பல்லின சமுகத்தை ஊக்குவிக்கும் முயற்சியில் கலாச்சாரத் திற்குப் பதிலாக சமயங்களுக்கு முக்கியதுவம் கொடுத்தது. முரண்பாடுகள் தவிர்த்த இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ, சீக்கிய மதங்கள் உருவாகின. உற்பத்தி செய்யப்பட்ட இந்த சமயங்களிடையே மாறுபட்ட கருத்துக் கூறுகளுக்கு இடம் இல்லாமல் போயிற்று. பன்முக ஆராய்வுகள் சமயத்தின் வலுவைக் குறைபாடாக கருதப்பட்டது. தம்மை தாமே சமயகாவலர்களாக நியமித்துக் கொண்ட சீக்கிய தலைவர் களுக்கு தங்களின் ஆளுமையை மேலும் வலுப்படுத்த *-அவமதிப்பு-* வசதியாயிற்று.

ஒரு கார்திகைமாத சாடையான குளிரில் பிற்பகல் காட்சியில் *அவமதிப்பு* நாடகத்தைப் பார்த்த முப்பது பேரில் நானும் ஒருவன். இந்த காட்சியுடன் நாடகம் தடைசெய்யப்பட்டது. பார்வையாளர்களில் நானும் என் மனைவியையும் தவிர மற்றவர் கள் எல்லோரும் ஆங்கிலேயர்கள். அரங்கத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்த சீக்கியர்கள் நாடத்தைப் பார்த்திருந்தால் இப்படிப் துள்ளிக் குதித்திருக்கமாட்டார்கள்.

இந்த சம்பவம் நடந்து 2004 இறுதியில். எழுதியவரின் பெயரை இதுவரை தள்ளிப்போட்டு வந்தேன். அவரின் பெயர் Gurupreet Kauar Bhatti. இவர் இரண்டாம் தலைமுறை சீக்கிய பெண். இவர் கவனிக்கப்படவேண்டிய நாடக ஆசிரியரில் ஒருவர் என்பது ஆங்கில விமசகர்களிடையே கருத்து இருக்கிறது. இந்த புரளி நடந்து ஆறுவருட இடைவே-ளைக்குப்பின் Behud (நம்பிக்கைக்கு அப்பால்) என்ற இன்னுமொரு நாடகம் எழுதியிருக்கிறார். தீவிரவாதி களிடமிருந்து ஒளிந்திருந்த சல்மான் ருஷ்டி இதுவரை மேற்கொள்ளாத ஒரு இலக்கிய வேலையை குருபீரித் கவுர் பாட்டி செய்திருக்கிறார். இந்த புதிய நாடகத்தில் Bezhti எற்படுத்திய எழுத்துரிமை, தனியாள் சுதந்திரம், மதம் பற்றிய விமர்சனங்கள், கேள்விகள், மத இறுக்கங்கள் (tensions) கலாச்சார தாற்பரியங்களை உற்றுப்பார்த்து மிக நுட்ப மாகவும் எள்ளலுடனும் சாதுரியமாக இந்த புதிய நாடகத்தில் ஆராய்கிறார், அம்பலப்படுத்துகிறார். *அவமதிப்பை* எதிர்த்த சம்பிர-தாய சீக்கியர்கள், அவரை முதலில் ஆதரித்து பின் கைவிட்ட ரேப் நாடக பணித்துறைஞர்கள் (bureau-crats), தாராளவாத திறானாய்வாளர்களின் இரட்டைத் தனமான மனப்பாங்குகளைப் பிரதிபலிக்கும் கதாபாத்திரங்களை அமைத்து, தானும் ஒரு பாத்திரமாக *நம்பிக்கைக்கு அப்பால்* என்ற இந்த புதிய நாடகத்தை உருவாக்கியிருந்தார்.

இந்த தடவை இந்த புதிய நாடகம் பார்மீங்கம் ரேப் அரங்கில் அரங்கேறவில்லை. ஒருவேலை இந்த அரங்கின் நிறுவன செயலாட்சியாளர்களின் பலகீனமான நடத்தைபற்றி *நம்பிக்கைக்கு அப்பால்* நாடகத்தில் வரும் திடமான விமர்சனம் ஒரு காரணமாய் இருந்திருக்கலாம். கவன்றி பெல்கிறெட் அரங்கில் எந்தவித ஆரவாரமும் இல்லாமல் மேடை எற்றபட்டது. முதல்நாள் காட்சியில் கொஞ்சம் கூடுதலான காவல்து றையினரின் பிரசன்னமும் பார்வையாளர்களின் கைப் பைகளைத் துருவித் துருவி ஆராய்ந்ததாக ஊடக மூலம் அறிந்தேன். ரசிகர்களைப் பரிசோதனையிட தேக வருடி (body scanner) பாவிக்கப் படவில்லை என்பது அறுதலாக இருந்தது. நான் மூன்றாம் வாரந்தான் நாடகத்தைப் பார்த்தேன். அரங்கம் வெகுஜன பத்திரிகை மொழிமரபில் தூங்கி வழிந்து கொண்டி ருந்தது. காவல் துறையினரைக் காணவில்லை. அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதை அறிய இணைய தேடல் கருவியின் உதவி வேண்டும்போலிருந்தது. வழமைபோல் அரங்கத்தை நிரப்பியவர்களில் பெருன்பான்மையோர் ஆங்கிலேயரே.

சற்று ஒரு மணித்தியாலத்திக்கு கூடுதலாக இடைவேளையில் லாமல் நாடகம் விறுவிறுப்பாக நகர்கிறது. இதற்கு நாடக ஆசிரி யரின் கதை சொல்லல் போக்குதான் காரணம். பங்கேற்ற பிரித்தானிய -ஆசிய நடிகர்கள் இயல்பாக பாத்திரத்துடன் ஒத்துப் போவது எதோ நிஜ மனிதர்களின் உரையாடலை ஒட்டு கேட்ப துபோல் இருந்தது. நாடகம் ஆரம்பமாகியதுடன் நாடக மேடை யின் பின்புறம் முழுக்க வெள்ளையான தோற்றம் அளிக்கிறது. இந்த வெண்மையான பின்புலத்தில் தான் நாடகம் முழுவதும் நடைபெறுகிறது. இந்த நாடகத்தின் கதைப்பின்னல், அது எழுப் பிய சச்சரவுகள், எவ்வாறு ஆங்கில கருத்தாங்களினால் இயக் கப்படுவதுமட்டுமல்ல அவை தீர்மானிக்கப்படுகின்றன என்பதின் குறியீடாகவும் எடுத்துக்கொள்ளலாம். நாடகத்தின் இறுதிக் காட்சியில் இன்னுமொரு கலாச்சார சைகை வெளிப்படுகிறது.




கடுவெறுப்பைத் தெரிவித்த சீக்கிய இளைஞன் புதிய நாடகத்தின் பிரதியை ஆர்வத்துடன் அமைதியாகப் படித்துக் கொண்டிருக்கையில் நாடகம் முடிவடைகிறது. இதே வாசிப்பை ஆறு வருடங்களுக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்த சீக்கியர்கள் மேற் கொண்டிருந்தால் குருபீரிட் கவுர் பாட்டியின் முதல் நாடகத்திக்கு இந்த குளப்படி நேர்ந்திருக்காது. குருபீரித் கவுர் பாட்டி தலைமறைவாக காவல்துறையினரின் பாதுகாப்பில் இருக்க வேண்டி வந்திருக்காது.

தாராளவாத விமர்சகர்களின் வாதங்களை அரைத்த இறைச்சியாக்கும் குருபீர்த்கவுர் பாட்டி, சீக்கிய மூதாதையினரின் கேள்விக்குப் பதில் தந்ததாகத் தெறியவில்லை. சீக்கிய திருக்கோவிலை இனவாத ஆங்கிலருக்கு எதிரான அடையாளமாகப் பார்க்கும் இந்த முந்தைய தலைமுறை சீக்கிய எழுத்தாளிரின் சமூகப்போறுப்புப் பற்றி கேட்கிறார். அதுபோல் இன்றைய தலைமுறையின் பிரதிநிதியாக சித்தரிக்கப்பட்ட பாத்திரம் குருபீரித்கவுர் பாட்டி அம்பலபடுத்தும் சீக்கிய சமூக நடத்தைகள் இனவாத ஆங்கிலேயரின் கையில் ஒரு துருப்பு சீட்டு என்று தெறியாதா என்று கேட்கிறார். இந்த கதாமாந்தரின் பார்வையில் நாடக ஆசிரியர் ஒரு சுதேச தகவலாளர் (native informant).


இந்த நாடகம் எதிரிடையான விசயங்களை முன் வைக்கிறது. சமூகத்தை/சமயத்தை போதிக்க இலக்கிய கர்த்தாக்களுக்கு உரிமையில்லை. அதே போல் கதாசிரியரின் கற்பனைக் கட்டுப் படுத்த சமூகத்திற்கோ அல்லது சமயத்திற்கோ ஏகபோக அதிகாரம் இல்லை. இந்த கேள்வி சீக்கிய மதத்திற்குமட்டுமல்ல எல்லா சமயங்களுக்கும் பொருந்தும். Jerry Springer the Opera என்ற இசை நாடகம் கிறிஸ்தவத்தைப் புண்படுத்தியாதாக மரபுவாத கிறிஸ்தவர்கள் மேடை ஏற்றப்பட்ட அரங்குகளுக்கு முன் ஆர்பாடம் செய்தார்கள். ருஷ்டியின் சாத்தானின் வசனங்கள் முதல் டேனிஷ் கேலிச்சித்திரம் வரை முஸ்லீம்கள் தங்கள் மதத்திற்கு களங்கம் விளைவித்தாக புரட்சி செய்தார்கள். இந்த எதிர்ப்புகளுக்குப் பின்னால் உறுத்திக் கொண்டிருக்கும் செய்தி மிக சிறியது. ஆனால் எல்லாச் சின்ன விசயங்கள்போல் மிக குழப்பமானது. கதை சொல்ல, பிரதிகளுக்கு அர்த்தம் தர யாருக்கு அதிகாரமுண்டு? கதை சொல்லிகளுக்கா? அல்லது சமூகத்தின் கலாச்சார கவளாளிகளுக்கா? இதற்கு எளிதான விடையில்லை. சமயங்களும் கற்பனைவாதிகளும் இருக்கும் வரை உண்மை யார் பக்கம் இருக்கிறது என்ற இந்த சச்சரவு மறுபடியும் தலைதூக்கும். அப்போது இது பற்றி விரிவாகப் பேசலாம். இப்போதைக்கு ஒரு மங்கலான விடை கீழே தந்திருக்கிறேன், இது திருப்திகரமான பதிலாக இல்லாவிட்டாலும் உங்கள் முக பாவனையில் ஒரு கருத்தார்ந்த பார்வையை தோற்றச் செய்யும் என்று நினைக்கிறேன்.

பேச்சு சுதந்திரம், எழுத்துரிமை, சுயதேர்வுகள் பற்றிய கட்டுரைகளில் வால்டேயரின் பரிச்சயமான ஒரு வசனம் அத்தியாவசியமாகப் புகுத்தப்படும். அதற்கு மாறாக இன்னுமொரு மாண்டு போன வெள்ளை ஆண்மகனான நீட்சேயின் ஒரு வாக்கியத்தைத் தருகிறேன். அவர் என்ன சூழமைப்பில் இதை சொன்னார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இங்கு சொல்லப்பட்ட விஷயத்திற்கும் இந்த பத்தியை முடிவுக்குக் கொண்டுவரவும் இவரின் வாசகம் உதவியாயிருக்கிறது: "ஒரு விளக்கம் மேலோங்கி நின்றால் அது ஆளுமை சக்திகளின் அதிகாரத்தினால் நிறுவப்பட்டதே தவிர உண்மை வென்றுவிட்டது என்று அர்த்தமில்லை."

தமிழியல் வெளியீடு




அடையாளம் வெளியீடு




வாழும் தமிழ்

kalam@tamilbook.com

N.K.S

Ketha Nadarajah
President

Drapery & Blinds Fabric Ltd.



210 Silver star Blvd# 825
Scarborough, ON M1V 5J9
Tel: 416 321 6420 Fax: 416 321 2217
Email: info@nskdrapery.ca | Web: www.nskdrapery.ca

சிறுகதை

# சிறகு வளர்ந்த குரல்களுடன் பறந்தவன்

இளங்கோ

...தன் தோளில் அவனது கை படிவதைத் தவிர்க்க அம்மா வாயால் அவனின் கையைக் கடித்துவிடு கின்றாள். வெறிகொண்ட நாய்போல அந்தக் கூர்க்கா வெகுண்டெழுந்து அம்மா வீட்டில் அணிந்திருந்த 'சோட்டி'யைக் கிழித்துவிடுகின்றான். எங்கிருந்தோ வந்திற்றோ தெரியாது இவ்வளவு பெரும் மூர்க்கம். தேங்காய் வெட்டுவதற்காய் முற்றத்தில் கிடந்த கத்தியைத் துக்கிக்கொண்டு 'வேசை மவனே' என அவனைவெட்ட அம்மா ஓடினாள்....

## 1.

நீண்டகாலமாய் கவிழ்ந்திருந்த குளிர்காலம் மெல்ல மெல்ல விலக, குழந்தமைக்காலக் குதூகலத்தோடு சனங்கள் தெருக்களில் பெருந்திரளாய் நடமாடிக் கொண்டிருந்தார்கள். இவன் ஏழாவது மாடியிலி ருந்து ரொறொண்டோவின் முக்கிய தெருக்கள் சந்திக்கும் டன்டாஸ் ஸ்குயரைப் பார்த்தபோது ஏதோ எறும்புக்கள் நிரை நிரையாக மறைவிடத்தை விட்டு வெளியே வருவதுபோல மனிதர்கள் மிகச் சிறிதாகத் தென்பட்டார்கள். இப்படியொரு மனித எறும்பாக மாறி தானும் பெரும் திரளுக்குள் கலக்காது, தூரத்திலிருந்து எல்லாவற்றையும் விலத்திப் பார்த்துக் கொண்டிருப்பதுதான் அனைத்துப் பிரச்சி னைகளும் காரணமென்ற நினைப்பு மேலிட, சலித்துக்கொண்டு மீண்டும் தான் வேலை செய்துகொண்டிருந்த உணவகத்தின் அடுப்பங்கரைக்குள் இவன் நுழைந்தான். ஒரு பத்து நிமிட சிறிய இடைவேளைக்குள், அடுப்படியில் வந்து குவிந்த சாப்பாட்டுக் கோப்பைகளைப் பார்க்கும்போது திகைப்பாக இருந்தது. இனி இக் கோப்பைகளை தேய்த்து நீரில் அலம்பி dish washerற்குள் போட்டெடுத்துத் துடைத்து வைக்கும்வரை ஓர் இயந்திரமாகவே மாறவேண்டியிருக்கும். தொலைவிலி ருந்து அவதானித்தபோது டன்டாஸ் ஸ்குயரில் சனங்கள் தெரிந்ததைப்போல, தானும் இந்தக் கோப்பைகளைக் கழுவிக் கழுவி பெரும் பாரத்தை இழுத்துத் தவிக்கும் ஓர் எறும்பு போல ஆகிக்கொண்டிருக்கின் றேனோ என்ற நினைப்பு இவனுக்குள் பரவத் தொடங்கியது.

இப்படித் தீவிரமாய் யோசிப்பதுதான் இவனுக்கு பெரும் சித்திரவதையாக நாளடைவில் மாறியிருந்தது. தனது சிந்தனைகள் அங்குமிங்குமாய் அலைவுற்று ஒரு பெரும் வலையில் சிக்கித் திணறுவதைத் தவிர்க்கும்பொருட்டு, இவன் கழுவுகின்ற கோப்பைகளோடு உரையாடத் தொடங்கிவிடுவான். ஆனால் அங்கு கோப்பைகளோடு நிகழும் உரையாடல்கள் கூட இந்தக் கோப்பையில் என்ன சாப்பாடு தயாரிக்கப்பட்டுப் பரி- மாறப்பட்டிருக்கும்? அதைச் சாப்பிட வந்தவர் யாராயிருப்பார்? தனித்துச் சாப்பிட வந்த வரா அல்லது வேறு யாரோடும் சேர்ந்து சாப்பிட வந்தவரா? என்று கேள்விகள் இவனது மூளைக்குள் பல இலையான்க ளைப் போல பறக்கத் தொடங்கிவிடும். ச்சீய்..தூ... என்று நினை வின் இலையான்களைத் துரத்தத்தொடங்கினாலும் அவ்வளவு எளிதில் அவனை விட்டு இலையான்கள் தூர விலக- ியோடுவ தில்லை. ஓர் இலையானை அடித்துக்கொல்ல அது இன்னும் நூறு முட்டைகளை இட்டுவிட்டுச் சாவதுபோல, ஒரு தீர்க்கமுடியா வியாதியாய் இவ்வாறான எண்ணங்கள் அவனுக் குள் சடைத்துக் கிளைவிடத் தொடங்கிவிடும்.

## 2.


கனடாவிற்கு வந்தபோது அவனுக்கு எல்லாமே ஆச்சரி யமாயிருந்தது. மார்கழியில் பொழிந்துகொண்டிருந்த கனடாப் பனி மட்டுமில்லை, பின்பு அது நிலத்தில் திரட்சியான வெண்மு கில்கள் வந்திறங்கியதுமாதிரி பலநாட்களாய் உறைந்து கிடப்பது

வரை எல்லாமே புதிய அனுபவமாய் இருந்தது. படிக்கப் போயிருந்த பள்ளிக்கூடம் கூட வியப்பைத் தனக்குள் புதைத்து வைத்திருந்தது. ஆசிரியர்கள் வகுப்பிற்குள் வரும்போது எழும்பி நிற்கத் தேவையில்லை என்பதிலிருந்து எழுதும் மேசையில் பிருஷ்டத்தைப் பதித்து, கால்களை அந்தரத்தில் தொங்கவைத்துக் கொண்டே வாத்திமாரோடு கேள்விகளைக் கேட்கலாம் என்பது வரை எல்லாமே புது அனுபவமாகத்தான் இருந்தது. பள்ளிக்கூடத்தில் இவன் கணிதப்பாடங்களுக்கு மிகவும் விரும்பிச் செல்வான் வகுப்பிலும் இவன் கணிதம் நன்றாகச் செய்பவர்களில் ஒருவன் என்கிற மதிப்பும் இருந்தது. இதற்கான வரலாறு பெரிதொன்றுமில்லை, மற்றப் பாடங்களுக்கு ஆங்கிலமொழி அத்தியாவசியத் தேவையாக இருந்தது. கணிதத்தில் எண்களோடு மட்டுமே ஒளித்துப் பிடித்து விளையாட வேண்டியிருந்தது.

ஈழத்தில் இவனுக்கு சிவசம்பு என்றொரு கணித வாத்தி வாய்த்திருந்தார். மனுசனின் மனோநிலை கனடா காலநிலைபோலத்தான் இருக்கும். எப்போது நல்ல நிலையில் இருப்பார் எப்போது கொதிக்கின்ற எண்ணெய்யாக இருப்பார் என்று எவரும் எளிதாக அறிந்துவிடமுடியாது. அதுவும் வீட்டிலிருந்து வெளிக்கிடும்போது அவரின் மனைவியோடு பிணக்குப்பட்டு வந்திருந்தால், அன்று வகுப்பில் கொப்பிகள் விளாங்காய்க்கு எறிகின்ற கல்லுகள் மாதிரி வகுப்புக்கு வெளியே பறக்கத் தொடங்கிவிடும். ஒவ்வொரு நாளும் யாரோ ஒருவர் இப்படி பலிக்கடாவாக வேண்டும். பிறகு வகுப்புக்கு வெளியே வேள்விக்குத் தயாராய் நிற்கிற ஆடு மாதிரி வகுப்பு முடிகிறவரை தலைகுனிந்து அவமானத்துடன் நிற்கவேண்டும். சிவசம்பு வாத்தியின்ரை இந்த அக்கிரமத்தாலேயே பல பெடியங்களுக்கு கணித பாடம் தொடங்கப்போகின்றது என்றாலே -கனடாத் தமிழ்க் கடைகளில் உறைப்பு மிகுந்த கொத்துரொட்டியைத் தின்றபின் வயிற்றுக்கு வரும் உபத்திரம்போல- கலக்கமாயிருக்கும்.

இவனது வகுப்பில் தமிழ்ப் பெட்டையொருத்தி இருந்தாள். சும்மாவே அழகுதான், ஆனால் அது போதாதென்று ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கலரில் அலங்காரம் செய்துகொண்டுவருவாள். ஒருநாள் சிவப்புவர்ணத்தில் ஆடைகள் அணிந்து வருகின்றாள் என்றால் கழுத்தில் போட்டிருக்கும் செயின், கால்/கை விரல் நகங்கள், ஏன் சிலவேளைகளில் தலைமயிர் கூட அணிந்திருக்கும் ஆடைகளின் வர்ணத்திற்கு ஏற்ப மாறியிருக்கும். உணவு இடைவெளிகளில் டொமினோ, பிளக் ஜக் என்று காசு வைத்துச் சூதாடும் பெடியங்கள் சிலர் கூட, அவள் இன்றைக்கு என்ன கலரில் வருவாள் என்பதை வைத்து சூதாடும் அளவிற்கு அவளின் அழகும் அலங்காரமும் பாடசாலை வட்டாரத்தில் புகழ் பெற்றிருந்தது. இப்படி எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து நேர்த்தியாகச்செய்யும் அவளுக்கு பிடிக்காத ஒரு விடயமிருந்தது, அது கணிதம்.

இந்த ஒரு விடயத்தால்தான் இவனோடு அவள் முதன்முதலில் பழகத்தொடங்கினாள். அவ்வப்போது தரப்படும் விட்டுவேலைகள், அசைன்மென்ட்கள், குயிஸ்களில் கொஞ்சம் நல்ல புள்ளிகள் பெற்றுவிட்டால் பிறகு இறுதிப்பரீட்சை அவ்வளவு செய்யாவிட்டாலும் கவலைப்படத்தேவையில்லை. சிலவேளைகளில் சில கணக்குகளை இவன் விளங்கப்படுத்தும்போது அவள் எங்கையாவது வேடிக்கை பார்த்தோ அல்லது போட்டிருக்கும் அலங்காரத்தைச் சரி செய்தோ கொண்டிருப்பாள். இதைப்பார்த்து இவனுக்கு எரிச்சல் வந்து, "இப்படி அலங்காரம் போடுகின்ற நேரத்தில் கொஞ்ச நேரத்தையாவது கணக்குப் படிக்க பயன்படுத்தினால் நன்றாகச் செய்யலாமே" எனக் கூறுவான். "இவ்வளவு சிரத்தையாக அலங்காரம் செய்வதால் உன்னைப் போன்ற பெடியங்கள் எல்லாம் திரும்பித் திரும்பிப் பார்க்கின்றீர்கள், கணக்கு நன்றாகச் செய்தால் யார் என்னைக் கவனிக்கப்போகின்றீர்கள்?" என்று லொஜிக்காய் கேட்டு இவனை மடக்குவாள். உண்மைதான். வகுப்புக்கு வந்து Doriots பையை உடைத்து அதிலிருந்து சிப்ஸை ஒவ்வொன்றாய் வாய்க்குள் எடுத்துப் போடும்போது அவள் உதடுகளினதும் சிப்ஸினதும் கடும் சிவப்பு வர்ணம் இவனை வேறெந்த உலகிற்கோ அழைத்துப் போவதை இவனால் மறைக்கமுடியாதுதான். இவர்களுக்கு கணிதம் படிப்பித்த ஆசிரியர் இரஷ்யப் பினபுலத்தைக் கொண்டவர். ஒஸ்ரோஸ்விஸ்கி என்ற பெயரை உச்சரிப்பதற்குள் வாய்க்



குச் சுளுக்கு வந்துவிடும், ஆனால் அவரின் பெயரிலுள்ள "விஸ்கி" போல மிகவும் கனிவான மனுசன். மேலும் இவள் பாடம் நடக்கும்போது பாடத்தைக் கவனிக்காது எதையாவது செய்துகொண்டிருந்தால் கூட, ஒஸ்ரோஸ்விஸ்கி வாத்தி ஊரில் இவனுக்கு வாத்திமார் செய்வதுபோல, அவளை வகுப்பில் எழும்பி நிற்கச்சொல்லியோ, வகுப்பைவிட்டு வெளியே போகச் சொல்லவோ -முக்கியமாக- பிரம்பை எடுத்து அடிக்கவோ மாட்டார்.

3. இந்த இடம்பெயர்வு முன்னைய காலங்களில் நிகழ்ந்தது போல அல்லவென எல்லோருக்கும் நன்கு விளங்கிவிட்டது. இனிமேல் நிரந்தரமாக இந்த ஊரை... படித்த பாடசாலையை... விட்டுப்பிரியப் போகின்றோம் என்ற கவலை இருந்தாலும் அதை மேவியதாக கொடூர யுத்தம் கண்முன்னே நிகழ்ந்துகொண்டிருந்தது. இராணுவம் முன்னேறி புதிய இடங்களைப் பிடித்து முகாம் அமைத்தபின் குண்டுச் சத்தங்கள் சற்று ஓய்ந்தது மாதிரி இருந்தது. மழை நின்றாலும் தூவானம் நிற்காதது போல அவ்வவ்போது இராணுவமும் இயக்கமும் முட்டுப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைகளில் பெடியள் பாதைகளைக் கிளியர் செய்துகொடுக்க, ஊர்ச்சனம் வீடுகளிலும் தோட்டங்களிலும் விட்டுவந்த உடைமைகளை எடுத்துவரத் தொடங்கியிருந்தனர். அப்போதுதான் இவன் தன் பாட

சாலை அதிபரை நீண்ட நாட்களுக்குப்பிறகு கண்டான்.

சண்டை மூளாத பகுதியில் அதிபரின் வீடிருந்தும் ஏன் இங்கு வந்து இந்தாள் கஷ்டப்படுகிறது என்றுதான் முதலில் நினைத்தான். ஆயிரம் பேருக்கு மேல் படிக்கும் பாடசாலையில் அதிபராய் அவர் இருந்தாலும் இவனுக்கும் அவருக்குமான உறவு என்பது தனித்துவமானது. சிலசமயங்களில் சிலவிடயங்களுக்கு எவ்வளவு காரணங்களைச் சொன்னாலும் போதாமை இருப்பதுபோல அதிபருடான தனது உறவு எப்படி முகிழ்ந்ததென்பதை நினைக்கும்போதும் இவனால் ஒரு தெளிவான பதிலைக் கண்டறிய முடியாதிருக்கும்..

கடந்தகாலத்தைப் பற்றி இப்போது நினைத்தாலும், அவனுக்கு அது சூறாவளி வந்து ஓர் உலுக்கு உலுக்கி விட்டுப் போனதைப் போல விதிர்விதிர்க்கச் செய்கிறது. அக்கொடுங்காலம் இந்திய இராணுவம் ஈழத்தில் வந்து முகாங்கள் அமைத்த காலமாய் இருந்தது. இயக்கம், சாதாரண பெடியங்கள் போல சாரத்துடனும், மறைக்கப்பட்ட கிரனைட்டுமாகத் திரிந்து கொண்டிருந்தது. இவனது அப்பாவிற்கு கொழும்பில் கடை-யொன்றில் வேலை. பிரச்சினைகள் தீவிரம் ஆக ஆக வந்து போகும் பாதை அடிக்கடி மூடப்பட அப்பா ஊருக்கு வந்தே மாதங்கள் பல ஆகியிருந்தது. வறிய சூழல் என்றாலும் அவனது அம்மாவிற்கு எல்லோருக்கும் இயன்றளவு உதவ-வேண்டும் என்ற எண்ணம் எப்போதுமிருந்தது. இயக்கத்திலிருந்த பெடியங்களுக்கு அவரவர்களின் வீட்டில் கூட உள்நுழைய அனுமதிப்பதில்லை எனெனில் எப்போதும் இந்தியன் ஆமி இயக்கத்துக்குப் போன ஆக்களின் வீட்டைக் கழுகுக்கண்ணோடு கண்காணித்துக்கொண்டிருக்கும். இயக்கப் பெடியங்கள் வீட்டை வந்து போனாங்கள் என்று கேள்விப்பட்டால் பிறகு அக்குடும்பங்களின் நிலைமை விபரீதமாகிவிடும். ஒரு பிள்ளையைத்தான் நாட்டுக்கு தலைமுழுகிவிட்டாச்சு, மற்றப் பிள்ளைகளையாவது ஒழுங்காய் வளர்த்து ஆளாக்குவோம் என்ற எண்ணமே அன்றையகாலத்தில் பல பெற்றோர்களுக்கு இருந்தது. தம் சாவை நாட்கணக்கில் ஒத்திப்போட்டு, இந்தியன் ஆமிக்கு ஒழுங்கைகளுக்குள் நுழைந்து சுழித்துப்போட்டு வாழ்ந்துகொண்டிருந்த இயக்கப் பெடியங்களுக்கு அன்றன்றைய சாப்பாடு கிடைப்பது என்பது பெரும் திண்டாட்டமாய் இருந்தது.

ஆபத்து பின்வீட்டுக்குள் பதுங்கி நின்றாலும், பெடியங்களுக்கு அவித்துக் கொட்டாமல் இருக்கமாட்டேன் என அவனது அம்மா இயக்கத்திற்கு சமைத்துக்கொடுக்கத் தொடங்கினார். அநேகமாய் பெடியள் இரவில்தான் வருவார்கள். அவனது ஊரில் மின்சாரம் என்ற ஒரு சாமானே இல்லாததால் சனமெல்லாம் ஆறு ஏழு மணிக்கே இரவுணவைச் சாப்பிட்டுவிட்டு எட்டு ஒன்பது மணிக்குள் உறங்கப் போய்விடும். சாப்பிட வருகின்ற பெடியங்கள் தனித்து வரமாட்டார்கள். இரண்டு மூன்று பேராய்த்தான் சேர்ந்து வருவார்கள். ஒருவன் சாப்பிட மற்றொருவன் இரண்டு வீடுதள்ளி நின்று ஆமியின்நடமாட்டம் தென்படுகின்றதா எனச் சென்றி பார்ப்பான். பிறகு சென்றி பார்த்தவன் சாப்பிட, ஏற்கனவே சாப்பிட்டவன் ஆமியின் அசைவுகள் தெரிகிறதா என இருளில் விழியெறிந்து உற்றுப்பார்த்துக் கொண்டிருப்பான். இப்படி வருகின்ற பெடியங்களில் சிலர் தங்களது பெற்றோரைக் கண்டு வருடங்கள் சிலவாகியிருக்கும். அவர்கள் சாப்பிட்டபடி தங்களது அம்மாக்களின் நினைவுகளை இவனது அம்மாவோடு பகிர்ந்து நெகிழ்ந்தபடி நிற்பார்கள். சில பெடியங்கள் உணர்ச்சிப்பெருக்கில் "அம்மா இவ்வளவு பெரும் ஆபத்தையும் பார்க்காது எங்களுக்கு சாப்பாடு சமைத்து தருகிறியள். உங்களுக்கு என்ன அம்மா நாங்கள் கைமாறாய்த் தரப் போகின்றோம்?" என்பார்கள். இவனது அம்மாவும், இவனைக் காட்டி "இவன் உங்களின் வயதுக்கு வரும்போது என்னைவிட்டு விட்டு இவனும் உங்களைப்போல இயக்கமென ஒளிந்துதிரி யாமல் நிம்மதியாய் வாழ இந்தக் கோதாரிப்பட்ட பிரச்சினை எல்லாம் கெதியாய்த் தீரவேண்டும்" என்பார். அவர்கள் இந்த வார்த்தைகளைக் காற்றுடன் காவிக்கொண்டு இருட்டினில் மறைவார்கள்.

நாட்கள் செல்லச் செல்ல, ரோந்து போகின்ற இந்தியன் ஆமிக்கு பெடியங்கள் பல இடங்களில் அடிக்கத் தொடங்கிவிட்டாங்கள். இரண்டு பக்கமும் தினம் இழப்புக்களாய் இருந்தது. இது போதாதென்று இயக்கம் தங்களைத் தவிர வேறு இயக்கம் இருக்கக்கூடாது என்று மற்ற இயக்கப் பெடியங்களையும் போட்டுத் தள்ளத்தொடங்கிவிட்டது. இவனது அம்மா இவற்றையெல்லாம் கேள்விப்பட்டு, சாப்பிட வருகின்ற பெடியங்களிடம் இவைபற்றி விசாரிப்பார். "அவங்கள் எல்லாம் எங்கடை இலட்சியத்தைக் காட்டிக்கொடுக்கின்ற துரோகிகள் அம்மா" என்பார்கள். "யாராய் இருந்தாலும் அவங்களையும் என்னைப் போன்ற அம்மாக்கள்தானே பெத்ததுகள், எல்லோரும் எங்களுக்குப் பிள்ளைகள்தானே தம்பிகமார்" என அம்மா மெல்லிய குரலில் சொல்வாள். மேலும் தொடர்ந்து கதைக்கப்போனால் சில பெடியங்கள் சாப்பாட்டின் இடைநடுவில் கோபத்துடன் எழும்பிப் போய்விடுவார்கள். இதற்காகவே பிறகு அம்மா இவ்வாறான விடயங்களைக் கதைப்பதை நிறுத்தி அவர்களின் கதைகளை மட்டும் கேட்கத் தொடங்கினார்.

## 4.

ஒரு நாள் ஐந்தாறு ஆமி இவங்களின் ஊர்ப்பக்கமாய் ஜீப்பில் விடியக்காலை வந்திருக்கிறார்கள். பெடியள் இரைக்காய் இரவோடு இரவாய் கண்ணிவெடியைப் புதைத்துவிட்டு காத்திருந்திருக்கின்றார்கள். ஜீப் கண்ணிவெடியில் அகப்பட்டுத் தடம்புரள, தப்பியோடிய ஆமியையும் துரத்திச் துரத்திச் சுட்டிருக்கின்றார்கள். இப்படி ஆறு ஆமி ஒரே சம்பவத்தில் கொல்லப்பட்டது அதுவே முதல் தடவையாக இருந்தது. இந்தியன் ஆமிக்காரர்கள் இராணித்தேனீயைச் சூழும் தேனீக்கள் போல ஊரைச் சுற்றி வளைக்கத் தொடங்கிவிட்டார்கள். அதிக நெருக்கடியின்றி சும்மா களத்தில் இறக்காத, கொடும் கூர்க்காப் படையும் கூட வந்திருந்தது. ஊர்ச்சந்தியில் போற வாற சனத்திற்கு யாரிதைச் செய்தது எனக்கேட்டுக் கேட்டுப் பயங்கர அடியாம், வீடுகளிலிருக்கும் பெடியங்களையும் பிடித்துக் கொண்டு போகின்றாங்களாம் என்று கதைகள் எல்லாத் திசைகளிலிருந்து பரவத்தொடங்கின. வீட்டில் அம்மாவும் இவனுந்தான் தனித்திருந்தனர். "அம்மாளாச்சியே எங்கடை சனத்துக்கு ஒரு பிரச்சினையும் வராது காப்பாத்து" என அம்மா முனகிக்கொண்டிருந்தார். கிளுவை வேலிகளை வெட்டி வெட்டிக் கொண்டு சிறு சிறு குழுக்காய் ஆமி ஒழுங்கைகளுக்குள் உள்நுழைந்து வரத்தொடங்கிவிட்டார்கள். இந்திய இராணுவத்திற்குரிய ஒருவகை வாசனைக்கு ஒவ்வாது நாய்களும், மாடுகளும் சத்தம் போடத் தொடங்கிவிட்டன. இனி நடக்கப்போகும் சம்பவங்களுக்குச் சாட்சியாய்தான் இருக்கப்போவதில்லையெனச் சூரியன் கரும் மேகத்தைப் போர்த்திக்கொண்டு பதுங்கத் தொடங்கியது. இவனது வீட்டுக்குள்ளும் ஒரு ஆமிக் குரூப் ஏறிவிட்டது. வழமையாய் ரோந்து வருகின்ற ஆமிக்குழுவாய் இது இல்லை. அவர்கள் அடிக்கடி ரோந்து வருகின்றபடியால் அவர்களின் முகம் இவனுக்குப் பரிட்சயமாய் இருந்தது. அந்தக் குழுவில் தமிழ் பேசும் ஆமியொருவர் இருந்ததால் அவரே பிறரைக் காவலுக்கு

விட்டுவிட்டு வழமையான தேடுதல்களை வீட்டுக்குள் நடத்துவார். "மற்ற ஆமி அப்படி ஏதும் தேடுதல் நடத்த வீட்டுக்குள் வந்தால் நீங்கள் ஒருவரும் உள்ளே நிற்கவேண்டாம், முற்றத்தில் வந்து நில்லுங்கள், அதுவே பாதுகாப்பானது" என்று ஒருமுறை அவர் அம்மாவிடம் கூறியிருந்தார். வேறு சில வீடுகளில் உள்ளே பெண்கள் இருந்தபோது ஏற்பட்ட சில அசம்பாவிதங்கள் அவருக்கும் தெரிந்திருக்கும் போலும். ஆனால் இம்முறை வந்த ஆமிக் குருப்பில் அந்த தமிழ் ஆமியையோ அல்லது வேறெந்த தெரிந்த முகத்தையோ காணாதது அம்மாவிற்குப் படபடப்பை இன்னும் கூட்டிவிட்டது.

ஆமி உள்ளே தம் தேடுதல் வேட்டையைச் செய்யட்டுமென இவனும் இவனது அம்மாவும் முற்றத்தில் வந்து நின்றபோது சட்டென்று புழுதியைக் கிளப்பிக்கொண்டு ஒரு ஜீப் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ஆமியோடு ஒரு தலையாட்டியும் கூடவே வந்து இறங்கினார். இந்திய அரசு நிவாரணம் தருகின்ற அரிசி பையைத் தலைகீழாக தலையாட்டியின் முகத்தில் கவிழ்த்து, கண்களுக்கு மட்டும் ஓட்டை போட்டிருந்தனர். அவ்விழிகளில் மரண பயம் பிதுங்கிக் கொண்டிருந்தது, ஏதோ அசம்பாவிதம் நிகழப்போகின்றது என்று இவனது உள்மனம் சொல்லத் தொடங்கியது. இதுவரை தன் துடிப்பைக் காட்டாது பதுங்கியிருந்த இதயம், இப்போது அதைக் கையில் வைத்து உற்றுப் பார்ப்பதுபோல அதிவேகமாய்த் துடிக்கத் தொடங்கியதை இவனால் உணரமுடிந்தது.

தலையாட்டி தன் தலையை மேலும் கீழுமாய் "ஓம்" என்பதற்கு அடையாளமாய் அம்மாவைப் பார்த்து ஆட்டினான். அதைத் தொடர்ந்து ஒரு கூர்க்கா அம்மாவின் தலைமயிரைப் பிடித்து ஜீப்பில் வலுக்கட்டாயமாய் ஏற்றத்தொடங்கினான். அம்மா, "நான் எந்தத் தவறும் செய்யவில்லை, என்னை எதற்கு ஜீப்பில் ஏத்துகிறியள்" எனக் கத்தினாள். அவளின் அலறல், நிசப்தம் பெருகிவழிந்த வெளியை ஒரு கத்தியைப் போல கிழித்துக்கொண்டு போனது. ஜீப்பில் ஏறாது தன் கால்களை நிலத்தோடு தேய்த்துக்கொண்டு அம்மா பிடிவாதமாய் நிற்கிறாள். ஒரு நேரம் சாப்பிடாது விரதம் இருந்தாலே சோர்ந்துவிடும் அம்மாவிற்கு எவ்வாறு இந்தப் பெரும் பலம் வந்தென இவனுக்குத் திகைப்பாக இருந்தது. அம்மாவின் பிடிவாதத்தைக் கண்ட, இன்னுமொரு கூர்க்கா ஜீப்பில் அவளை ஏற்றத் துணைக்கு வருகின்றான். தன் தோளில் அவனது கை படிவதைத் தவிர்க்க அம்மா வாயால் அவனின் கையைக் கடித்துவிடுகின்றாள். வெறிகொண்ட நாய்போல அந்தக் கூர்க்கா வெகுண்டெழுந்து அம்மா வீட்டில் அணிந்திருந்த "சோட்டி"யைக் கிழித்துவிடுகின்றான். எங்கிருந்தோ வந்திற்றோ தெரியாது இவ்வளவு பெரும் மூர்க்கம். தேங்காய் வெட்டுவதற்காய் முற்றத்தில் கிடந்த கத்தியைத் தூக்கிக்கொண்டு "வேசை மவனே" என அவனை-வெட்ட அம்மா ஓடினாள். அந்த சொற்ப இடைவெளிக்குள் காற்றை விட விரைவாய்த் தோட்டாக்கள் உமிழப்பட்டிருந்தன. அவனுக்கு மட்டுமில்லாது இயக்கப் பெடியங்களுக்கும் அம்மா வாயிருந்த அம்மா நிலத்தில், குருதியில் சரிந்துபோயிருந்தாள்.

பிறகு நடந்ததெல்லாம் யாருடைய சொற்களைக் கேட்டு அவன் செய்தது மட்டுமே. எல்லோரையும் தவிர்த்து அம்மாவோடு மட்டும் இவன் தனியே உரையாடத் தொடங்கினான். அம்மாவின் குரல்கள் இரவில் மட்டுமில்லாது பகலிலும் கேட்கத் தொடங்கின. அம்மா எப்போதும் தன்னை அருவமாய் பின் தொடர்ந்துகொண்டிருக்கின்றாள் என்பதை இவன் மிகத் தீவிரமாய் நம்பத்தொடங்கினான். அம்மாவிற்கு நடந்தது அறிந்து அவனது அப்பா கொழும்பிலிருந்து வந்திருந்தார். அவரோடு இவனால் அதிகம் ஒட்ட முடியவில்லை. காலம் செல்லச் செல்ல அம்மா உள்ளிட்ட இறந்த இயக்கப்பெடியள் பலரின் பல்வேறு வகையான குரல்கள் இவனுக்குள் பல்கிப் பெருகத்தொடங்கின. பாடசாலைக்குப் போனாலும் இவனால் பாடங்களில் கவனஞ்செலுத்தமுடியவில்லை, அம்மா சுடுபட்டுச் செத்ததை பல்வேறு நிலைகளில் வைத்துப் பார்க்கத் தொடங்கினான். எந்தத் தருணம் நிகழாது இருந்திருந்தால் அம்மா காப்பாற்றப்பட்டிருப்பாள் என்பது பற்றி அதிகம் யோசிக்கத் தொடங்கினான்

## 5.

இவ்வாறு இவன் தனக்குள்ளேயே தன்னையே தொலைத்துக்கொண்டிருந்த காலத்தில்தான் பாடசாலை அதிபர் இவனில் தனிப்பட்ட கவனம் எடுக்கத் தொடங்கினார். இவனின் தந்தையும் ஊரிலிருந்து ஒன்றும் செய்யமுடியாது என கொழும்புக்கு மீண்டும் செல்ல இவன் அவனின் அம்மம்மாவோடு இருக்கத் தொடங்கினான்.

உள்மனக்குரல்களை உற்றுக்கேட்கப் பழகிய இவன் நாளடைவில் அவை அழைத்துச் செல்லும் திசைகளிற்கு எல்லாம் அலையத்தொடங்கினான். சில இடங்கள் அவன் இதுவரை போயிருக்காத இடங்களாய் இருக்கும். காரணம் எதுவுமின்றி எப்படி இங்கே வந்தடைந்தான் எனப் புதிய இடங்களைக் கண்டு இவன் திகைப்பான். எல்லோரையும் விட அவனது பாடசாலை அதிபருக்கே அவனது பிரச்சினைகள் துல்லியமாகப் புரியத் தொடங்கின. பாடசாலை முடிந்தபின் தினமும் தன் வீட்டுக்கு வரச் சொன்னார் அதிபர். நான்கு மைல்கள் சைக்கிள் உழக்கி இவன் போவான். அங்கு அவரும் அவரது மனைவியும் அழகாய்ப் பராமரித்த தோட்டத்தில் அவர்களோடு சேர்ந்து வேலை செய்வதும், இளைப்பாறுவதுமாய் பொழுதுகள் கழியத்தொடங்கின. "உன்னால் படிப்பில் கவனஞ்செலுத்த முடியவில்லையென்றால் உனக்குப் பிடித்தது வேறு என்ன என யோசித்து அதில் கவனஞ்செலுத்தப்பார் என்றார் அதிபர் ஒருநாள். மனதை ஒருங்கே குவிக்கும் போதுதான் குரல்கள் கேட்கின்றன எனவே உடலை முன்னிறுத்தும் உதைபந்தாட்டத்தில் இவன் கவனஞ்செலுத்தத் தொடங்கினான். இடதுகால் பழக்கமுடையவனாகவும், விரைவாக ஓடுபவனாகவும் இருந்ததால் உதைபந்தாட்டத்தில் இவனால் பிரகாசிக்க முடிந்தது. அவன் எதிரணி வீரர்களைச் சுழித்துப் பந்தைக் விரைவாய்க் கொண்டுபோகின்றவனாய் இருந்ததால் "சுழியன்" என்ற பட்டப் பெயர் கூட அவனுக்கு வைக்கப்பட்டது. அதிபர் ஒருநாள் அவனுக்கு ரவுனிலிருந்து அன்றைய காலத்தில் பிரபல்யமாயிருந்த மரடோனாவின் ஜேர்சியை வாங்கிக்கொண்டு வந்து அன்பளிப்பாகத் தர இவன் நெகிழ்ந்தான். மெல்ல மெல்ல அவனின் உள்மனக்குரல்கள் அடங்கிப்போக இயல்புக்கு வரத் தொடங்கினான்.

## 6.

மீண்டும் சண்டைகள் தொடங்கிவிட்டன. இந்தமுறை இலங்கை இராணுவத்தோடு. ஊரை விட்டு இரவுகளில் வெளியேறுவதும் பகலில் வருவதுமாய் இருந்த காலம் போய் முற்று முழுதாக ஊரைவிட்டு நீங்க வேண்டியதாகப் போய்விட்டது இவனுக்கு. ஒரு புதன்கிழமை வீட்டிலிருக்கும் மிச்ச உடைமைகளையும் எடுக்க வந்தபோதுதான் அதிபரைக் கண்டு, ஏன் இந்தாள் இங்கே வந்து நிற்கிறது என்று யோசித்தான். பிறகு அவருடன் கதைத்தபோதுதான் மாணவர்களின் சான்றிதழ்க

ளையும் முக்கிய ஆவணங்களையும் எடுக்க வந்திருக்கின்றார் என்பது தெரிந்தது. அதையெல்லாம் எடுத்தபின் இடம்பெயர்ந் திருந்த பாடசாலைக்குத் தேவையான தளபாடங்களையும் எடுக்கவேண்டுமென அதிபர் ஒற்றைக்காலில் பிடிவாதம் பிடித்த படி நின்றார். அங்கே பாதுகாப்பை உறுதிசெய்துகொண்டிருந்த இயக்கப் பெடியங்களும், வீடு பார்க்க வந்த சனங்களுந்தான் இந்தநிலையில் பெரிய பொருட்களை நகர்த்தமுடியாது, வே-றொரு சமயத்தில் அதைச் செய்யலாம் என்று அதிபரைச் சமாளித்து அனுப்பிவைத்தார்கள்.

"நிலைமை போகின்றபோக்கைப் பார்த்தால் இன்னும் மோசமாக ஆகும் போல இருக்கிறது. நீயும் இங்கிருந்தால் இயக்கத்திற்குத்தான் போகவேண்டிவரும். வெளிநாட்டுக்குப் போகின்ற வழியைப் பார்" என அதிபர் இவனைப் பார்த்து அக்கறையாகச் சொன்னார். அதுதான் அவரை இவன் இறுதியா கப் பார்த்தது. இடம்பெயர இடம்பெயர அந்தந்த இடங்களில் இருந்த பாடசாலைகளில் தற்காலிகமாய் இவன் படிக்கத்தொ டங்கினான். ஏற்கனவே இயங்கிக்கொண்டிருந்த இன்னொரு பாடசாலையோடு இணைந்து இவனது ஊர்ப்பாடசாலையும் எங்கோ தொலைவில் கொஞ்சப்பிள்ளைகளோடு இயங்கத் தொடங்கியது. இவனால்தான் அங்கே போய்ப் படிக்க முடியவில்லை.

## 7.

கொழும்பில் வேலை செய்துகொண்டிருந்த அப்பா இவனைக் கொழும்புக்கு வரச்சொன்னார். அம்மா அப்பாவை திருமணஞ் செய்தபோது சீதனமாய்க் கொடுக்கப்பட்ட காணியை விற்று, இவனின் தகப்பன் ஏஜன்சிக்கு கனடாவிற்குப் போகப் பணம் கட்டினார். ஏழு மாதமாய் நாலைந்து நாடுகளில்அலைந்து திரிந்து இறுதியில் கனடாவிற்கு வந்து அசைலம் அடித்தான்.

புதிய நாடு, புதிய கலாசாரம், புதிய காலநிலையோடு, ஆங்கிலமொழியும் தெரியாது அவதிப்பட்டபோது, உள்ளே இதுவரைகாலமும் அடங்கிப்போயிருந்த குரல்கள் மீண்டும் கரகரக்கத் தொடங்கின. அவனது அம்மா பொழியும் பனிக்குள் இடையிடையே தோன்றி அவனை மீண்டும் புதிய இடங்களுக்கு அலைத்துச் செல்லத் தொடங்கினார். ஊரில் போலவன்றி இங்கே குரல்களைப் பின் தொடர்ந்து சென்று, தொலைந்த இடங்களில் இருந்து மீண்டும் வீட்டுக்கு வருவது என்பது மிகக் கடினமாக இருந்தது. திசைகேட்டு ஒழுங்காய் வந்து சேர்வதற்கு இவனுக்கு மொழியும் தோலின் நிறமும் ஒரு தடையாக இருந்தது. பூச்சியத் துக்கு கீழே 20 பாகைக்குப் போகும் காலங்களில் கூட உரிய ஆடைகள் அணியாது, வீட்டுக்குள் அணிந்திருக்கும் ஆடைக-ளுடன் குரல்களைப் பின் தொடர்ந்து போகின்றவனாகவும் ஆகி யிருந்தான்.

நண்பன் ஒருவனின் உதவியால் அதிபரின் தற்காலிக முகவரியைப் பெற்று அதிபருக்கு ஒரு கடிதம் எழுதினான். தான் மீண்டும் குரல்களைக் கேட்கத் தொடங்கியிருப்பதாகவும், முக்கியமாய் தன்னால் ஆங்கிலம் இல்லாது இங்கே ஒரு வேலையும் செய்ய முடியாது இருக்கின்றது என்பதையும் அதில் குறிப்பிட்டிருந்தான். அதிபரின் பதில் ஆங்கிலத்தில் வந்திருந்தா லும் அவனிற்கு அது மிகவும் இதமாயிருந்தது. ஆங்கிலம் கற்றுக்கொள்வது அவ்வளவு ஒன்றும் கடினமில்லையென, தான் ஆங்கிலம் கற்றுக்கொண்ட அனுபவங்களை கடிதத்தில் இவனு டன் அவர் பகிர்ந்துகொண்டார். இலங்கையைப் போல அன்றி, உள்ளிலிருந்து ஒலிக்கும் குரல்களுக்கு கனடாவில் உரிய சிகிச்சை முறைகள் வைத்திருப்பார்கள் அவற்றை அணுகிப் பெறுக என்ற அதிபரின் தொடர்ச்சியான அறிவுரையை ஏற்று இவன் வைத்தியர்களிடம் ஆலோசனை கேட்கத் தொடங்கினான்.

## 8.

கனடாவின் வாழ்க்கைச் சூழலுக்கேற்று தன்னைத் தகவமைக்கவும், ஆங்கிலமும் ஓரளவு பிடிபடவும், அவன் பாடசாலைக்கு விருப்புடன் செல்லத் தொடங்கினான்.. கணிதத் தில் மீதிருந்த ஆர்வந்தான் இப்போது இந்தப் பெட்டையையும் இவனோடு நெருங்க வைத்திருக்கிறது. அவளுக்கும் இவனைப் பிடித்திருக்கிறது போலும். இப்படியிப்படி இன்னின்ன கலரில் நீ ஆடைகள் அணிந்தால் இன்னும் பளிச்செனத் தெரிவாய் என அடிக்கடி கூறவும் தொடங்கினாள். இவன் ஒரு காதலர் தினத்தன்று அநேகமான ஆண்கள் கொடுப்பதுபோல ஒரு சிவப்பு ரோஜாவும் வாழ்த்தட்டையும் கொடுத்து ப்ரபோஸ் செய்துகொண்டான். "நீ கணிதம் சொல்லித் தரும்வரை நான் உன்னைக் காதலிக்கத்தானே வேண்டியிருக்கிறது, வேறு வழியில்லை" என நக்கலடித்து ரோஜாப்பூவை வாங்கிக் கொண்டாள். இவனுக்கு அவள் அப்படிச் சொன்னது கேட்டு முகம் சுருங்கிப்போனது. அதைக் கண்டு, "இல்லை, எனக்கும் உன்னைப் பிடித்திருக்கிறது, இல்லாவிட்டால் ரோஜாவை வாங்கிக்கொள்வேனா?" என அவனைத் தேற்றி ஒரு முத்தங் கொடுத்தாள். அன்று முதன் முதலாக அவளின் கைவிரல்களைக் கோர்த்துக்கொண்டு அவள் வீடுவரை நடந்து போயிருந்தான்.

பிரியமான பெண்ணும், போரில்லாச் அமைதியான நிலைமையும் கனடாவில் இருந்தும் கூட, இலையுதிர்காலங் களிலும் - சூரியன் முகங்காட்டாது புதைந்திருக்கும்- பனிக்காலங் களிலும் அம்மா இவனோடு அதிகம் பேசத்தொடங்குவதை இவனால் தவிர்க்க முடிவதில்லை. "இயக்கப் பெடியள் சாப்பிட வீட்டை வரப்போகிறாங்கள், தம்பி கெதியாய் இந்த வெங்காயத்தை வெட்டித்தாடா" என்றோ இல்லை "உந்தப் புளியங்கோதை உடைத்து புளியைத் தண்ணியில் கரைத்துத் தாடா, குழம்பு கொதிச்சிட்டுடா" என்றோ நெருங்கி வந்து கேட்கத் தொடங்கிவிடுவார். அம்மாவில் அவனுக்கு அவ்வளவு பாசம். எனவே அம்மா நீங்கள் தள்ளிப்போங்கோ என்று சொல்லாமல் அவர் கதைப்பதையெல்லாம் அவன் பொறுமை யாகச் செவிமடுக்கத் தொடங்கிவிடுவான்.

உயர்கல்லூரி முடிந்து அடுத்து கொலீயிற்கா அல்லது யூனிவேர்சிட்டியிற்கா போவது என்ற குழப்பம் இவனுக்கு வந்தது. தனக்கு படிப்பிலிருந்து ஒருவருட இடைவெளி வேண்டுமெனச் சொல்லி உணவகம் ஒன்றில் முழுநேரமாய் வேலை செய்யத் தொடங்கினான். அவள் தான் யூனிவர்சிட்டிக்கு போகப் போகின்றென தொலை தூர வளாகம் ஒன்றில் அனுமதி எடுத்துப் போய்விட்டாள். இவன் டன்டாஸ் ஸ்குயருக்கு அருகிலிருக்கும் உணவகம் ஒன்றில்தான் வேலை செய்யத் தொடங்கினான். முதலாம் வருடம் படிப்பு முடித்து அவள் இவனைச் சந்தித்தபோது சொல்லவேண்டிய எதையையோ தொண்டைக்குள் வைத்துக்கொண்டு தவிப்பது போலத்தெரிந்தது. "என்ன..தயங்காமல் சொல்லு?" என்றான். "நாங்கள் உயர்கல்லூ ரியில் ஆரம்பத்தில் இருந்ததுபோல நல்ல நண்பர்களாய் இருந்துவிடுவோமா" என்றாள் அவள். இவனுக்கு கழுவதற்கு காத்திருந்த ஒரு நூறு சாப்பாட்டுக் கோப்பைகள் நிலத்தில் ஒரே நேரத்தில் சிதறிவிழுந்தது மாதிரியான உணர்வு நெஞ்சிற்குள் எழத் தொடங்கியது. "ஏன் நான் உன்னோடு சேர்ந்து படிக்க வராததா? காரணம்" என இவன் கேட்டான். "அப்படியில்லை, நீ

இன்னமும் உன் அம்மாவோடு உரையாடிக்கொண்டிருப்பதுதான் எனக்கு மிகவும் அச்சமூட்டுகிறது. எல்லோருக்கும் அவரவர் வாழ்க்கை முக்கியம் அல்லவா?" என்றாள்.

"Are you seeing someone?" எனக் கேட்டான்.

"Hmm, May be" என்றாள் அவள்.

'Now I know the reason Bitch" என்றான் இவன்.

"Really, When we had sex, I was your soul, Now, I'm a F***ing Bitch. I know guy's philosophy. Get a Life' எனக் கூறிவிட்டு அவள் மறைந்தாள்.

**9.**

இவன் மீண்டும் நீண்டநாட்களின் பின், தான் அனுபவித்துக்கொண்டிருக்கும் எல்லா வேதனைகளையும் கொட்டி அதிபருக்குக் கடிதம் எழுதத் தொடங்கினான். அதிபர், தான் இப்போது பாடசாலை அதிபர் பொறுப்பிலிருந்து இளைப்பாறி இலங்கை அரசின் அபிவிருத்தி சம்பந்தமான ஒரு துறையில் வேலை செய்வதாக எழுதியிருந்தார். "சமாதான உடன்படிக்கை ஏற்பட்டு இப்போது நிலைமை சுமுகமாய் இருக்கிறது, உனக்கு கனடாவிலிருப்பது கஷ்டமெனறால் இலங்கைக்கு வா, தான் ஏதாவது ஒரு வேலை எடுத்துத் தருகின்றேன்" எனக் கூறியிருந்தார். "கனடா என் கண்ணுக்குத் தெரியாத கண்ணிகளால் என்னைப் பிணைத்து வைத்திருக்கிறது, விரைவில் அவற்றை அறுத்தெறிந்துவிட்டு வருகின்றேன்" என நம்பிக்கையுடன் இவன் பதில் எழுதினான்.

பருவம் மாறி இலைகள் உதிர்ந்துகொண்டிருந்த ஒரு நாள், எரிபொருள் நிலையத்தில் தனது கார் இடைநடுவில் பெற்றோல் இல்லாது நின்றுவிட்டது. இந்தக் கலனின் பெற்றோல் நிரப்பவேண்டுமெனக் கேட்டு பெற்றோலை நிரப்பினான். தன் காதலியும் தானும் பாடசாலை முடிந்து, நடந்துவரும் புல்வெளியில் படுத்தபடி கருஞ்சாம்பர் வானத்தை நீண்டநேரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு "அம்மா நான் உங்களிட்டை கெதியாய் வருகிறேன்" எனச் சொல்லியபடி உடல் முழுதும் பெற்றோலை ஊற்றித் தீயைப் பற்ற வைத்தான்.

இவன் தன் அடையாளங்களை முற்றாக அழித்துக் கொண்ட மூன்றாம் நாளில் அதிபரும் இனந்தெரியாத நபர்களால் அவரின் வீட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் அதிபராயிருந்த பாடசாலையில் படித்த மாணவன் ஒருவன் தான், அதிபரைச் சுட்டதெனவும், அவனுக்கு இவனைப் போன்ற முகச் சாயல் இருந்ததாகவும் சனங்கள் தங்களுக்குள் இரகசியமாய்க் கதைத்துக் கொண்டார்கள்.

*2010*

# ந.மயூரரூபன் கவிதைகள்

## நிழற்குருதி

பொழுதுகள் விழுங்கிடங்கு
வளர்ந்துள்ளோடுகிறது
கட்டைகளடித்த வெண்படங்குள்
பொழுதுகளைத் திணித்து
ஆழவிழுகிறது என் நிழல்.
படங்கின் மூடாப்பட்டலையை
முட்டுகிறது இருள்
எதிர்வரும் நாட்களைச் சப்பியபடி...

மூச்சோய்ந்த நாட்களைச்
சுமந்துவரும் காண்டாவனம்
கந்துள் சுமந்து
மோதுகிறதெங்கும்.
எங்கள் கனவுகளின் மிடுக்குகளை
தன் சுழிக்குள் மறித்திழுக்கிறது .
அசைவழிந்த எம் கனவுகள்
புகைபடிந்துபோகின்றன.

## வலி

ஓடிக்கொண்டிருக்கும்
காற்றின் கருக்குகளில்
குந்தியிருக்கிறதுன் மனது.

குஞ்சுறை விழுத்திய
கிளைமையற்ற
முள்மறை முக்காடு
மூடித்தங்குகிறதுன்
சைனியத்துள்.

அறுந்துவிழுமொவ்வொரு
சினைகளிலுந் தொங்கி
அந்தரிக்கிறேன் நான்.

# கவிதை

## மறுவாழ்வு

புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட பதார்த்தத்தின்
சமையல் குறிப்பென ஆகிவிடுகின்றன
சிலருக்கு,
சில விடுதலைப் போராட்டங்கள்.
ஐம்பது வருட
இரத்தமும், சதையுமான அதன் வரவாறு,
உம்நூற்றாண்டின் ஏதோ ஒரு
இலவச கண் சிகிச்சை முகாமில்
ஒப்பனை செய்யப்பட்ட
முகமொன்றால்
ஐந்து நிமிடத்தில் விளக்கப்படுகிறது -
அபூர்வமான புதிய சமையல் கலை கண்டுபிடிப்பைப் போல.
அதிகாரம் அருகிருக்க, புகைப்படக் கருவிகள் பளிச்சிட
ஒரு இனத்தின் அவலம்
இலவச கண்சிகிச்சையுடன் அன்றைய நாளின்
தலைப்பு செய்தி மட்டுமேயாகிறது.
கூட்டிக்,குறைத்து, மெருகூட்டிச்
செய்யப்படும் புதிய உணவுப் பதார்த்தத்தைத்
தயாரிக்கின்ற முகபாவனையுடன்
அதிபர்கள் அடுத்த நாள் பன்னாட்டுச்
செய்தியாளர்களைச் சந்திக்கிறார்கள்.
சரிவிகித சம உணவு என்பதில்
'மானமும்' அடங்கும் என்பதை யார் அவர்களுக்குச்
சொல்வது
கூழோ, கஞ்சியோ போதுமென்றால் கூட
அவையும் அழகான பாலித்தீன் மழுப்புகளில்.
பனையும், நெல்லும் விளையும் தன்நிலம்
சீன சமையற்காரர்களுக்கும், பக்கத்துப்
பசுமைப் புரட்சியாளர்களுக்கும்
பங்குபிரிக்கப்பட,
பாலித்தீன் பை அகதிகள்
அடுத்தொரு 'Celebrity' வந்து
சொட்டு மருந்து விடும் வரை
'சுகமாய்' இருட்டுக்குள் இருக்கலாம்.

## மோட்சம்

உன்னிடமிருந்து கசப்பற்ற விலகல்
சாத்யப்படுமாயின் நான் சாகவும் தயார்.
புதிது புதிதான பொய்களை
எனது ஒப்பனை சாதனங்களென
திணித்துக் கொண்டு நானும்,
கனகச்சிதமான நம்பிக்கையில்
என்னை வரவேற்பதுமான உன் பாவனையும்
கண்டு
நமது நபும்சகத்தில் கூசிக்
கிரீச்சிடுகின்றன நாற்காலிகளும், கதவுகளும்.
உண்மையின் குருதி வழியும்
ஒரு சொல்லை உதிர்த்துவிட்டுப்
பிரிய வேண்டும் என்பதே
என் விண்ணப்பம்.
தள்ளிப்போடுதலின் சாவகாசத்தில்
தன்மைகள் மாறிவிடலாம்
என்பது உன் நம்பிக்கை.
சாக்கடையின் ஊற்று என்
புலன்கள் அனைத்தையும் கைப்பற்றுமுன்
எனக்கு விடை கொடு.
உனக்கு புண்ணியமாய்ப் போகட்டும் -
எனது கயமையின் நிர்வாணத்தை
ஒரு முறை பார்.
மோட்சம் கிட்டும்.
உனக்கல்ல - எனக்கு!

## தமிழச்சி தங்கபாண்டியன்

## அபத்தம்

கூச்சமாக இருக்கிறது!
முழுக்க அலங்கரித்துக் கொண்டு
ஒரு பிச்சைக்காரரைத் தாண்டித்
திருமண வீட்டிற்குள் நுழையும் போது.

அவஸ்தையாக இருக்கிறது!
தாம்பூலப் பையை அந்தப்
பிச்சைக்காரரிடம் தராமல்
வீட்டிற்கு எடுத்துச் செல்லும்போது.
விநோதமாய் இருக்கிறது!
வறுமையை ஒழிப்பேன் என
மேடையில் பேசும் போது.



## "அவங்கவங்க வீட்டுக்கு, அவரக்காய் சோத்துக்கு"

ஏகலைவனது அறுந்த விரலென
விழுந்து கிடந்தது கறுத்த பனை.
தேரிக் காட்டின் வெட்கைகுடித்த
வெற்றுக் கலயமென அதன்மேல் நான்.
கள் மணம் ததும்பும் சுருட்டு நாற்றமுடன்
பக்கத்தில் வனப்பேச்சி.
கொதி மணலின் அனலுக்கு
முந்திச்சீலை விரித்து அருகாக சீலைக்காரி.
முழங்கை வரை சாறொழுகப்
பனம்பழத்தை ருசித்தபடி ராக்காச்சி.
அடங்காத சிரிப்புடன் கன்னிமார் ஏழுபேரும்.
வண்டி மசி எடுத்து வந்து கண்ணெழுதியபடி
கன்னிமாரில் ஒருத்தி சொன்னாள் :
'நம் தலை வேப்பெண்ணெய் வீச்சத்திற்கே
காததூரம் ஓடியவர்களால் தான்
கடைசிவரை நாம் கன்னிமார்' .
முழுவதும் சப்பிய பனங்கொட்டையை
அவள் மேலெறிந்த ராக்காச்சி இடைமறித்தாள்:
'பாதியிலே விட்டுப் போன
பரதேசிகளைவிட அவர்கள் தேவலாம்.'
மாறாப்பின் மறைப்பற்றுத் திமிறும்
மார்பகங்களைப் பார்த்தபடி
பதிலுக்கு சீலைக்காரி,
'அவர்களற்ற உலகத்தில் தான்
அழகு என்றும் நிலைத்திருக்கும்ஜி,
முடிந்து போன சுருட்டின் கடைசி சுவாசத்தில்
அமிழ்ந்திருந்த பேச்சி தொடர்ந்தாள்'
'அக்கரையில் இருக்கும் அத்தீவில்
எள் அள்ளித் தெளிச்சாப்ல
எங்கேயும் விதவைகள் தானாம்.
அய்யனார் கோவில் திருவிழாவின் வழக்கமான
பலியென
அத்தனையும் முடிந்து அவரவர் சோறாக்கப்
போனபின்
அவளென்ன, அவனென்ன, அவர்களென்ன'

கருப்பையும், முலைகளுமற்ற
ஒரு மொண்ணைப் பிறப்பிருந்தா
ஒருவேளை கோணஸ்வரியும், பென்னம்பேரியும்
அங்கே அச்சமின்றி மீண்டும் பிறக்கலாம்.
காதலைப் போல, போருக்கும் வயதில்லை
'கைம்மைக்கும் கூடத்தான்' .
கவிதை எழுதுவதற்கென நான்
வைத்திருந்த வெற்றும் காகிதங்களை
வீசி எறிந்தேன்.
பனங்காட்டுச் சிறுவர்கள் தம்
கழிவுகளைத் துடைக்கட்டும் அதில் !



# One stop for all your immigration needs!

- Areas of practice:
  குடிவரவு - அகதிச் சட்டம்
- (IMMIGRATION AND REFUGEE LAW)
- Refugee Claim
- Appeal for Rejected Claimant
- Humanitarian and Compassionate Application
- Pre Removal Risk Assessment (PRRA)
- Detention Review (Bail Hearing)
- Independent Application/ Skilled Worker
- Entrepreneur / Investor
- Provincial Nominee Program
- Federal Court Judicial Review
- Group Sponsorship/ Family Class Sponsorship and Appeal
- Ministerial Relief/Rehabilitation
- Stay of Removal Order
- Visitor Visa/Student Permit/ Work Permit
- Live in Care Giver program
- REAL ESTATE LAW
- FAMILY LAW
- HUMAN RIGHTS LAW

Legal aid certificate accepted
சட்ட உதவிப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

Services are offered in Tamil, English and Sinhalese.
தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் சேவைகள் வழங்கப்படும்.

**Packialuxmi Vasan LL.B**
**Barrister, Solicitor & Notary Public**
**of**
**Waldman & Associates**
**Barristers & Solicitors**

**Phone: 416-482-6501**
**Fax: 416-489-9618**
**281 Eglinton Avenue East,**
**Toronto, Ontario M4P 1L3**
**Email: luxmi.v@lornewaldman.ca**

கட்டுரை

# அழிக்கப்படும் பெண்குழந்தைகளும் அருகிவரும் பெண்ணினமும்

அருண்மொழிவர்மன்

...'மிசஷன்' மருத்துவமனை ஒன்றின் பின்புறம் புதைக்கப்பட்டிருந்த 390 பெண்குழந்தைகளின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதே ஆண்டு யுனிசெஃப் நிறுவனம் இந்தியாவில் இருந்து 50மில்லியன் பெண் குழந்தைகள் காணாமல் போயிருப்பதாக அறி வித்திருந்தது. இந்தியாவிலோ அல்லது சீனாவிலோ கருவில் இருக்கின்ற பிள்ளையின் பாலினத்தை அறிந்து கொள்வதற்கான சோதனைகளிற்கான கட்டணம் வெறும் 500 இந்திய ரூபாய்களாக இருக்கின்றபோது அதன் தொடர்ச்சியாக தமக்கு பெண் குழந்தைகள் விருப்பத்துக்குரியன அல்ல என்கிறபோது இலகுவாக கருக்கலைப்பை செய்துவிடுகின்றனர்...

"Its not a child. Its a girl baby, and we can't keep it. around these parts, you can't get by without a son. girl babies don't count." சீனாவில் பிறந்து தற்போது லண்டனில் வசித்துவரும் ஸு ஸின்ரன் (Xue Xinran) எழுதிய The good woman of China என்கிற புத்தகத்தில், சீனாவில் பெண் குழந்தைகள் பிறக்கின்றபோது பொதுப்புத்தி எவ்வாறு அதை எதிர்கொள்ளுகின்றது என்பதை மேலே சொன்ன வரிகளில் தெரிவித்து இருக்கின்றார். it's a girl baby, and we can't keep it என்கிற அவர்கள் மன நிலைக்கு கை மேல் பலனாக இன்னும் 10வருடங்களில் சீனாவில் இருக்கின்ற ஒவ்வொரு 5 இளைஞர் களிலும் ஒருவர் தனக்கான பெண் துணை இல்லாது வாழ நேரிடும் என்று chinese academy of social sciences (CASS) என்கிற அமைப்பு எச்சரித்துள்ளது. அதாவது 2020 அளவில் சீனாவில் இருக்கப் போகின்ற 19 வயதுக்குட்பட்ட ஆண்களின் எண்ணிக்கை அங்கே இருக்கப் போகின்ற 10 வயதுக்குட்பட்ட பெண்களின் எண்ணிக்கையை விட 30 முதல் 40 மில்லியன்களால் அதிகமாக இருக்குமாம்.

சீனா என்றவுடனே அதன் ஒரு பிள்ளைக் கொள்கை நினைவுக்கு வந்து விடும். வீட்டுக்கொரு பிள்ளை என்பதை சட்டமாக பின்பற்றும் சீனாவில் இருப்பவர்கள், ஆண் பிள்ளைகளே பிற்காலத்தில் தமக்கு உதவுவார்கள், தம்மைப் பராமரிப்பர் என்ற நம்பிக்கையில் பெண் குழந்தைகளை பிறந்த உடனேயே கொன்று விடுவது நடக்கக் கூடும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டாலும் அந்தக் கொள்கையையே முழுக் காரணம் என்று கூறிவிடமுடியாது. சீனாவில் ஒரு பிள்ளைக் கொள்கை 1979ல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆனால் ஆண் குழந்தைகள் பிறப்பது 90களிலேயே அதிகரித்து செல்கின்றது. தவிர 90 களுக்குப் பின்னர் சீனாவில் மாத்திர மல்லாது இந்தியா, தைவான், தென்கொரியா, முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளில் ஆண் குழந்தைகளின் எண்ணிக்கை பெண் குழந்தைகளின் எண்ணிக்கையைவிட அதிகரித்து வந்திருக்கிறது. ஆனால் இந்த நாடுகளில் சீனாவில் இருப்பது போல ஒரு பிள்ளைக் கொள்கை இல்லை. நிக் எபர்ஸ்டாட் (Nick Eberstadt) என்கிற புள்ளி விபரவியலாளர் சொல்வது போல ஆண் குழந்தைகள் மீது சமூகத்தில் இயல்பாகவே அதீத விருப்பம் இருக்கின்ற போது கருவிலேயே குழந்தையின் பாலினத்தினை அறிந்துகொள்ளும் தொழினுட்பமும் வேகமாக பரவியதே இதற்கான முக்கிய காரணமாக இருக்கவேண்டும். உதாரணமாக இந்தியாவில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கானிங் மூலம் கருவிலிருக்கும் குழந்தையின் பாலினத்தை அறிந்து கொள்ளும் சோதனைகள் அறிமுகப் படுத்தப்பட்ட கடந்த 20 ஆண்டுகளில் 20 மில்லியன் பெண் குழந்தைகள் பிறக்கப்போகும் குழந்தைகளின் பாலினம் தொடர்பான பெற்றோரின் தேர்வு காரணமாக கொல்லப் பட்டிருப்பதாக 2007ல் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகள் பிறக்கின்ற விகிதம் இயற்கையிலேயே சமமாக இருப்பதில்லை. பொதுவாக 100 பெண் குழந்தைகளுக்கு 103 - 106 வரையான ஆண்குழந்தைகள் பிறக்கின்றன. அதே நேரம் நோய்த் தொற்று போன்ற காரணிகளால் ஆண் குழந்தைகள் இறக்கும் விகிதமும் பெண் குழந்தைகளை விட அதிகமாகவே இருக்கின்றது. இந்த அடிப்படையில் இயற்கையில் (அதாவது 25 ஆண்டுகளின் முன்னர், பெண் குழந்தைகளை கருவிலேயே கலைத்தல் போன்ற புறக் காரணிகள் தாக்கம் செலுத்தும் முன்னர்) வாலிப வயதை அடையும் போது ஆண்கள் - பெண்களின் எண்ணிக்கையில் சமநிலையை எய்துகின்றன. ஆனால் மேற்குறித்த நாடுகளில் ஆண் - பெண் குழந்தைகளின் பிறப்பில் இருக்கும் ஏற்றத் தாழ்வு இந்தக் காரணங்களைத் தாண்டியதாகவே இருக்கின்றது. குறிப்பாக சீனாவில் 2000 - 05 ல் ஒவ்வொரு 100 பெண் குழந்தைகளிற்கும் 124 ஆண் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. இதே எண்ணிக்கை ஆர்மேனியாவிலும் அசர்பைஜானிலும் 117 ஆகவும், ஜோர்ஜியாவில் 112 ஆகவும், தென் கொரியாவில் 110 ஆகவும், இந்தியாவில் 108 ஆகவும் உள்ளது.

பெண் சிசுக் கொலை என்றவுடன் நாம் அதிகம் அறிந்திருப்பது இந்தியாவையே. அப்படி இருக்கின்ற போது இந்த எண்ணிக்கை குறைவாக தோன்றலாம், ஆனால் இந்தியாவில் பிறந்த பின் கொல்லப்படும் / கைவிடப்படும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை மிக அதிகமாகவே இருக்கின்றது. அதாவது 1981 -91 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளின்படி இந்தியாவில் பிறக்கின்ற ஒவ்வொரு 1000 பெண் குழந்தைகளிலும் 109 -119 வரையான் அதாவது 10மூ இலும் அதிகமான பெண் குழந்தைகள் 4 வயதிற்குள்ளாகவே இறந்தோ அல்லது காணாமலோ போய்விடுகின்றனர். தவிர இந்தியாவில் மாவட்டங்களிற்கிடையே இந்த எண்ணிக்கையில் காணப்படும் வேறுபாடு அதிகரித்தே வருகின்றது. உதாரணமாக ஆண் - பெண் குழந்தைப் பிறப்பு விகிதாசாரம் 125 : 100 என்ற அளவில் 1991ல் ஒரே ஒரு மாவட்டத்திலேயே இருந்தது 2001ல் அதாவது பத்தே வருடங்களில்- 46 மாவட்டங்களாக உயர்ந்துள்ளது. இங்கே சொன்ன இதே பத்தாண்டுகளில்தான் அல்ட்ரா டவுண்ட் ஸ்கானிங் வசதிகள் அதிகரித்து எல்லா இடங்களிலும் எளிதாக அணுகும் அளவுக்கு அதிகரித்தன என்பது ஒரு எளிய அவதானமாகும். இந்தியாவிலோ அல்லது சீனாவிலோ கருவில்



ஓவியம்: ஆரதி - www.oodaru.com

இருக்கின்ற பிள்ளையின் பாலினத்தை அறிந்து கொள்வதற்கான சோதனைகளிற்கான கட்டணம் வெறும் 500 இந்திய ரூபாய்களாக இருக்கின்றபோது அதன் தொடர்ச்சியாக தமக்கு பெண் குழந்தைகள் விருப்பத்துக்குரியன அல்ல என்கிறபோது இலகுவாக கருக்கலைப்பை செய்துவிடுகின்றனர். மருத்துவம் என்பது முழுக்க முழுக்க வியாபாரமாகி வருகின்ற சூழலில் ( அண்மையில் விஜய் தொலைக்காட்சி talk show - ஒரு மருத்துவர், மருத்துவத்துறை நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அது வியாபாரமே அதில் தவறேதும் இல்லை என்று வாதிட்டது இங்கே ஞாபகபடுத்தப்பட வேண்டியது) 1994, 95ல் முறையே இந்தியாவிலும் சீனாவிலும் பாலினத்தின் காரணமாக நடக்கின்ற கருக்கலைப்புகள் சட்ட விரோதமானவை என்று சட்டமியற்றப்பட்டாலும் இன்றுவரை இவ்வாறான கருக்கலைப்புகள் நடந்து கொண்டே இருக்கின்றன. தவிர குழந்தை பிறந்தபின்னரும் கூட அவை பெண் குழந்தைகளாக இருக்கின்ற போது கொன்றுவிடுவது கூட சில மருத்துவமனைகளிலும், நிறையக் கிராமங்களில் ஊர் மருத்துவச்சிகளாலும் நடந்துகொண்டே இருக்கின்றது. 2007ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் இருக்கின்ற ரட்லாம் என்ற ஊரில் இருந்த "மிஷன்" மருத்துவமனை ஒன்றின் பின்புறம் புதைக்கப்பட்டிருந்த 390 பெண்குழந்தைகளின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதே ஆண்டு யுனிசெ்.ப் நிறுவனம் இந்தியாவில் இருந்து 50 மில்லியம் பெண் குழந்தைகள் காணாமல் போயிருப்பதாக அறிவித்திருந்தது.

பொதுவாக இது போன்ற காரணங்கள் பற்றிக் குறிப்பிடும்போது இதெல்லாம் மக்களின் கல்வியறிவுக் குறைவு அல்லது வறுமை போன்ற காரணிகளால் நடைபெறுவன என்றே பொது மனநிலை இருக்கின்றது. ஆனால் மொனிக்கா தாஸ் குப்தா (Monica Das Gupta) உலக வங்கிக்காக செய்த ஆய்வுகளின் அடிப்படையில் எழுதிய "why is son preference so persistent in east and south asia?' என்கிற ஆய்வறிக்கை பொதுப்புத்தியில் இருக்கின்ற இது போன்ற நம்பிக்கைகளை விட முக்கிய காரணிகளாக பொருளாதாரக் காரணிகளும். சமூக - கலாசார காரணிகளும் இருப்பவற்றைக் காட்டுவதுடன், பெண்குழந்தையென அறிந்தவுடன் கருக்கலைப்பு செய்வோரில் கல்வியறிவும், பொருளாதார வசதிகளும் படைத்தவர்களே கணிசமாக இருக்கின்றனர் என்பதையும் காட்டுகின்றது. சீனா, இந்தியா, தென்கொரியா ஆகிய மூன்று நாடுகளை அடிப்படையாக வைத்து அந்நாடுகளில் அதிகரித்து செல்லும் ஆண் குழந்தைகளின் பிறப்பில் தாக்கம் செலுத்தக் கூடிய கலாசார பொருளாதாரக் காரணிகளை விரிவாகவும் தெளிவாகவும் கவனத்தில் எடுத்து நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வறிக்கையில் குறிப்பிடப்படும் விடயங்கள் முக்கியமானவையாகவும், ஏற்றுக்கொள்ளக் கூடியனவாகவும் இருக்கின்றன.

1.இந்தச் சமூகங்களில் பெண்கள் பொதுவாக ஒடுக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர், இதனால் பெண் பிள்ளைகளை பெறுவதை விட ஆண் பிள்ளைகளை பெறுவது மரியாதைக்குரியதாக பார்க்கப்படுகின்றது.

2.இந்தச் சமூகங்களில் பொதுவாக மகன் வழியாகவே குடும்பப் பொறுப்புகள் கொண்டு செல்லப்படுகின்றன. மகளானவள் திருமணமாகி வேறு குடும்பத்துள் நுழைபவள் என்றும், மகனே பெற்றோரை அவர்களின் வயோதிபத்தில் பராமரிக்கும் பொறுப்புடையவன் / பராமரிக்கக்கூடியவன் என்றும் பொதுப்புத்தியில் உறைந்து போய் இருக்கின்ற நம்பிக்கை.

3.இந்தியாவைப் பொருத்தவரை பெண்களை விட ஆண்களுக்கு கொடுக்கப்படும் ஊதியம் அதிகம் என்பதாலும், பெண்கள் திருமணத்தின் போது சீதனம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்க, ஆண்கள் சீதனம் வாங்குபவர்களாக இருக்கின்றமை. அல்ட்ரா சவுண்ட் அறிமுகப்படுத்தப்பட்ட காலங்களில் இந்தியாவில் மருத்துவர்கள் கருக்கலைப்பிற்கு "இன்று 600 ரூபாய் இழப்பதன் மூலம் எதிர்காலத்தில் 50,000 ரூபாய் இழக்கப் போவதை தவிருங்கள்" என்று விளம்பரம் செய்திருந்தனராம். இதில் குறிப்பிடப்படும் 5000 ரூபாய் கருக்கலைப்பிற்கான கட்டணம், 50,000 ரூபாய் கொடுக்கப்படப் போகும் சீதனம். இதில் என்ன முரண் நகை என்றால் இந்தியாவைப் போலவே ஆண்குழந்தைகள் பிறக்கும் விகிதாசாரம் அதிரித்துச் செல்லும் சீனாவிலும், தென் கொரியாவிலும் திருமணங்களின் போது மணமகனின் பெற்றோர் ஏற்கவேண்டிய செலவுகள் மணமகளின் பெற்றோர் பொறுப்பெடுக்க வேண்டிய செலவுகளை விட சராசரியாக 3-4 மடங்கு அதிகமாக இருக்கின்றது. தவிர மணமக்களுக்காக மணமகனின் பெற்றோர் வீடு வாங்கி கொடுக்கின்ற வழமையும் இருக்கின்றது.

4. 60களின் பிற்பகுதியில், குறிப்பாக 70களில் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய பிரச்சாரங்கள் முன்னெடுக்க்ப்படுகின்றன. இதனால் ஒரு குடும்பத்தில் பிறக்கும் முதலாவது பிள்ளைகளின் பாலினங்களில் இருக்கின்ற விகிதாசாரங்கள் ஓரளவு சமனாக இருப்பினும் (சராசரியாக 106:100) இரண்டாவது மூன்றாவது பிள்ளைகள் என்று போகின்ற போது இந்த விகிதாசாரம் பன்மடங்கு அதிகரித்துச் செல்கின்றது. உதாரணமாக இந்த விகிதாச்சாரம் தென் கொரியாவில் 195:100ஆகவும் சீனாவில் 155:100ஆகவும் தைவானில் 135:100 ஆகவும் இருக்கின்றது.

**பின் குறிப்புகள்:**

*1. Genderside என்ற பிரயோகம் முதலில் Mary Anne Warren ஆல் பயன்படுத்தப்பட்டது. கருக்கலைப்பு பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட இவர், குழந்தையின் பாலினத்தின் காரணமாக செய்யப்படும் கருக்கலைப்புகள் பற்றி Genderside: The Implications of Sex Selection என்று 1985ல் எழுதிய புத்தகத்தில் இந்தப் பிரயோகம் பயன்படுத்தப்பட்டது.*

*2. இந்தக் கட்டுரையில் இருக்கின்ற தகவல்களையும் தரவுகளையும் கீழ்க்காணும் இடங்களில் இருந்து பெற்றுக் கொண்டேன்.*

*I. Genderside: What Happenedn to 100 million baby girls - The Economist*

*II. Why is son preference so persistent in East and South Asia? - The World Bank*

*III.http://www.timesonline.co.uk/tol/news/world/asia/article1403517.ece*

*3. சீனாவின் ஒரு பிள்ளைத் திட்டம் என்ற கட்டுரையில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளேன். சீனாவின் எல்லா மாகாணங்களில் இந்தக் கட்டுப்பாடு இல்லை என்றபோதும், பெருமளவிலான மாகாணங்களில் இக்கட்டுப்பாடு இருப்பதாலேயே இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது.ள*

சிறுகதை

# கவிஞனின் மனைவி

பொ.கருணாகரமூர்த்தி

…துளிர்த்து நிறைந்த கண்களை நாசூக்காகத் துடைத்தாள். அவன் எங்கே போயிருக்கிறான் என்று நான் கேளாமலே விட்டிருக்கலாம். உண்மையில் அது அவளுக்கு தெரிந்திருக் காதுதான்…

…தோசையின்வாசம் என் பிடிவாதத்துக்கு மசகு ஊத்த, மீன் குழம்பு வாரிக்குப்புறக் கவிழ்த்தது. சாப்பிடும்போது மேசைக்கு வந்த அவர்கள் மகள் தோசை சாப்பிடவே மாட்டனென்று அடம்பிடித்தான்…

சிறிதும் நினையாப்பிரகாரம் பிரபல கவிஞான என் நண்பன் இருக்கும் அந்த நகரத்துக்கு போகநேரிட்டது.

அன்று மாலையில் போன எனது காரியம் ஆனதும் அவனுக்கு ஒரு அதிர்ச்சி கொடுத்துப் பார்க்கலாமெனச் சொல்லாமல் கொள்ளாமல் போய் அவன் வீட்டுக் கதவைத்தட்டினேன்.

அவன் மனைவி சாதனாதான் கதவைத்திறந்தாள்.

'வாங்க…வாங்க… என்ன இது மின்னாம முழங்காம'

சும்மாதான். ஒரு தொழில்ரீதியான கருமம். நேற்றே இங்கே வரவேண்டியிருந்தது. இத்தனை தொலைவு வந்து நண்பனைப் பார்க்காமப்போனா எப்பிடி?

'உங்க நண்பர்தான் இரண்டுநாளா வீட்லயே இல் லையே.'

அவனோ இன்னும் பெரிய அதிர்ச்சியை எனக்கு வைத்திருந்தான்.

'ஓ…தோழர் வெளியூர் கிளம்பிட்டாரோ?…'

வெளியூரோ உள்ளூரோ அது அவளுக்குத் தெரியவில்லை. நான் எடுத்துவந்த பழங்களையும், சொக்கலேட்டுக் களையும், பூக்களையும் அவளிடம் தந்தேன். நல்ல Dallmayr காப்பி தந்து உபசரித்தாள். சாவகாசமாக அமர்ந்துகொண்டு பலதையும் பத்தையும் பேச ஆரம்பித்தோம்.

பொதுவாக ஸ்கண்டிநேவிய நாடுகளில் அதன் புறநகரங்களில் அடுக்கடுக்கான தொடர்மனைகள் அதிகம் இருக்காது. சமபூமியில் தனியன் தனியனான வளமனைகள்தான் (Bangalows - தமிழ்ப் பதத்துக்கு நன்றி: இரா. வெ.சலபதி) அதிகம். மிதமான சீதோஷ்ணமுள்ள இலையுதிர்காலத்தின் அம்மனோகரமான மாலைப்பொழுதில் அவர்கள் வீட்டு வதியுமறையில் இருந்து வெளியே பார்க்கவும் குறுக்கு வேலிகளால் ஒன்றும் பிரிக்கப் படாத அகன்ற புற்தரையில் அமைந்த பல அழகான வளமனைகள் தெரிந்தன. எல்லா வீடுகளைச்சூழவும் சின்னச்சின்னதாகப் பூந்தோட்டங்கள். மகிழுந்து நிறுத்துவதற்கான சாய்ப்புகள், சிலமனைகளோடு சேர்ந்தாற்போல் பூப்பந்தாட்டத் திடல்கள். அந்தி சாயவும் புற்தரைகளும் வளமனைகளும் தாமாக ஒளிபெற்றன.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கையில் வெளியில் விளையாடவோ நண்பர்கள் வீட்டுக்கோ போய்விட்டு உள்ளே மிதியுந்துடன் வந்த அவர்கள் அலர் அகவை மகள் எனக்கு சம்பிரதாய பூர்வ 'ஹலோ' ஒன்றைச்சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் புகுந்தாள். இக்காலத்துப் பிள்ளைகளை மணிக் கணக்கில் கட்டிப்போட இருக்கவே இருக்கின்றன கணினியும் இணைவலைகளும், அதன் பிறகு அவள் வெளியில் வரவே இல்லை.

என்னவெல்லாமோ பேசினோம். ஒன்பது மணியாகிவிட்டிருந்தது. இடையில் போன் ஒன்றும் வந்தது. என்னை மன்னிக்கச்சொல் லிவிட்டுப் போய் பேசிவிட்டு வந்தாள் சாதனா.

'கவிஞனா?'

'அவர் போன் எல்லாம் எடுக்கமாட்டார்.'

மேலும் விட்ட இடத்தில் பேச்சைத்தொடர்ந்தோம்.

சாதனாவை மணக்குமுதல் கவிஞன் தான் தன்னார்வத் தொண்டனாகப் பணிபுரிந்த இடத்தில் ஒரு தென்னாபிரிக்கப் பெண்ணையும், அடுத்து மண முறிவு செய்திருந்த ஒரு தமிழ்ப் பெண்ணையும் உயிர் நீ-மயிர் நான் என்று காதலித்திருந்தான். அதெல்லாம் சாதனாவுக்கும் தெரியுமோ தெரியாதோயாம் அறியோம்.

அனால் இவர்களதும் காதல் திருமணந்தான் என்று கேள்விப்பட்டிருந்தேன். அவளும் அப்படித்தான் சொன்னாள். எளிமையான அவர்கள் திருமணம் தமிழகத்தில் நடைபெற்றதால் எனக்குக் கலந்துகொள்ளும் வாய்ப்புக்கிடைக்கவில்லை.

'உங்களுக்கு கவிஞனிடம் பிடித்த விஷயங்கள் என்ன. எதைக்கண்டு அவனுக்கு மனதில் இடம் கொடுத்தீர்கள்?' என்று கேட்டேன்.

'அவரது பெண்ணியச் சிந்தனைகள், மானிடவிடுதலை மற்றும் மண் சார்ந்த கவிதைகள் அதன்மேலான ஈடுபாடு போன்றன மனதை ஆகர்ஷித்தன. இன்னும் மேடைப்பேச்சுகளின்போது உணர்சிப்பிழம்பாக்கி குரல் தளர்ந்து போயிடுவாரல்லவா? அப்போதெல்லாம் இப்படியொரு மனிதருடன் வாழ நேர்ந்தால் வாழ்வில் எத்தனை ஐக்கியமும் விட்டுக்கொடுப்பும் பிரேமையும் பிரவகிக்குமென கனவுகள் காணத்தொடங்கிவிட்டேன். என் தவறுகளின் தொடக்கமும் அதுதான். ஆனால் நிஜ வாழ்க்கை யில் அவையெல்லாம் அசாதாரண வி'யங்கள் என்பது இத்தனை லேட்டாகத்தான் புரிகிறது. கலைஞர்கள் கவிஞர்கள் எல்லாம் கனவுலகசஞ்சாரிகள், இயல்பான வாழ்வுக்கு ஒத்துவராதவர்கள் என்று அண்ணை அடித்துச் சொன்னான்' என்றுவிட்டுத் தன் பார்வையை விலக்கி ஜன்னலுக்கு வெளியே தெரிந்த தொடுவானத்தை நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'என்ன போனால் போன இடமென்று இருப்பார். வீட்டு நினைப்பு வராது, தண்ணிகண்ட இடத்தில் கச்சேரிதான், ஒரு போன் எடுக்கவேணுமென்று தோன்றாது, அல்லது எப்போ வருவேனென்றோ சொல்லமாட்டார். சரி வந்துதான் என்னத்தைக் கிழிக் கப்போகிறாரென்று விட்டுவிடுவேன். கொஞ்சக்காலம் செல்போன் ஒன்று யாரோ அன்பளிப்பாகக் கொடுத்தது என்று கொண்டு திரிந்தார். அதில் எங்கே தொங்கிட்டிருக்கிறாரென்று விசாரிப் போம். பிறகு நாளடைவில் அதற்குரிய பில்களும் ஏறி என்னு டைய எக்கவுண்டிலிருந்தே கழிந்ததால தாங்கமுடியாம அதைத் தூக்கிக்குப்பையுள் போட்டுவிட்டேன். சத்தம்போடுவா-ரென நினைத்தேன், ஒன்றும் பறையாமலிருந்தார். சிலவேலைக-ளில் மனுஷனுக்கு மனசாட்சிவேலை செய்வதுமுண்டு. உடல் உழைப்பை துச்சமாக நினைப்பது, பங்ஸ்...ஜங்கீஸ் பரதேசிகள்போல விட்டேத்தியாக வாழ நினைப்பது, அட ஒரு நாடோடிக்குக்கூட ஒரு குருவியோ காடையையோ கொண்ணாந்து வீட்டில ஆக்க கொடுக்கணுமென்று ஒரு பொறுப்பு இருக்குமில்ல அப்படி எதுவுமில்லாத பிறவி இது. தொடர்ந்து வீட்ல நாட்டில இருக்காததால அவருக்கான (அரசு தரும் உதவி) வெல் ஃபெயருமில்லை. ஐ ஹாவ் டு வின் அவர் பிறெட், ஹி இஸ் நொட் அஷேம்ட் அபவுட் திஸ் அட் ஓல்!'

இதைச்சொல்கையில் துளிர்த்து நிறைந்த கண்களை டிஸ்ஸூவினால் நசுக்காகத் துடைத்தாள். அவன் எங்கே போயிருக்கிறான் என்று நான் கேளாமலே விட்டிருக்கலாம். உண்மையில் அது அவளுக்கு தெரிந்திருக்காதுதான்.

'அவருக்கு அட்வைஸ்னு யாரும் சொல்லப்புறப்பட்டால் அவர்களைக் கண்டபடிக்கு கன்னாபின்னாவென்று கெட்டவார்த்தைகளில் எல்லாம் அர்ச்சித்துவிடுவார். பின்னர் அடுத்த நாள் போன்பண்ணி 'அட ஒரு அக்கறையிலதானே நீயும் அப்படிச் சொன்னே மச்சான், நானும் உன்னில உரிமை எடுத்துக்கொண்டுதானே அப்பிடிப்பேசிட்டேன். ஒண்ணும் மனதுல வைச்சுக் கொள்ளாத கண்ணா நல்லபிள்ளை'' என்று கெஞ்சுவார்.

'சரித்திரத்தில் பெரிய கலைஞர்கள், இலக்கியர்கள், தத்துவவாதிகள் பலரும் இப்படி விட்டேத்தியாகத்தான் வாழ்ந்திருக்கிறார்கள். நான் அதை இப்போது சொன்னால் அவனுக்காக வாதாடுவதாக ஆகிவிடும். அவனைச் சபிக்கவும் வேண்டாம், ஒத்தூதவும் வேண்டாம். குடும்பவிவகாரங்களுள் நுழைவதைத்தவிர்த்துப் பேச்சின் திசையை மாற்றுவதாய் நினைத்து உங்களுக்கு மிகவும் பிடித்த அவனதுகவிதை ஒன்றைச்சொல்லுங்களேன்' என்று கேட்டேன்.

'அதொண்ணும் எனக்கு தெரியாது.'

'சரி கன்னத்தில விளாசினமாதிரி... கண்ணுக்க மின்னல் பாய்ஞ்ச மாதிரிப்பண்ற அவனது பல நூறுவரிகள் இருக்கே, அதுல உங்கள் மனம்கவர்ந்த ஒரு வரியையாவது சொல்லுங்களேன்'


'நிஜமாகவே எனக்குத்தெரியாது, அதொன்றையும் நான் மனதில பிடிச்சு வைச்சுக் கொள்ளவுமில்லை.'

தொடர்ந்து மௌனம்...

அம்மௌனத்தின் நிழலும் சாம்பலும் அறைமுழுவதும் வியாபித்தது. அதை அறுக்க மீண்டும் முயற்சித்தேன்.

'பிறின்ஸ் ராம் வர்மா என்றொரு ஆர்டிஸ்ட் கேரளாவில் அட்டகாசம் பண்ணுறாரே அவதானித்தீர்களா'.

அப்துல்கலாம் காலத்தில் அவரது ராஷ்டிரபதிபவன் கச்சேரி ஒன்றை நெட்ல பார்த்தேன், அங்கே எந்தரோ மஹானுபாவுலுவை எம்.டி.ராமாநாதன் பாணியில் விளம்பத்தில் பண்ணியிருந்தார்,நல்ல சுகமான சாரீரம். இதமான கற்பனைகள். அபாரமாயிருந்தது.'


ஓவியம்: ஆரதி - www.oodaru.com

'அவர் திருவிதாங்கூர் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கலைஞன். இன்னும் சொல்லப்போனால் சுவாதித்திருநாள் மகராஜாவின் கொள்ளுப்பேரன். வாய்ப்பாட்டு மட்டுமல்ல வீணையிலும் மகாகெட்டிக்காரர். எம்.டி.ராமநாதனினதும் கிஷோர்குமாரினதும் பரம ரசிகன். அவர்களைப்போலவே லோ டெம்போவில் அசத்துவார். பாலமுரளிகிருஷ்ணாவிடமும் சிட்ஷை பெற்றுள்ளார். He is a Prince among Musicians and a Musician among Princes... you know? மனுஷன் பார்த்திராத விருந்துகளும் விருதுகளுமா...அதனால விளம்பரங்கள் ஆர்ப்பாட்டங்கள் எதுவும் இல்லாமல் அமைதியாகவே அசத்துகிறார் மனிதர், நல்ல திறமைசாலி, அபூர்வக்கலைஞர்' என்றார்.

மேற்கத்தைய இசைக்கருவிகளுடனான (unconventional) மரபைமீறிப் பாடும் சுசீலா ராமனின் முறைபற்றிக் கேட்டபோது அதை அவர் அவ்வளவு வரவேற்கவில்லை.

எண்பதுகளில ரமா ரமணி என்கிற ஒரு கலைஞரும் மைகேல் ஆஞ்செலோ என்கிற அமெரிக்க சக்ஸபோனிட் ஒருவருடன் சேர்ந்து இவர் போலவே சில பரிசோதனைகள் செய்து பார்த்தார். பெரிதாக அம்முயற்சி கவனிக்கப்படவில்லை.

சுசீலா ராமன் ஒரு ஆபிரிக்கப்பெண்போலவே ஸ்பிரிங் கேசத்துடன் பக்கவாட்டில் தோற்றமளிப்பதுவும், சாஹித்தியங்களை அவர் உச்சரிக்கும் விதம் தமிழோ தெலுங்கோ ஆங்கிலமோபோல் இல்லாமல் ஒரு கொஞ்சல் மொழியாக இருப்பதுவும், பாடும்போது நளினமாக ஆடுவதும் சுவைஞரை ஈர்க்கவல்ல அம்சங்கள். அவற்றோடு இளங்கலைஞரான அவருக்கு உலகநாடுகளிலுள்ள பிரசித்திவாய்ந்த அரங்குகளில் தன் அரங்காற்றுகைகளைச் செய்யும் வல்லமையும் செல்வாக்கும் இருப்பதால் எம்செவ்விசைமீதான உலகச் சுவைஞர்களின் கவனத்தை அவர் ஈர்த்திருப்பதையும் ஒத்துக்கொண்டார்.

'உங்கள் நியூஜெர்ஸி கச்சேரிகூட சில ஒளிப்பதிவுகள் யூ டியூப்பில் பார்த்தேன். நீங்கள் செய்த அந்தப்புதுமை அருமை. ராகத்தின் சட்டகத்தை அழகாக ஆலாபனை செய்துவிட்டு தானத்திலும் பல்லவி இடையே ஸ்வரங்களையும் பிறகுவந்த சங்கதிகளையும் விளம்பமாக ஹிந்துஸ்தானி பாணியில் அழகான கமகங்களோடு பண்ணியிருந்தீர்களே அற்புதம். எப்படி இந்த யோசனை உங்களுக்கு வந்தது?'

'எல்லாம் ஜுகல்பந்திகளை அதிகம் கேட்டதால வந்த ஒரு யோசனைதான் இரண்டு பாணிகளையும் ஒரே தொகையில் கொண்டுவந்தால் என்ன என்கிற ஒரு முயற்சி. இது ஒன்றும் என்கண்டுபிடிப்பல்ல.'

மிகவும் அடக்கித் தனது முயற்சியைச் சொன்னார். அது ரொம்ப அழகு சரி. உங்களை நான் சிரமப்படுத்தலைன்னா இப்போதும் சின்னதா ஒரு கீர்தனை பாடமுடிந்தால் சந்தோஷம். பிகு ஒன்றும் பண்ணாமல் உடனே ஆரம்பித்து விட்டார்.

மோக்ஷமு கலதா புவிலோ ஜீவன்
முக்துலு கா னி வா ரலகு... (மோ)

ஸாக்ஷாத்கார நீ ஸத் பக்தி
ஸங்கீ த ஞ்ஞான விஹினுலகு... (மோ)

ப்ராண நல ஸாம் யோகமு வல்ல
ப்ரணவ நாதமு ஸப்த ஸ்வரமுலை பரக
வீணா வாதன லோலுடௌ சிவ மனோ
வித மெறுகாரு த்யாக ராஜ நினுத...(மோ)

இங்கே நம்ப தியாகப்பிரம்மத்துக்கு ரொம்பவுந்தான் பேராசை. 'லோகப்பற்றுக்களைத் துறக்காதவனுக்கு எப்பிடி மோக்ஷம் கிடைக்கும்?' சரிதான்.
'சங்கீதஞானம் இல்லாதவனுக்கு மோக்ஷம் கிடைக்குமா?' அதுவும் பரவாயில்லை. அந்தச்சின்ன க்ருதிக்குள் அடுத்து எப்பிடிக் குத்துகிறார் பாருங்கள்.
'வீணையின் தந்திகள் அதிர்ந்து எழுப்பும் நாதத்தில் பிரமத்தின் சாயலை உணரமுடியாதவனுக்கு மோக்ஷம் எங்கிருந்துமா வரும்?'

'அன்றைக்கும் ஸாரமதி, இன்றைக்கும் ஸாரமதி...ஏன் உங்களுக்கு ஸாரமதி என்றால் அத்தனை இஸ்டமோ' என்றேன்.
'வாவ்... உங்களுக்கு ராகங்களை எல்லாம் நுட்பமாகக் கண்பிடிக்க முடிகிறதே!'
அவள் கண்கள் அகன்று சுழன்றன.

'சும்மா கொஞ்சம் கேள்விஞானந்தான்... அதிகப்படியா ஒண்ணுமில்ல'
'உங்க கவிஞனுக்கு கர்நாடகத்துக்கும் இந்துஸ்தானிக்குமே பேதம் புரியாது. எல்லாம் தரநா... தரநா...நாய் நாய்...நாய்தானென்பார்.'
'என்ன உங்க கவிஞன் என்று சுருக்கிட்டீங்க.... இப்பிரபஞ்சக்கவியல்லவா....அவன்?
'ம்ம்ம்...கிழிச்சார் பிரபஞ்சத்துக்கும் கவி, வீட்டுக்கும் கவிதான்!.
அந்த இரண்டாவது கவி இங்கே இரண்டாவது (-குரங்கு-) அர்த்தத்தில்தான்.
அவளது தீராத அவநம்பிக்கைக்கு அவளுக்கும் போதிய காரணங்கள் இருக்கும்போல் தோன்றியது எனக்கும்.

'நீங்கள் எப்போ ஊருக்கு கிளம்பணும்?'
'எனக்கு காலையிலதான் தொடர்வண்டி.'
'எப்போதும் கன்னித்தமிழ்தானா? சரி நண்பன் இல்லையே என்றுவிட்டுக் குழம்பவேண்டாம். நீங்கள் தாராளமா இங்கே தங்கியிட்டு காலையில் உங்க தொடர்வண்டியைப் பிடிக்கலாம். எனக்கும் உங்க தனித்தமிழ் தொத்திடிச்சு.' சிரித்தாள்.
தோழர் இருந்தால் பரவாயில்லை. நான் தயங்கினேன்.
'எதுக்கும் நான் என் விடுதியிலேயே தங்கிவிடுறேனே, எனக்கு ஒன்றும் சிரமமில்லை.'

'இப்போ விடுதியில் கணக்கெல்லாம் செற்றில் பண்ணிட்டு மன்னிக்கவும் நேர்பண்ணிட்டுத்தானே வந்திருப்பீங்க. குறுக்க பேசாமல் இப்போ என் பேச்சைக்கேளுங்க'. கவிஞர் தன் அறையில ஒரு மேலதிக கட்டில் போட்டு வைச்சிருக்கார்..' 'அதில ஜம்னு தூங்குங்க. நான் காலையில எழுப்பிவிடிறேன், தொடருந்தைப்பிடிக்கலாம். உங்களை ராத்திரியில வெளியே அனுப்பிவச்சேனென்று அறிஞ்சால் அவரே என்னைக் கோபிப்பார். இதோ தோசை சுடுகிறேன், உங்கள் இ'டமான-மாங்காய்போட்ட மீன்குழம்பும் இருக்கு.'

தோசையின்வாசம் என் பிடிவாதத்துக்கு மசகு ஊத்த, மீன் குழம்பு வாரிக்குப்புறக் கவிழ்த்தது. சாப்பிடும்போது மேசைக்கு வந்த அவர்கள் மகள் தான் தோசை சாப்பிடவே மாட்டனென்று அடம்பிடித்தாள். இங்கு பிறந்த பிள்ளைகளுக்கு ஏனோ புளிப்பான சமாச்சரங்கள் அத்தனை பிடிப்பதில்லை. சாதனா அவ ளுக்கு உடனடி நூடில்ஸ் பண்ணிக்கொடுத்தார். தோசை தூக்கத்துக்கு பிராண நண்பன், இருந்தும் எனக்கு இடவித்தியாசத்தால் உடனே தூக்கம்வர மறுத்தது. புரண்டு புரண்டு படுத்துப்பார்த்தேன் முடியவில்லை. எழுந்து கொஞ்சநேரம் அவனது நூல்சேகரங்களை ஆராய்ந்தேன். நடுச்சாமமும் கடந்தது. கவிஞனது மாடி அறையிலிருந்து கீழே வதியுமறையுமாகிய அவர்கள் கூடத்தைப்பார்க்கலாம். நான் கீழே குளிப்பறை போவதற்காக எழுந்து போனபோது சாதனா கீழே செற்றியில் தலைக்குக் கையை வைத்துக்கொண்டு படுத்திருப்பது தெரிந்தது. எப்படிப்பேசியும் தீராது சுமைக்கும் ஏராளம் விஷயங்கள் அவள் மனதின் ஆழங்களில் மண்டிக்கிடக்கின்றன.

மறுநாள் காலை தொடருந்தில் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் தீராத அவநம்பிக்கைக்கு அவளும், மாறாத குடிக்கு அவனும் ஏன் ஆளாகி இருக்கிறார்களௌன்பது எனக்கும் லேசாகத் தெளிவதைப் போலிருந்தது. எவர்மீதாயினும் குற்றங்கள் சுமத்துவது, வழக்குத்தொடுப்பது, தீர்ப்புக்கள் வழங்குவது எதுவுமே இலேசான விஷயங்கள் அல்ல.

## மரித்த தேவனும் மக்தலேனாவும்

கல்லறைக்கு வெளியில்
காத்திருக்கிறேன் சுவாமி
ஒரு கல் திறந்து எனை
உள் அழைத்துக் கொள்ளும்

பாவம் துணியா தூயாத்மாக்கள்
கோடரி சவுக்கு கொடுவாள் சகிதம்
துரத்திவருகின்றார்
கண்ணடி சொல்லடி தாங்கிய
என்னால்
கல்லடி தாங்கவியலா(து)தேவா
துயின்றது போதும்
திறவும் கதவை

பனிவயல்களின் விளைச்சலைத்
துறந்து
பாடையும் சிலுவையும்
சுமக்கப்போனவர்
மேப்பிள் நிழல்சுகம் நீங்கியே
ஊரின்
மேனிகருக்கிடும் வெயிலை
விழைந்தவர்
உம்மை
விசுவசித்ததால் வெட்டவருகிறார்
திறந்திடும் கதவை
தெண்டனிடுகிறேன்

இணைய வெளிகளில்
புரட்சி விதைத்தவர்
காகிதக் கப்பலில்
மானுடம் மீட்டவர்
விரட்டி வருகையில்
விளையாடாதீர் சுவாமி
உம்மை விசுவசித்தவள்
வீழ்ந்திடப் பார்த்தலும்
பாசிசம் ஆகும்
பதற வைக்காமல்
திறவுமேன் கதவை.

முப்பதாண்டு நீர்
பட்டது போதும்
முப்பதாயிரவர் உயிர்
விட்டதும் போதும்
உயிர்த்தெழ வேண்டாம்-மேலும்
துயர்ப்பட வேண்டாம்
'நீரோ ஆண்டவர்'எனப்
பழித்தவர் யாவரும்
தொடைநடுங்கியோ
தூயதமிழராம்'
படைதிரட்டிப் போய்
பகைமுடிப்பராம்...
கன கதை ஏன்தான்
முதுகில் கல்லெறி விழுகுது
இனியும் வெளியில்
இருந்தால் இறப்பேன்
கதவைத் திறவும்
மிச்சக் கதைகளைச் சொல்வேன்.

# தமிழ்நதி கவிதைகள்



### ...சந்தியாவுக்கு...

புத்தகங்களைப் படிக்காதே சந்தியா
அவற்றுள் பூதங்கள் வாழ்கின்றன
நீ அசாதாரணி எனும்
அசட்டுக் கற்பிதங்களைத் தகர்த்து
விழி
தேவதைச் சிறகுகளை
கக்கத்துள் சுருட்டிக் கொஞ்சம்
குனிந்துபார்
அட! உனக்கும்
கால்கள்
இரண்டே இரண்டு.

உனது வீடு நோக்கி விரைந்தேகிய
காலடிகள்
தொலைவில் திசைமாறுமொலி.
சில நாட்கள்
ஒற்றை வயலின் ய்ங்... ய்ங்... ய்ங்க்
என
சுவருள்ளிருந்து சேடமிழுக்கும்
பிறகு
மயானக்கரையின் மகாமௌனம்

காதலர்கள்
பவித்திரமானதும் பத்திரமான-
துமான
கூடுகளுக்குத் திரும்பிவிட்டார்கள்
அனைவருக்கும் உண்டு
ஆயுள் காப்பீடு
அந்திமத்தில் கடிந்தபடியோ
கனிந்தபடியோ
கவனிக்கப்போகும் பிள்ளைகளின்
பக்கலிலோ
பகலின் வாசனை மீந்த உதடுகளால்
இயந்திரகதியில் கவ்வி கலவி
தூங்கிப்போன
மனைவியின் கூந்தல் இழையருகோ
பொன்னிறக் கனவுகள்
வாய்க்கட்டும்.

அணைக்கப்பட்ட தொலைபேசிக-
ளில் முட்டி மோதி
காயங்களோடு தேம்பித்
திரும்புகிறது
உனது குரல்

தூங்கும் குழந்தையைத்
தோள்சுமந்து நடக்கும் கணவனைப்
பின்தொடரும் பெண்ணில்
நிலைத்த உன் விழிகளை
திருப்பியழை

தீயுமிழும் மாலைகளிலிருந்து
தப்பிக்க
தினந்தினம்
மதுக்குவளைக்குள் குதித்துக்
குளிர்வது சலிக்கிறது பெண்ணே...

ஒரு மாறுதலுக்கு
முயற்சிக்கலாம் வா
சின்னப்புட்டிக்குள்
அடங்கியிருக்கும்
மரணத்தையும்.

கட்டுரை

# Tamil Identity and Multiculturalism in Canada

**Kirubhalini Giruparajah**

Multiculturalism in Canada is presented by the Canadian government as a policy that "recognizes and tolerates minorities, subalterns and various cultural and ethnic groups."[i] In reality, however, the Tamil-Canadian protests of January - May 2009 illustrates how this policy fails to fulfill its mandate. The Tamil-Canadian diaspora experienced discrimination when it attempted to bring public awareness to the Sri Lankan military's indiscriminate shelling of Tamils in the North of Sri Lanka. Major Canadian news agencies and media misrepresented Tamil identity (linked to its culture and historical narrative) as one that was inherently violent and susceptible to terrorist influence via the LTTE. Subsequently, the Canadian nation state placed the individual rights of the modern, rational secular citizen over the collective rights of certain cultural communities (in this case Tamils) which multiculturalism purports to protect. In this way, the Canadian state is able to dictate the characteristics of popular culture in the Canadian public sphere, while simultaneously forcing Tamil identity and culture into the private sphere and vilifying its public expressions. The Canadian state, however, does not realize that in a globalized world, diasporas provide viable economic links across the globe. To take advantage of such economic opportunities, if for nothing else, the Canadian government must re-conceptualize its Multicultural policy to incorporate the views and needs of cultural communities into the Canadian political system.

Multiculturalism as a policy in Canada fails to accommodate the politicization of cultural and ethnic groups in the nation. For example, when scores of Tamil-Canadians took to the streets of downtown Toronto to protest and bring awareness to the death of thousands of Tamils in the northern and eastern parts of Sri Lanka, the Canadian government and various state actors discriminated against and stereotyped most Tamils as violent, irrational rioters. Acting as a state apparatus, media outlets such as CityPulse and the CBC portrayed some Tamils as a violent cultural community. Consequently, the Canadian state denied certain collective rights to the Tamil – Canadian diaspora. According to Sunhil Sondhi in his essay "Different Strokes: Multiculturalism and Civil Society in Canada and India," Canada should be seen as a leader of democratic nations because the current Canadian focus is to "...regain the ethos of a community" while also having a "strong resistance to talk of morality and responsibility in public discourse."[ii]

Although, Sondhi makes viable arguments about the importance of allowing various cultural communities the right to a productive and safe life free from economic, political and cultural discrimination, Sondhi fails to explain why culture is posed as a problem to racialized communities and not to Caucasian residents in the nation.[iii] Why

**2010 ஆவது ஆண்டுக்கான இலக்கியத் தோட்டத்தின் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பெற்ற கட்டுரை**

does the Canadian State have to ensure that cultural groups do not face discrimination in a democratic society? What does this say about racism in that country and why is racism not the focus of government policies? If cultural groups are being protected by the Canadian government then, why is there still public outcry over issues such as the denial of indigenous sovereignty in Canada, illegal detention and deportation of ethnic and racial minorities because the state brands them as "illegal persons" and why are temporary workers still exploited in various workplaces in Canada? [iv] Sondhi fails to mention that these issues are still pertinent in Canada because certain institutions are designed to ensure the prosperity of upper classes and political elites at the expense of immigrants and racialized individuals.

The Canadian state uses the media to bolster its image as protector of the Canadian citizenry; the state brings into the public discourse morality and responsibility when it wishes to dismiss or deny rights to certain groups who it deems supports terrorists. The police misconstrue a collective body's right to protest against a specific grievance as a threat of violence to society at large. Similarly, in 2009, the Canadian government denounced the Tamils protests claiming that they threatened to bring social unrest by recalling the violence and civil war from their Sri Lanka to Canada. The Canadian state, like all other major nation-states systematically disenfranchised Tamils that "threatened" to dismantle existing power structures within the polity.

Likewise, the Canadian government manages difference and allocates rights based on a hierarchical structure of race and society as well as on the western notions of the rational secular individual. According to Kiran Mirchandani and Evangelina Tastsoglou in *Towards a diversity beyond tolerance*, the policy of Multiculturalism in Canada does not seem to respect or accept various cultures; instead it relays the message that the state and the status quo will never understand or try to understand different cultures and communities but it will nonetheless tolerate differences because that is what is characteristic of a "democratic, progressive society."[v] Both Mirchandani and Tastsoglou assert that tolerance connotes a system of hierarchy that "entrenches the opposition between national self and groups or individuals constructed as the other."[vi] For Mirchandani and Tastsoglou, since the power structure in Canada is white, the national and ideal self is a white settler society that is representative of the Canadian values and goals in opposition to the immigrant "other".[vii] Similarly, in the book, the *Colour of Democracy: Racism in Canadian Society*, Frances Henry and Carol Tator argue that the policy and practice of multiculturalism continues to position certain ethno-racial groups at the margins rather than within the mainstream of public culture and national identity.[viii] This means then there is a threshold to tolerance of ethnic and cultural groups as outlined by the policy of multiculturalism. The toleration, accommodation, even the appreciation and celebration of difference is only promised if it "allows for the preservation of cultural hegemony of the dominant cultural group."[ix] In the eyes of the Canadian government the Tamil-Canadian protests were threatening because they attempted to move the diaspora out of the margins demarcated by multiculturalism and into the centre, and found pushing back on it the limits of legislated "tolerance."

Hence, the Canadian nation state curtails collective rights to certain communities it deems as problematic, such as the pluralistic and dynamic Tamil community in Canada. Collective rights and the very identity of the specific cultural group is constructed as dangerous (with regards to terrorism and the LTTE for Tamil protestors) and posited as antithetical to the modern rational, secular citizen. In other words, Canada is committed to the western conception of the liberal social contract. Liberal social contract theory foregrounds the ideal citizen as the rational individual who is a member of the contractual civil society.[x] In contrast, transnational kinship and family relations as well as divergent national aspirations or sympathies characterized by divergent cultural markers are conceptualized as the antithesis to the ideal citizen. Communities with cultures that recognize and uphold the importance of family and kinship that is not in accordance with the Canadian national stance are designated as apolitical entities, existing outside civil society and thus denied the privilege of certain rights. Repeatedly, the Canadian state resorts to using institutions that are supposed to operate for the best interest of the public to consolidate the state's decisions and interests.

Similarly, the problematic media coverage of protests and state reaction illustrates how the Canadian state attempts to consolidate its authority. According to Jürgen Habermas in *The Structural Transformation of the Public Sphere: An Inquiry into a Category of Bourgeois Society*, the public sphere ought to be a place where citizens can critique the state,[xi] a place for the development of civil society and as well as a viable tool for the dissemination and normalization of democratic values.[xii] Instead, as the case study illustrates the public sphere becomes reconfigured as a space for the media to support the government and corporate business of the elite in Canada. Mirchandani and Tastsoglou's characterize the media's complicity in siding with the state and not broadcasting "all interests or concerns" as mainstream media's subordination to "...society's power structure," serving to "... [legitimize] a capitalist, patriarchal and militarist socio-political system."[xiii] Since the Canadian "power structure is predominately white, these media networks express mostly white hegemonic viewpoints", news that "sets the boundaries of public discourse within the range of interests which are acceptable to these hegemonic groups" is broadcast to mainstream Canadian society. [xiv]

Even though many Tamil-Canadians protested against the fascist Sri Lankan state and the death of innocent Tamils in Sri Lanka, the coverage of the protests by CityPulse24 and the Canadian Broadcasting Company in Toronto consisted of routine criticism of most Tamils carrying LTTE flags. There was an abundance of new reports on the history of the LTTE and their brutal acts and yet unequal broadcasting of the Sri Lankan government and their history of state terrorism. Concrete evidence includes a publication of an article on the Tamil Diaspora protests by the Toronto Star entitled: "Protesters vs. the Public".[xv] This title implies that Tamils are not a part of the Canadian public.[xvi] In fact, it seems to argue that the politicization of Tamil identity and culture is untenable with Canadian popular culture. Here again some forms of print media such as the Toronto Star is moving away from Tamil appeals to the international community to put an end to the death and destruction of Tamils in Sri Lanka. Instead the Toronto Star focused on how the protesters were inconveniencing the Canadian populace[xvii] and disrupting the routine, normal, democratic workings of the Canadian polity. The Tamils become the "Others" to the national/rational self, who are unable to understand that their attempt to preserve their culture and identity is disrupting the working of the nation, wasting the precious time and money of citizens who are "faithful" to the Canadian nation state.

In this way, we see how the Canadian state protects its authority in the management of difference, the allocation of rights and the conceptualization of popular culture in the nation state. Talal Asad in "Multiculturalism and British identity in the wake of the Rushdie Affair," discusses the policy of multiculturalism or the construction of diversity as an "effect of modern government."[xviii] States refuse to address the political needs of cultural communities because they are fundamentally contradictory to the popular culture of the status quo and thereby the state.[xix] The state alleviates the problem of culture by taking it upon itself to "define crucial homogeneities and differences in order to simultaneously alleviate the perceived threat to authority of centralized state and the ideological

unity of the nation-state."[xx] Tamils are posed as guilty and irresponsible for being terrorist supporters while the state is posed as the moral and responsible protector of patriotic Canadians. The state alleviates its fear of the "other" cultures by using multiculturalism as a manager of difference.

While Prime Minister Stephan Harper refused to even publicly address the protest, according to an online article released on the CBC website on May 13, 2009, the only politician that took the time out to personally address members of the Tamil diaspora at the protests was Toronto Mayor, David Miller. The article explains that David Miller's colleagues stayed away from the protests because of LTTE-supporting flags at the demonstrations. Indeed Miller seemed to corroborate this publication when he said, "Some people would be probably offended by the flag and afraid to show their support for these people, but I'm not here about politics."[xxi] The use of the phrase "these people" and "I'm not here about politics" has implications for the Tamil diaspora in Canada. Miller implied that not only were the protests about Tamil support for a terrorist organization but the protesters themselves were unrepresented in the democratic framework of Canada. Miller's comments alienate 200,000 members of the Tamil diaspora in Toronto; the largest Tamil diaspora in the world. These comments convey a message to Tamils that certain aspects Tamil culture will not work in the "progressive" nation of Canada.

Therefore, public demonstrations are rendered futile because nation-states ultimately do not care about the population within the nation.[xxii] The state only wishes to ensure its interests in the world political sphere.[xxiii] This includes protecting its economy, property and corporations from the threat of terrorism.[xxiv] Toronto civil rights lawyer, Clayton Ruby is quoted as saying "Anti-Terrorism Law of 2001 will wind up being used against peaceful protests and demonstration and to suppress opposition." [xxv] This is precisely what happened with the Tamil diaspora protests when the state positioned the protests as supportive of an identified terrorist group, and responded accordingly under fear of the threat of terrorism, rather than under the guise of inclusivity that is the Canadian multiculturalism policy. The Anti- Terrorism Law is another example of how the Canadian government uses policies and the language of the law to protect its authority over the various cultural, ethnic communities in Canada.

Accordingly, the Canadian government's ability to "centralize state power and aestheticise moral identities" deny Tamils social acceptance of their identity.[xxvi] According to Charles Taylor in the article "Politics of Recognition", just like individuals, peoples should be able to practice their culture, which is a significant part of their identity.[xxvii] Human beings and cultural groups define their identity dialogically.[xxviii] That is to say in dialogue with and sometimes in struggle against the things others see in us.[xxix] In the public sphere it is crucial to ensure the dignity of citizens.[xxx] Mutual cooperation and respect within any community based on differences is important for opportunities in creativity and progress.[xxxi] Therefore, the recognition of the Tamil social identity and culture by the Canadian society and the nation state enables Canada to live up to the universal principle of equality, and allows the Tamil identity and community to confidence to flourish.

Moving forward from the events of 2009 it is likely that Tamils will not easily concede to the Canadian states aggression and hide their cultural beliefs and allegiances. The national consciousnesses of these diaspora no longer need a single nation state to express or realize their sense of community. According to Arjun Appadurai, "electronic mass mediation and transnational mobilization have broken down the monopoly of autonomous nation-states over the project of modernity."[xxxii] Similarly, according to Cheran in "Theorizing Diasporas; Diasporcity: Citizens of Many World", as the spread of globalization makes the migration of cultural groups inevitable, the ability of diasporas to incorporate cities as cultural centers also becomes inevitable. The city becomes a central metaphor and location- the Diasporcity.[xxxiii] Therefore, national imaginings remain potent in the world because of the proliferation of mass media, transcending borders and other territorial or political barriers. As the world becomes more interconnected, the same media reports that demonize cultural groups will become available on the World Wide Web. The information highway will inform brother and sister diasporas in other parts of the world of the suffering of their fellow brethren. These "invisible colleges" or "communities of sentiment" among diasporas across the world can "move from a shared imagination to collective action" by manipulating modernity for their own benefits.[xxxiv] Diasporas abroad could even threaten to stop trade relations with Canadian businesses.

Thus, the Tamil diaspora's viable links to markets across the world requires that the Canadian nation state take steps toward forging benevolent relations with Tamil and other cultural communities in Canada.[xxxv] If 40 % of the Canada's GDP is based on export, then in order to truly construct economic ties with the global world the Canadian state must work at alleviating systemic racism in the nation.[xxxvi] Both Frances Henry and Carol Tator argue that systemic racism in Canada can be tackled through the implementation of "radical or critical multiculturalism". Critical multiculturalism moves away from the "paradigm of pluralism premised on hierarchical order of cultures that allows non-dominant cultures to not only participate in the dominant culture but allows the empowerment, the politicization, and mobilization of marginalized groups accommodated by the transformation of social, cultural and economic institutions."[xxxvii] Therefore, the dismantling of dominant cultural hierarchies, structures and systems of representation not only allow the dissemination of authentic democratic rights to all humans in the world but allows the equality, recognition, and prosperity for not only Tamils, but all citizens of the world.

Cultural essentialism by any nation state or a dominant group will only reinforce inequality and discord in the world. Canada should take it upon itself to become a trailblazer of sorts and encourage the political advancement of cultural communities. Ensuring cultural pluralism and diversity in this way will bring about some semblance of economic productivity and order in the world.

*[i] Charles Taylor, "The Politics of Recognition," in Multiculturalism: Examining The Politics of Recognition. Charles Taylor [et al.] ed. Amy Gutmann. Princeton University (1994), 25 .*

*[ii] Sunil Sondhi, ' Different Strokes: Multiculturalism and Civil Society in Canada and India," in Multiculturalism: Cánada and India. Ed. D.K. Paddy. Prestige(2005), 243- 246 .*

*[iii] Talal Asad, "Multiculturalism and British Identity in the Wake of the Rushdie Affair," in Genealogies of Religion: discipline and reasons of power in Christianity and Islam. Baltimore: John Hopkins University Press, (1994),.*

*[iv] No One is Illegal Website ( A Social Activist Group who is very active in Canada) Summation of their demands found at : http://toronto.nooneisillegal.org*

*[v] Kiran Mirchandani &, Evangelina Tastsoglou, "Towards A Diversity, Beyond Tolerance." Studies in Political Economy 6,. (Spring, 2000), 49-51 .*

*[vi] Mirchandani & Tastsoglou, 49-51*

*[vii] Ibid.*

*[viii] Frances Henry & Carol Tator, The Color of Democracy: Racism in Canadian Society, 3rd Edition. Thompson/ Nelson Publishing, (2006), 49-50.*

*[ix] Frances & Tator, 49-50.*

*[x] Partha Chatterjee,. "The Rights of the Governed" Identity, Culture and Politics Volume 3, Number 2, (December 2002), 54-58.*

*[xi] Jürgen Habermas, The Structural Transformation of the Public Sphere:*

*An Inquiry into a Category of Bourgeois Society. Translated by Thomas Burger and Fredrick Lawrence. Cambridge: MIT Press, (1991).*

[xii] *Habermas, basic argument of this book.*

[xiii] *Mirchandani & Tastsoglou, 50.*

[xiv] *Mirchandani & Tastsoglou, 51.*

[xv] *Online publication of an editorial posted by the Toronto Star entitled " Protestors vs. the Public." Published on April 30, 2009. Retrieved July 1, 2010 at: http://www.thestar.com/comment/article/626522*

[xvi] *Online publication of an editorial posted by the Toronto Star entitled " Protestors vs. the Public." Published on April 30, 2009. Retrieved July 1, 2010 at: http://www.thestar.com/comment/article/626522*

[xvii] *Asad, 259-268.*

[xviii] *Asad, 266-267..*

[xix] *Asad, 260-261.*

[xx] *CBC Online article entitled: "Tamils Crowd Downtown Streets in latest Protest." Published Wednesday, May 13, 2009. Retrieved July 1, 2010 at : http://www.cbc.ca/canada/toronto/story/2009/05/13/tamil-wednesday.html*

[xxi] *Ibid.*

[xxii] *J. Morgenthau, Politics Among Nations: The Struggles for Power and Peace, 6th edn. New York: Knopt ( 1985), basic argument about the realist theory in political science .*

[xxiii] *Morgenthau, throughout his essay addressing the realist theory in political science.*

[xxiv] *Ibid.*

[xxv] *Frances & Tator, 290-292.*

[xxvi] *Taylor, 29-30, & Asad, 266.*

[xxvii] *Taylor, 31-32.*

[xxviii] *Taylor,31-32.*

[xxix] *Ibid, 31.*

[xxx] *Ibid, 32.*

[xxxi] *Ibid.*

[xxxii] *Arjun Appadurai, Modernity at Large: Cultural Dimensions of Globalization. (University of Minnesota Press: Minnesota, 1996), 8-10.*

[xxxiii] *Cheran R, "Citizens of Many Worlds: Theorizing Tamil DiasporCity," in History and Imagination: Tamil Culture in the Global Context. Ed. R. Cheran, Dharshan Ambalavanar, Chelva Kanaganayagam, ( 2007),159-161.*

[xxxiv] *Appadurai, 8-9.*

[xxxv] *Appadurai, 8-10.*

[xxxvi] *Frances & Tator, 50.*

[xxxvii] *Ibid.*

Bibliography


Appadurai, Arjun. Modernity at Large: Cultural Dimensions of Globalization. (University of Minnesota Press: Minnesota, 1996).

Asad, Talal. "Multiculturalism and British Identity in the Wake of the Rushdie Affair," in Genealogies of Religion: discipline and reasons of power in Christianity and Islam. (Baltimore: John Hopkins University Press, 1994).

Bissoondath, Neil. Selling Illusions: The Cult of Multiculturalism in Canada. ( Penguin Publishing, 2002).

Chandra, Subhesh, "Canadian Multicultural Mosaic," in Multiculturalism: Canada and India. Ed. D.K. Paddy. ( Prestige, 2005).

Chatterjee, Partha. " The Rights of the Governed" in Tamils Studies SAS214h1f reader.

Habermas, Jürgen . The Structural Transformation of the Public Sphere: An Inquiry into a Category of Bourgeois Society. Translated by Thomas Burger and Fredrick Lawrence. (Cambridge: MIT Press, 1991).

Henry, Frances& Tator, Carol. The Color of Democracy: Racism in Canadian Society, 3rd Edition. (Thompson/ Nelson Publishing, 2006).

Mirchandani, Kiran & Tastsoglou, Evangelina, "Towards A Diversity, Beyond Tolerance." Studies in Political Economy 6,. (Spring, 2000) 49-78 .

Morgenthau, J. Politics Among Nations: The Struggles for Power and Peace, 6th edn. (New York: Knopt , 1985)

R. Cheran, Theorizing Diasporas; Diasporcity: Citizens of the World in Sondhi, Sunil. ' Different Strokes: Multiculturalism and Civil Society in Canada and India," in Multiculturalism: Canada and India. Ed. D.K. Paddy. ( Prestige, 2005) .


Taylor, Charles. "The Politics of Recognition," in Multiculturalism: Examining The Politics of Recognition. Charles Taylor [et al.] ed. Amy Gutmann. (Princeton University, Princeton, 1994).

Imprint

CBC Online article entitled: "Tamils Crowd Downtown Streets in latest Protest." Published Wednesday, May 13, 2009. Retrieved July 1, 2010 at : http://www.cbc.ca/canada/toronto/story/2009/05/13/tamil-wednesday.html

Online publication of an editorial posted by the Toronto Star entitled " Protestors vs. the Public." Published on April 30, 2009. Retrieved July 1, 2010 at: http://www.thestar.com/comment/article/626522

No One is Illegal Website ( A Social Activist Group who is very active in Canada) Summation of their demands found at : http://toronto.nooneisillegal.org

**Kirubhalini**

# காவல் கோட்டம்: மறைக்கப்பட்ட வரலாற்றை கண்டடைய முனைந்த நாவல்

தேவகாந்தன்

## 1

'காவல் கோட்ட'த்தின் மீதான சார்பு, எதிர் விமர்சனங்கள் வீச்சாக எழுந்துகொண்டிருந்த காலத்தில் நூல் என் கைக்கு வந்து சேர்ந்தது. என் வாசிப்பை அவ் விமர்சன வீச்சுக்கள் தள்ளிப்போட வைத்துவிட, மனம் சார்பற்ற ஒரு சமநிலைக்கு வர நான் சிறிதுகாலம் காத்திருக்க வேண்டியதாயிற்று. வந்தும், 2008 டிசம்பரில் வெளிவந்த சு.வெங்கடேசனின் 1048 பக்க இந் நாவலை வாசிக்க ஓர் ஆலைத் தொழிலாளியாக இருக்கும் எனக்கு மூன்று மாதங்கள் பிடித்தன.

வாசிப்பு மிக மெதுவாகவே சாத்தியமாகியிருந்தது. ஆயினும் வாசிப்பைக் கைவிடுகிற அளவுக்கும் அது சுவாரஸ்யமற்று இருக்கவில்லை. மேலே செல்லச் செல்ல நாவல் அதன் கட்டுமானத்திலும், வெளிப்பாட்டு முறையிலும் ஏறிய உச்சம் ஒரு பரவச நிலைக்கே என்னை நகர்த்தியது என்று சொல்லவேண்டும்.

என் நண்பர்களிடம் நாவல்பற்றி நான் நிறையக் கூறியிருந்தேன். ஆனால் நாவல்பற்றிய என் அபிப்பிராயத்தை எழுத்தாக்க எண்ணியவேளை, அதுபற்றிய குறிப்புக்களை வாசிப்பின்போது நான் எடுக்கத் தவறி விட்டிருந்தமை தடையாகப் போயிற்று. அவ்வாறு எழுதுவதற்காக நாவலின் வாசிப்பை மீண்டுமொரு முறை செய்யவேண்டி நேர்ந்தபோதும் அது எனக்கு அலுப்பைத் தரவில்லை.

2008இலும் அதற்கு முந்திய ஆண்டிலும்கூட வெளிவந்த நாவல்களுள் 'காவல் கோட்டம்' மிகமுக்கியமானதொன்று என்பதில் எனக்கு இரண்டாவது அபிப்பிராயம் இல்லை. இதனால் மட்டுமில்லை, இந் நாவல்பற்றி விரிவாகப் பார்ப்பது தமிழ் நாவலின் புதிய போக்குகளை அறிவதற்கான முக்கியத்துவம் வாய்ந்தது என்பதாலும்தான் இதுபற்றி எழுதுவது தவிர்க்க முடியாததானது.

## 2

வாசிப்பின் சுவாரஸ்யத்தைக் குறைத்துவிடாத பண்பு பொதுவாக வெகுஜனரீதியான எழுத்துக்களிலேயே அதிகமும் காணப்படுவது. வாசிப்பின் இன்பம் பிரதியின் கதைப்போக்கிலோ, அதன் நடையிலோ இல்லாமல் தன் கட்டுமானத்திலும், அது தனக்குள் வைத்திருக்கும் மாற்றுப் பிரதியின் கண்டடைவிலும் உள்ளதாக பின்னைய இலக்கியப் போக்குகள் நமக்குத் தெளிவாகச் சுட்டிநிற்கின்றன.

ஒரு கதையின் கட்டமைப்பை வரலாற்றுப் புலத்தில் பதிக்கையில் உருவாகும் பிரதி வரலாற்றுப் புதினமாவதில்லை. மாறாக அது வரலாற்றுக் கால நாவல்வகையினமாகவே ஆகிறது. வரலாற்றுப் புனைவு நாவல் என இதை ஓரளவு சொல்லமுடியும். ஒரு வரலாற்றுக் கதையைப் புனைவின்மூலம் விஸ்தாரப்படுத்தி உருவாகும் நாவலையும் இந்த வகையில் சேர்க்கலாம். பௌராணிகக் கதையொன்றை ஒரு படைப்பாளி தன் புனைவின் ஆற்றலினால் சுவாரஸ்யத்திற்கான அல்லது அதனினும் மேலான தன் நோக்கத்துக்கான திசையில் கால தேச வர்த்தமானங்களுக்குட்பட்ட திரையில் விரிப்பதும் இவ்வகைப்பட்டதாகவே கருதப்படுகிறது. ஆங்கில, தமிழ் நாவல்பற்றிய விவரணங்களிலிருந்து இவ் வகையினப்பாட்டை நாம் சுலபமாகவே வந்தடைய முடியும்.

எட்டாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் ரோமாபுரியின் மத அதிகாரத்தை இங்கிலாந்தில் ஒழித்து இங்கிலாந்துத் திருச்சபையின் ஆதிக்கத்தை நிறுவ நிகழ்ந்த போராட்டத்தின் பின்னணியில் புனையப்பட்ட Hilary Mantelஇன் 'Wolf Hall' நாவலை மிக அண்மைக்கால சரித்திர நாவலுக்கு உதாரணமாகக் கொண்டால், சேர் வால்டர் ஸ்கொட்டின் 'Ivanhoe' மற்றும் 'Waverley' நாவல்களை சரித்திர நாவல்களின் தோற்றுவாய்க் கால நாவல்களாகச் சொல்ல முடியும். டானியல் டிஃபோவின் 'றொபின்சன் குருசோ' நாவலும் தோற்றுவாய்க் கால நாவல்களில் முக்கியமானதே. இந்தியப் புலத்தில் எழுந்த அண்மைக்கால நாவல்களுக்கு 2007இல் வெளிவந்த தீபக் சோப்ராவின் 'Bhudda' என்ற நாவலையும், 2010இல் வெளிவந்த ஒமெய்ர் அகமத்தின் 'The Storyteller's Tale' ஐயும்கூட நாம் உதாரணத்துக்குக் கொள்ளமுடியும்.

கனடிய மண்ணில் ஆங்கிலத்தில் வெளிவந்த இரண்டு நாவல்கள் இது குறித்த நம் விசாரணைக்கு உதவக்கூடியவை. சந்ரா கலான்ட் உடைய 'The many lives & secret sorrows of Josephine B', 'Tales of Passion, Tales of Woe' ஆகிய இரண்டு நூல்களும் வரலாற்றுப் புனைவு எழுத்துவகையான நாவல்களுக்கு மிக்க உதாரணமாகக் கூடியவை. ஜோசபின் உடைய இளமையும், முதல் திருமணமும், முதல் கணவனின் மரணத்தின் பின் ஆரம்பிக்கும் நெப்போலியன் போனபார்ட்டுடனான திருமணமுமாக தொடர்வன நாவல்கள். பிரெஞ்சுப் புரட்சியையும், அதன் பின்னான குடியரசு ஆட்சியையும், நெப்போலியனது எழுச்சியையும் ஐரோப்பிய சரித்திரத்தில் விரிவாக அறிந்திருக்கும் ஒருவர் இந் நாவல்களில் அதன் வரலாற்றுப் புலம் அச்சொட்டாகப் பதிவாகியிருப்பதை உணர்ந்துகொள்ள முடியும். முதலாவது நாவல்பற்றி தி குளோப் அன்ட் மெயில் பத்திரிகையில் வெளிவந்த விமர்சனத்தின் பின்வரும் அடி அதன் தரத்தை உள்ளுணர வைக்கிறது: '....accomplishes what the best of historical novel does'. ஆங்கிலமொழி வரலாற்று நாவலையும், வரலாற்றுப் புனைவு நாவலையும் மிகத் துல்லியமாக Historical novel எனவும் Historical fiction எனவும் வரையறைசெய்து வைத்துள்ளது. தமிழிலும் இந்த வரையறுப்பு உண்டெனினும் அச்சொட்டான வாசகப் புரிதலாவது குறைவாகவே இருக்கிறது.

ஜெயமோகனின் 'விஷ்ணுபுரம்' ஒரு பௌராணிகப் புலத்தை ஓரளவு கண்டடையப்பட்ட வரலாற்றுத் தகவல்களின்மீது தன் புனைவின் வன்மையால் உரைநடையில் நிர்மாணித்த மிகப்பெரும் பிரதியெனக் கொண்டால், எஸ்.ராமகிரு'ணனின் 'உபபாண்டவம்' பஞ்சபாண்டவர் தவிர்ந்த உபபாண்டவர்களின் மூலமாக ஒரு பௌராணிக காலத்தை நிதர்சனத்துக்கு உருவாக்கிய சாதனையெனக் கொள்ள முடியும். இவைபோல் 'காவல் கோட்ட'த்தையும் தன்னளவில் உச்சமடைந்த நாவலாகவே கொள்கிறேன். எப்படி?

3

தாதனூரினதும் அதன் மக்களினதும் கதையென்று மொத்தமாகச் சொல்லிவிட முடியாவிட்டாலும், ஓரளவில் அது அப்படித்தான். மதுரையின் ஆதாரமாக இருந்து காலங்காலமாக தாதனூர் இயங்கிக்கொண்டிருந்தது. அதன் மக்கள் எப்படியானவர்களாக இருந்தனர்? நாவலின் கடைசிப் பகுதியில் இவ்வாறு வருகிறது: 'சோகம் சொல்லிமுடியாதபடி அதிகரித்துக்கொண்டே இருந்தாலும், அவர்களுக்குத் தாங்கமுடியாத வேதனையைத் தந்தது இரவும் பகலும் மாற்றிப் போடப்பட்டதுதான். மூதாதையரின் காலங்களிலிருந்து இருள் எனும் பெரும்பரப்பில் ஓடியபடி இருந்த கால்கள்! இருளைக் குடித்து, இருளைத் தின்று, இருளால் வளர்ந்த உடல்கள்!'

தாதனூர் காவலும் களவும் கலந்த ஊராக இருந்தது. அதுபோல் தாதனூரும் மதுரையும் பிரிக்கமுடியாதவாறு ஒன்றின் ஆதாரத்தில் ஒன்றுபோல் இணைந்தே கிடந்தன.

மாலிக் கபூரின் படையெடுப்புக் காலத்தில் காவலாளி கருப்பணனின் கொலைப்பாட்டோடு தொடங்கும் நாவல், கிழக்கிந்திய கம்பெனியின் காலத்தில் தாதனூர் பெரியாம்பள மகள் அங்கம்மாக் கிழவி பொலிஸினால் அடித்துக் கொல்லப்படுவதோடு முடிவெய்துகிறது. இந்த இரண்டு நிகழ்வுகளின் இடையிலும் மதுரையையும், தாதனூரையும் கவிந்தெழுந்த காலத்தின் கதைதான் 'காவல் கோட்டம்'. இதற்கு மேலே கீழே இல்லை.

காலம் எப்படி இருக்கிறது? அதன் வடிவம் என்ன? கழிந்த காலம் வரலாறாக இருக்கிறது. அது கதைகளின் வடிவத்தில் நிற்கிறது. காலம் ஒரு வட்டத்தில்போல் நடந்துகொண்டே இருக்கிறது எனலாம். அதனால்தான் வரலாற்று நிகழ்வுகள் திரும்பத் திரும்ப வந்துகொண்டே இருக்கின்றன. கதைகளும் வெவ்வேறு வடிவங்களில் கிளைத்துக் கிளைத்து எழுந்துகொண்டிருப்பதும் அதனால்தான்.

ஊரைக் கொள்ளையடித்து, அகப்பட்ட பெண்களையெல்லாம் கவர்ந்து சென்றுகொண்டிருந்த மாலிக் கபூரின் படைகளின்மேல் சடைச்சி கொடுத்த வேலோடு பாய்ந்து சில குதிரைப் படையினரைக் கொன்றுவிட்டு தானும் மடிந்து போகும் காவலாளி கருப்பணனின் கதை, எப்போதுமே வேறுவடிவில் நாவலில் வந்துகொண்டேதான் இருக்கிறது. கருப்பணனின் மரணத்தின் பின் தன் தாயாதிக்காரரின் ஊர் நோக்கிச் செல்லும் சடைச்சி இடையில் நோக்காடு கண்டு அமணமலைப் பக்கமாயுள்ள ஒரு குகைக்குள்ளே நுழைகிறாள். சடைச்சியின் வம்சத்திலிருந்து பெருக்கெடுக்கிறது களவினதும், காவலினதும் சமூகம். சடைச்சிகளும், கருப்பணன்களும் முளைத்துக்கொண்டே இருக்கிறார்கள் அதில்.

முகம்மதியர் மதுரையைக் கைப்பற்றியிருந்த காலத்தில் அப் பழம்பெரு நகர் எப்படியிருந்தது? குமார கம்பணனின் விஜயநகரப் படைகள் வந்து மதுரையை முற்றுகையிட்டிருக்கின்றன. வைகைபற்றியும் மதுரைநகர்பற்றியும் கேள்வியில் பட்டிருந்த வடுகத் தளபதிகள் திகைத்துப்போகிறார்கள்.

'வைகை கம்பிளி நாட்டுக் காட்டோடைகளைவிடவும் ஒடுங்கி மணலாய்க் கிடந்தது. சின்னஞ்சிறு நகரான மதுரையை ஐந்தே நாழிகையில் குதிரையில் சுற்றிவிடலாம். அதன் குட்டையான கோட்டை மதில்கள் காலத்தில் முதுமை பூண்டு அரித்துக் கிடந்தன. சுட்ட செங்கல்கள் செதில் செதிலாய் வங்குபற்றி நின்றன. பனையை வெட்டிக் கிடத்தினால் மதிலை எட்டிவிடும் அகலம்தான் அகழி கிடந்தது. அரவ நாட்டில் கல்கோட்டைகளே இல்லையென்ற தகவல் ஆச்சரியமளித்தது' என நாவல் கூறுகின்ற நிலைமையைக் கற்பனைசெய்து பார்க்க முடியும். இந்த நிலைமையிலிருந்துதான் மதுரை வளர்ந்தது. படிப்படியாக வளர்ந்தது. ஒருவகையில் மதுரைக் கோட்டையின் வளர்ச்சியும், அதன் அழிப்பும்தான் நாவலின் பெரும்பகுதியை நகர்துகின்றன.

வரலாறாக அன்றி, கதைகதையாக நாவல் நகர்வதிலேதான் அதன் கட்டுமானச் சிறப்பு அடங்கியிருப்பதாகப் படுகிறது. இன்னொருவகையில் சொல்லப்போனால் பல சிறுகதைகளும், பல குறுநாவல்களும்கொண்டு நாவல் நடந்திருக்கிறது என்றாலும் சரிதான். கருப்பணன் கதை, தொடர்ந்து குமார கம்பணன் - கங்கா கதை, ராணி மங்கம்மா கதையெல்லாம் சிறுகதைக் கட்டமைப்போடு விளங்கிக்கொண்டிருக்கின்றன. விசுவநாத நாயக்கன் கதை, தொடர்ந்து நல்லதங்காள் குஞ்சரத்தம்மாள் கதைகளெல்லாம் குறுநாவலின் குதிப்புகளோடு இருக்கின்றன.




'இப்போது யோசித்துப் பார்க்கிறேன். அவை வெறும் கதைகள் அல்ல, கதையும் வரலாறும் கிளை பிரியா முதுமொழியில் சொல்லப்பட்டவை. அம் மொழியில் முளைத்து என் போக்கில் வளர முயன்ற ஆசைதான் இது (நாவல்)' என படைப்பாளியே குறிப்பிடுவதுபோல் கதைகதைகளாகவேதான் நாவல் வளர்ந்திருக்கிறது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் அடங்க மறுத்த மதுரையின் வலிமையெல்லாம் அறுக்கும்வகையில், நகர விஸ்தரிப்பு மற்றும் வர்த்தகத்துக்கான பாதைகளின் அமைப்புக்கென்றும் பல்வேறு காரணங்களைச் சொல்லிக்கொண்டு கோட்டையிடிப்புக்கு திட்டமிடப்படுகிறது. அதற்கு முன்னதாக கோட்டைச் சுவர்களில் காவலுக்கு வாலாயம் பண்ணி வரவேற்கப்பட்டிருந்த ஏழு கருப்பன்களும், ஏழு மாடன்களும், ராக்காயி, பேச்சி, இருளாயி ஆகிய மூன்று சக்திகளும், மதுரைவீரன், லாடசன்னியாசி, சப்பாணி, சோணை ஆகியவர்களுமான இருபத்தொரு சிறுதெய்வங்களும் கோட்டை வாசஸ்தலத்திலிருந்து குடிகிளப்பப்பட்டாக வேண்டுமென்று ஊர்ப் பெரியோர் அபிப்பிராயப்படுகிறார்கள். ராமச்சந்திர ஐயர் என்பவர் அவ்வாறு தெய்வங்களை வேறு இடங்களில் குடியேற வைத்துவிட முடியுமென்று பரிகார பூஜை முறை கூறுகிறார். ஒரு நிறை அமாவாசை இரவில் அதற்கான பூஜை தொடங்குகிறது. செல்லத்தம்மன் கோயிலில் இருபத்தொரு எருமைக் கடாக்களை வெட்டிப் பலியிட்டு, அத் தெய்வங்களை அக் கோயிலில் குடியேற வைப்பதுதான் திட்டம். 'கோட்டைச் சுவரில் இருக்கும் தெய்வங்களை பலியேற்றுக்கொள்ள வெளியேறி வருமாறு மூலைக்கு மூலை கோடாங்கிகளும், சாமிகளும்,

பூசாரிகளும் நின்று நரம்பு புடைக்கக் கத்தி ஆடிக்கொடிருந்தனர். உடுக்குச் சத்தமும், கொட்டுச் சத்தமும், மேளச் சத்தமும் இரவின் செவிப்பறையை அதிரச் செய்தது.' ஆயினும் தெய்வங்கள் தம்மிருப்பிடத்தை விட்டு விலகிச் சென்று பலி-யேற்க மறுத்துநின்றன. எப்படியோ முதலில் நல்லமாடன் கோட்டைச் சுவரைவிட்டு இறங்கிவரச் சம்மதித்தான். தொடர்ந்து மற்றைய தெய்வங்களும் இறங்கிவந்தன. நேரமாக ஆக சங்கிலிக்கருப்பனும் இறங்குகிறான். 'எட்டுப் பேர் இழுத்துப் பிடிக்க சங்கிலிக்கருப்பன் இறங்கியபொழுது, கோட்டையே பிய்த்துக்கொண்டு வருவதுபோல் இருந்தது. அவன் இறங்கிய வேகத்தில் முதுகில் இருந்த கோட்டையை உலுக்கிவிட்டு, இருளில் சுருண்டு கிடந்த வீதிகளை வாரிச் சுருட்டியபடி போனான்.' அழுகையும் ஆவேசமும் கத்தலும் கதறலுமாக விடிகிறவரையில் இருபத்தொரு சிறுதெய்வங்களும் செல்லதம்மன் கோயிலில் சென்று குடியேறிக்கொள்கின்றன. அன்றைய மதுரை மட்டுமல்ல, வாசிக்கும் மனங்களும் நடுங்கி அலறுகின்றன. இவ்விடத்தில் படைப்பாளியின் மொழியாளுமை உச்சம். வாசக மனத்தை அது பதறவைக்கும். கோட்டை மதி-லோர மரங்களிலிருந்த மாடப்புறாக்கள் ஒரு மாலையில் திரும்பிவந்து தமது கூடுகளைக் காணாது பதறியடித்து அலமருவதுபோல் மனம் பறந்தடிக்கும்.

'விஷ்ணுபுரம்' நாவலில் ஒரு மதம் பிடித்த யானை வரும். அதை அடக்க போர்யானையொன்றைக் கொண்டுவ ருவார்கள். அப்போதைய வழக்கம் அதுதான். போர் யானைக்குத் தெரிந்தது யுத்தம்மட்டுமே. யுத்தத்தில் கொலை. போர்யானை வருவதும், மதம்பிடித்தயானையை ஒரு மூலைப்படுத்தி தன் கூர்த்த தந்தங்களால் குத்திக் கொல்வதும் வாசிக்கையில் வாசகமனம் பதறிச் சிலிர்க்கும். ஏறக்குறைய அதற்குச் சமமான பதற்றத்தை வாசக மனத்தில் ஏற்படுத்துபவை சு.வெங்கடேசனது இப்பக்கங்களும். அதுபோலவே கொள்ளைநோய்க் காலத்தில் மனிதர் கூட்டம் கூட்டமாய் இறப்பதும், தாது வரு' பஞ்ச காலத்தில் ஜனங்கள் அடையும் வறுமை வாட்டம் அலைந்துலைவுகளும், பின்னால் வெள்ள காலத்தில் அடையும் இன்னல்களும் நாவலில் துயரம் தோய்ந்த கவி மொழியில் சொல்லப்பட்டிருக்கின்றன.

## 4

கோட்டை இடிக்கப்பட்டதோடு மதுரையின் உச்சம் முடிவடைக-றிது. ஆக முன்பகுதியின் கதை மதுரைக் கோட்டையின் வரல-ாறாக இருப்பது தவிர்க்க முடியாதவாறு அமைந்துவிடுகிறது. கண்ணகியின் திருகி எறியப்பட்ட முலையிலிருந்து எழுந்த கனலில் எரிந்த மதுரை, ஒருவகையில் கனல் ஆறாததாகவே என்றும் இருந்திருப்பதாகப் படுகிறது. அதன் வசந்தங்களைவிட கோடைகளே அதிகமென்பதுதான் வரலாற்று உண்மையும். முகமதிய ஆட்சியும், பின்னர் விஜயநகர ஆட்சியும், பின்னர் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியும், பிறகு ஆங்கிலேய ஆட்சியுமாக அது கண்ட கோடைகள் கணக்கிலடங்காதவைதான். 'மதுரையில் பிறந்த என்னாலேயே மதுரையை நாவலில் காணமுடியவில்லை'யென்று பிரலாபித்தார் ஒரு வாசகர். அன்பரே 'காவல்கோட்டம்' மதுரையின் கதையே எனினும் அதன் உடலின் கதையல்ல அது, மாறாக அதன் ஜீவனின் கதை-யேயாகும் என்பதே அதற்கான சரியான பதிலாகும்.

எனின் இது மதுரையின் கதை மட்டும்தானா?' இது தாதனூரின் கதையும் ஆகும்தான். மதுரையும் தாதனூரும் பிரிக்கக்கூடியவையல்ல. ஒன்றின்மேலொன்று ஆதாரங்கொண்டிருப்பவை. மதுரையின் காவலுக்கும் சட்டம் நீதி ஒழுங்குகளுக்குமாக பொலிஸ்படை நிறுவப்படுவதிலிருந்து அதுவரை மதுரையின் காவல் ஆதாரமாகவிருந்த கள்ளர் சமூகம் முக்கியத்துவம் இழக்கிறது. அவர்கள் குற்றப் பரம்பரைச் சட்டத்தின்மூலம் ஒடுக்கப்படுகிறார்கள். மதுரை வரலாறு நெடுக நடந்த போர்களில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கள்ளர்கள் அடைந்த இன்னலும், உயிரிழப்பும்போல் எப்போதும் ஓர் இன்னலோ உயிரிழப்போ நடைபெறவில்லை என்று கூறும-ளவிற்கு அவை இருந்திருக்கின்றன.

இவ்வாறு பார்க்கையில் மதுரைக் கோட்டையின் அழிப்பு முடிய தொடங்குவது தாதனூர் அழிப்பு என்றாலும் பொருந்தும். புனைவும் வரலாறுமாக 'காவல் கோட்டம்' எதை ஸ்தாபிக்க முயல்கிறது? வெறும் நாவல் என்ற இலக்கிய வகைமையினை மட்டும்தானா?

## 5

நாவலின் ஏறக்குறைய ஒரு முந்நூறு ஆண்டுக்கால வரலாற்றையும் சீர்தூக்கிப் பார்த்தால் நமக்கு ஓர் உண்மை தெர-ியவரும். வரலாற்று நாவலின் வரவு ஆரம்ப காலங்களில் ரொமான்ரிஸ தன்மை வாய்ந்ததாகவே இருந்திருக்கிறது. அது பல்வேறு கிளைகளை எடுத்தது பின்னாளில். மிகப் பிந்திய காலத்தில் அதன் வகையினவொன்றின் வருகைதான் மாற்று வரலாற்றுப் புதினம் என்பது. யுடவநசயெவந ாளைவழசஉையட ழெஎநட என்று அதை ஆங்கில நாவல் வகைப்பாடு செய்துநிற்கிறது. அந்த வகையான நாவலுக்கு தமிழில் உடன-டியாகச் சொல்லக்கூடிய ஆதாரமெதுவும் நம்மிடம் இல்லை. அந்தவகையில் தமிழ்ப் பரப்பு பெருமைகொள்ளக்கூடிய ஒரே நாவல் 'காவல்கோட்டம்'தான்.

வரலாறு என்பதை நாம் எவ்வாறு புரிந்துகொண்டிருக்கிறோம்? சொல்லப்பட்டிருப்பது வரலாறு என்பதாக மட்டும்தானே? அது யாரினது வரலாறாக இருக்கிறது என்பதை யோசிக்க நம்மில் பலபேருக்கு வாய்த்ததில்லை. உண்மையில் அது அதை எழுதி யவன் பார்வையிலுள்ள வரலாறாக இருக்கிறது. அவனது பார்வையை அவன் வாழ்ந்த சமூகமும், அந்தச் சமூகம் அறி வாய்ச் சேகரித்து வைத்திருக்கும் கல்வியும் உருவாக்கி யதாகத்தானே கொள்ளமுடியும்? ஆக, அதை உண்மை வரலாறு என எப்படிக் கூறிவிட முடியும்?

கதைகளில், அனுபவங்கள் உறைந்துள்ள கிராமியப் பாடல்களில் விடுபட்டதும், மறைக்கப்பட்டதுமான வரலாறு மறைந்திருக்கிறது. அதை வெளிச்சமிட்டுக் காட்டுவது மாற்று வரலாறு. அதை நாவலில் சொல்லிவிட்டால் அதுவே மாற்று வரலாற்று நாவல். 'காவல்கோட்டம்' மறைக்கப்பட்டதும், திரிக்கப்பட்டதுமான வரலாற்றை கண்டடைய முனைந்திருக்கிறது. அதுவே அதன் தனித்தன்மை. அதில் அது தனி முத்திரை பொறித்திருக்கிறது. அதுவே முதன் முத்திரையாகவும் இருக்கிறது என்பதுதான் அதன் சிறப்பு.

**நூல்: காவல் கோட்டம்,**
**ஆசிரியர்: சு.வெங்கடேசன்**
**வெளியீடு: தமிழினி**
**பதிப்பு: 2008**

# சட்டநாதனின் சிறுகதைகள் - ஒரு குறிப்பு

என்.கே.எம்.

மாற்றம், உலா, சட்டநாதன் கதைகள், முதியவர்கள் ஆகியவை க.சட்டநாதனின் ஏற்கேனவே வெளிவந்த சிறு-கதைத் தொகுதிகள். இறுதியாக வெளிவந்துள்ளது,முக்கூடல் என்ற சிறுகதைத் தொகுதி.



சிறுகதைகள் எழுதுவதை ஒரு சிறப்புக் கலையாகவே எடுத்து எழுதி வருபவர், சட்டநாதன். பல சிறுகதைகளில் வெற்றியும் பெற்றுள்ளார். இலக்கியம், சினிமா, இசை போன்ற கலை இலக்கியங்களில் மிகவும் ஈடுபாடு கொண்ட அவர், சிறு-கதை எழுதுவதிலேயே தன் முத்திரையைப் பதித்துள்ளார்.


மொழி நடையில் மிகவும் கவனம் கோண்டவர். நுணுக்கமான அவதானிப்புக்கள், உரையாடல்கள், பிரச்சினைகள், கதை ஆகியவற்றால் சிறுகதைகளை வளர்த்தும் செல்பவர். நிச்சயமாக, சட்டநாதனின் சிறுகதைகளில் கதை இருக்கும். கற்பனையும் விவரணையும் உரையாடலும் கதைக்களனை நிர்ணயிக்கும். பாத்திரங்களுக்குச் சார்பான எதிரான நிலைப்பாடுகளை சிலவேளை ஆசிரியரே எடுப்பதையும் வாசகன் உணர்ந்து கொள்வான். அதற்கான தர்க்கத்தை ஆசிரியரே வெளிக்காட்டியும் இருப்பார். ஆசிரியரின் முற்சாய்பு பெண்கள், குடிந்தைகள், ஒடுக்கப்பட்டவர்கள் பக்கமும் உள்ளதை உணருவதற்கு வாசகருக்கு அதிக நேரம் பிடிக்காது. அதனால், கதைகளில் வெளிப்படையாக ஒரு நோக்கம் உள்ளது போன்ற ஒரு தோற்றத்தையும் அவை அளித்து விடுவார்.

அவரின் கதைகள் பலவும் பெண்களைப் பற்றியதும் அவர்களை அனுதாபத்தோடு அணுகுபவையும். அதேவேளை ஆண்களைச் சமநிலையில் அல்லது இன்னும் கொஞ்சம் குறைவாக அல்லது செட்டாக அணுகுபவை. குழந்தைகளை அவர்களின் உலகிலேயே போய்ச் சந்தித்தும் அளவளாவும்.

மற்றவர்கள் பேசத் துணியாத விவாதப் பொருட்களை முக்கியமாக சாதியம், பாலுறவு சம்பந்தமானவற்றை சட்டநாதன் துணிவாக எடுத்தாண்டும் இருக்கிறார். குறிப்பாகப் பெண்கள் சம்பந்தப்பட்ட கதைகளில். இவரின் பெண்களின் அழகுக் குறிப்புக்கள் தி. ஜானகிராமனின் வர்ணனைகளை நினைவூட்டும். சட்டநாதன், பெண்களின் வெளி அழகையும் அக அழகையும் ரசிக்கும் மனிதர் என்பதை அவரின் கதைகள் சில வெளிப்படுத்துகின்றன.

முக்கூடல் சிறுகதைத் தொகுதியில் மிக ஒழுக்க நெறியைக் மீறிய பாலுறவு, இயக்க சம்பந்தமான பிரச்சினைகள், குடிந்தைகளின் உளவியல், வளர்ந்த மனிதர்களின் கசப்புக்கள், வெறுப்புக்கள், பகைமைகள் ஆகிய பலவும் எடுத்தாளப் பட்டுள்ளன. சிலவற்றில் அப்படியும் நடக்குமா? என்ற கேள்விக்கும் இடம் இருக்கின்றது. ஒருவகை ஒழுக்கத்தில் ஊறிய மத்திய தர வர்க்கத்தினருக்கு அது கொஞ்சம் ஜீரணிக்க முடியாது என்பதும் உண்மையே.

முக்கூடல் சிறுகதைத் தொகுதியிலுள்ள பல கதைகள் மேல்தட்டு அல்லது மத்திய தர வர்க்கத்தினரின் கதைகள். அதனால் அவர்களின் ஒழுக்கவிதிகள் மீறப்படும்போது இயல்பாக எழும் நெருடல்களையும் தவிர்க்க முடியவில்லை.




கடந்த சில 'காலம்' இதழ்களில் பல எழுத்துப் பிழைகள் ஏற்பட்டிருந்தன. 'காலம் 34' இல் குலசிங்கம் நேர்காணல் ராகவன் அவர்களால் செய்யப்பட்டது. ஆனால் துவாரகன் என்று தவறுதலாக பெயர் வெளி வந்துவிட்டது. தொடர்புடையவர்களிடம் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர்

(வாழும் தமிழ் வெளியீடாக வரவிருக்கும் எகோவினுடைய நேர்காணல் மொழிபெயர்ப்பு நூலின் பகுதிகள்)

# அம்பர்தோ எகோ

(Umberto Eco)

(நேர்காணல் முன்குறிப்பு)

தமிழில்: ர.்.பேல்.எஸ்.வி.

...பிறகு கடைசியாக அந்த உரையாடல் மீளத் தொடங்கியது. 16 ஆவது போப்பைப் பற்றியும் பெர்சியாவின் பேரரசு வீழ்ந்ததைப் பற்றியும் கடைசியாக வந்த ஜேம்ஸ் பொண்ட் படத்தைப் பற்றியும் ஆர்வமுடன் எகோ குறித்துக் காட்டுகையில் உரையாடல் மீண்டும் தொடங்கியது. "உங்களுக்குத் தெரியுமா" தனது கல்சோனில் முள்ளுக் கரண்டியைச் செலுத்தியபடி அவர் கேட்டார். "நான் ஒரு தடவை அயன் பிளமிங்கின் கதைக்கரு பற்றி அமைப்பியல் ஆய்வு ஒன்றைச் செய்திருக்கிறேன்"...

– லிலா அஸாம் ஸங்காநெஹ்

(Lila Azam Zanganeh)

அம்பர்தோ எகோவை முதல் தடைவ நான் அழைக்கையில் அவர் இத்தாலியின் அட்ரியாட்டிக்(Adriatic) கரையோரத்தின் அருகே உள்ள உர்பினோ(Urbino) குன்றுகளுக்கு வெளியே இருந்த அவருடைய 17ஆவது நூற்றாண்டைச்சேர்ந்த பங்களாவில் உள்ள அவரது எழுதுமேசையில் அமர்ந்திருந்தார். அவர் தனது கடலோர நீச்சல் தடாகத்தின் புகழைப்பாடிக் கொண்டிருந்தார். அந்தப் பகுதியின் மிகத்துன் பந்தரும் வளைவு-நெளிவுகள் மிகுந்த மலையிடுக்கு வழிகளில் நான் சிக்கலை எதிர்கொள்ளக்கூடும் என்று ஐயப்பட்டார். அதற்குப் பதிலாக மிலானில்(Milan) உள்ள அவரது தொடர் மாடிக் கட்டிடக் குடியிருப்பில் சந்திப்பதென்று இருவரும் உடன்பட்டுக் கொண்டோம். கடந்த ஆகஸ்டில் ஓர் பெராகெஸ்ரோவில் (ferragosto) இல் கத்தோலிக்கர்கள் கன்னி மேரி விண்ணுலகுக்குச் சென்றதைக் கொண்டாடும் ஓர் கோடையின் உச்சமான நாளில் நான் அங்கே சென்றுசேர்ந்தேன். மிலானின் சாம்பல்நிற கட்டிடங்கள் வெப்பத்தில் தகதகத்துக் கொண்டிருந்தன. ஓர் சிறிய தூசுப்படலம் நடைபாதையில் படிந்திருந்தது. ஒரு எந்திரத்தின் இரைச்சலும் கேட்டமாதிரியில்லை. நான் எகோவின் கட்டத்தினுள் நுழைகையில் ஒரு நூற்றாண்டு பின்னால் சென்றமாதிரி உணர்ந்தேன். மேலே உள்ள தளத்தில் ஓர் கதவு கிரீச்சிடும் சத்தம் கேட்டது. தாக்குறவை ஏற்படுத்தக் கூடிய எகோவின் உருவம் வேலைப்பாடுடன்கூடிய துருவேறிய எலிவேற்றரின் பின்னாலிருந்து தோன்றியது. "ஆஹ்ஹ்ஹ்", என்று சிறிய புன்னகையுடன் சொன்னார்.

அவரது அடுக்குமாடி கதவுகளாலும் ஓடைபோன்ற அறைகளாலும் மிகவும் மகவும் உயரமான கூரையைத் தொடுமளவு உயர்ந்துகொண்டே சென்ற புத்தக அலுமாரிகளாலும் யந்திரச் சக்கரம்போல் நிறைந்திருந்தன. 30 ஆயிரம் புத்தகங்கள் என்று சொன்னார் எகோ. இன்னும் 20 ஆயிரம் அவரது மாளிகையில் இருக்கிறது. தாலமியால் எழுதப்பட்ட அறிவியல் கையேட்டை, கால்வினோவின் (Italo Calvino) புதினங்களை, சசூர் மற்றும் ஜோய்ஸ்(Ferdinand de Sassure and James Joyce) ஆகியோர் பற்றிய ஆய்வுகளை, மத்தியகால வரலாற்றுக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஓர் ஒட்டுமொத்தப் பகுதி மற்றும் சூட்சுமக் கையேடுகளை எல்லாம் நான் பார்த்தேன். மிகவும் பாவனைக்குள்ளாகிய தால் நைந்துபோய்த் தோன்றிய புத்தகங்களால் அந்த நூலகம் உயிரோட்டத்துடன் இருந்தது. எகோ மிகவும் வேகமாக வாசிப்பார். அவருக்கு அளவிடமுடியாத நினைவுத்திறன். குறுக்கு மறுக்குமாக இருந்த புத்தக அலுமாரிகளில் அவருடைய ஆய்வி லுருவான அவரது சொந்த எழுத்துக்களும் அவற்றின் மொழிபெயர்ப்புகளும் இருந்தன. (அராபிய, ஃபின்னிய, யப்பானிய என 30 க்கு மேற்பட்ட மொழிகளை எண்ணிக்கொண்டு போகையில், நான் அதற்குப்பிறகு எண்ணிக்கையை ஞாபகத்தில் வைத்திருக்கவில்லை.) எகோ அவரது புத்தகங்களை மிகவும் ஆர்வத்துடன் சுட்டிக்காட்டினார். அவரது முந்தைய மைல்கல்லாகக் குறிப்பிடத்தக்க பணியான விமர்சனக் கோட்பாடு பற்றிய 'The Open Work' முதல் இப்போதைய பெருவிற்பனை வெற்றியடைந்த 'On Ugli-


ness' வரைக்கும் என்று, அவை தொகுதி தொகுதியாக எனது ஆர்வத்தை ஈர்த்தன.

எகோ மத்தியகால வரலாற்றைப் படிப்பவராகவும் குறியியலாளராகவுமே தனது கல்விப் புலத்தைத் தொடக்கியிருந்தார். பின்னர் 1980 இல் தனது நற்பத்தியெட்டாவது வயதில் 'The Name of the Rose' என்ற ஓர் நாவலை வெளியிட்டார். அது வெளியீட்டுத்துறையில் உலகளவில் ஓர் பெருவெற்றியாக அமைந்தது. பத்து மில்லியன் படிகளுக்கு மேலாக விற்றுக் கொண்டிருக்கின்றன. ஓர் பேராசிரியர் ஓர் இலக்கியப் பேராளுமையாக உருமாற்றம் பெற்றார். பத்திரிகையாளர்களால் துரத்தப் பட்டார், பண்பாடுசார் கருத்துரைகளுக்காக வருந்தியழைக்கப் பட்டார், அவரது மதிப்பிடவியலா புலமைக்காக மதிப்பளிக்கப் பட்டார். வாழ்ந்துகொண்டிருக்கும் இத்தாலிய எழுத்தாளர்களில் முதன்மையானவராக கருதப்படும் நிலையை எகோ எய்தினார். இந்தக் காலந்தொட்டு அவர் கட்டுரைகளை, புலமைசார் பணி-களை, 'Foucault Pendulam'*(1988)* மற்றும் 'The Mysterious Flame of Queen Loana'*(2004)* உள்ளிட்ட நான்கு வெற்றி பெற்ற நாவல்களை எழுதியிருக்கிறார்.

எகோவின் எள்ளல் பாதை வகுத்துக்கொண்டு போகும்வேளை, அவரது கால்கள் தரையில் தாண்டிச் சென்றன. அவரது அறைக்குள் நாங்கள் நுழைந்தோம். சாளரத்தின் ஊடாக மத்தியகாலக் கோட்டையொன்று மிலானின் வானத்தில் வெட்டுப் படமாக விரிந்தது. நான் இத்தாலியப் பழம் பொருட்களையும் தொங்கு சீலைகளையும் எதிர்பாரத்திருந்தேன். ஆனால் பதிலாக நவீன தளபாடங்களை, கண்ணாடியாலானவற்றை, அவற்றில் வைக்கப்பட்ட அரிதான படக்கதைகளைக் கடற்சிப்பி சோகி-களை, ஒரு கொள்ளை இசைத்தட்டுக்களை, ஒட்டோவியமாகவிருந்த ஓவியத் தூரிகைகளைக் கண்டேன். "இதைப் பாருங்கள் எனக்காக ஆர்மனினால்(Arman) சிறப்பாக அர்ப்பணிக்கப்பட்டது".

ஓர் பெரும் வெள்ளைச் சோபாவில் நான் அமர்ந்தேன். பணிவாக விருந்த ஓர் சாய்மணைக் கதிரையில் எகோ கையில் சுருட்டுடன் பொதிந்துகொண்டார். முன்னர் நாளைக்கு 60 சுருட்டுக்கள் வரையும புகைத்துவந்திருக்கிறார், என்று சொன்னார். ஆனால் இப்போது பற்றவைக்காத சுருட்டே இருந்தது. நான் எனது முதல் கேள்விகளைக் கேட்கையில் எகோவின் கண்கள் சிறு கரும் கீற்றாகச் சுருங்கின. அவருக்குப் பேசும் வேளை வந்ததும் சடாரென்று விரிந்தன. "நான் மத்தியகாலத்தைப் பற்றிய விருப்பார்வத்தை வளர்த்துக்கொண்டேன்" என்று சொன்னார். "சிலர் தேங்காய்மீது விருப்பார்வத்தை வளர்த்துக்கொள்வார்களோ அதைப்போல." இத்தாலியில் அவரது நையாண்டிகளுக்காக அவரது நகைச்சுவை தெறிப்புக்களுக்காக அவர் நன்கறியப்பட்டவர். அவர் அவற்றை வளைந்து நெளிந்து செல்லும் தனது வாக்கியங்களின் ஒவ்வொரு திருப்பத்துக் குள்ளும் கிட்டத்தட்ட போட்டுவைப்பார். அவர் பேசப்பேச அவரது குரல் உரத்துக் கொண்டே செல்லும். விரைவிலேயே ஆர்வமான ஓர் வகுப்பறைக்குச் சொல்வதைப் போல அவர் சில புள்ளிகளை கோடிட்டுக்காட்டினார்....

எங்களது இரண்டு மணிநேரத் தொடக்க நேர்காணல் அமர்விற்குப் பின் மரியோ அந்திரோஸ்(Mario Andreose) என்ற 'பொம்பினீ' இன் இலக்கிய இயக்குனர், எகோவின் இத்தாலிய வெளியீட்டாளர் எங்களை விருந்துக்கு அழைத்துச் செல்ல வந்திருந்தார். ரெனேற் ரம்ஜ்(Renate Ramge) என்ற எகோவின் 45 ஆண்டுகால துணைவியாரும் அந்திரோஸ் உடன் துடிப்பும்



உயிரோட்டமுமாக முன்னால் அமர்ந்திருந்தார். எகோவும் நானும் பின் இருக்கையில் இருந்தோம். நிமிடத்துக்கு முன்னர் துடிப்பும் எள்ளலுமாக இருந்த எகோ தற்போது கடுமையும் அந்நியமும் ஆட்கொண்டவராக இருந்தார். ஆனால் அவரது குணநடத்தை நாங்கள் உணவகத்துக்குள் சென்றவுடன் மாறியது. ஒரு பீங்கான் நிறையப் பாண்துண்டுகள் எங்கள் முன் வைக்கப்பட்டது. உணவுப் பட்டியலில் அக்கறையற்றவகையில் கண்ணைச் செலுத்தியவர் பரிசாரகர் வந்ததும் ஓர் ஸ்காட்ச்சும் கல்சோனும் கேட்டார். "ஆம், ஆம் நான் இப்படிச் செய்யக்கூடாது. நான் இப்படிச் செய்யக்கூடாது" என்றபடி அணுகிய ஓர் வாசகர், "நீங்கள் தானே அம்பர்த்தோ எகோ?" என்றார். ஓர் 'பேராசிரியர்' தனது புருவங்களை உயர்த்தி புன்னகைத்தபடி தனது கைக-ளைக் குலுக்கிக் கொண்டார். பிறகு கடைசியாக அந்த உரையாடல் மீளத் தொடங்கியது. 16ஆவது போப்பைப்பற்றியும் பெர்சியாவின் பேரரசு வீழ்ந்ததைப்பற்றியும் கடைசியாக வந்த ஜேம்ஸ் பொண்ட் படத்தைப்பற்றியும் ஆர்வமுடன் எகோ குறித்துக் காட்டுகையில் உரையாடல் மீண்டும் தொடங்கியது. "உங்களுக்குத் தெரியுமா" தனது கல்சோனில் முள்ளுக் கரண்டியைச் செலுத்தியபடி அவர் கேட்டார். "நான் ஒரு தடவை அயன் பிளமிங்கின் கதைக்கரு பற்றி அமைப்பியல் ஆய்வு ஒன்றைச் செய்திருக்கிறேன்"

- லிலா அஸாம் ஸங்காநெஹ் (Lila Azam Zanganeh)

## நேர்காணல்:

**நேர்காண்பவர்:**

நீங்கள் உங்கள் பேரனாரிடம் செல்லாத வரைக்கும் ஓர் புத்தகத்தையும் பார்க்கவில்லையென்றால் அது உங்கள் பெற்றோர் ஒரு புத்தகத்தையும் வைத்திருக்கவில்லை என்று பொருளாகுமா?

**அம்பர்தோ எகோ:**
அதற்கு வாய்ப்பு குறைவு. ஓர் இளைஞனாக இருக்கும் காலத்தில் எனது தந்தையார் ஓர் தீவிர வாசகர். எனது பேரனார் 13 பிள்ளைகளைக் கொண்டிருந்தமையால் அந்தக் குடும்பம் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற கஷ்டப்பட்டது. எனது தந்தையார் புத்தகங்களை வாங்க முடியாதிருந்தார். ஆகவே அவர் புத்தக விற்பனைக் கடைகளுக்குச் சென்ற அங்கு நின்றபடி வாசித்தார். எப்போது அந்த புத்தகக் கடையின் சொந்தக்காரர் எனது தந்தை அங்கு நிற்பதைக் கண்டு சலிப்படைகின்றாரோ அந்த நேரத்தில் அவர் வேறு கடையைப் பார்க்கப்போய் குறிப்பிட்ட புத்தகத்தின் இரண்டாவது பகுதியைப் படித்தார். இப்படித் தொடர்ந்தது. இது எனக்கு புதையல்போன்று உருவான ஓர் படிமம். புத்தகம் பற்றிய தேடலின் நெளிவு சுழிவுகள். ஓர் பெரியாள் என்பதனால் எனது தந்தையாருக்கு மாலை நேரங்களில்தான் படிக்க நேரம் கிடைத்தது. ஆகவே அவர் பெரும்பாலும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் படித்தார். எனது வீட்டில் சில புதினங்களே இருந்தன. அவை எமது அலுமாரியில் இல்லை. சேமிப்பறையில் பூட்டிவைக்கப்பட்டிருந்தன. சிலவேளைகளில் எனது தந்தையார் நண்பர்களிடம் இருந்து இரவல் வாங்கிய புத்தகங்களைப் படிப்பதைக் கண்டிருக்கிறேன்.

...

**நேர்காணப்பவர்:**
பாசிசம் இத்தாலிக்குள் நுழைகையிலும் போர் தொடங்குகையிலும் நீங்கள் ஓர் சிறுவன். அவற்றை நீங்கள் எவ்வாறு உள்வாங்கினீர்கள்?

**அம்பர்தோ எகோ:**
அது ஓர் முரண்பாடான நேரம். முசோலினி மிகவும் ஈர்க்கக்கூடியவராக இருந்தார். அந்தநேரத்தின் இத்தாலிய பள்ளிக் குழந்தைகள் அவரை மிகவும் ரசித்தார்கள். நான் பாசிஸ்ற் இளையோர் இயக்கத்தில் பதிவு செய்துகொண்டிருந்தேன். நாங்கள் அனைவரும் இராணுவ பாணி உடைகளை அணியக் கடமைப்பட்டிருந்தோம். சனிக்கிழமைகளில் ஊர்வலத்தில் பங்கெடுக்கவேண்டும். அதற்கு நாங்கள் சந்தோசப்பட்டோம். இன்றைக்கு அது ஓர் அமெரிக்க சிறுவன் அவர்களது ராணுவத்தினரின் உடையை அணிவதைப்போன்றது அது – அவன் அதை மிகவும் நல்லது என்று நினைக்கக்கூடும். சிறுவர்களாயிருந்த எங்களுக்கு அந்த மொத்த அமைப்புமே குளிர்காலத்தில் பனி விழுவதைப்போல கோடைகாலத்தில் வெப்பமாயிருப்பதைப் போல இயல்பானதாயிருந்தது. அதைவிட வெளியே வேறு வகையான வாழ்க்கை முறை இருக்கிறதென்று எங்களால் கற்பனை செய்யமுடியாதிருந்தது. யாரேனும் தாங்கள் சிறுவராயிருந்த காலத்தை நினைத்துப் பார்ப்பது போன்ற அதே இளமையுடன் நான் அதை நினைத்துப் பார்க்கிறேன். 1943 இல் அவை எல்லாம் முடிந்து போனபோது, முதல் பாசிசத்தின வீழ்ச்சியோடு, நான் மக்களாட்சித் தத்துவம் பற்றிய செய்தி ஏடுகளில் வேறுபட்ட பல கட்சிகளையும் அவற்றின் பார்வைகளையும் பற்றித் தெரிந்து கொண்டேன். செப்ரம்பர் 1943 இலிருந்து ஏப்பிரல் 1945வரையான மிகவும் பாதிக்கப்பட்ட வரலாற்றுக் காலத்தில் குண்டுவீச்சுக்களிலிருந்து தப்புவதற்கு நானும் எனது தாயாரும் எனது சகோதரிகளும் மொன்ற்பெராட்டோவிலுள்ள பைட்மொன்ரசே (Montferrato இல் உள்ள Piedmontese) கிராமப் பக்கங்களுக்குச் சென்றோம். அது எதிர்ப்புணர்வாளர்களின் மையமாகவிருந்தது.

**நேர்காணப்பவர்:**
நீங்கள் இந்தக் காலகட்டத்தில் உங்கள் கையை கவிதைப்பக்கம் நுழையவிட்டதாக சொல்லியிருக்கிறீர்கள். எழுதுவதைப் பற்றிய கட்டுரையொன்றில் "எனது கவிதைக்கான செயற்பாடுசார் தோற்றமும் வடிவக் கட்டமைப்பும் பதின்ம வயதில் வரும் முகப்பருவுக்கிருப்பதுபோலவே இருந்தது" என்றிருக்கிறீர்கள்.

**அம்பர்தோ எகோ:**
சில குறிப்பிட்ட வயதுகளில், ஒரு பதினைந்து பதினாறு வைத்துக்கொள்வோம், கவிதை என்பது சுயமைதுனம் செய்துகொள்வதைப்போன்றது என நினைக்கின்றேன். ஆனால் நல்ல கவிஞர்கள் தாங்கள் முன்னாளில் எழுதிய கவிதைகளைப் பின்னாட்களில் எரித்துவிடுவார்கள். மோசமான கவிஞர்கள் அவற்றை வெளியிடுவார்கள். நன்றிக்குரியவகையில், (Thankfully) நான் அவற்றையெல்லாம் வெகு விரைவாகவே கைவிட்டுவிட்டேன்.

...

**நேர்காணப்பவர்:**
உங்கள் இலக்கியத் தேடல்களில் உங்களை ஊக்குவித்தது யார்?

**அம்பர்தோ எகோ:**
எனது அம்மம்மா–அவர் ஓர் தீவிர வாசகர். அவர் தனது பள்ளிக் காலத்தில் 5 ஆவது வகுப்பு வரை மட்டுமே தேறியிருந்தார். ஆனால் அவர் நகரசபை நூலகத்தில் உறுப்பினராகவிருந்தார். அவர் கிழமைக்கு 2 அல்லது 3 புத்தகங்களை எனக்கென்று கொண்டுவருவார். அவை ஒரு ரூபாய்க்கு விற்கும் புதினங்களாகவோ அல்லது பால்சாக்கினுடையதாகவோ இருக்கலாம். அவருடைய பார்வையில் இவற்றுக்கிடையே பெரிய வித்தியாசமில்லை–அவை எல்லாமே அவரைஈர்த்துக் கட்டிப்போடுபவைதான். மற்றப்பக்கத்தில் என்னுடைய அம்மா எதிர்கால சுருக்கெழுத்தாளருக்குரிய படிப்பை முடித்திருந்தவர். பிரஞ்சும் ஜெர்மனும் படிக்கத் தொடங்கியிருந்தார். அவரது இளமைக் காலத்தில் மிக அதிகமாக வாசித்துத் தள்ளியவர் முதிர்வடைந்ததும் ஏனோ ஒரு வகைச் சோம்பேறித்தனத்துக்கு ஆட்பட்டுவிட்டார். காதல் நாவல்களையும் பெண்கள் சஞ்சிகைகளையுமே வாசித்தார். ஆகவே அவர் வாசித்த எதையும் நான் வாசிக்கவில்லை. ஆனால் அவர் மிகவும் கருணையுடன் மிக நல்ல இத்தாலியப் பாணியில் உரையாடுவார். மிக அழகாக எழுதுவார். அவருடைய நண்பர் தங்கள் கடிதங்களை அவரைக்கொண்டு எழுதுவிப்பார்கள். மிகவும் இளவயதில் பள்ளியைவிட்டு விலகியபோதும் மொழிகுறித்த மிகுந்த உன்னிப்பான உணர்வுடையவர். அவரிடமிருந்துதான் ஒரு இயல்பான எழுதுவதற்குரிய விருப்பையும் எனது தொடக்கநிலை பாணிகளையும் பெற்றுக்கொண்டேன் என்றே நான் நினைக்கிறேன்.



To Buy, to Sell and to become a REAL estate agent
VEEDU
REALTY INC.
BROKERAGE
Home of the
REAL
Estate Agents
Tam Sivathasan B.Sc Eng.
Broker of Record
Tel: 416.804.3443
Veedu Realty Inc.
Brokerage
1345 Morningside Ave., Suite 8, Toronto, ON, M1B 5K3
Office: 416.759.6000, Fax: 416.759.6005
www.veedu.com
digi Media

கட்டுரை

# அண்மைக்கால கவிதையும் அழகியலும்

செல்வா கனகநாயகம்

...அழகியல் பற்றிய எனது வினாக்களும் சந்தேகங்களும் மொழிபெயர்ப்புகள் மூலமாக உருவானவை. மொழிபெயர்ப்பில் உருவாகும் சிக்கல்களோடு சில உண்மைகளும் வெளிவருவதுண்டு. பல சந்தர்ப்பங்களில் தமிழ் கவிதையின் நுட்பத்தை ஆங்கிலத்தில் கூற முடியாது என்ற ஏக்கம் ஏற்படுகின்றது. அதே போல் தமிழ்க் கவிதையை வாசிக்கும் போது புலனாகாத குறைபாடுகளும் மொழிபெயர்ப்பின் போது தலை துக்குகின்றன. பிரயோசனம் இல்லாத சொற்கள் வரிகள், பயன்படாத உவமைகள் – இவ்வாறு பல குறைகள் மொழி பெயர்ப்பின் போது தெளிவாகின்றது...

ஈழத்து இலக்கிய வரலாற்றிய அண்மைக் காலத்தை நோக்கும் போது நாவல்கள் அல்லது சிறுகதைகளை விட கவிதை பெருமளவு தாக்கத்தை ஏறபடுத்தியுள்ளதைக் காணலாம். சிறப்பான பல நாவல்களும் சிறுகதைத் தொகுதிகளும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் எழுதப்பட்டுள்ளன என்பன மறுக்கமுடியாது. ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது இவற்றை விதிவிலக்கு என்றே கூற வேண்டும். இதற்கு மாறாக கவிதையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிய பரிமாணத்தைக் காணலாம். அரசியல், கலாச்சார நிலமைகள் பற்றிய விழிப்புணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்தி, காலத்தின் கதையைக் கூறும் ஊடகமாக கவிதை அமைந்துள்ளது.

கடந்த ஐம்பது ஆண்டுகளில், அதாவது சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இன்றுவரை, கவிதை பல்வேறு கட்டங்களினூடாக, பழமையை ஏற்று புதுமையை அரவணைத்து, புதிய அனுபவங்களுக்குக் குரல் கொடுத்துள்ளது பின் காலனித்துவம் மாற்றமடைந்து தேசியவாதமாக மாரிய காலத்தில் கவிதை அரசியல், சமூக நிலமைகளை பிரதிபலித்ததோடு அவற்றை கற்பனை ரீதியாக மாற்றியமைத்தது இலக்கிய வரலாற்றில் கடந்த ஐம்பது ஆண்டுகள் ஒரு திருப்புமுனையாக அமைந்தது என்று கூறுவது மிகையாகாது இக்காலப் பிரிவின் கவிதை எந்த பின்காலனித்துவ கவிதைக்கும் இணையாகும் என்பதை மறுக்க முடியாது.

ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கையின் சிறப்பையும் நுட்பத்தையும் அறிவதற்கு நாம் கவிதையை நோக்கியே செல்கின்றோம். இங்கு மக்களின் எதிர்கால கனவுகளையும், போராட்டங்களையும் காணக்கூடியதாக இருக்கின்றது. 1983ம் ஆண்டு நடந்த கலவரங்களை நாவல்கள் மைல்கல்லாக கொள்வது வழக்கம் உண்மையில் அதற்கு முன்னர் கூட ஒவ்வொரு தலை முறையும் அதற்கென சிறப்பான அடையாளத்தை உருவாக்கியுள்ளது. ஈழத்தைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு பிரதேசமும் அதன் தனித்துவத்தை நிலை நாட்டியுள்ளது.

எந்த விடயத்தைப் பற்றிக் கவிதை எழுதுவது, அதைப்பற்றி எவ்வாறு எழுதுவது என்பது அழகியல் சம்பந்தமான கேள்வி. புதிய வடிவல்கள், மரபுகள், யாப்புகள், சொற்பிரயோ கல்கள் ஆகிய யாவையுமே பல்வேறு மாற்றங்களை உள்ளடக்கின. கடந்த முப்பது ஆண்டுகளில் புலம்பெயர்வு முக்கியத்துவம் பெற அதைத் தொடர்ந்து ஒரு புதிய பரிமாணம் உருவாகியது. எதைக் கூறுவது, எதை மறப்பது, எவ்வாறு அடையாளத்தை மாற்றியமைப்பது என்ற கேள்விகளுக்கெல்லாம் கவிதையில் ஆக்கபூர்வமாக பதில்களைக் காணலாம்.

மேலெழுந்த வாரியாகக் கூறும்போது கடந்த முப்பது

ஆண்டுகளில் எழுதப்பட்ட கவிதைகளுக்கு அரசியல அடித்தளமாக அமைந்தது என்று கூறலாம். இந்தக் கட்டுமை இக்காலப் பிரிவையே முக்கியமாக ஆராய்கின்றது. இதற்கு ஒரு காரணமுண்டு. பல வகைகளில் இதற்கு முன்னர் உள்ள முப்பது ஆண்டுகளில் எழுந்த கவிதைகள் இலக்கியத்தை இலக்கிய வடிவமாக நோக்குவதைக் காணலாம். சமூக பிரச்ச னைகளைப் பற்றி கவிதைகள் எழுதப்படும் போதும் கூட அழகி யல் கவிதைக்கு முக்கிய வரம்பாக அமைந்துள்ளது. சில கவி ஞர்கள் மரபுசார்ந்த யாப்புகளைக் கடைபிடிக்க வேறுசிலர் புதுக்கவிதையின் தரவுகளைப் பின்பற்றினர். ஆனால் இரு பகுதியினருமே அழகியலுக்கு ஏதோ வகையில் முக்கியத்துவம் கொடுத்தனர். இந்தப் பின்னணியில் கவிதைகளின் தரம் பற்றி முடிவுகளை எடுப்பது ஓரளவு சுலபமாக இருந்தது எனக் கூறலாம். ஒரு காலப்பிரிவின் கவிதையை பற்றி இவ்வாறு கூறுவது முற்றிலும் பொருத்தமானது என்று கூறமுடியாது. இது விவரமாக ஆரயப்பட வேண்டிய விடயம். இருந்தாலும் ஒரு உதாரணத்தைக் கொடுத்துவிட்டு கட்டுரையின் முக்கியமான நோக்கத்திற்கு வர விரும்புகின்றேன். மஹாகவியின் 'ஒரு சாதா ரண மனிதனது சரித்திரம்' என்னும் நீள் கவிதையின் ஆரம்பத் தில் வரும் இக்கவிதை அழகியல் பற்றிய கருத்தினைக் காட்டு கின்றது.

காலை ஒன்று கிழக்கில் விடிந்தது.
கண்ட புட்கள் எழுந்து கரைந்தன.
கோழிச் சேவல் தான் குந்திய மாமரக்
கொம்பில் நின்று குதித்தது, வந்திததோ
வேலுப்பிள்ளையின் வீட்டு விறாந்தையில்
மேலும் கீழும் நடந்து, வெளியிற் போய்க்
காலில் உள்ள நகங்கொண்டு குப்பையைக்
காதலோடு கிளறிடல் ஆனது.

வர்ணனைச் சிறப்பும் எளிமையும் கொண்டுள்ள இந்த வரிகளில் அழகியலே மேலோங்கி நிற்பதிக் காணலாம்.

ஏறத்தாழ 85ம் ஆண்டளவில் மரணத்துள் வாழ்வோம் என்ற கவி தைத் தொகுதியின் வெளியீட்டோடு கவிதையின் போக்கில் முக்கியமான மாற்றத்தைக் காணலாம். இதற்குப் பின்னர் ஏதோ ஒரு வகையில் கவிதைக்கு அடித்தளமாக அரசியல் அமை கின்றது. அரசியல் நிலமைகள் ஆழமாக மக்களின் வாழ்க்கை யைத் தாக்கத் தொடங்க கவிதையும் புதிய வேகத்தோடு செயல் பட்டது. சில கவிஞர்கள் பல்வேறு இயக்கங்களின் கருத்து நிலையோடு தம்மை இணைத்துக் கொண்டனர். வேறு சிலர் எந்தப் பகுதியையும் சாராது நின்ற பொழுதிலும் அரசியலையே மையமாக வைத்த கவிதைகள் எழுதினர். கவிதை வாசிப் போரை மட்டுமின்றி கேட்போரையும் உள்ளடக்கி இயலகத் தொடங்கியது.

இவ்வாறு நாட்டின் பல பிரதேசங்களிலும் வளர்ச்சி பெற்ற கவிதைகளின் அழகியல் பற்றி சில கேள்விகளை எழுப்புவதே இந்தக் கட்டுரையின் நோக்கம். இத்தகைய கேள்விகளுக்குப் பதில் காணுவது இலகுவாக விடயமல்ல. அரசியல் எதிர்ப்புக் காரணமாகவோ, மக்களின் பொதுவான துன்பங்கள் காரணமாகவோ எழுதப்பட்ட கவிதைகளின் தாக்கத்தையும் செல்வாக்கையும் எட்ட நின்று எடை போடுவது பொருத்தமானதா என்பது ஒரு அடிப்படையான கேள்வி. அவ்வாறு எடைபோட முடியுமா என்பது கூட தெளிவாகத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, ஈழத்தைப் பொறுத்தவரையில் கவிஞர், விமர்சகர், புத்தி ஜீவிகள் யாவரும் நெருங்கிய வட்டத்திற்குள் இயங்குபவர்கள். இந்த நிலையில் புறநிலையில் நின்று கவிதையை நோக்குவது சுலபமல்ல.

அழகியல் பற்றிய எனது வினாக்களும் சந்தேகங்களும் மொழி-பெயர்ப்புகள் மூலமாக உருவானவை. மொழிபெயர்ப்பில் உருவாகும் சிக்கல்களோடு சில உண்மைகளும் வெளிவருவ துண்டு. பல சந்தர்ப்பங்களில் தமிழ் கவிதையின் நுட்பத்தை ஆங்கிலத்தில் கூற முடியாது என்ற ஏக்கம் ஏற்படுகின்றது. அதே போல் தமிழ்க் கவிதையை வாசிக்கும் போது புலனாகாத குறைபாடுகளும் மொழிபெயர்ப்பின் போது தலை தூக்குகின்றன. பிரயோசனம் இல்லாத சொற்கள் வரிகள், பயன்படாத உவமைகள் - இவ்வாறு பல குறைகள் மொழி பெயர்ப்பின் போது தெளிவாகின்றது. தமிழில் படிக்கும் போது ஓசையின் இன்மையாலோ, கருத்தின் முக்கியத்தாலோ மறைக்கப்பட்ட பலவீனங்கள் இப்பொழுது மேலெழுந்து நிற்கின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் மொழிபெயர்ப்புகள் எங்களை மீண்டும் மூல மொழிக்கே கொண்டு செல்கின்றன.

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் அழகியல் பற்றிய ஆராய்ச்சி குறைவாக மூல மேற்கொள்ளப் பட்டுள்ளது எனலாம். அண்மைக் காலத்தில் சில நூல்களும் கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ள போதும் கணிசமான அளவில் அழகியல் பற்றிய ஆராய்ச்சி நடக்க வில்லை என்றே கூறவேண்டும். க.சிவத்தம்பி எழுதிய தமிழில் கவிதையியல் ஒரு முக்கிய விதிவிலக்கு எனலாம். இந்த நூல் சங்க காலத்திலிருந்து இன்றுவரை எவ்வாறு அழகியல் வளர்ந்துள்ளது என்பதை ஆராயமுற் படுகின்றது.

அண்மைக் கால இலக்கியம் பற்றி சிவத்தம்பி எழுதும்போது முக்கியமான சில நோக்குகளைக் காண்கிறார். அவரைப் பொறுத்த வரையில் ஒரு சில கவிஞர்கள் பழைய மரபுகளை கடைபிடித்துக் கவிதைகளை எழுதுகிறார்கள். அல்லது பழைய மரபுகளை அடித்தளமாக வைத்து புதுக்கவிதை எழுதுகி றார்கள். வேறுசிலர் மரபை முற்றாகப் புறக்கணித்து எழுதுக-றார்கள். சிவத்தம்பியின் நோக்கில் இரண்டையும் இணைத்து எழுதுகின்ற சில கவிஞர்கள் அற்புதமான கவிதைகளைப் படைத்துள்ளவர். இதே போன்று சோ.பத்மநாதனும் 'புதுக்கவ-தைக்கும் ஓசை யுண்டு' என்ற கட்டுரையில் சிறந்த புதுக்கவ-தைக்குப் பழைய மரபு அத்திவாரமாக அமைகின்றது என்பதை நிலை நாட்டு கின்றார்.

சிவத்தம்பியும் பத்மநாதனும் அடிப்படையான உண்மையைக் கூறுகின்றார்கள். ஆனால் அவர்களுடைய ஆய்வில் கவிதை யின் வடிவத்திற்கும் கவிதையியலுக்கும் இடையில் முடிச்சு போடுகின்ற தன்மையைக் காணலாம். இந்த இணைப்பில் சில சிக்கல்களும் உள்ளன. தமிழ்க் கவிதையின் மரபு இரண்டாயிரம் வருடங்களுக்கு மேற்பட்டது. இத்தகைய நீண்ட மரபினைப் பற்றிப் பேசும் போது அறிஞர்கள் பொதுவாகக் கவிதையின் யாப்பு எவ்வாறு ஒவ்வொரு காலப்பிரிவில் மாறுபட்டது என்றும், ஒவ்வொரு காலத்திலும் யாப்பு அல்லது வடிவத்திற்கும்

பொருளடக்கத்திற்கும் இடையில் எத்தகைய தொடர்பு இருந்ததென்றும் கூறுவது வழக்கம். அகவல், வெண்பா, விருத்தம் ஆகியவை எப்பொழுதும் தோன்றின, அவை எத்தகை அனுபவத்தை எடுத்துக்கூற பயன்பட்டன என்று அறிஞர்கள் எடுத்துக்காட்டுவதுண்டு இவ்வாறு பிரிவினைகளை எடுத்துக் காட்டி அவற்றைப் பற்றி நுட்பமாக விமர்சிப்பதை அழகியல் ஆய்வு என்று கருதுவது பொருத்தமானதன்று.

சிவத்தம்பி தன்னுடைய நூலில் தொல்காப்பியத்தின் துணையில்லாமல் சங்க இலக்கியத்தைப் பார்க்கலாமா என்ற கேள்வியை எழுப்புகின்றார். தொல்காப்பியத்தை அத்தியாவசயமான கேள்வி விசித்திரமானதாக இருக்கலாம். ஆனால் உண்மையில் சிவத்தம்பி கூறுவதுபோல தொல்காப்பியத்தின் நிழல் படாது. சங்க இலக்கியத்தை நாம் நோக்கினால் அந்தக் காலப்பிரிவின பன்முகப்பட்ட தன்மை வெளியாகும். தொல்காப்பியர் அமைந்த வரம்புகளை மீறி சங்க இலக்கியம் இயங்குவதை நாம் சிவத்தமியின் ஆய்வில் காணலாம். ஆனால் இவர் தமிழ்க் கவிதையின் வரலாற்றைப் பற்றி பேசும்போது, தொல்காப்பியம் செய்ததுபோல வரையறைகளை நிலைநாட்டுகின்றார். இத்தகைய அணுகுமுறையில் அழகியலுக்கு பெரும் முக்கியத்துவம் கொடுபடுவதில்லை. கவிதையியலுக்கும் அழகியலுக்குமிடையில் வேறுபாடு உண்டு என்பது உண்மையென்றாலும் கூட அழகியலை உள்ளடக்காத கவிதையியல் பயனற்றதாகி விடுகின்றது.

ஒருவகையில் பார்க்கும்போது இக்கட்டுரையின் முக்கிய கேள்வி பொதுவாக பின்காலனித்துவ இலக்கியத்திற்கும் பொருந்தும். கலனித்துல அனுபவத்தினால் பல நாடுகள் உருவாக்கிய கவிதைகள் அழகியலை முக்கியமாகக் கருத்தில் கொள்ளவில்லை. தேசிய வாதத்திற்கு, சுய ஆட்சியின் மறுமலர்ச்சிக்கும் பக்க பலனாகக் கவிதையும் இலக்கியமும் இயங்கும் போது அழகியல் முக்கியம் பெறுவதில்லை. அதே போன்று ஈழத்துக் கவிதையும் அரசியலோடு இணைந்து நிற்கும் போது அழகியலைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கவில்லை.

அது மட்டுமல்ல, கடந்த முப்பது ஆண்டுகளில் செய்திகளின் பரவல் பல தடவைகளில் அதிகார சக்திகளாலும், கருத்து நிலைகளாலும் கட்டுப்படுத்தப்பட்டது. பல ஆண்டுகள் செய்திகள் தடை செய்யப்பட்டன. பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், வானொலியும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகைய பின்னணியில் உண்மையைக் கூறும் பொறுப்பு இலக்கியத்தின் மேல் விழுந்தது. உண்மையை அறிவதற்கும், கற்பனையில் தோன்றிய கவிதையை வாசிக்க வேண்டிய நிலையும் இருந்தது.

அதுமட்டுமல்ல, இக்காலப் பிரிவில் கவிஞனாக இருப்பது இலகுவான விடயமாக இருக்கவில்லை. கடுமையான விமர்சனத்திற்கு உட்பட்டதோடு இவர்கள் சில சமயங்களில் போற்றப்பட்டனர். சில சமயங்களில் தூற்றப்பட்டனர். முக்கியமான கவிஞர் பலர் நாட்டை விட்டு வெளியே செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டது. கவிதைக்கும் மக்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உருவானது.

இவற்றையெல்லாம் முக்கியமான அம்சங்களென்று ஏற்றுக் கொண்டாலும், எந்தக் கவிதை முக்கியமானது, திறமை வாய்ந்தது என்ற கேள்வி ஏற்படவே செய்யும். புலம் பெயர்வினாலும் வேறுபல காரணங்களாலும் கவிதைகளை எழுதவும், வெளியிடவும் கூடி சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ள இந்தக் காலத்தில் கவித்திறன் வாய்ந்த கவிதை எது, உணர்ச்சியை அல்லது கருத்தை மட்டும் வைத்து எழுதப்பட்ட கவிதை எது என்று நிர்ணியிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மரபை மட்டும் கடைப்பிடிப்பது நல்ல கவிதைக்கு அத்திவாரமாக அமையாது. புதுக்கவிதை என்ற பெயரில் எழுதப்படுவதெல்லா கவிதையல்ல. அழகியல் நோக்கில் பார்க்கும் போது சிறப்பான கவிதையென்று போற்றக் கூடிய இலக்கியம் என்ன என்று நிர்ணயிப்பதற்குரிய தரவுகளை நாம் உருவாக்க வேண்டும்.

இத்தகைய கண்ணோட்டம் பழமையைத்தழுவி நிற்கின்றது என்று சிலர் கருதலாம். உண்மையில் அழகியலை முன்வைப்பதில் எந்தத் தவறும் இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பேணப்பட்ட மரபு, நாளாந்த வாழ்க்கையில் முக்கிய ஸ்தானத்தை வகிக்கும் மரபு தமிழரின் அடையாளத்திற்கு முக்கியமான அம்சம். இதை நாம் புறக்கணிப்பது இலக்கியத்திற்கு பாதகமாக அமையும். மேல் நாட்டில் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் சரி, தமிழ் நாட்டின் ஒரு கிராமத்தில் வாழ்ந்தாலும் சரி, பக்தி இலக்கியமாக உருவான சில கவிதைகள் நாளாந்தம் கோவில்களிலும் வீடுகளிலும் பாடப்படுகின்றன. இதற்குக் காரணம் மக்களின் பக்தி ஆழம் என்று கூற முடியாது. பக்திதான் காரணமென்றால், அல்லது கருத்தாழம் தான் காரணமென்றால் இந்தக் கவிதைகள் நிலைத்திருப்பது கடினம். ஏதோ ஒரு வகியில் இந்தக் கவிதைகள் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் உருவான தேவையைப் பூர்த்தி செய்வதோடு எந்தக் காலத்திற்கும் தன் முக்கியத்துவததை நிலைநாட்டுகின்றன. நூல்கள் இந்த வரிகளை மீண்டும் மீண்டும் கூறுகின்ற பொழுது, எங்களுடைய சம்பிரதாயங்களுடன் இணைக்கும் போது, எங்களுடைய பேச்சோடு சேர்க்கும் பொழுது, இந்தக் கவிதைகளின் தனித்துவத்தை வேறெந்த வகையிலும் கூற முடியாது என்பதை ஒத்துக் கொள்கிறோம். உதாரணமாக, பெரிய புராணத்தின் கடவுள் வாழ்த்தைக் கூறலாம்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

இந்தக் கடவுள் வாழ்த்து, சேக்கிழாரின் அகநிஅலியைப் பிரதிபலிக்கலாம். ஆனால் ஒவ்வொரு வரியையும் அழகியல் நோக்கோடு பார்க்கும், கவிதையின் அழகியல் நோக்கோடு பார்க்கும், கவிதையின் இறுக்கமும் ஆழமும் தெளிவாகின்றது. சொற்பிரயோகத்தினால் உருவாகும் கருத்து வேறெந்த வகையிலும் சொல்ல முடியாத உச்சத்தை அடைகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் சிவத்தம்பி தன்னுடைய நூலில் கூறியுள்ள இன்னொரு விடயத்தை நினைவு கூறுதல் வேண்டும். தமிழ் மரபில் புலவன், கவிஞன் என்று இரு பிரிவிகைகள் இருப்பதை சிவத்தம்பி சுட்டிக்காட்டுகின்றார். மேலோட்டமாக நோக்கும் போது புலவன் என்று கூறப்படுபவன் மரபு சார்ந்த ஆளுமையை வெளிப்படுத்தும் வகையில் எழுதுகின்றான். கவிஞனோ ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்று, அகநிலை சார்பான, கவிதைகளாய் உருவாக்கின்றான். ஆனால் கவிஞனின் படைப்பு சிறப்பானதாக அமையும் போது அது பொதுவாக எல்லா

வாசகர்களுக்கும் அர்த்தமுள்ளதாக மாறுகின்றது. கவிஞனின் கவலையும் துன்பமும் யாவருடைய கவலையாகவும் துன்பமா கவும் மாறிவிடுகின்றது. இவ்வாறு நடக்கும் போது கவிதை அழகியல் நோக்கில் முக்கியத்துவம் பெறுகின்றது.

சில வகைகளில் பக்தி இலக்கியம் படைத்த கவிஞனுக்கும், அரசியல் மாற்றத்தைப் பற்றி எழுதிய கவிஞனுக்கும் இடையில் ஒற்றுமை உண்டு. இருவருமே பொதுவான அனுபவச் சூழலின் மத்தியில் இருந்து எழுதுகிறார்கள். ஒரு காலப்பிரிவில் தெய் வீகம் எங்கும் பரவியது. இன்னொரு காலத்தில் துன்பம் எங்கும் பரவியது. இருந்தாலும் நாங்கள் நினைவு கூறும் அண் மைக்கால கவிதைகள் பல என்று கூறமுடியாது. குறிப்பிட்ட சில கவிதைகளே எங்களைப் பெரும்பாலும் கவருவதைக் காணலாம். இதற்கு ஒரு காரணம் நாங்கள் வாய்மொழி பண் பாட்டிலிருந்து, எழுத்து சார்ந்த பண்பாட்டிற்கு மாறியது எனலாம். ஆனால் அது முற்றிலும் உண்மையல்ல. நாளாந்த வாழ்க் கையில் வாய்மொழி சார்ந்த வழக்குகளுக்கு இப்பொழுதும் முக்கிய இடமுண்டு.

*1984 ம் ஆண்டு பதினொரு ஈழத்துக் கவிஞர்கள் என்ற நூல் எழுதப்பட்ட போது அதில் 11 கவிஞர் இடம் பெற்றனர். அடுத்த ஆண்டு மரந்துள் வாழ்வோம் என்ற தொகுதி வெளிவந்த போது அதில் 31 கவிஞர்கள் சேர்க்கப்பட்டனர்.* இவ்வாறு கூறும்போது ஒன்று மற்றதைவிட சிறப்பானது என்று கருத முடியாது. அரசியல் நிலைமை மாற கூடிய அளவில் கவிஞர்கள் உருவாக வேண்டிய நிலைமை ஏற்படலாம். அதே நேரத்தில் கூடிய அளவில் தரவுகளைக் கைப்பிடிக்க வேண்டிய தேவையும் உள்ளது எனலாம்.

இந்தக் காலப்பிரிவில் கட்டுரைகளும், பத்திரிகைகளும் பல்வேறு கட்டுப்பாடுகளுக்குள் இயங்கினாலும், மக்களுடைய வாழ்வில் அத்தியாவசியமான தேவையை பூர்த்திசெய்தது. இவற்றினு டைய முக்கியத்துவமே உடனடியாக செய்திகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவதில் தங்கியிருந்தது. இத்தகைய இலக்கியத்தின் நோக்கையும் கவிதையின் நோக்கையும் ஒரே தளத்தில் வைத்து எடைபோட முடியாது. தகவல் தெரிவிப்பது கவிதையின் நோக்கமல்ல. இதனால் தான், இன்று அரசியல் நிலைமை மாறிய பின்னர் சில கவிதைகள் தமது முக்கியத்துவத்தை இழந்துவிடுமா என்ற ஐயம் ஏற்படுகின்றது. முன்னர் குறிப்பிட்ட பக்திக் கவிதைகள் இன்று வரை கொண்டாடப்படுகின்றன. மதச் சார்பு இல்லாதவர்கள் மத்தியிலும் இவை நிலைத்திருக்கின்றன. அண்மைக்கால இலக்கியத்தின் நிலைமை எவ்வாறு அமையும் என்பது முக்கியமான கேள்வி.

சேரன் தன்னுடைய கவிதையொன்றில் நூறுநூறாயிரம் தோள்களில் நின்று கவிதை இயற்றுவதைப் பற்றிக் கூறுகின்றார். இத்தகைய எண்ணத்தின் பின்புலம் என்ன? மரபை அரவணைப் பதின் பொறுப்புகள் என்ன? தமிழ்ச் சூழலில் கவிஞனின் அடை யாளம் என்ன?

/

நூறுநூறாயிரம் தோள்களின்மீது
ஏறி நின்று
எனது நிலம் என உரத்துச் சொல்கிறேன்.

/

அண்மைக் காலத்தில் பல சிறப்பான கவிஞர்கள் உருவாகியுள்ளனர் என்பது உணமை. சில சமயங்களில் இவர்களின் பிரதேச சார்பை வைத்து இவர்களை வேறுபடுத் துவது வழக்கம். அதே போல புலம்பெயர்ந்த மண்ணில் உருவான கவிதைக்கு ஒரு தனித்துவம் இருக்கலாம். அவ்வாறு நோக்கும் போது சேரனுக்கும், ஜெயபாலனுக்கும், சோலைக் கிளிக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருக்கலாம். சேரனின் கவிதைகளில் நவீனத்தின் தாக்கத்தையும், கட்டுடைப் புக்குரிய கற்பனைத் தன்மையையும் காணலாம். ஜெயபாலன் ஓசைக்கு முக்கியத்துவம் கொடுத்து, மரபு சார்ந்த உவமைகளை முன்வைத்து கவிதைகளை இயற்றலாம். இதே போன்று சிலர் ஒரு தனி வாசகனை மனதில் வைத்து எழுதியிருக்கலாம். இன்னொரு கவிஞன் பொதுமக்கள் முன் பாடல் வடிவத்தில் கூறுவதை அழுத்தி கவிதை எழுதலாம். இத்தகைய வேறுபா டுகள் யாவும் முக்கியமானவையே ஆனால் இவற்றை அழகியல் தரவுகள் என்று எண்ணி விடக் கூடாது. எப்பொழுது கவிஞனின் கையில் மொழிப்பிரயோகம் மாற்றமடைந்து சாதாரண விடயங்க ளிலிருந்து புதியதொரு கருத்தை, பரிமாணத்தை உருவாக்கின் றதோ அங்கு அழகியல் ஆரம்பமாகின்றது.

அரசியல் கவிதைகள் பொதுவாக நிகழ்கால விடயங்களையே வலியுறுத்துவது வழக்கம். இவற்றின் கால வரையறைகள், எல்லைகள் நெருக்கமாகவோ இருப்பது சகஜம். அப்படி இருந் தாலும் கூட சில கவிதைகளின் வரிகள் அதன் எல்லைகளை மீறி பரந்து நிற்கின்றன. உதாரணமாக

/

மண்ணிலெம் காலை ஆழப் பதித்து
மரண தேவதை இயற்கையாய் வந்து
வருக என்னும் இறுதிக் கணம்வரை
மூக்கும் முழியுமாய்
வாழவே எழுந்தோம்!

/

என்று ஜெயபாலன் எழுதும் போது அந்த மொழியின் தாக்கம் புதியதொரு கற்பனையை உருவாக்கின்றது. இதே தாக்கத்தை சேரனின் சில வரிகளில் காணலாம்.

/

கறை படியாக் கரங்களெனத்
திக்கெட்டும் பறையறைந்து
கவி சொன்ன
என் வாய்க்குச்
செருப்படி!

/

இரண்டிலுமே சொற்பிரயோகம் பல்வேறு தளங்களில் நின்று நாங்கள் எதிர்பாராத தெளிவையும், ஆழத்தையும் உருவாக் கின்றன. இங்கு கூறப்படுகின்ற ஆத்திரமோ, எதிர்ப்புணர்ச்சி யோ ஒரு தேவையின் விளைவாக ஏற்பட்டிருக்கலாம். ஆனால் கவிதையில் ஒரு தனி மனிதனின் தீர்மானம் யாவருடைய தீர்மானமாக மாறுகின்றது. சாதாரண மொழி திடீரென அசாதா ரண தன்மையைக் காட்டி நிற்கின்றது. இங்கு அழகியல் ஓங்கி நிற்பதிக் காணுகின்றோம்.

அண்மைக்காலத்தில் உருவாக்கப்பட்ட பல சிறப்பான கவிை தகள் தமிழ்க் கவிதை மரபை வெளிப்படையாகவோ மறை-

றவாகவோ தழுவி நிற்கின்றன. தமிழ்க் கவிதையைப் பொறுத்த வரையில் மரபைப் புறக்கணிப்பதோ, மறப்பதோ முடியாதகாரியம். இந்த மரபு கவி ஞனின் கற்பனைக்கு வளமூட்டுவதுமல்ல, சிறப்பான கவிதை காலத்தால் அழியாது என்பதை நினைவுறுத்துகின்றது. அதே சமயத்தில் பழமையை மீண்டும் உருவாக்க முடியாது. தற்கால கவிஞன் வெண்பாவில் கவிதை இயற்றி வாசகர்களைக் கவர முடியாது. இன்றைய கவிதை நவீனத்தைப் பேணத்தான் வேண்டும். ஆனால் எப்பொழுது நவீனத்துவம் அழகியலை மறந்து, அனுபவத்திற்கு முதலிடம் கொடுக்கின்றதோ அப்பொ ழுது கவிதை பத்திரிகையின் உரைநடை போன்று மாறிவிடு கின்றது. அதனுடைய நோக்கம் செய்தியைக் கூறுவதேயொழிய மொழியை மாற்றியமைப்பது அல்ல. நூல்கள் பெரும்பாலும் அழகியலுக்கு முதன்மை கொடுத்து கவிதைகளைப் படிப்பதில்லை. மொழிக்கும் கருத்திற்கும் இடையே மீண்டும் மீண்டும் உருவா கும் தகராறின்

> ...கவிதையியலுக்கும் அழகி
> யலுக்குமிடையில் வேறுபாடு
> உண்டு என்பது உண்மையென்
> றாலும்கூட அழகியலை
> உள்ளடக்காத கவிதையியல்
> பயனற்றதாகி விடுகின்றது...
> ...இன்றைய கவிதை நவீனத்தைப்
> பேணத்தான் வேண்டும். ஆனால்
> எப்பொழுது நவீனத்துவம் அழகி
> யலை மறந்து, அனுபவத்திற்கு
> முதலிடம் கொடுக்கின்றதோ
> அப்பொழுது கவிதை பத்திரிகையின்
> உரைநடை போன்று
> மாறிவிடுகின்றது...

விளைவாக ஏற்படுவதே சிறந்த கவிதை.

இறுதியாக சண்முகம் சிவலிங்கத்தின் கவிதையோடு கட்டு ரையை முடிக்க விரும்புகின்றேன். இந்தக் கவிதை எந்தச் சூழலில் எழுதப்பட்டிருக்கலாம் என்று ஊகித்து அறிவது கடின மில்லை. இங்கு கூறப்படுவது தனி மனிதனின் துயரம், பொது மக்களின் துயரம். இதற்கு மேலால் எங்களின் கவனத்தை ஈர்ப்பது கவிதையின் வடிவமும், அதன் சொற்பிரயோகத்தின் ஆழமும், உவமையும் உருவகமும் அகநிலையின் பல்வேறு தளங்களையும் தழுவி வருகின்றது. கவிதையின் நோக்கில் எப்பொழுது மனம் மரத்துப் போய் நிற்கின்றதோ அந்த நேரத்தில் தான் துன்பம் தணல் போல் எரிகின்றது. வானமும் பூமியும் பிளக்கின்ற நேரத்தில் தான் தெளிவான காட்சியும், திடமும் உருவாகின்றது. இந்தக் கவிதையில் அழகியலின் மேன்மையைக் காண்கின்றோம்.

## கல்லாகிப் போனவர்கள்

நாம் கல்லாகிப் போனவர்கள்
கல்லாகிப் போனதெங்கள்
கண்களும் உதடுகளும்
அச்சமும் பயமும் அற்றே போயின
மிஞ்சி இருப்பது வெந்தழல் மாத்திரம்
வெளிவரக் கனன்று கொண்டிருக்கும்
தீப்பிழம்பு

இந்தப் பாறையின் மீதுதான்
எங்கள்
நாடும் நகரும் உருவாகும்
இந்தப் பாறைகளின் மீதுதான்
எங்கள்
பசும் சோலைகளும் உருவாகும்

அதுவரையில்
கடல்கள் பிளக்கும்
நிலங்கள் வெடிக்கும்
வானம் கிழியும்
நட்சத்திரங்கள் உடையும்
இவற்றிடையே
நிமிர்ந்து நிற்போம் நாம்
கல்லாக.

அண்மைக் காலத்தில் தோன்றிய ஏராளமான கவிதைகளை ஒட்டுமொத்தமாக நோக்கும், அழகியல் சார்ந்த தரவுகள் உருவாக்கப்படாது போனால் மரபைப் பேணுவது கடினம் என்பது தெளிவாகும்.

ஆங்கிலக் கவிஞர் வேடஸ்வேத் (Word worth) கவிதையியல் பற்றிக் கூறும் போது, கவிதை 'அகநிலையின் தாக்குதலால் மடை திறந்த வெள்ளம் போல்' வெளிவரும் என்று கூறுகின்றார். அதே சமயம் அகநிலையின் தாக்கம், அனுபவத்தை மீள்நோக்கம் செய்யும் புறநிலையிலேயே உருவாக வேண்டும் என்றும் சொல்கின்றார்.

கட்டுரை

# இலங்கை இந்தியா ஈழம்

## கற்றுக்கொள்ளாத பாடங்கள்

த.சிவதாசன்

*...தென்–கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் தற்போது இருக்கின்ற வலுச் சமன்பாட்டில் இலங்கைக்கும் ஒரு பங்கு இருக்கிறது. இதையே பகடைக்காயாகப் பாவித்து மஹிந்த புலிகளை வென்றார். அது நீண்ட காலத்திற்கு நிலைக்காது...*

*...அடுத்தகட்ட ஆயுதப்போரைத் தமிழரால் தனியேநின்று நடாத்த முடியாது. பொருளாதாரத் தேவைகளை மீறித் தார்மீகத் தேவைகளை முன்னிலைப்படுத்த உலகம் தயாராவில்லை...*

'இதயம் பலவீனமானவர்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு வரவேண்டாம்' என்ற எச்சரிக்கையோடு நண்பர் உரையாடலை ஆரம்பித்தார். சமீபத்தில் யாழ்ப்பாணம் போய் வந்ததன் பின்விளைவு அது. அவர் ஒரு நீண்டகால 'புலி விமர்சகர்' நீண்ட காலமாகப் போராட்டத்தின் போக்குகளை விமர்சித்தவர் constructively, of course!.

தமிழர் அடையாளங்கள் வெகு வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. திட்டமிட்ட வகையில் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு வருகின்றன. தட்டிக் கேட்க யாருமில்லை. புலிகள் தோற்கடிக்கப்படுவார்கள் என்று இலங்கை அரசமட்டுமல்ல புலிகளைப் பலவீனப்படுத்துகிறோம் என்று நினைத்து கண்டும் காணாமல் இருந்த உலக நாடுகளும் எதிர்பார்த்திருக்கவில்லை. புலிகளின் அழிவு மேற்கின் திட்டங்களையும் சேர்த்தே அழித்துவிட்டது.

புலிகளின் ஆட்சியின் உச்சம் பேச்சுவார்த்தைக்கு முன்பான காலம் என்றுதான் சொல்லலாம். சோழர் ஆட்சிக்குப் பின்னர் தமிழரின் பொற்காலமும் அதுவே. அந்த வெற்றியின் பாற்பட்ட நெகிழ்வற்ற தன்மையே அவர்களது அழிவின் ஆரம்பம். There was writing on the wall. மலை உச்சியில் ஆரம்பிக்கும் சிறு சரிவுகள்தான் அடிவாரத்தில் பலத்த அழிவுகளைக் கொண்டு வருகிறது. துரதிர்ஷ்டவசமாக அங்குதான் அவர்களின் குடிமக்களும் வாழவேண்டியும் நேரிடுகிறது.

புலிகளின் அழிவு ஏற்படுத்தப் போகும் பாரிய உட்சிதைவைத் (massive implosion) தாங்குவதற்கான தயாரிப்பில் எவருமே இருந்திருக்கவில்லை. இலங்கை அரச மட்டுமல்ல தமிழ்நாடு மற்றும் புலம் பெயர்ந்த தமிழருங்கூட எதிர்பார்த்திருக்கவில்லை. ஒரு வகையான avalanche தான். அதைத் தடுத்து நிறுத்தும் வல்லமை எவருக்குமே இருந்திருக்கவில்லை. உணர்ச்சி வசப்பட்ட கூச்சல்களை நிரப்பிக்கொண்டு 'தார்மீகப் படைகள்' வந்திறங்கி தங்களைக் காப்பாற்றும் என்று மக்களை நம்ப வைத்ததில் வெளிநாட்டுத் தமிழர்களுக்கு (தமிழ்நாடு சேர்ந்த) பாரிய பங்குண்டு.

புலிகளின் அழிவால் வந்த பாரிய உட்சிதைவு முழு இலங்கையினதும் சிதைவுக்கான ஆரம்பமேதான். புலிகள் இருந்த உச்சி இன்று மஹிந்தவின் ஆட்சியில் இருக்கிறது. வெற்றிக் களிப்பின் கேளிக்கைகள் முடிய அவரது பாதங்களுக்குக் கீழே சரிவுகள் ஆரம்பிக்கும். இந்தத் தடவை அது தமிழர் தரப்பிலிருந்து அல்லாது தென்னிலங்கை மக்களிடமிருந்து ஆரம்பிக்கும். ஜே.வி.பி மற்றும் மாணவர் கிளர்ச்சிகள் அதைக் கொண்டு நடத்தும்.

தமிழரைத் தோற்கடித்ததற்காக ஈழத் தமிழர்கள் இந்தியாவை நொந்து கொண்டதும் அதன்மீது சாபமிட்டதும் புரிந்துகொள்ளப்பட வேண்டியதே. ஆனால் ஒரு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் இந்தியாவைத் தவிர வேறெந்த சக்தியாலும் முடியாது என்பதையும் நாம் உணரவேண்டும். வெறும் உணர்ச்சி வசப்பட்ட தூற்றல்களும் காழ்ப்புணர்வுகளும் தமிழருக்கு எந்தவிதத்திலும் உதவாது. இந்தியாவைப் பங்காளியாக்காது பாதுகாப்பான வெளிநாடுகளிலிருந்து நாம் எடுக்கின்ற எந்த முயற்சிகளும் மீண்டுமொரு முள்ளிவாய்க்காலையே உருவாக்கும்.

பனிப்போருக்குப் பின்னர் உலக ஒழுங்கை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கும் ஒரே விசை பொருளாதாரம். அமெரிக்காவிடமிருந்து உலக வல்லாதிக்கத்தைக் கூறுபோட சீனா, ரஷ்யா, இந்தியா போன்றவை முயன்றுகொண்டிருக்கின்றன. தனது பொருளாதாரத்தைப் பேணுவதற்காக தென்-கிழக்கு ஆசியாவின் ஆதிக்கத்தைச் சீனா - இந்தியாவிடம் தாரைவார்க்க அமெரிக்கா தயங்காது. தாய்வானின் விட்டுக்கொடுப்பு இதற்கு நல்ல உதாரணம். ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர இருப்பிடம் பெறுவதற்காய் இந்தியா ஏனைய வல்லரசுகளின் தயவைப்பெற முயற்சிக்கிறது. இதற்காக எந்த விட்டுக்கொடுப்பிற்கும் இந்தியா தயங்காது.

தென்-கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் தற்போது இருக்கின்ற வலுச் சமன்பாட்டில் இலங்கைக்கும் ஒரு பங்கு இருக்கிறது. இதையே பகடைக்காயாகப் பாவித்து மஹிந்த புலிகளை வென்றார். அது நீண்ட காலத்திற்கு நிலைக்காது. வல்லாதிக்க சக்திகளின் பிராந்திய வேள்விக்கு முதற் பலி புலிகள் என்றால் இரண்டாவது மஹிந்தவின் ஆட்சி.

தற்போதுள்ள இலங்கை - இந்திய உறவு தற்காலிகமானது, பரஸ்பரம் நம்பிக்கையற்றது. எப்போது யார் யாரது கழுத்தை அறுப்பார்கள் என்று தெரியாது. தென்னிலங்கையில் தாம் மக்களிடையே இழந்த செல்வாக்கை மீண்டும் பெற ஜே.வி.பியிற்கு இருக்கும் ஒரே ஒரு ஆயுதம் 'இந்திய எதிர்ப்பு'. பிளவுபட்டுப்போயிருக்கும் யூ.என்.பி. யும் இதற்குப் பிற்புலத்தில் துணை போகும்.

இதை இந்தியா உணராமல் இல்லை. வடக்கு கிழக்கில் இந்தியா தனது பொருளாதார ஆதிக்கத்தைச் செலுத்துவதனாலேயே இலங்கையில் தனது இருத்தலை நிர்ணயிக்கும். ஒரு வகையில் வடக்கு கிழக்கை ஒரு விதமான 'soft take over' வடிவத்தில் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும். புலிகளின் அழிவின் பின்னால் 'தமிழ் மக்களை நாம் காப்பாற்றுவோம்' என்று இந்தியா சொல்வது அவர்களது பொருளாதார மேம்பாட்டை உருவாக்குவதையே கருதுவதாகும். புலிகளின் அழிவுக்கு முன்னதாகவே கிழக்கில் பிள்ளையானை 'அமர்த்துவதில்' இது ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. வடக்கில் இந்தியாவின் நம்பிக்கைக்கு உரிய எவரும் இதுவரை இல்லை. இந்த வெற்றிடத்தை மஹிந்த தனக்கு சாதகமாகப் பாவித்து வடக்கைச் சிங்கள மயமாக்குவதில் வேகமாகச் செயற்படுகிறார். தென்னிலங்கைக் கிளர்ச்சிகளுக்கு மக்களாதரவு கிடைக்காமலிருக்க அவர்களுக்கு மஹிந்த போடும் தீனியே வடக்கு 'கிழக்கு சிங்கள மயமாக்கல். இதைத் தடுத்து நிறுத்த தமிழர்களுக்கு இப்போது வலுவில்லை.

இந்த வேளையில் எமக்கு இருக்கும் ஒரே தயவு இந்தியாதான். தமிழ்நாடு சின்னாபின்னப்பட்டுப் போயிருக்கிறது. புலிகள் இன்னும் அழிக்கப்படவில்லை என்ற வாய்ப்பாட்டை இலங்கையும் இந்தியாவும் இன்னும் சில வருடங்களுக்குப் பாடிக்கொண்டே இருப்பார்கள். அவர்களின் அரசியலுக்கு அது தேவையாக இருக்கலாம். தமிழருக்குத் தனிநாடு தேவைக்கான காலம் இதுவேதான். அதைச் சிங்கள தேசமே உருவாக்கித் தந்திருக்கிறது. ஆனால் இந்தத் தடவை தமிழர் அதற்குத் தயாராகவில்லை.

அடுத்த கட்ட ஆயுதப் போரைத் தமிழரால் தனியே நின்று நடாத்த முடியாது. பொருளாதாரத் தேவைகளை மீறித் தார்மீகத் தேவைகளை முன்னிலைப்படுத்த உலகம் தயாராவில்லை. எனவே நாம் மேற்கொள்ள வேண்டியது அரசியற் போர்தான். அதன் களம் இலங்கையில்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. அதில் முக்கிய பங்காளி இந்தியாவாகவே இருக்க முடியும்.

இந்தியாவின் கால்கள் இலங்கையில் ஆழமாகப் பதிய வேண்டும். அது பொருளாதாரப் பாதையினூடுதான் வரவேண்டும். தமிழர் வர்த்தகம் சிங்களவரின் கைகளில் போவதைவிட தமிழ்நாட்டுத் தமிழரிடம் போகலாம். இந்த வர்த்தக ஆதிக்கம் தன்னோடு கலாச்சார ஆதிக்கத்தைக் கொண்டு வரும். அதனாலேதான் வடக்கிலும் கிழக்கிலும் இழந்து போகும் மொழியும் கலாச்சாரமும் மீண்டும் நிலை நிறுத்தப்படும். சிங்கள மயமாக்கலை உடனடியாகத் தடுத்து நிறுத்த இதுவே இப்போதைக்கு ஒரே வழி.

இந்திய-சீன பூசல் உச்சம் பெறுவதற்கான சாத்தியம் இப்போதைக்கு இல்லை. 2000ம் ஆண்டு 3 பில்லியன் அமெரிக்க வெள்ளிகள் என்றிருந்த வர்த்தகம் இன்று 60 பில்லியன்களை எட்டியிருக்கிறது. உலகத்தின் இரண்டாவது பொருளாதாரப் பூதமாக சீனா உருவெடுத்துள்ள நிலையில் இந்தியா சீனாவோடு உரசுவதற்கான சூழல் இப்போதைக்கு இல்லை.

அப்படியல்லாது போர் மூளும் பட்சத்தில் இலங்கையில் தடம் பதிப்பது இந்தியாவுக்கு மிகவும் அத்தியாவசியமானதாகிவிடும். அப்போது இலங்கையின் சிதைவு முற்றுப்பெற்றதாகிவிடும்.

அதுவரை எமது ஆட்டுக் கல்லில் அரசியல் மட்டும்தான் இருக்க வேண்டும்.

கட்டுரை

# மிகு உணர்ச்சியும் விமர்சனப் பிறழ்வும்

பிரபஞ்சன்

…நெல்லும் உயிர் அன்றே, நீரும் உயிர் அன்றே மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்… நெல்லோ, நீரோ அல்ல சமூகத்தின் உயிர். மாறாக, மன்னனே சமூகத்தின் உயிர்…

தமிழர்கள் உணர்ச்சிவசப்பட்டவர்கள் என்று பலரும் சொல்கிறார்கள். அது தவறு. அவர்கள் மிகு உணர்ச்சி வசப்பட்டவர்கள். உயர் கட்டிடம், அவர்களுக்கு வானத்தைமுட்ட வேண்டும். தனிமனிதர்கள் கூற்றுகளைக் காட்டிலும், மக்கள் கூட்டம் குழுமிய அரசியல், மற்றும் சினிமாத்துறைப் பிரமுகர்களுக்கு அவர்கள் சூட்டும் உச்சப் புனைவுகள் அதிர்ச்சியூட்டக் கூடியவை.

தங்கள் தலைவர்களை அவர்கள் பெயர் சொல்லியே அழைப்பதில்லை. அது மரியாதைக் குறைவு. தலைவர்கள், தங்கள் தாயார்களின் வயிற்றிலிருந்து வெளிப்பட்டவுடனேயே, தாயார்களே அக் குழந்தைகளைப் பார்த்து முனைவரே, தமிழே, இட ஒதுக்கீட்டுச் சமூகநீதிக் காவலரே என்றுதான் அழைத்தார்கள். தலைவர்களுக்கும் பெயரே இருக்காதா? இருக்கும். அது பள்ளிக் கூடத்தில் சேர்ப்பதற்காக. ஒரு தலைவரை நீங்கள் விரோதித் துக்கொள்ள சுலபமான வழி, அவரைப் பெயர் சொல்லி அழைப்பது மட்டும்தான்.

முறுக்கேறிய உச்சப் புனைவுகளை நீங்கள் சினிமாவில் பார்க்கலாம். ஒரு இயக்குநர் 'இமயம்' என்றும் ஒரு இயக்குநர் 'சிகரம்' என்றும் அறியப்படுகிறார். அரசியல் சினிமா இரண்டுக்கும் எங்கள் நாட்டில் வித்யாசம் இல்லையே! ஒரு நடிகர் 'சூப்பர் ஸ்டார்' என்று அறியப்பட்டார். மற்றொரு நடிகர் 'அல்டிமேட்' ஆனார். இன்னுமொருவர் 'சுப்ரிம்' என்றானார். படம் எப்படி என்று ஒரு ரசிகரைக் கேளுங்கள். 'சூப்பர் டூப்பர்' என்பார். சூப்பர் புரிகிறது, அது என்ன டூப்பர்? ஒன்றுமில்லை. அது ஒரு உச்சம்!

குடும்பங்களில் பெண்கள் இன்னும் அழகாக மட்டும் இல்லை. 'லட்சுமிகரமாக' இருக்கிறார்கள். வீடு - சொர்க்கம், செத்தவர்களுக்குச் சிவலோக பதவியும் வைகுந்த பதவியும் நிச்சயம் உண்டு.

இலக்கியத் துறையிலும் இது தலைகாட்டாமலா இருக்கும். கவிஞர் என்பது போதுமானதாக இருப்பதில்லை. கவிச் சக்ரவாத்திகள், கவி அரசர்கள், கவிக்கோமான்கள்…

இந்த உணர்ச்சிப் பிரவாகச் சொல்லாமல் அதுக்குத் தமிழ் மரபில் ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா? இருக்கிறது. சங்க இலக்கியம் என்று சுட்டப்படும் ஆதி இலக்கியங்களிலிருந்தே இந்த வகை உணர்ச்சிப் பீறிடல்களுக்கான அடித்தளம் காணக் கிடைக்கிறது. புலவர்கள் மன்னர்களுக்கூடான உறவுகளின் வளர்ச்சிப் போக்கில் பலப் படித்தவர்கள். அச்சத்தை நோக்கி இவர்களின் புகழ்மொழிகள் செல்வதைப் படிப் படியாகக் காணலாம்.

## படி:1

பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார். பாடியது : புறநானூறு 18.

மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பற்றி யோசி, உடல், நீராலும் உணவாலும் அவவேது, உணவு மனித வாழ்க்கைக்கு இன்றியமைதாது. மக்களுக்கு உணவு தந்தவர், உயிரைத் தந்தவர் ஆவர். உணவு உற்பத்தி, நீர் ஆதாரத்தால் ஆனது. ஆக, இயற்கையாகக் குழிந்த நிலத்தில் குளம் வெட்டு. நிரைக் கட்டுவோர்தான் நல்ல அரசைத் தரும் மன்னர்கள். அவர்களே நிலைத்த புகழைப் பெறுவர். அதிகாரத்திடம், புலவர்க்ள் மக்களுக்கான தேவைகளைச் சொல்லி, அவர்களுக்கு அறிவு ஊட்டிய காலகட்டம் இது.

## படி:2

அதிகாரத்துக்கும் சமூகத்துக்கும் இடையில் நின்று, சமூகத்தின் எதிர்பார்ப்பை அதிகாரத்திடம், எடுத்துரைத்து ஆக்க பூர்வமாகச் செயல்பட்ட புலமை வர்க்கம், தானே சமூகம் என்று தன் அதிகாரத்தை நிலை நிறுத்திய அரசர்களின் அதிகாரத்தை நிலை நிறுத்திய அரசர்களின் அதிகாரத்தை விழுங்கிக்கொண்டு அதை ஏற்றுக்கொண்டதோடும் நில்லாமல், மக்களுக்கும் அதைச் சிபாரிசு செய்கிற காலமும் வந்து சேர்ந்தது.

மோசிகிரனார் பாடியது. புறம் 186. இந்த மோசிகீரன், சேரன் இரும்பொறையின் அரண்மனைக்குள் புகுந்து, களைப்பின் காரணமாக அங்கிருந்த கட்டிலில் படுத்து உறங்கிவிட்டாள். அக்கட்டில் மன்னனின் முரசு வைக்கும் கட்டில். அதில் படுப்பது அரசனை அவமானப்படுத்துவது. தண்டனை தலைவெட்டுதல், ஆனால், சேரன், புலவர் விழிந்தெழும் வரைக்கும் அவர் தலைமாட்டிய நின்று விசிறி வீசிக் கொண்டிருந்தான். இச்சம்பவத்தை மோசிகீரன் (புறம் 50) பதிவு செய்திருக்கிறார். இதே விஷயத்தை ஞானக்கூத்தன் அங்கதீமாக, 'அரசாங்கத்துக் கட்டிடத்தில் தூக்கம் போட்ட முதல் மனிதன், பாடியதையும் நினைவு கூர்தல் தரும். இந்த மோசிகீரன் தான், இப்படிப் பாடுகிறார். புரம் : 186.

நெல்லும் உயிர் அன்றே, நீரும் உயிர் அன்றே மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்... நெல்லோ, நீரோ அல்ல சமூகத்தின் உயிர். மாறாக, மன்னனே சமூகத்தின் உயிர்...

அதிகாரத்தை, அதன் அளவை, கொதிப்பை ஏற்றுக் கொண்டு அதை வழிமொழிந்த புலமைவர்க்கம் உருவாகிவிட்டது.

## படி 3.

அதிகாரத்தை நெறிப்படுத்திய புலமைவர்க்கம், இப்போது மன்னர்களை, வேந்தர்களை வாழ்த்தும் நிலைக்கு வந்து விடுகிறது. புறம் 43-ல்,

தாமப்பல் கண்ணனார், சோழனை, 'உன் ஆயுள் சிறக்கட்டும், காவிரி மணலின் எண்ணிக்கையைக் காட்டிலும், உன் வாழ் நாள் நீள்வதாக' என்கிறார். சேர அரசனை இளங்கோ,பொருளை மணல் துளிகளைக் காட்டிலும் நீரு வாழ்நாள் பெறுக' என்கிறார். பாண்டியனை ஒரு புலவர். ப்ஃறுளி ஆற்று மணலும் அதிக நாட்கள் வாழ்க என்கிறார்.

வாழ்த்துதல், சரிசமமான இருவர்க்குள்ளும் நிகழும். மேடும் பள்ளமுமான இருவரிடையேயும் நிகழும். இது ஒரு காலகட்டம்.

## படி:5.


சேரன் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடும்பாடல், புகழ்ந்து பேசுதலின் உச்சம். 'சூரியன் போன்றவன் சேரன் என்கிறார்கள். அது தவறு. சூரியன் பகலில் மட்டுமே பிரகாசிக்கிறாள். சேரன் இரவிலும் கூட. நிலவுக்குச் சூரியன் புறங்கொடுத்து மறைகிறது. சேரன் புறம் கொடாதவன். சூரியன் மலையில் மறைகிறது. சேரன் யாருக்காகவும் மறைந்து இருக்காதவன்...!

இது கூடப் பரவாயில்லை.

பாரியைப் பாராட்டுவதுதான், இன்றுவரை நீடிக்கிற மரபாகிறது. பார் பார் என்று புகழ்ந்து கொண்டுவருகிறர்களே, பாரி மட்டுமா உலகைப் பாதுகாப்பவன். மாரி என்கிற மழையும் கூட உலகைக் காப்பாற்றுகிற பூந்துதானே? வயைத்துள்ள சுமார் 500 ஆண்டுக் காலங்களில் எப்படி மாறி வழிதவறி இருக்கிறதுஎன்பதைக் காணும்போது, எந்தெந்தப் படி நிலைகளைக் கடந்து செய்யப்பட்டிருக்கிறது என்பதை உணரும்போது, இன்து வரை தமிழர் வாழ்வில் நீடித்துக் கொண்டிருக்கிற ஒருதவறான போக்கை இனம் காண முடிகிறது.

# காலம்

# மு.பொ. சிறப்பிதழ்



மு.பொவின் புகைப்படங்கள் உதவி: கற்சுறா

# Reviews: A Country Entrapped

Poetry is possibly the most subjective form of writing...and therefore perhaps the hardest on which to comment... The disciplined, lucid form of verse seems to serve him well.

...while they mostly deal with themes of sorrow, alienation and loss, (they) sparkle with originality and embrace profundity. They have darkness but they are also limpid and musical. These poems are moving, simple and rich, and frequently disturbing.

Of course they are inspired by political events and oppressions; but they transcend the didactic...

**Mark Sykes** Editor-In-Chief, Athena Press.

...They are graceful, delicate and lyrical, and I much enjoyed reading them.

**Terry Eagleton** Marxist Critic

...Very explicit experiences embodied within the poems which I am reading with interest (New insights, perhaps).

**Jean Arasanayagam** Poet

I think Mr. Ponnambalam's poem is fantastic. I have received hundreds of poems on the subject of the downing of the Twin Towers and I have to say they are usually very one-sided. They tend to do the obvious, i.e. feel sorry for the victim and the poor USA without questioning the circumstances around the happening. This is what I liked about the poem, the way it looked at the bigger picture and made broader connections.

I think a poem has to grab you by the mind, which is just what 'A Country Entrapped' did for me. I think the reference to liberation struggles around the world, and the many cultural and religious references help to raise important questions about the simplistic use of words like 'terrorism', 'war', and 'justice'.

Lyrical, imaginative, thoughtful, and unashamedly political, in the best sense of the word.

**Benjamin Zephaniah** Poet

# மு.பொவும் அவரது கவிதைகளும்

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

மு.பொ பற்றிய குறிப்பொன்றினை தருமாறு கனடாவில் இருந்து எனக்கு ஓர் அழைப்பு வந்துள்ளது. நான் முதலில் கேட்ட கேள்வி ஆங்கிலத்தில் அவரைப் பற்றியும் அவர் எழுத்துக்களையும் பிரசுரிக்கப் போகின்றீர்களா? என்பது தான்.

மு.பொவைப் பற்றிய இன்னொரு கருத்துத் தொகுப்பு வெளிவருவது வரவேற்கப்பட வேண்டியதே. இவர் தொடர்ந்தும் எழுதிக் கொண்டிருக்கின்றமையால் Complete Works என ஒன்றைக் கொண்டு வர முடியாது, கொண்டு வரக் கூடாது.

மு.பொ பற்றி முதலில் குறிப்பிடப்பட வேண்டியது அவர் தம் கவிதைகளிலே கொண்டு வரும் தத்துவம் ஆகும் (மெய்யியல்). மு.பொவினுடைய அறிவாழமும், அகற்சியும் வியக்கத்தக்கவை. ஆங்கில அறிவு அவரிடத்தில் உண்டு என சொல்வது முழு உண்மையையும் வெளிக் கொணர மாட்டாது. ஆங்கிலத்தை மூல மொழியாக கொண்டு வெளி வரும் கவிதைப் படைப்புக்கள் பற்றிய அறிவு இவரிடத்தில் நிறைய உண்டு. சர்வதேச அரசியல் பற்றிய சிரத்தையும் ஈடுபாடும் உண்டு. இவற்றால் மு.பொவின் கவிதைகள் மிக வித்தியாசமாக உள்ளன. 'பொறியில் அகப்பட்ட தேசம்' என்ற அவரது கவிதை நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் இதனை அழுத்தமாகவே எடுத்துக் கூறியுள்ளேன்.

மு.பொவின் கவித்துவ செல்நெறிக்கு 'கவிதையில் துடிக்கும் காலம்' நல்ல உதாரணமாகும். தலைப்பில் வரும் துடிக்கும் எனும் சொல் மிக ஆழமான மனப்படிமங்களை கிளறி விடுகின்றது.

கவிதையின் ஓர் இயல்பு அதிலே சொல்லப்பட்டவை மாத்திரமே அல்லாமல் சொல்லப்பட்டவை கிளறி விடும் மன அதிர்வுகள் ஆகும். இந்த அதிர்வின் ஆழ அகலம் வாசகருக்கு வாசகர் வேறுபடும். ஒவ்வொரு வாசகரும் ஏதோ ஒரு வகையில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் அவை ஏற்படுத்தும் பட்டெறிவு கிளர்வுகளையும் (Reflections) கொண்டே தனது வாசிப்பின் தெரிவுகளையும் செய்து கொள்கிறார்கள்.

கவித்துவத்தின் முக்கிய பண்புகளில் ஒன்று அது சிறியதொரு சம்பவம் மூலம் வாழ்க்கை முழுவதும் பற்றிய வெளிச்சம் இடுவது தான். அந்த வெளிச்சத்திலே அச்சிறு சம்பவம் ஒரு முக்கியமான சிந்தனை ஊற்றாக அமைந்து விடுகிறது. உதாரணத்திற்கு அதிக தூரம் அலைய வேண்டியதில்லை. 'கவிதையில் துடிக்கும் காலம்' எனும் தொகுப்பில் வரும் முதலாவது கவிதையை எடுத்துக் கொள்ளலாம்.

காலம் எனக்கு இருந்ததாய் தெரியவில்லை,
காசிருந்த காலத்தில்!
காசு கையைக் கடித்தபோது
காலம் மூக்கை நுழைத்தது.
காதல் வசப்பட்டு மயங்கி இருக்கையிலும்

காலம் இல்லாது போயிற்று.
பின்னொருநாள் காதலியாள் கண்ணீர் சிந்தத்
தொடங்குகையில்
காலம் அரவு போல் முன்நெளிந்து
அச்சுறுத்திற்று.
இன்னொருநாள் எமது ஊடலில் எழுந்த உரசலில்
காலம் அறுந்து அவள் கழுத்து மணிமாலையென
என்முன் சிதறிற்று.
ஒருவாறு அவள் மனந்தேற்றி,
கொட்டுண்ட மணிகோர்க்க, காலமே நூலாய்
உள்நுழைந்து
என்னைக் கிள்ளிற்று.
காதலியாள் மனைவியானதும்,
கலவியில் விளைந்த பிள்ளைகள் பிறந்தும்
காலம் என்னை உருட்டி எடுத்து வீசிற்று -
கரையில் எத்துண்ட மீனாய் துடிதுடிப்பு.
ஆயினும் என்னோடு கூடவந்த அறிவு
காலத்தை இடைக்கிடை அறுத்து
விட்டெறியும் என்னைப் பேர் வெளியில் -
அகாலக் குளிப்பு!
என் காக்கைச் சிறகுதறலில்
எனைப் போர்த்திருந்த காலநீர் தெறித்தகல
அகாலக் குளிப்பில், ஆன்மா!

(அகாலக் குளியல் என்ற கவிதை)

தனது வாழ்க்கையில் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டங்களையும் நினைவு படுத்தி விட்டு அந்த சிந்தனைச் சங்கிலியின் விளைவாக ஏற்படும் மன நிலையை கடைசி வரிகள் கூறுகின்றன.

'என் காக்கைச் சிறகுதறலில்
என்னைப் போர்த்திருந்த காலநீர்
தெறித்தகல
அகாலக் குளிப்பில் ஆன்மா!'

கோயில் திருவிழாக் காலங்களில் முன்னர் 'அவிட்டு' எனும் வாணத்தை விடுவர். அதனை நிலையாக வைத்து அதற்கு நெருப்பு ஏற்றியதும் அது குபுகுபுவென மேலே போய் வெடித்து சிதறும் பொழுது ஒவ்வொன்றும் வெளிச்சக் கதிர்களாய், பலவர்ணக் கோலங்களாய் வானத்தில் விரியும்.

உண்மையில் மேலே சொன்ன வரிகளை வாசிக்கும் போது அத்தகைய ஆகாய நிலைப்பட்ட ஒளிச்சிதறல்களே எனக்கு தெரிகின்றன. ஆங்கிலத்தில் From the general to the particicular என்ற ஒரு தொடர் உண்டு.

மு.பொ இதனையே செய்கிறார். பொதுப்படையானவற்றில் இருந்து ஒரு குறிப்பிட்ட அம்சத்தையும், ஒரு குறிப்பிட்ட அம்சத்தில் இருந்து பொது நிலையையும் சித்தரிக்கின்ற திறன் இங்கு பளிச்சிடுகின்றது. இன்று நம்மிடையே கவிதை பற்றி நிலவும் சொற்பிதிர் வழி பிரச்சினைகள் யாவற்றுக்கும் அப்பாலே சென்று உண்மையான கவிதை-களை தருபவராக மு.பொ விளங்குகிறார். மு.பொ வின் கவிதைப் பொருள் பிரபஞ்சத்துவம் (Universality ஆகும். அதாவது பிரபஞ்சம் பொதுவான விடயங்கள் பற்றியே இவருடைய கவிதை சிரத்தை அமைகின்றது. உதாரணமாக 'பிரபஞ்ச கும்மி', 'அணுபுராணம்' ஆகியவற்றை காட்டலாம்.

நுண் பெருக்கியின் கண்களுள்
முட்டைக் குமிழ் என மின்னுகிறது அணு
ஞாயிற்றுப் புள்ளியாய் அணுவின் மையம்
கோளநிரையாய் சுற்றி அதை வரும்
துணிக்கை அணுக்கள்
பிரபஞ்சம் அணுவில் முகம் பார்க்கிறது
அணு பிரபஞ்சத்தை அடை காக்கிறது
ஏழ்கடல் விழுங்கியாய்

(சூத்திரர் வருகை)

இவருடைய கவிதைகளில் குறிப்பாக இத்தொகுப்புக்களில் வரும் முக்கிய அம்சம் காலமாகும் (Time). இது மு.பொ வின் சிந்திப்பு எல்லைகளை நமக்கு காட்டுகிறது. சிந்திப்பு எல்லை என்பதிலும் பார்க்க அவரின் மனப்பதிவு (Perception) என்றே இவற்றை கூறவேண்டும். அவ்வகையில் மு.பொ வாமானவதாரமாகவே எனக்கு காட்சியளிக்கிறார். வாழ்க்கையில் அன்றாட பிரச்சனைகளால் உலைவுற்று (பார்க்கவும் புயல் என்ற கவிதை) தனது கவலைகளை நடப்பு நிலை முறைமைக்குள்ளேயே தீர்த்துவிடுகின் ற வாழ்க்கை முறையை கொண்டுள்ள மு.பொன்னம்பலத்தின் சித்தம் (Mind) எத்துணை விசாலமானது என்பதை உய்த்து நோக்கும் போது நமக்கு சிலிர்ப்பே ஏற்படுகின்றது.

அண்ணாந்து பார்த்தேன்
நூலிருந்து கீழிறங்கும் காலத்தில்
ஊஞ்சலிடும் சிலந்தி
கண்காணா
கால முகட்டில் முடிச்சிட்டு
ஏணையென ஆடும் பிரபஞ்சம்

மு.பொ நம்மிடையே வாழ்கின்ற ஒரு அற்புதமான கவிஞர். ஏற்கனவே வெளிவந்த இவரது கவிதை நூல்கள் இவரது பார்வை விசாலத்தை காட்டுகிறது. ஜனரஞ்சகமாக நல்ல தமிழ் கவிதைகள் இன்று சினிமாவுக்குள்ளே இருந்தே வெளிவரும் இந்நாட்களில் அத்தகைய வசதி வாய்ப்புக்கள் அற்ற ஈழத்திலே வாழ்ந்து கொண்டு ஆனால் தனது கவித்துவ நோக்கில் பிரபஞ்சம் முழுவதையுமே ஒன்றாக பார்க்கின்ற ஒரு கவிஞன் இனங்காணப்படாமலே போய்விடும் ஆபத்தும் உள்ளது.

அதிஷ்டவசமாக மு.பொ வின் நண்பர்கள் பலர் மு.பொ என்ற கவிஞனது ரசிகர்களே. அதனால் மு.பொ வை நாங்கள் தொடர்ந்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.


இவற்றை சொல்லும் பொழுது இன்னொரு முக்கிய

விடயத்தையும் பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன்.

கவிஞனாக இருப்பதற்கு யாப்பறிவு, சொல்வளம் ஆகியவை அல்ல முக்கியமானவை. கவித்துவமான உள்ளம் (Poetic Mind) முக்கியம். நல்ல வாசகர்கள் பலரிடையே கவித்துவ உள்ளம் இருக்கும். இவர்களுக்கு கவிதைகளை இயற்ற முடியாமல் இருக்கலாம். ஆனால் கவித்துவ உள்ளம் இல்லாது கவிதைகளை ரசிக்க முடியாது.

கவித்துவம் உள்ள வாசகர்களிடத்து அவர்களின் கவித்துவ உள்ளத்தை மேலும் மேலும் செழுமைப்படுத்தும் கவிதைகளை மு.பொ எழுதுகிறார். பொதுவிலே கவிதைகளை மொழி பெயர்க்க முடியாது. குறிப்பிட்ட கவிதையின் கவித்துவ் சாரத்தை அந்த மொழியின் கவித்துவ மரபுக்கேற்ப சொல்லலாம். (உதாரணம் உமர்க் கையாம் பாடல்களின் ஆங்கில மொழி பெயர்ப்புக்கு தமிழில் வந்துள்ள பெயர்ப்புகளாகும். அவற்றை கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையும், ச.து.சு. யோகியும் அப்துல்காதர் லெப்பையும் செய்துள்ளனர்).

மு.பொவின் கவிதைகளை ஆங்கிலத்தில் பெயர்த்தல் அவசியம். அந்த பெயர்ப்பினூடாக மு.பொ வின் பிரபஞ்சத்துவத்தன்மை (Universality) தெரியவரும். மு.பொ விற்கு தமிழ் அவரது பிரபஞ்ச நோக்குக்கான ஏறுபடிகளே. மு.பொவின் அடுத்த கவிதை தொகுதியை எதிர்பார்த்து நிற்கும் ... ... ...




NOVEMBER 28 SUN DAY 5.30PM

சுடர் ஏந்திய தொடர் ஓட்டம்

காலம் இலக்கிய நிகழ்வு

காலம் 36
மு.பொ சிறப்பிதழ்
வெளியிடப்பெறும்


செழியனின்
**வானத்தைப் பிளந்த கதை**
(ஈழப் போராட்ட நாட்குறிப்பு)
புத்தக வெளியீடு



பிரதம பேச்சாளர்
**A.R.வேங்கடாசலபதி**
Professor Madras Institute of Development Studies
Associate Fellow, South Asia Initiative
Coordinate Researcher, Harvard-Yenching Institute
Harvard University

MID SCARBOROUGH COMMUNITY CENTRE
2467 EGLINTON AVE EAST
KENNEDY SUB WAY
தொடர்புகளுக்கு: Kalam@tamilbook.com

# சாம்பலில் பிறந்து விண்ணில் பறக்கும் ஃபீனிக்ஸ் பறவை, கவிஞர் மு.பொன்னம்பலம்



என்.கே.மகாலிங்கம்

மு.பொன்னம்பலம் (1939) என் ஊரைச் (புங்குடுதீவு) சேர்ந்தவர். என் உறவினர். ஆனால் அவரை நான் சந்தித்தது இரத்தினபுரியில். இரத்தினபுரி வர்த்தகர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளில் படிப்பிப்பதற்காக அங்கே அழைத்துச் செல்வர். அப்படிச் சென்றவர்கள் தான் நானும் அவரும். பதின்ம வயதுகளுக்கு முன்னரே அவர்கள் அழைக்கப்பட்டு விடுவர். இடைநிலைப் பள்ளியில் ஆரம்பித்த அவர்கள் கல்வி பல்கலைக் கழகம் வரை செல்லலாம். ஆனால் சென்றவர்கள் மிகக் குறைவு. பதின்ம வயதுப் பிள்ளைகளுக்கே உரிய குழப்படிகளும் அவர்களுக்குக் கிடைக்கும் பண வசதியும் அவர்களைத் தம் கல்வியில் கவனம் செலுத்தாமல் வைத்து விடுவதும் உண்டு.

மு.பொ என்னிலும் ஒரு சில ஆண்டுகள் மூத்தவர். அதனால் அவருடன் பழகும் சந்தர்ப்பம் அப்போது கிடைக்கவில்லை. அத்துடன், நான் திரும்பவும் யாழ்ப்பாணம் படிக்கச் சென்று விட்டதால் திரும்பவும் இரத்தினபுரியில் படிக்க வந்தபோது தான் அவரை முதன் முதலில் சந்தித்துப் பேசும் வாய்ப்பைப் பெற்றேன்.

ஒரு மாலைநேரம் நகரப் பிரதான வீதியால் எந்த நோக்கமும் அற்று நடந்து கொண்டிருக்கையில் பொன்னம்பலம் தங்கள் கடையில் இருந்து ஏதோ வாசித்துக் கொண்டிருந்தார். அவருடைய நட்பான பார்வையோ என்னவோ அவரை நாடிச் சென்றேன். இருவருக்கும் ஒருவரை ஒருவர் தெரியும். ஆனால் பேசியதில்லை. அவர் எனது படிப்பைப் பற்றி விசாரித்தார் என்று நினைக்கிறேன். பிறகு தன்னிடம் இருந்த என்கவுண்டர் சஞ்சிகை ஒன்றைத் தந்து அதிலிருந்த சிறு-கதை ஒன்றை வாசிக்கத் தந்தார். ∴பொக் என்ற அந்தக் கதையின் தலைப்பு இன்றும் எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் கதை மறந்து விட்டது.

அது 61 ஆம் ஆண்டாக இருக்கலாம். அவர் அப்பொழுது லண்டன் ஏ.எல் தேர்வுக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருந்த காலமாகவாகவும் இருக்கலாம்.. அவரின் தமையன் மு.தளையசிங்கம் பல்கலைக் கழகக் கல்வியை முடித்துக் கொண்டு இரத்தினபுரிக்குத் திரும்பி வந்த காலம்.

● ● ●

மு.பொ. பல சோதனைகளுக்கு உள ரீதியிலும், உடல் ரீதியிலும், உட்பட்டவர். அவரின் தந்தை இரத்தினபுரியில் பெரிய வர்த்தகர். மு.த.வும் மு.பொ.வும் சிறுவர்களாக இருந்தபோதே அவர் இறந்து விட்டார். அத்துடன் அவர்களுக்கு மூத்தவொரு தமக்கையும் இருந்தார். மு.த.வும் மு.பொ.வும் இரத்தினபுரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலம் அது. அவர்களுக்குச் சொத்துக்கள் இருந்தன. ஆனால் அவற்றையும், அவர்களையும் மேற்பார்வை பார்த்தவர்கள் அவரின் நெருங்கிய உறவினர்கள். தாயும் தமக்கையும் ஊரில் இருந்தனர். அக்காலத்தில் பல பொருளாதாரக் கஷ்டங்களுக்கும், நெருக்கடிக்களுக்கும், மன உளைச்சல்களுக்கும் உள்ளாகினர். அதனால் அவர்களின் பள்ளிக் கல்விகூட சில காலம்

தடைப்பட்டது.

அத்துடன், மு.த. இறந்த பிறகு மு.பொ, வுக்கு பல வகையான உடல் நோய்கள் வந்தன. பரிச்சயமானதும், பரிச்சயமற்றதுமான பல பெயர்களைக் கொண்ட அந்நோய்களைப் பற்றியும் அவற்றால் அவர் துன்பப்பட்டதையும், அவற்றிலிருந்து அவர் எப்படி விடுபட்டார் என்பதையும், மரணத்தின் வாயிலிலிருந்து எப்படி எந்தச் சக்தியால் காப்பாற்றப்பட்டார் என்பதையும் அவரின் நாவலான 'நோயிலிருத்தல்' விரிவாகவே சொல்கின்றது. அவர் தப்பிப் பிழைத்தது ஓர் அற்புதம்..

● ● ●


மு.பொன்னம்பலத்திற்கும் அவர் சகோதரர் மு.தளை-யசிங்கத்திற்கும் இருந்த உறவு அண்ணன்-தம்பி உறவுக்கும் மேற்பட்டதொன்று. அவர்கள் இருவரும் தோழர்கள், இலக்கியத்தில் இரட்டையர், தத்துவம், வரலாறு, இலக்கியம், ஆத்மீகம், அரசியல், சமூக சேவை போன்ற யாவற்றிலுமே ஒத்து இயங்கியவர்கள். ஒருவருக்கொருவர் பங்களிப்புச் செய்தவர்கள். பாலியல் பிரச்சினைகள் தொடங்கி, பிற சமூக, உலகப் பிரச்சினைகள்வரை அண்ணன் -தம்பி உறவுகளுக்கு அப்பால் அந்நியோன்யமாக, பரஸ்பரம் விவா தித்தவர்கள். ஆழ்ந்து விவாதித்து தம் கருத்துக்களை திருத்தியும் உயர்த்தியும் கொண்டவர்கள். மு.த. 1973 இல் இறந்த பிறகு பலவகையிலும் மு.பொ. தனித்துப் போனார். குறிப்பாக, இலக்கியம், தத்துவம், ஆத்மீகத் தளத்திலும், தனிப்பட்ட வாழ்க்கைத் தளத்திலும்.

குறிப்பாக, அதுவரை திருமணம் முடிக்காமலே இருக்க நினைத்திருந்த மு.பொ. தன் 35 வது வயதில் திருமணம் முடித்ததே மு.த. இறந்து சில ஆண்டுகளின் பின்னரே.

மு.பொ. பி.ஏ. இறுதி ஆண்டுவரைப் படித்துவிட்டு, தேர்வை எழுதி அதை முடிக்காமல், சமூகம், இலக்கியம், ஆத்மீகம் போன்றவற்றில் முழுநேரமாக இயங்கப் போகி-றேன் என்று மு.த.வுக்குச் சொன்னபோது அது உன் விருப்பம்' என்று அதற்கும் பச்சைக் கொடி காட்டியவர். உலகியல் ஞானமும், மனப்பாங்குமுள்ள வேறு யாராக இருந்தாலும் 'அப்படிச் செய்யாதே, தேர்வை எழுதி சான்றிதழை, காப்புறுதிப் பத்திரம்போலக் கையில் வைத்துக் கொண்டு, எதிலும் ஈடுபடு' என்று தான் சொல்லியிருப்பர். அத்துடன் எம் யாழ்ப்பாண மனம் அதற்கு கடைசிவரை உத்தரவு கொடுத்திருக்கவே மாட்டாது. ஆனால், மு.த. தன் ஆசிரியத் தொழிலையே இலக்கியத்திற்காக துறக்கத் தயாராக இருந்தவர், வேறு எப்படிப் பதிலளித்திருப்பார்? அத்துடன், மு.பொ.வின் பி.ஏ. கல்வியும் தேர்வு எழுதாமலே முற்றுப் பெற்றது.

● ● ●

அவருடைய பத்திரிகைத் துறை அனுபவம் 1970-71 இல்



யாழ்ப்பாணத்தில் 'சத்தியம்' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்ததுடன் ஆரம்பித்தது. அச்சிறு பத்திரிகை புங்குடுதீவில் இயங்கிய சர்வோதயம்-சர்வமத சங்கம் ஆகியவற்றையும் ஈழத்து அரசியல், இலக்கியம் ஆகியவற்றையும் புதிய திசையில் நெறிப்படுத்துவதற்கான ஒரு முயற்சியே. அது யாழ்ப்பாண நகரத்தில் இயங்கியது. மு.த. அதில் அரசியல், 'வரலாற்றுக் கட்டுரைகள் எழு-தினார். 'பூரணி' சஞ்சிகை வெளியீட்டிலும் மு.பொ. பங்குபற்றியுள்ளார்.

1989 தை முதல் 1990 வைகாசி வரை யாழ்ப்பாணத்திலி ருந்து வெளிவந்த 'திசை' என்ற அரசியல்-சமூக-கலை இலக்கிய பத்திரிகைக்கு ஆசிரியராகப் பணி புரிந்தார். அப்பத்திரிகை புலிகளின் ஒடுக்குமுறைக்கு உட்படப் போகின்றது என்பதற்கு முன்னரே தன்னை இழுத்து முடிக் கொண்டு தன் பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொண்டது ஊரறிந்த ஒன்று.

● ● ●

மு.பொ.வின் சமூக சேவை சர்வோதய, சர்வமத சங்க அமைப்புக்களுடன் ஆரம்பமாகியது.. அக்காலத்தில் (1967) மு.த. இரத்தினபுரியிலிருந்து மாற்றலாகி புங்குடுதீவுக்குச் சென்றிருந்தார். மு.பொ.வும் புங்குடுதீவுக்குச் சென்றார். அவர்களுடன் இன்னும் பல இளைஞர்கள் சேர்ந்து கொண்டனர். அவர்களின் சமூக, ஆத்மீக செயற்பாடுகள் முதலில் புங்குடுதீவில் ஆரம்பமாகியது. மு.பொ. அதற்கு உறுதுணையாக இருந்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களில் சர்வோதயம் ஈடுபட்டது. மு.பொ. அவர்களுக்குக் கல்வி கற்பித்தார். அவர்களின் நலன்களில்

பங்குபற்றினார். மு.த. வும் சு.வி யும் சத்தியாக்கிரகம் செய்தபோது, மு.த. இவரை வெளியேயிருந்து அதன் நோக்கம், அதுபற்றிய விழிப்புணர்வு, பத்திரிகை ஆகியவற்றுக்கு அறிக்கை விடுதல் போன்ற பிரச்சாரத்தில் ஈடுபட நியமித்தார்.

'மக்கள் கடை' என்ற கூட்டுறவு வியாபார ஸ்தாபனத்தை ஏற்படுத்திய சர்வோதய அமைப்பு, அதற்குப் பொறுப்பாக மு.பொ.வை நியமித்தது. அக்கடை சில ஆண்டுகள் பயனுள்ள வகையில் அவர் தலைமையில் இயங்கியது.

சர்வோதய அரசியல் அமைப்பு தீவுப்பகுதி பாராளுமன்ற தேர்தலில் பங்குபற்றி, சர்வோதயத்தின் நோக்கங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லியது. சர்வோதய கீதமான 'சர்வோதயம், சர்வோதயம், சகலதற்கும் சுயம் எதென்று கேட்கும் தத்துவம்' என்பதை மு.பொ.வே இயற்றினார்.

மகாத்மா காந்தி நூற்றாண்டு விழா (1969) புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் ஊர் எழுச்சியுடன் நடைபெற்றது. அதை நடத்தியது சர்வோதய இயக்கமே. அதைக் கொண்டாடுவதில் தீவிர பங்காற்றினார், மு.பொ.

மு.பொ.வின் ஆன்மீக சேவை, ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வ மத சங்கம் ஊடாக இயங்கியது. அக்கிராமத்தில் ஆன்மீக விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக கூட்டுப் பிரார்த்தனைகள், தியானங்கள், விவாதங்கள், கல்வி வட்டங்கள், ஆகியவை ஒழுங்கு செய்யபட்டன. தான, தர்மங்கள் நடைபெற்றன.

இச்செயல்களில் பல மு.த.வின் மரணத்துடன் முடங்கிப் போயின. அதன் பின்னர் மு.பொ. புங்குடுதீவு கூட்டுறவுச் சங்கத்தில் வேலை பார்த்தது மட்டுமல்லாமல் கூட்டுறவுச் சங்கத்தை முன்னேற்றுவதிலும் உழைத்தார்.

மு.பொ. 1967 இலிருந்து 2001 வரை தொடர்ந்து தன் சேவைகளைப் புங்குடுதீவில் செய்து கொண்டே வந்தார். சர்வமத சங்க அலுவல்களில் முழுநேர ஊழியராகக் கடமையாற்றினார். அதேவேளை இன்னொரு முக்கிய நிகழ்ச்சியும் அப்போது நடந்தது. அது குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியது ஒன்று, தீவுப் பகுதியை இராணுவம் சுற்றி வளைத்துக் கைப்பற்றி அதில் நிரந்தரமாக இருந்ததுடன், அங்கிருந்தவர்களில் பெரும்பாலோர் இரவிரவாகக் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றபோது -1991 இல்- அக்கிராமத்தில் ஒரு சிலருடன் தன் குடும்பத்துடன் தங்கி, அவர்களுக்கு தன்னாலான சேவைகளைச் செய்தவர்கள் சிலரில் அவர் முக்கியமானவர். அக்கால நிகழ்ச்சிகள் சிலவற்றை அவருடைய சிறுகதையான 'கைது செய்யப்பட்ட கிராமம்' ('முடிந்துபோன தசையாட்ல் பற்றிய கதை' என்ற தொகுதி பக்கம், 117-161) என்பதில் சொல்கின்றார்.

அக்காலத்தில் ஊரில் ஆசிரியர் இல்லாத குறையைக் கண்டு அவரும் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பித்தார்.

● ● ●

மு.பொ. பல கவிஞர்களை நெறிப்படுத்தியிருக்கிறார். அதில் நானும் ஒருவன். என் 'போர்ப்பாட்டு' கவிதையை கிழக்கிலங்கையிலிருந்து வெளிவந்த 'கவிஞன்' என்ற சஞ்சிகைக்கு அனுப்பினார். அதுவே நான் எழுதிய கவிதைகள் சிலவற்றில், வெளிவந்த முதல் கவிதை. (1969)

தா.இராமலிங்கம் என் தமிழ் ஆசிரியர். அவரை 60 ஆரம்ப காலங்களில் மு.பொ.வுக்கும் 'எழுத்து' பத்திரிகைக்கும் அறிமுகப்படுத்தினேன். அதன் பிறகே, அவர், புதுமெய்க் கவிதைகள் எழுதினார். அக்கவிதைகளை எழுதக் தூண்டியதிலும் நெறிப்படுத்தியலும் பங்களித்தவர் மு.பொ.

உயர்தர வகுப்பு மாணவனாக மு.த.விடம் கற்ற சு.வில்வரெத்தினம் மரபுக் கவிதைகள் படிப்பதிலும், தேவாரத் திருமுறைகளைப் பாடுவதிலுமே முதலில் ஆர்வம் காட்டி வந்தார். அவரைக் கவிதைகள் எழுதச் செய்ததில் பலவழிகளிலும் தூண்டுகோலாக இருந்தவர், மு.பொ. அத்துடன், சு.வி யின் முதல் கவிதைத் தொகுப்புக்கு முன்னுரை அளித்து ஊக்கப்படுத்தியவரும் அவரே.

இன்னும் பல ஈழத்துக் கவிஞர்களுடன் உரையாடி இருக்கிறார். விவாதித்திருக்கிறார். விமர்சனம் செய்தும் எழுதியும் இருக்கிறார், ஊக்குவித்திருக்கிறார்.

2

இந்தப் பகுதியில் அவருடைய கவிதைகளை அலசலாம் என்று அவர் எழுதிய கவிதைகள் அனைத்தையும் வாசித்தபோது அதை குறிக்கப்பட்ட மட்டுப்படுத்த இப்பக்கங்களில் எழுத முடியாது என்பதை உணர்ந்து கொண்டேன். காரணம், அவர் எழுதிய கவிதைகள் நாலு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. மொத்தமாக, சில நூறு கவிதைகள். காலி லீலைத் தொகுதியில் மட்டும் நாலு பிரவுகள். அவற்றை நாலு நூல்களாகப் பிரசுரித்திருக்க முடியும். மற்றக் கவிஞர்கள் அப்படிச் செய்திருக்கிறார்கள். அவருடைய சூத்திரர் வருகையிலுள்ள துயரி என்ற கவிதையும் தனிக் காவியமாகப் போடக் கூடியதொன்று. அதனால் இக்கட்டுரை அவருடைய கவிதைகளை அலசும் கட்டுரை அல்ல என்பதையும், அதனால் அவரின் கவிதைகளுக்கு நான் உண்மையான நியாயம் செய்யப் போவதில்லை என்பதையும் பணிவுடன் இங்கே பதிந்து வைக்க விரும்புகிறேன்.

ஆரம்பத்தில் மு.பொ. வின் சிறுகதைகள், கவிதைகள் தீவான் என்ற புனைபெயரில் சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்தன. (அவை, அவர் தொகுத்த தொகுதிகள் எதிலும் வெளிவரவில்லை)

மு.பொ. வின் நூல்களில் குறிப்பிடக் கூடியவை, அது

(கவிதைகள்), யதார்த்தமும் ஆத்மார்த்தமும் (கட்டுரைகள்), கடலும் கரையும் (சிறுகதைகள்) நோயில் இருத்தல் (நாவல்), திறனாய்வு சார்ந்த பார்வைகள் (விமர்சனங்கள்), பொறியில் அகப்பட்ட தேசம் (கவிதை), சூத்திரர் வருகை, (கவிதைகள்), விசாரம் (கட்டுரைகள்), ஊஞ்சல் ஆடுவோம், நீர்க்கோலம் (சிறுவர் ஆக்கங்கள்), விலங்கை விட்டெழும் மனிதர்கள் (கவிதைகள்), ஆங்கிலத்தில் A country Entrapped (கவிதைகள்) ஆகும்.

முதலில் மரபுக் கவிதைகள் எழுதியவர், 'எழுத்து' சஞ்சிகையில் 'மின்னல்' என்ற புதுக்கவிதை எழுதுகின்றார். பின்னர் மரபுக் கவிதைகளும் புதுக் கவிதைகளும் எழுதினார். அவரின் மரபுக் கவிதைகளான மதிப்பீடு, மார்கழிக் குமரி, காலி லீலை போன்றவை பலராலும் பாராட்டப் பெற்றவை. அவை ஓசை நயமும், சொல்லடுக்கும், கவிதை நயமும், கற்பனையும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவை.

'மதிப்பீடு' கவிதையை பல்கலைக் கழகக் கவி அரங்கில் அவர் பாடக் கேட்டிருக்கிறேன். அது கவிஞரின் வாழ்க்கையின் ஒரு பகுதியை நினைப்பூட்டினாலும், முழுக்க முழுக்க அவருடைய வாழ்வின் பகுதியல்ல என்பதே என் அபிப்பிராயம். குறிப்பாக, வேலை, தாயின் மரணம் என்பவை. அவரின் உடல், உள, ஆன்மீக வளர்ச்சியையும் கவி உள்ளத்தையும் அவற்றுக்கேயுரிய ஆழ்ந்த சிக்கல்களுடன் தெளிவாகக் காட்டும் கவிதை அது.

'அது' கவிதைத் தொகுதி வெளிவந்தபோது அதற்கு கவிஞர் மத்தியில் இருந்த வரவேற்புக் குறிப்பிடத்தக்கது. முருகையன் அது பற்றி எழுதினார். மஹாகவி பலரையும் வாசிக்கச் சொல்லித் தூண்டியிருக்கிறார். (நாடகக் கலைஞர், கே.எஸ்.பாலச்சந்திரன் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்.) கவிஞர் சேரன் மதிப்பீடு என்ற கவிதையை இருபது, முப்பது தடவைகளுக்கு மேலாக தன் இளவயதில் வாசித்து மகிழ்ந்திருக்கிறார் என்று மேடையில் ஒருமுறை சொன்னார்.

அக்கவிதை பாரதியின் சுயசரிதையுடன் ஒப்பு நோக்கத் தக்கது. மு.பொ.வும் தன் சுயசரிதையில் கல்வியில் கால் இடறி விழுந்து எழும்பியதை இப்படிச் சொல்கிறார்.

'பள்ளியிலே ஆசிரியர் பேயா உனக்கிங்கு,
கல்வி வராது களிமண்ணே மூளையென
அன்னார் திருமொழிக்கு அப்பமுக்கு நேராது..'
என்கிறார்.

'அணைந்த நெருப்பாய் அவிழ்ந்த குமிண் சிரிப்பாய்,
காற்றில் கலந்தவென் கால்நூற்று ஆண்டுகளே!'
என்றும் தொடங்கும் அக்கவிதை

'எங்கும் அலைகள் எறியும் கடல் நடுவே .பேரறியா
நச்சுப் பிரண்டை விளைகின்ற

**இன்னொரு முக்கிய நிகழ்ச்சியும் அப்போது நடந்தது. அது குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியது ஒன்று, தீவுப் பகுதியை இராணுவம் சுற்றி வளைத்துக் கைப்பற்றி அதில் நிரந்தரமாக இருந்ததுடன், அங்கிருந்தவர்களில் பெரும்பாலோர் இரவிரவாகக் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றபோது –1991 இல்–அக்கிராமத்தில் ஒரு சிலருடன் தன் குடும்பத்துடன் தங்கி, அவர்களுக்கு தன்னாலான சேவைகளைச் செய்தவர்கள் சிலரில் அவர் முக்கியமானவர்.**

ஓர் தீவில் வந்தே ஒதுங்கிக் கிடக்கின்றேன்...'

'நீரோடு முத்தம் நிகழ்த்தும் அடிவானின் ஓரத்தே ஆடி
ஒளிரும் ஒருசுழிப்பில் தன்னை இனம்கண்டு தாவும்
மனப்பேடு...' என்றும்,

'காதல் ஒடிந்துவிழக் காமம் தலைதூக்கும்
சேலைச் சரசரப்பு சின்ன இடை, காற்றால்
மேலெழவே ஆடை அதனுள் மினுங்குகிற
வாழைத் தொடைகள் வயிற்றின் இடைவெளிகள்
ஆளுக்குள் எதையோ அருட்டிவிட ....' என்றும் சென்று,

'எல்லாம் முடிகிறது, எங்கோ நெடுந்தொலைவில்
மல்லாந்தே அம்மா மரணத் துணையோடு
சொல்லாட, நானோ சுருண்டு கொழும்பூரில்..
இளைய பரம்பரையின் செல்வன்...' என்று தொடர்ந்து,

'ஏதாலும் நாவாய் வரும் சிலமன்?
தூரத்தே அந்தச் சுழிப்பின் ஒளியாட்டம்..?' என்று
முடியும்.

• • •

அவரின் 'மார்கழிக் குமரி' என்ற கவிதை அவர் பல்கலைக் கழக காலத்தில் இருந்தபோது எழுதப் பெற்றது. அக்கவிதை எழுதப்பட்டதன் பின்னணி எனக்கு இன்னும் ஞாபகத்தில் உண்டு. அவர் புதுக்கவிதை ஒன்றை எழுதி இளங்கதிர் என்ற பல்கலை சஞ்சிகைக்குக் கொடுத்தபோது, அதை வாசித்த தமிழ்ப் பேராசிரியர் ஒருவருக்கு அக்கவிதையின் புதுக் கவிதை உருவம் சங்கடத்தைக் கொடுத்திருக்கிறது. அதனால் அது திருப்பிக் கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மு.பொ. எழுதிக் கொடுத்ததே மார்கழிக் குமரி என்ற கவிதை. அதை வாசித்த அப்பேராசிரியருக்கு அது பிடித்தது மட்டு மல்லாமல் அதைச் சிலாகித்துப் பலருக்கும் காட்டிய-தாகவும் கதை. அக்கவிதையை சு.வில்வரெத்தினம் குரலில் பாடக் கேட்பது மிக அருமையான அனுபவம்.

'மார்கழிக் குமரி கார்முகச் செல்வி
ஊர்களி கொள்ள உலாவரு கின்றாய்
பனிநனை தென்றல் முனைபடத் தளிரின்
கனவுகள் அதிரும், காதலின் இறுக்கத்
தேவைகள் மலர்ந்து ஆசையில் நடுங்கத்
தாதினைத் தள்ளும் கார்முகச் செல்வி
ஊர்களி கொள்ள உலாவரு கின்றாய்!'

மார்கழி மாதத்தை கன்னியாக (personify) உருவகப்படுத்தி இயற்கையைச் சொல்லும் கவிஞர், பின் கார்முகச் செல்வியின் ஊரை வர்ணிக்கிறார்.

'ஆழியின் அலைகள் கீழிழுத் தடங்க
தோளினில் சுமந்த பாயொடு கலங்கள்
ஊர்மனை நடுவே உறங்கிய வாவி...
நாரைகள் கரையில் நாட்டிய தவமும்
தேரைகள் வரம்புள் தேக்கிய குரைவும்
சீரெனக் கொண்டு மார்கழிக் கோதாய்
ஊர்களி கொள்ள உலாவரு கின்றாய்!'

மார்கழி மாதத்தில் கிராமத்தில் காணும் கோலங்களையும், கேட்கும் ஒலிகளையும் கூறுகின்றார்.

'விளக்கிய முற்ற ஒளித்தரை மீதில்
பளிச்செனக் கோல வெளிச்சங்கள் தூய,
பாவையர் பாடும் 'பாவையின் கீதம்'
ஆலயமணியின் ஓசையில் தோய...
மையிருள் அகற்றும் தைவழி நோக்கி
மார்கழிக் குமரி கார்முகச் செல்வி
ஊர்களி கொள்ள உலாவரு கின்றாய்!'

என்று தை மாதம் நோக்கிய மார்கழி நடப்பதை, 'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப, மணிப்பூ ஆடை அது போர்த்து, கரும் கயல் கண் விழித்து, ஒல்கி, நடந்தாய் வாழி காவேரி! என்று இளங்கோ சொல்வதுபோலச் சொல்கிறார், கவிஞர் மு.பொன்னம்பலம்.

அவரின் 'காலி லீலை' கவிதை செய்யுள் நடையிலும், பேச்சு நடையிலும் மாறி மாறி அமைந்த அவரின் மிகச் சிறந்த கவிதைகளில் ஒன்று.

'காலி யென்றொரு காரிகை வந்தனள்
காளை யென்மனப் பீடம் அமர்ந்தனள்!...
மாலை உலாத்தையில், அங்கவோர் வேய்ங்குரல்
'மைத்துனா' வெனக் கேட்டது, பார்க்கையில்
'நாளை யென்று கடத்திய கிரிகைகள்
நடத்தும் இன்றெ' னத் தோள்களைப் பற்றினாள்...

'பொட்டு வாழ்க்கையில் உன்னைப் புகுத்துவேன்
பூமி யாவையும் உன்னில் விரிக்குவேன்
சிட்டுப் போலவும் உன்னுள் சிறுத்துநான்
சின்னச் சொண்டினால் கீச்சம் விளைக்குவேன்!...
'கலைந்த நாட்களை நினைவு படுத்தவா?...
இலந்தைக் காட்டில் எம்மூரிலே முன்னர்நாம்
இரண்டு பேருமாய்த் திரிந்ததைச் சொல்லவா?..
குமரிப் போதில் அணைத்ததும் உன்னை நான்
அளைந்த தால்கரு வுற்றதும், அதற்குளே அழகுப்
பாலனாய் நானே கிடந்ததும்...'

● ● ●

'அது' தொகுதியில் பல அருமையான ஓசைநயமுள்ள நல்ல கவிதைகளை எழுதிய மு.பொ. வின் இரண்டாவது தொகுதி 'விலங்குகளை விட்டெழும் மனிதர்கள்.' (1989) அக்கவிதைகளில் பல புதிய உருவத்தை எடுத்தவை, தமிழீழத்தை வரவேற்பவை. அப்படி இருந்தபோதிலும் எனக்குப் பிடித்த சில சில வரிகள் அவற்றில் இல்லாமல் இல்லை.

கொல்லும் கொலைகளத்தும் நம்முள்ளே சூர்ப்பவளே
எல்லை கடந்த இனியாளே எம் நாட்டின்
எல்லைக் கரணாய் இருக்க இசைந்தவளே
உன்னைக் கடந்தே ஒருவர் நுழைந்துள்ளே
எம்மை அணுகவோ? இங்கடிமை கொள்ளவோ?
காலியே, நீலியே, காட்டானைச சேனையினை
பூளிப்படுத்தியே பூவென்று ஊதாயோ?
தாயே விடுதலையே, தர்ம முடியுடையாய்
உன்னை வழுத்தியே உச்சரித்து மந்திரித்தெம்
தேசக் கொடிமரத்தில் ஏற்றி சிரங்கவிழ்ந்தோம்
வீசி எழுகவே நின் வெற்றிப் பெருமாட்சி
புரட்சிக்கு வித்தே, எல்லாத் தனியரசின்
திரட்சிக்கும் காலான தெய்வத் திகழ்வே
விழியே, அறம்வளர்க்கும் செங்கோல் விரிகுடையே
ஒளியே, நமதான்ம உள்ளுணர்வு காட்டும்
வெளியே, விடுதலையே, போற்றி! உடன் எழுக!..

● ● ●

அவரின் 'காலி லீலை' தொகுப்பில் தன் கவிதைகளை 60-70, 70-80, 80-90, 90-2000 என்று நாலு பிரிவுக்குள் அடக்குகிறார். அவை அக்கால கட்டங்களில் எழுதப்

பெற்ற கவிதைகளாக இருக்க வேண்டும். முதல் பகுதி அவர் 68 வெளியிட்ட ‘அது' தொகுதிக் கவிதைகள். அவை இன்றும் சிறப்பானவைகளாகவே உள்ளன. 70-80 இடைப்பட்ட காலப் பகுதியில் எழுதப் பெற்றவற்றில் அதிகமானவை, புதுக் கவிதை வகைமைக்குள் அடக்கக் கூடியன. தரிசனம், பிறையொரு காலம் முழு நிலவாகும், பிரபஞ்சக் கும்மி போன்றவை அருமையான கவிதைகள்.

‘சூத்திரர் வருகை' என்ற அவரது மூன்றாவது கவிதைத் தொகுதியில் உள்ள ‘துயரி' என்ற நீண்ட கவிதை, காலி லீலை என்ற கவிதையுடன் ஒப்பு நோக்கத்தக்கது. அதில் ஓர் இடத்தில் அகதி முகாம்கள்பற்றி விபரிக்கிறார். மேல் நாட்டிலுள்ளவையல்ல. ஈழத்தில் உள்ள உண்மையானவை.

‘காலைக் கதிர்கள் நிலந்தொட முன்னரே
அகதி முகாம் அமர்க்களப்பட்டது
குழந்தைகள் அழுதன
அவர் மூக்கில் வழிந்த சளிகளும் கூடவே
மேலும் கீழும் போய் வந்தழுதன
மூத்திரம் ஊறிய கந்தல் அழுதன
அவற்றினிடையே அரைக் குண்டி தெரிய
கிடந்து சூம்பிய வயிறுகள் அழுதன...
ஈக்கள் பறந்து மூக்குகள் வாய்கள் தேடிக் குந்தின
முகாமின் முற்றத்தில் கொட்டாவி விட்டோராய்
தூரவெளியைத் துழாவித் துழாவி
தமக்குள் ஏதோ அரற்றின கிழங்கள்...’

மு.பொ. வின் கவித்துவம் ‘துயரி' என்ற நீண்ட கவிதை யில் - அதை ஒரு காவியமாகக்கூடக் கணிக்க முடியும். விரித்துப் பொருளுரைக்கக் கூடிய கவிதை. பாரதியின் குயில் பாட்டு போல- ஆன்மீக முகத்துடனும் யதார்த் தத்துடனும் அழகாக வெளிப்பட்டுள்ளது. உண்மையில் அவரின் நீண்ட கவிதைகள் மனதைப் பிணிப்பனவாக உள்ளன. அதன் சந்தமும், மரபார்ந்த செய்யுள் தன்மையும் அதற்கு ஒரு காரணம் எனலாம். அத்துடன் பேச்சோசையும் அன்றாட சொற்கள், சொற் கூட்டங்கள், உரையாடல்கள் போன்றவை பொருத்தமான இடங்களில் வந்து விழுவதும் தேனில் கலந்த பால் போல இருக்கும்.

அவரின் இன்னொரு நீண்ட கவிதையான ‘பொறியில் அகப்பட்ட தேசம்' அமெரிக்காவின் இரட்டைக் கோபுரச் சரிவிற்கான காரணத்தை சுட்டுகின்றது. பலரும் அச்சரி விற்கான காரணத்தை எழுதியுள்ளனர். ஆனால் மு.பொ. அமெரிக்காவின் வீழ்ச்சியை இரட்டைக் கோபுரத்துடன் இணைக்கிறார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதை நிர்ணயிக்கும் அரச கருவிகளையும், முதலாளித்துவ அமைப்பையும், அமெரிக்க மக்களையும் ஒன்றாக சமன்படுத்த முயன்றிருக்கிறார். அத்துடன் அதற்கான காரணம், அமெரிக்கா இதுவரை செய்த கர்ம வினை என்று முடித்தால், ஈழத் தமிழர் நாற்பதினாயிரம் பேர் முள்ளிவாய்க்காலில் புதையுண்டு போனதற்கு அவர்கள் செய்த கர்ம வினையா காரணம்? பொறியில் அகப்பட்டது

**தொடர்ந்து எழுதிவரும் கவிஞருக்கு, ஐம்பது வருடங்களில் அவர் பெற்ற அனுபவம் இலக்கிய உருவ, உள்ளடக்க வரலாற்றில் பெரிதாக இருக்க வேண்டும். அதனால் ஒரு கவிஞரின் கவிதைகள் இறுதியில் ஆத்மிகத் தளத்தை எட்டி விடுவதும், உருவத்தில் மாற்றங்கள் நடைபெறுவதும் ஆழ்ந்த அவ்வனுபவத்தால் கிடைத்த பெறுபேறுகள் என்றும் சொல்லலாம். அதுவே மு.பொ.வுக்கும் நடந்திருக்கிறது.**

தமிழர் செய்த கர்மவினை என்று கவிதை எழுதலாமா? இங்கே கர்மவினைக் கோட்பாடு பிரச்சினைக்குரியதாகிறது.

பொறியில் அகப்பட்ட தேசம் என்ற கவிதையை A Country Entrapped என்ற தலைப்பில் ஏ.ஜே. கனகரட்னா ஆங்கில மொழியாக்கம் செய்திருக்கிறார். அத்துடன் மு.பொ.வே ஆங்கிலத்தில் எழுதிய இன்னொரு நீண்ட கவிதை A Song of a Liberated Zone. அதுவும் அத்தொகுதியில் வெளிவந்துள்ளது. அத்தொகுதியைப் பற்றி ஆங்கில இடதுசாரி விமர்சகரான ரெறி ஈகிள்டன், வாசிப்பனுவத்தை நுண்ணயமான, இயல்பெழுச்சி கவிதை என்கிறார். கறுப்பிசைக் கவிஞர் பெஞ்சமின் செ.'ப்னையா, இக்கவிதை மற்றவர்கள் பார்க்காத புதிய கோணத்திலிரு ந்து இரட்டைக் கோபுர வீழ்ச்சியை மற்றவற்றுடன் தொடர்புபடுத்திப் பூரணமாகப் பார்க்கிறது என்றும், கலாசாரம், சமயம் ஆகியவற்றையும் தொடுத்துப் பார்த்து முக்கிய கேள்விகளையும் எழுப்புகிறது என்றும் சொல்கிறார்.

மு.பொ. கவிதையில் உருவப் பரிசோதனைகளை காலத்துக்குக் காலம் செய்திருக்கிறார். முதலில் மரபுக்

கவிதையுடன் ஆரம்பித்த அவர், புதுக்கவிதை வடிவத்தையும் பின்னர் இளகிய மெய்யுள் வடிவத்தையும் கையாண்டிருக்கிறார். பின்னர் மூன்றையுமே கலந்தும் கவிதை படைத்துள்ளார். மொத்தமாக அவரின் கவிதை-களை வாசிக்கும் ஒருவர் அவரின் ஓசை நயம் மிக்க மரபுக் கவிதைகளையே சிறந்தவை என்று கணிப்பர்.


மு.பொ. தன் கவிதைகளில் இந்திய யூடோ-கிரேக்க புராண, இதிகாசக் கதைகளை தேவையான இடங்களில் எடுத்தாளுகின்றார். அகத்தியரிலிருந்து அகலிகையூடாக, புறொமித்தியஸ் வரை. அவை அவரின் கருத்துக்களுக்கு தர்க்க பலத்தையும் தார்மீக அடிப்படைகளையும் கொடுக் கின்றன.

'அது' தொகுதிக்கு மு.தளையசிங்கம் எழுதிய முன்னுரை யில், '... தன்னை விரித்து எல்லாவற்றிலும் தன்னைப் பார்க்கும் ஓர் ஞானப் பார்வை அவருடையதாகத் தெரிகி றது.' இந்த ஞானப்பார்வையைத் தான் மு.பொ. பின்னர் ஆத்மார்த்தம் என்று அடிக்கடி கூறுகிறார் என்று நினைக்கிறேன்.

தொடர்ந்து எழுதிவரும் கவிஞருக்கு, ஐம்பது வருடங்களில் அவர் பெற்ற அனுபவம் இலக்கிய உருவ, உள்ளடக்க வரலாற்றில் பெரிதாக இருக்க வேண்டும். அதனால் ஒரு கவிஞரின் கவிதைகள் இறுதியில் ஆத்மீகத் தளத்தை எட்டி விடுவதும், உருவத்தில் மாற்றங்கள் நடைபெறுவதும் ஆழ்ந்த அவ்வனுபவத்தால் கிடைத்த பெறுபேறுகள் என்றும் சொல்லலாம். அதுவே மு.பொ.வுக்கும் நடந்திருக் கிறது. பலர் கவிதைகளில் கரையில் நின்று 'அதையும் இதையும்' எழுதிப் பரிசோதனைகள் செய்து பயத்துடன் நீந்திக் கொண்டிருக்கையில் ஆழப் போய் முத்தை எடுத்து வருகிறார் மு.பொ.

● ● ●

நோயிலிருத்தல் நாவல் இரண்டு பாகங்களைக் கொண்டது. முதலாம் பாகம் 1984 ஆண்டு இறுதியில் மயிலிட்டிக் கிராமத்தில் அமைந்திருக்கும் காசநோய் ஆஸ்பத்திரியில் அவர் காசநோய்க்குச் சிகிச்சை எடுத்த பின்னணியைக் கொண்டது. அக் காச நோய் ஆஸ்பத்திரி –சனரோறியம்-யாழ்ப்பாணத்தில் காச நோய்க்காரர் தங்கிச் சிகிச்சை பெற்று ஆரோக்கியமாகி வரும் ஒரே இடம். அவ்விடத்தில் அவர் மூன்று மாதம் தங்கியிருக்கிறார். அங்கு நடைபெறும் அன்றாட நிகழ்ச்சிகள், ஆசிரியரின் உள்மன ஆத்மீக



யாத்திரைகள், அவரின் ஒதுங்கியிருத்தல் அதேவேளை எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்தல், உலகியல் நிகழ்வுகள், தன் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருத்தல், அது அவர் நினைவுகளில் வந்து செல்லுதல் ஆகியவற் றைக் காட்டும், பிரதிபலிக்கும் ஒரு சமூகப் படப்பிடிப்பு இந்த நாவலின் முதல் பாகம்.

மயிலிட்டிக் கிராமம் கடற்கரையோரத்தில் அமைந்திருக்கும் ஒரு மீன்பிடிக் கிராமமும் ஆகும். தமிழீழ இயக்கத்தினர், அக்கடற்கரையை இந்தியாவுக்குப் போய் வரும் கடற்கரை யாகவும் பாவித்தவர்கள். அதனால் அவ்விடம் இலங்கைக் கடற்படை, இராணுவம் ஆகியவற்றின் அடக்குமுறைக்கும் குண்டு வீச்சுக்கும் இரையான இடம். இந்நாவலின் பின்னணியில் அவ்விடத்தில் போய் வரும் இராணுவ, கடற்படை வாகனங்களும், கடலில் இருந்து கரையோரங் களிலிருந்த மீனவர் குடிசைகளின் மேல் போடும் குண்டுகளும் இடைக்கிடை வந்து போகின்றன. அக்காலம் ஒப்பீட்டளவில் இயக்கமும், இராணுவமும் பெரிதாக ஓடித் திரிந்த காலம் அல்ல. இயக்க நடவடிக்கைகள் தொடங்கிய காலம். இறுதியில் இக்கால கட்டத்தின் கதையை இரண்டாம் பாகத்திலேயே முடிக்கின்றார்.

இரண்டாம் பாகம் 1987 இல் நடைபெறுகிறது. இக்காலத்தில் இயக்கங்கள் பல வளர்ந்தது மட்டுமல்லாமல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் அமுலாகி, பின்னர் இந்தியப் படைகளுக்கும் புலிகள் இயக்கத்தினருக்கும் நடைபெற்ற யுத்தம் ஆரம்பமாகி முற்றி விட்டது. அக்காலத்தில் இவர் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகத் தங்கியிருக்கிறார். அவர் பொலி நியுற்றைஸ்-poly neuritis-இன் பாதிப்பால், படுக்கையில் கிடக்கிறார். அங்கும் அவரின் மனம் ஆத்மீக அலசல்களில் ஈடுபடுகின்றது. அதேவேளை கதையும் சிறிது வேகம் கொள்கின்றது. முதலாம் பாகத்திலும் பார்க்க.

கடைசியில் அவர் கிடந்த ஆஸ்பத்தரிக்கே அம்மோதல் வந்து சேர்ந்தது. இந்திய இராணுவம் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து பலரையும் கொன்றது. ஏதோ ஓர் அருட்டுணர்வில் அது நடக்கவிருந்த அன்று பகலே வலுக் கட்டாயமாக, டொக்ரரின் அலட்சியத்தையும் பொருட்படு த்தாது, தன்னை 'துண்டு வெட்டி விட வேண்டும்' என்று விடாப்பிடியாக நின்று வீடு போகிறார். அன்றிரவு ஆஸ்பத்திரிக்குள் இந்திய இராணுவம் புகுந்து அட்டகாசம் செய்கின்றனர். பலர் இறக்கின்றனர். பலர் காயப்படு கின்றனர். இவர் பகலே போனபடியினால் தப்பிப் பிழைக் கிறார். எப்படி அது நடந்தது? அது அற்புதம் எனலாமா? அல்லது இவர் நம்பும் இறையருள் காப்பாற்றியதா? இரண்டாவதையே நம்புகிறார் மு.பொ.

இரண்டாம் பாகத்தில் மு.த. வின் ஆத்மீக செயற்பாடுகளும் அவர் இறந்த கடைசித் தருணமும் அவருடன் மு.பொ. நடத்திய சம்பாஷணைகளும் சொல்லப்படுகின்றன.

நோயிலிருத்தல் என்ற சக்திவாய்ந்த தலைப்பு பல

காரணங்களால் பெறுமதி வாய்ந்தது. எண்பதுகளுக்குப் பிறகு ஏற்பட்ட ஈழத்துச் சமகால சமூக, அரசியல், இயக்க, இலங்கை, இந்திய இராணுவ நடவடிக்கைளைப் பற்றிப் பேசும் நாவல் என்பதால் அது அதிகம் பேசப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பேசப்படவில்லை. காரணங்கள் சிலவுள. அவரின் ஆத்மீக விசாரணை அளவுக்கதிகமான பக்கங்களை எடுப்பதால் நாவலின் முதல் பக்கங்களில் அலுப்பும் தொய்வும், இடைவெளிகளும் ஏற்படுகின்றன. நாவலோ, சிறுகதையோ எடுத்தஎடுப்பிலேயே வாசகனைக் கவர வேண்டும் என்பது அவற்றின் அடிப்படைத் தன்மை. அதை அவர் கவனத்தில் எடுக்கவில்லை. உண்மையில், நாவலில் அப்பகுதி சுருக்கப்பட்டிருந்தால், அல்லது பதிப்பித்தோர், ஆசிரியத்துவம் செய்திருந்தால் அந்நாவல் இன்னும் கூடுதலாகப் பேசப்பட்டிருக்கும்.

நாவலிலுள்ள கதாநாயகனின் நோய் மட்டுமல்ல, எங்கள் தேசத்தின் நோய், தனி மனிதனின் ஆத்மீக நோய் ஆகியவற்றின் குறியீடாகவே பெருமளவு அது கணிக்கவும் பட்டிருக்கும். ரஷ்ய நாவலாசிரியரான அலெக்சான்டர் சொல் செனீஸீனின் 'கான்சர் வாட்' ரஷ்ய சமூகத்தைப் பேசுவதைப் போல, இதுவும் தற்கால இலங்கைச் சமூக, அரசியலைப் பேசியிருக்கிறது. ஆனால் மு.பொ.வின் நோக்கம் தனது தனிப்பட்ட ஆத்மீக வளர்ச்சியைப் பேசுவதையே கருத்தாகக் கொண்டிருப்பது போல் இருந்ததால், அந்நாவல் அவ்வகையில் சமூக, அரசியல் முக்கியத்துவத்தை இழந்து விட்டிருக்கிறது. ஆனால் இலக்கிய வாசகர்கள், சமூகவியலாளர்கள், வரலாற்றாசிரியர்கள், இலக்கியத்தினூடாக 1980 க்கும் 2000 க்கும் இடைபட்ட ஈழத்து அரசியலை, சமூகத்தை நோக்குபவர்களுக்கு இதில் அரிய தகவல்கள் கிடைக்கும்.

இந்நாவலில் சில தகவல் பிழைகளையும் சில முரண்பாடுகளையும் தவிர்த்திருக்கலாம். உதாரணம், டச்சுக் கால சங்கிலியன், ஊழ்வினையைப் புறக்கணிக்கும் ஆசிரியர் கர்மா உண்டென்கிறார். கர்மாவும் ஊழ்வினையும் ஒன்றல்லவா?

இந்நாவல் புனைவு என்பதிலும் பார்க்க மெய்யுள், அதாவது நடந்தவற்றைக் கூறும் உண்மைக் கதை எனலாம். ஆனால் இவரின் மனம் பற்றிய ஆய்வு பலவேளைகளில் அளவு கடந்து போய் வாசகனை சலிப்படையச் செய்வதால் அது வீரியம் இழந்தும் விடுகிறது. பலவீனமான நாவலாகவும் மாறி விடுகிறது.

● ● ●

'கடலும் கரையும்' சிறுகதைத் தொகுப்பிலுள்ள 'அரை நாள் பொழுது' சிறுகதை (1964) ஒரு இருப்பியல்வாதக் கதையாகவும், முதலாளித்துவத்துக்கு எதிரான ஓர் அருமையான கதையாகவும் படைக்கப்பட்டுள்ளது. அதில் வரும் காமினி, கதைசொல்லி ஆகியவர்களின் நடத்தைகள், நுண்ணிய கவனிப்புக்கள் இருப்பியல் சார்ந்தவைகள். அவர்கள் இருவரும் புறத்தியான ரகத்தைச் சேர்ந்தவர்கள். சாதாரண ஒழுக்கங்களைக் கடந்தவர்கள். இறுதியாக அவர்கள் ஹோட்டலில் இருந்து வெளியே வரும்போது வெயில் காய்கிறது. அது கச்சிதமாக அமைந்த முடிவு. மு.பொ.வின் சிறுகதைகளிலேயே எனக்குப் பிடித்தமான கதையும் அதுவே. அது மிகச் சிறிய கதையாக இருந்தபோதிலும். இக்கதையை ஏ.ஜே.கனகரட்னா ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

நோய்கள் பல தாக்கியபோதும்,
தனிப்பட்ட இழப்புக்கள் -
முக்கியமாக மு.த.வின் மரணம்,
தந்தையின் மரணம்,
நிரந்தர வருமானம் இல்லாமை,
நிரந்தரத் தொழில் இல்லாமை,
வறுமை,
நிரந்தர இடமில்லாத அலைச்சல்,
ஆத்மீகத்தில் காலத்திற்கு காலம்
ஏற்பட்ட நிச்சயமின்மை,
உறவினர்களுடன் உண்டாகிய
சிக்கல்கள் போன்றவற்றிலிருந்து
விடுபட்டு தாங்கி நின்றதற்கு
அவரின் ஆத்மீக நம்பிக்கையால்
ஏற்பட்ட தன்னம்பிக்கையே
காரணம்

'தவம்' என்ற சிறுகதை 1968 இல் எழுதப் பெற்று 'யுகம்' என்ற தொகுதியில் வெளிவந்தது. அது மு.பொ.வின் ஆத்மார்த்தக் கதைக்கு நல்ல உதாரணம். அளவாக, கச்சிதமாக சிறுகதை வடிவத்திற்குள் அடங்கிய கதை அது

'கணங்களை விழுங்கிய யுகங்கள்' (1989) அது இந்திய சமாதானப் படை இலங்கையிலிருந்த காலம். புலிகளுக்கெதிரான மாற்று இயக்கங்கள் தங்கள் பழித்தீர்ப்பை நடத்திக் காட்டிய காலம். அதில் மாஸ்ரர் என்பவர் மாற்று இயக்கத்தின் கைகளில் பஸ்ஸில் அகப்பட்டுக் கொள்கிறார். இந்த மாஸ்ரர் புலிகளுக்குச் சார்பாகப் பிரச்சாரம் செய்தவர் என்று சொல்லப்படுகிறது.

அந்த மாஸ்ரரின் பீதியை, அச்சத்தை, பயத்தை மிகத் தெளிவாக அவற்றின் சகல அவலட்சண முகங்களுடனும் மு.பொ.சித்திரிக்கிறார். மாற்று இயக்கப் 'பொடியன்களின்' நடத்தைகள், வெருட்டல்கள், அவர்கள் இளம் பெண் ஒருத்தியில் காட்டும் 'கண்' கூத்துக்கள் எல்லாவற்றையும் அளவோடு அங்கொன்று இங்கொன்றாகக் காட்டிக் கதையை நகர்த்தியிருக்கிறார். இந்தக் கதையும் அவரின் சிறந்த கதைகளில் ஒன்று என்பேன்.

'முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை' தொகுதியிலுள்ள 'வீடும் பல்லக்கும்' என்ற சிறுகதை கொழும்பில் வீடு தேடும் ஒருத்தனுடைய அலைச்சல், உளைச்சல், பணக் கஷ்டம், பாதுகாப்புப் பிரச்சினை, சிங்களவர்களால் ஏற்படும் தொல்லை, தமிழர்களை அவர்களை நடத்தும் விதம் போன்றவற்றை விபரிக்கிறது, அதேவேளை ஈழத்து அரசியலையும் தமிழரசுக் கட்சி வீடு சின்னத்தை வைத்து தமிழர்க்கான நிலத்தையும் வீட்டையும் பெற முடியாமல் போன அரசியல் நிகழ்ச்சிகளையும் தோல்வியையும் சாதுர்யமாக இணைத்துச் சொல்லும் கதை.

அவர் பின்னால் எழுதிய பல கதைகள் இந்தளவு வெற்றியைப் பெறவில்லை. அளவு, கச்சிதம். வடிவம், கற்பனை, கதை, ஆகியவை அவற்றில் வெளிப்படாதது மட்டுமல்ல, அக் கதைகள் அவர் சொல்ல வெளிக்கிட்ட ஆத்மார்த்த தளங்களில் தேவைக்கதிகமான சொற்களால் விபரிக்கப்பட்டு, வலுக்கட்டாயமாக எடுத்தாளப்பட்டதானதொரு தோற்றத்தை அவற்றுக்கு அளித்து விடுகின்றமை அவற்றின் தோல்விக்குக் காரணம் என்பது என் கணிப்பு.

● ● ●

கவிதை பற்றிய விமர்சனங்கள் ஈழத்தில் வெளிவந்தது மிகக் குறைவே. கவிதைகள் எழுதுபவர்கள் தாராளமாக மூலைக்கு மூலை இருக்கிறார்கள். ஆனால், கவிதை பற்றிய ஆழமும், புரிதலும் அதிகமானோர்க்கு இருந்ததில்லை. மரபுக் கவிஞர்கள் செய்யுள் எழுதும் கலையை பண்டிதர், பால பண்டிதர் வகுப்புக்களில் கற்றுத் தேர்ந்தவர்கள். ஆனால் அவர்களிடம் கவிதை பற்றிய புரிதலோ கவித்துவமோ மிக அரிதாகவே காணப்பட்டன. அணி, உவமை, உவமானம், உவமேயம், நயம் கூறுதல், போன்றவற்றுடன் அவர்களின் கவிதை பற்றிய புரிதல்கள் நிறைவு பெற்று விட்டன.

கவிதை பற்றிய புரிதல்களுக்கு நவீன கவிஞர்களிடமே வரவேண்டியிருக்கின்றது. முருகையன், சண்முகம் சிவலிங்கம், நு்.மான், மு.பொன்னம்பலம், சேரன், செ.யோகராசா போன்ற சிலரே கவிதை பற்றிய விமர்சனங்களை ஈழத்தில் நிகழ்த்தியவர்கள்.

தொடர்ச்சியாக இன்றும் விமர்சனக் குறிப்புக்களையும், கட்டுரைகளையும் எழுதிக் கொண்டு வருபவர் மு.பொ. அவருடைய கட்டுரை நூல்களான, 'ஆத்மார்த்தமும் யதார்த்தமும்' 'விசாரம்' ஆகியவற்றிலும், அவருடைய நூல்களின் முன்னுரைகள், மற்றவர்களுக்கு அளித்த முன்னுரைகள் ஆகியவற்றில் அவரின் கவிதையியல் பற்றிய கருத்துக்கள் வெளிவந்துள்ளன. கவிதை என்றால் என்ன? கவிதையின் எதிர்காலம், இன்று புதுக் கவிதையின் நிலை என்ன? சொற்கள் போன்றவற்றைப் பற்றி விரிவாகச் சிந்தித்து எழுதியுள்ளார். 'விலங்கை விட்டெழும் கவிதை' தொகுதி முன்னுரை அவரின் விமர்சனக் கொள்கையை எடுத்துக் கூறுகின்றது.

70களில் மல்லிகை சஞ்சிகையில் மஹாகவியின் பா நாடகங்களை அலசியிருக்கின்றார். நாடகத்தைப் பாவில் எழுத வேண்டிய தேவை என்ன? அதில் ஏற்படும் சிக்கல்கள் பற்றிய அக்கட்டுரை முக்கியமானதொரு ஒரு கட்டுரைத் தொடர்.


● ● ●

கடந்த ஐம்பது வருடங்களாகத் தொடர்ந்து கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்கள், நாவல் எழுதி வரும் இலங்கை எழுத்தாளர் இரண்டொருவரே என்று சொன்னால் அது மிகையில்லை. அத்துடன், ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை பெற்ற, குறைந்தது வாசிக்கும் தமிழ்க் கவிஞர்கள், வாசகர்கள் அருகி வரும் தற்காலத்தில் மு.பொ. ஒரு விதிவிலக்காகவே இருக்கிறார். இரண்டாவது, மற்றவர்களின் கவிதைகளை விமர்சனம் செய்பவர்கள் எம்மிடையே மிகவும் குறைவு, அப்படிச் செய்தால் தன் கவிதைகளையும் விமர்சனம் செய்து விடுவார்கள் என்ற பயமும் தப்பித்தல் தன்மையும் உடையவர்களே பலர். தனிப்பட்ட முறையில் பேச்சில் வேண்டுமானால் விமர்சனம் செய்வார்கள். எழுத மாட்டார்கள். மு.பொ தன் கவிதைத் திறத்தில், கருத்தில் நம்பிக்கை வைத்தவர். அதனால் மற்றவர்களின் கவிதைகள் பற்றிய விமர்சனங்களைத் துணிவாகவும் நேர்மையுடனும் செய்து வருபவர். உதாரணம், மஹாகவி, நீலாவணன், சில்லையூர்ச் செல்வராசன், சோலைக்கிளி போன்றவர்கள் மீது வைத்த விமர்சனங்கள். மூன்றாவதாக, சிலர் தங்களை இடதுசாரிகள், மார்க்ஸியர்கள், மாற்றுக் கருத்தாளர்கள், நாஸ்திகர் என்று சொல்வதில் கூடப் பெருமையும் ஏதோ பட்டமும் உள்ளவர்கள் போல எழுதுவார்கள். ஆனால், தான் ஆஸ்திகர் என்றோ சமயவாதி என்றோ கூட எழுத மாட்டார்கள். ஆனால் தான் ஆத்மீகவாதி என்றும் அந்தப் பேரருள் சக்தியே தன்னை இயக்குகிறது என்றும் தன் நூல்களை பேறறிவுக்கே சமர்ப்பணம் செய்கிறேன் என்று எழுதும் ஓர் எழுத்தாளர் இருப்பார் என்றால் அது மு.பொ.தான். அத்துடன் ஆத்மீகத் தளத்தை அழுத்தி, அதையே தன் ஆக்கங்களுக்கு கருப்பொருளாக்கியும் அது பற்றி விரிவாக எழுதியும் வருபவரும் அவர் ஒருவரே. அதை நாம் ஏற்றுக் கொள்ளலாம், விடலாம், அது வேறு விடயம். நாலாவது, பல எழுத்தாளர்களும் ஈழத்தை விட்டுப் புலம்பெயர்ந்து சென்ற பின்னும், ஈழத்திலிருந்தே தன் நிலைப்பாட்டிலிருந்து அதிகம் வழுவாமல், சமரசம் செய்யாமல் ஐம்பது வருடங்களாகத் தொடர்ந்து பத்திரிகை நடத்தியும்,

கட்டுரைகள், கவிதைகள், நாவல் எழுதியும் வரும் மிக, மிகச் சிலரில் அவரும் ஒருவர். இத்தனைக்கும் அவர் நிரந்தரத் தொழிலோ, வருமானமோ, பொருளாதார வசதியோ, வீடோ சொத்தோ, அரசியல் செல்வாக்கோ, பிறவோ அற்றவர். அதேவேளை அவர் அவற்றை நாடிச் சென்றவரும் அல்ல.

நோய்கள் பல தாக்கியபோதும், தனிப்பட்ட இழப்புக்கள் - முக்கியமாக மு.த.வின் மரணம், தந்தையின் மரணம், நிரந்தர வருமானம் இல்லாமை, நிரந்தரத் தொழில் இல்லாமை, வறுமை, நிரந்தர இடமில்லாத அலைச்சல், ஆத்மீகத்தில் காலத்திற்கு காலம் ஏற்பட்ட நிச்சய மின்மை, உறவினர்களுடன் உண்டாகிய சிக்கல்கள் போன்றவற்றிலிருந்து விடு பட்டு தாங்கி நின்றதற்கு அவரின் ஆத்மீக நம்பிக்கையால் ஏற்பட்ட தன்னம்பிக்கையே காரணம். அவற்றிலிருந்து ஃபீனிக்ஸ் பறவைபோல எழுந்து விண்ணில்பறப்பதற்கு அவரின் ஆத்மீக வளர்ச்சியும் அனைத்தையும் தூர நின்று பார்த்தமையும், அத்துடன் இலக்கியத்தில் தொடர்ந்து ஈடுபட்டமையும் காரணங்கள் எனலாமோ?

நிரந்தரம் என்ற பேரறிவு ஒன்று இருக்கையில் மற்றவை அனைத்தும் அதில் தங்கியிருக்கும் தற்காலிகம் என்று தெரியாதவரல்ல அவர். இத்தனை இன்மைக்கும் மத்தியில் அவரை வாழவைப்பதும், தொடர்ந்து எழுத வைப்பதும் அவர் நம்பும் நிரந்தரப்பேரறிவும் 'அது'வாகிய பேருளுமே.



பொன்னர் என்று படர்க்கையிலும் பொன்னா என்று முன்னிலையிலையும் நான் அழைக்கும் என் இனிய நண்பர், அவர். இடைக்கிடை நண்பர்களுக்கிடையே ஏற்படும் கருத்தொற்றுமை, வேற்றுமை, வேற்றுமையில் ஒற்றுமை, சூடு பிடிக்க நடக்கும் விவாதங்கள், இடைவெளிகள், பிரிவுகள் என்று பல எம்மிடையே காலத்துக்குக் காலம் ஏற்பட்டபோதிலும், இன்று தூர இருந்த போதும், நெருக்கமும், அன்பும் இன்றும் இருக்கிறது என்பதை நானும் அவரும் மாறி மாறி உணர்ந்து கொண்டிருக்கிறோம்.

நாம் இருவரும் ஒன்றாக ஆத்ம தீட்சை பெற்றவர்கள், சில காலம் ஒரே அறைவாசிகள், ஒன்றாகப் படித்தவர்கள், ஒன்றாகப் பல விடயங்களில் -சமூக சேவை, அரசியல் சேவை, பத்திரிகை, சஞ்சிகை நடத்தல் போன்ற-பல வற்றில் பங்குபற்றியவர்கள். ஒற்றுமையும், வேற்றுமையில் ஒற்றுமையும் இல்லாவிட்டால் அவற்றைச் செய்திருக்க முடியாதல்லவா? அதனால் இக்கட்டுரை நீண்டதாகப்போனது மட்டுமல்ல, அவரின் சொந்த விசயங்களும் இதில் தவிர்க்க முடியாதவகையில் வந்துள்ளன. பொன்னரின் கவிதைத் திறனை, அர்ப்பணிப்பை, எழுத்துலகம் சரிவர இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்ற ஆதங்கம் இன்னும் எனக்கு நிறை யவே இருக்கிறது.

# பண்ணாய் விசும்பில் படரும் சுருதி

- மு.புஷ்பராஜன்

பிற்காலத்தில் எனக்கு மிக நெருக்கமானவரும் இலக்கியத்தில், குறிப்பாக கவிதையில் பல புதிய திசைகளை உணர்த்தியவர்களில் ஒருவருமான மு.பொ. அவர்கள், வெறுப்பின் வழியாக அறிமுகமானார் என்பது எனக்கு ஆச்சாயமாக இருக்கவில்லை. காரணம் ஒருசிலர் அவ்வாறுதான் எனக்கு அறிமுகமாகியுள்ளனர். என் ராசி அப்படி.

யாழ்ப்பாணத்தின் சாய்ந்த வெய்யில், வீரசிங்கம் மண்டபத்தின் வெளிச் சுவரிலும் கண்ணாடி யன்னல்களிலும் படர்ந்துகொண்டிருந்தது. உள்ளே டொமினிக் ஜீவாவின் மல்லிகை இதழ்பற்றிய ஆய்வு. எத்தனையாவது இதழ் என்பது ஞாபகத்தில் இல்லை. அவையோர்க்கான நேரத்தில் இளையவர் ஒருவர் மல்லிகையில் சிறுகதைகள் பற்றி பேசுகையில் சிறுகதைகள்.....மௌனியின் சிறுகதைகள்போல்....உணர்வு....உணர்வு......மென்மையான உணர்வு எனத் தடுமாறிக்கொண்டிருந்தார். தீடீரென பின் வரிசையிலிருந்து ஒரு குரல். அதென்ன மென்மையான உணர்வு என்ற கேள்வி. சுத்தமான நக்கல் குரல்தான். பார்வையாளர்களில் பலர் சிரித்தே விட்டார்கள். பேசியவர் மேலும் தடுமாறிவிட்டார். மௌனியின் சிறுகதைகள் கிளர்த்தும் மன உணர்வுகளை தேர்ந்த வெளிப்பாட்டுத்திறன் உள்ளவர்களே பொருத்தமான வார்த்தைகளுக்குத் தவிக்கும்போது ......சினத்துடன் பின்னால் திரும்பிப் பார்த்தேன். மிக மெலிந்த தோற்றம், அடர்த்தியற்ற கேசம், பரந்த நெற்றி, ஊதலற்ற உட்குவிந்த கன்னம், முகத்திற்கு பொருத்தமற்ற தடித்த மீசை.

வழமைபோல் கூட்டத்தின் முடிவில் மண்டப வெளி முற்றத்தில் சிறு சிறு குழுக்களிடையிலான உரையாடல்கள். எனக்குள் எரிச்சலை ஏற்படுத்தியவர் மு.பென்னம்பலம் என அப்போதுதான் அறிய முடிந்தது. இலக்கிய ஆர்வத்துடன் படைப்பாளிகளையும் சந்திக்கும் ஆவல் என் மனதை கவர்ச்சியுடன் நிறைத்திருந்த காலம் அது. மு.தளையசிங்கத்தின் தம்பி என அறியப்பட்டவருடன் எனது எரிச்சல் வளர்ந்துகொள்ள முடியாது அடங்கிவிட்டது. அதன்பின்னர் நட்பின் செடி, செழுமையின் அடர்த்தியுடன் இலைகளை விரித்தன.

அநேகமாக ஒவ்வெரு வாரத்தின் வெள்ளிக் கிழமைகளிலும் அவர் யாழ் வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். யாழ் பஸ் நிலையத்தின் மேற்குப்புறமாக அமைந்திருந்த நவீன சந்தைக் கட்டிடத்திற்கு எதிராகவுள்ள ஒரு கடைக்கு வந்து, பொருட்களை வாங்கிச் சேகரித்துக்கொண்டு புங்குடுதீவுக்குத் திரும்பிவிடுவார். தனியாக வருவார். சில வேளைகளில் வில்வனுடன் (சு.வில்வரத்தினம்) வருவார். இரண்டாவது அல்லது மூன்றாவது ஆளாக நான் இணைந்துகொள்வேன். நண்பகல் வெய்யிலின் வேர்வையிலும், முடிந்தால் மழையிலும் தொடரும் நடையில் தமிழகத்து, ஈழத்து இலக்கியங்ககளின் அலசல் எம்மோடு இழுபட்டுக்கொண்டு வரும்.

70களில் மு.த.வின் 'போர்ப்பறையும்', மு.பொ.வின் 'அது' கவிதைத் தொகுதியும் அதே வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடப்படுகிறது. 'போர்ப்பறை' விமர்சனம் செங்கை ஆழியானுக்குரியது. 'அது' இலக்கிய நட்பின் நெருக்கம்

காரணமான எனக்கானது. விமர்சனத்திற்காக அத்தொகுதியைத் திரும்பத் திரும்ப படித்தபோது அக்கவிதைகளின் வரிகள் என்னுள் ஏற்படுத்திய கிளர்ச்சியும் பிரமிப்பும் இன்றும் பசுமையானது. மனம் லயித்து நான் மீட்டிப்பார்க்கும் கவிதை வரிகளுள் மு.பொ.வினதும் அடக்கம்: "விளக்கிய ஒளித்தரை மீதினில் பளிச்சென கோல வெளிச்சங்கள்", "அந்திக் கருவானின் கூனல் முடிவில் குதிக்கும் சுழிப்பில்", "யாரெங்கோ இன்துயர் யாழைப் பிழிந்துவிட இரவிங்கே மேவும் இசை போல", "வருகிறாள் எனது காதல் வதிந்திடச் சமைந்த கோயில்", "ஒடுங்கும் ஒளித்திரள்வின் ஓரக் கசிவு" என இப்படியே இவை நீண்டு செல்லக்கூடியவை.

விடுமுறை காலங்களில் யாழ் வருகையில் சிலவேளை புங்குடுதீவுக்குச் செல்வதும் மு.த.வீட்டில் தங்கி மறுநாள் காலையில் மீள்வதையும் நான் வழக்கமாகக் கொண்டிருந்தேன். இக்காலங்களில் மு.த, மு.பொ. ஆகியோருடன் வெகுநேரம் வரைக்கும் இலக்கிய உரையாடல்கள்தான். மு.பொ. கவிதை சார்ந்து மொழியின் தெரிவுபற்றியும் நேர்த்திபற்றியும் அதன் மேலைத்தேய சிந்தனை மாற்றங்கள் பற்றியும் விபரிப்பார். படைப்பின் ஒற்றைப் பரிமாணத்திற்கு அப்பால் அதன் பல்பரிமாணங்களையும் வலியுறுத்துவார். வில்வனுடன் சேர்த்து சுந்தரலிங்கம், நா.தர்மலிங்கம் என இவர்களது சர்வோதய இளைஞர்களையும், இவர்களது குருவான நந்தகோபாலகிரியின் துணைவியாரும் அறிமுகமானதும் இங்குதான். தளையசிங்கத்தின் வீட்டின்முன்னால் விரிந்திருந்த வயல் வரம்புகளில் அமர்ந்திருந்தபடி இலக்கிய உரையாடல்களும் வில்வனது இனிய கானங்களுமாய் அமைந்த அக்காலங்கள் இன்று இன்துயர் யாழை என்னுள் மீட்டுகின்றன. காலத்தின் கொடிய கரங்களினால் எப்படி எப்படியெல்லாம் தூக்கி வீசப்பட்டிருக்கிறோம். எவர் ஏவரையெல்லாம் இழந்து விட்டோம்.


மு.பொ. இயல்பிலேயே தனது 'நோயில் இருத்தல்' நாவலில் குறிப்பிடுவதுபோல் மிகவும் கூச்ச சுவாவமுடையவர்தான். மிக மெல்லிய இதயம் கொண்டவர்தான். அவர் கவிதைகளில் கையாளப்படும் குறியீடுகள், கவிதைவரிகளில் அவர் கலந்துவிட்ட மெல்லிய ஒலிலயங்களில் அவர் இலயிக்கும் விடயங்களில் இதனை கண்டுகொள்ளலாம். முரண்பாடு உடைய விடயங்களில் தனது கருத்துகளுக்கு வலிமைகொடுத்து சொற்களில் சூடேற்றி பல கட்டுரைகளை எழுதியுள்ளார். ஆனால் நண்பர்களுடனான நேரடி விவாதிப்பின்போது, விவாதிப்பவர் நியாயமற்ற தமது நிலைப்பாட்டில் தொடர்ந்தும் நிலைகொண்டால் அவர் மௌனமாகி விடுவார். இந்த மௌனத்தைச் சிலர் தமது வெற்றியாகவும் எடுத்துக்கொள்வார். சில உரையாடல்க ளில் இவ்வாறான மௌனத்தை தமது வெற்றியாக எடுத்துக்கொண்டு உள்ளூர மகிழ்ச்சி அடைந்தவர்களை அறிவேன். அது அவர்களின் வெற்றி அல்ல.

ஈழத்து இலக்கியத்தில் மார்க்சிய கோட்பாடு சார்ந்த முற்போக்கு இலக்கியமும் அதற்கு அப்பால் இலக்கிய வட்டம் என இரு முனைகள் இயங்கிய போதிலும் மு.பொவும் அவரது சகோதரரும் ஆன்மீக அனுபவங்களை புதிய பரிமாணத்தில் மூன்றாவது முனையாக அழுத்தினார்கள். இவர்கள் முதன்மைபெற்ற இந்த இரண்டு முனைகளிலுமிருந்து விலகி, தனியாக எதனைத் சாதித்துவிடமுடியும் என நான் கருதியதுண்டு. எண்ணிக்கை, பலங்கள் ஆகியவைகளை மீறி, நம்பிக் கைமீதான செயற்பாடும் நேர்மையும் உறுதியும் அவர்களில் நிறைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. அவர்களது ஆழ்ந்த ஆத்மார்த்த உணர்வு, இரத்த உறவு வழியாக அவர்களுக்கு கையளிக்கப்பட்ட பொறியின் பெருவிரிவு என்றே கொள்ளவேண்டும். "தனக்கு யாரோ கொடுத்த தீட்சை மந்திரத்தை சதா உச்சரித்துக் கொண்டிருக்கும் தனது தாயைப் பற்றியும் அவள் சிறு வயதில் எதிர்கொண்ட ஞானிகளின் வெளிக்காட்டலையும் மு.பொ. தனது 'நோயில் இருத்தல்' நாவலில் பதிந்துள்ளார்.

மு.பொ.வை புற உலகை நிராகரித்து, அக உலகுக்குள் உள்ளொடுங்கிப்போன சராசரி ஆன்மீகவாதிகளில் ஒருவராகக் கருத முடியாது. ஆழ் மனதுள் உள்ளோடி, அக உலக அனுபவங்களின் ஒளியில், புற உலகைப் பார்க்கும் அவசியம் பற்றி அவர் அடிக்கடி குறிப்பிடுவார். இதனால்தான் அவர் ஆன்மீகத்துடன் கலை, இலக்கியம், அரசியல், தத்துவம், விஞ்ஞானம், உளவியல் போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஈழத்தில் ஆயுதப் போராட்டம் முனைப்படைந்த காலத்தில், அவை வர்க்க நலனுக்கு எதிரானவை என பல மார்க்சிய கோட்பாட்டாளர்கள் கருதினார்கள். அவர்கள் முழு இலங்கைக்குமான தேசியம் பற்றி அழுத்திய வேளையில், தமிழர்களுக்கான தனித் தேசியத்தையும், ஆயுதப் போராட்டத்தையும் அதுசார்ந்த விமர்சனத்துடன் கூடிய ஆதரவையும் வழங்கினார்

மு.பொ. ஸ்ரீ இராமகிருஷ்ன பரமஹம்சர் மீது பெரு மதிப்புக் கொண்டிருந்தார். அவரே இவர்மீது நிறைய பாதிப்புக்களையும் ஏற்படுத்தியிருந்தார். இவருடனான உரையாடலின்பொழுது இதை மிகத் தெளிவாக கண்டுகொள்ளலாம். இவரே எனக்கு M எழுதிய The Gospel of Sri Ramakrishna என்ற நூலை வாசிக்கும் ஆர்வத்தினை ஏற்படுத்தினார். பின்நாளில் இவற்றை வாசித்தபோது இவர்கள் அழுத்திய சர்வமதங்களின் இணைவு, பூரணத்தை அடைவதற்கு தடையான அனைத்தையும் துறத்தல் என்பவைகளின் மூல வேர்கள் இங்கிருந்துதான் ஆரம்பமாகியிருக்கிறது என்றே நான் கருதுகிறேன். இன்றைய நம் பாவனையிலுள்ள இலக்கிய உருவங்கள், மனிதமன அகம், புறம் ஆகிய அனுபவங்களின் வெளிப்பாட்டிற்கு போதாமையாக இருப்பதனால் இவை யாவும் சிதைவிற்கு உள்ளாகும் சூழல் ஆரம்பமாகிவிட்டது. பழமையிலிருக்கும் எதிர்காலப் போக்கின் வளர்ச்சிக்கு உதவக் கூடிய கூறுகளுக்கும் புதிய போக்கிற்கிடையிலும் ஒரு கலப்பு நிகழும். வர்க்கங்களைத் தாண்டுவதற்கு முன்னால் வர்க்கக்கலப்பு ஏற்படுவதுபோல சாதிகளைத்தாண்டுவதற்கு

முன்னால் சாதிக் கலப்பு ஏற்படுவதைப்போல குணங்களைத் தாண்டுவதற்கு முன்னால் குணக் கலப்புத் தோன்றுவது போல் பூரண பெருமதம் தோன்றுவதற்கு முன்னால் சர்வமதக் கலப்பு ஏற்படும் என்று நம்பிக்கையை வெளியிட்டனர். புறவாழ்வின் மேன்மைக்கு அசைய மறுத்துத் தடையாய் இருப்பவற்றையும் அக வாழ்வின் தேக்கங்களையும் உடைத்தலையே பேரிருப்பின் உணர்தலுக்கான வழியாகக் கண்டனர். இதன் இன்னொரு பரிமாணமான வெளிப்பாட்டை மு.பொ. வின் கவிதையில் ஏன் நாடகம் எழுதவேண்டும் என்ற கட்டுரையில் கண்டு கொள்ளலாம். அதில் இன்றைய சிந்தனைப் பாய்ச்சலுக்கு வேண்டிய ஊடகம், வழமையான வசனமாகவோ செய்யுளாகவோ இருக்கமுடியாது எனக் குறிப்பிடுகிறார்.



மு.பொ. யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள ஒரு இரும்புக்கடையின் மேல் மாடியில் 'சத்தியம்' பத்திரிகை வெளியிடுவதற்காக தங்கியிருந்தார். அங்கு எங்கள் உரையாடல் நாட்க ளின்போது, வாரத்தில் இரு தடவையாவது மு.த. வருவார். இருவரும் வெகுநேரம் உரையாடிக்கொண்டிருப்பார்கள். தமிழிலிருந்து ஆங்கிலத் திற்கும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக் குமாக மாறிமாறி ஒரு கலப்பு மொழியில் அவை நகரும். இருவரும் பழகும் விதம் சகோதரர்கள் என்பதை யாழ்ப்பாண சமூக உறவுமரபு ஏற்றுக் கொள்ளாது. நல்ல நண்பர்களாகவே புரிந்து கொள்ளப்படுவார்கள். இவர்களது உரையாடல்களை அவதானிக்கையில் உடனடியாக ஏதோ ஒரு பெரிய மாற்றம் நிகழப்போகிறது. அதை உணர்த்தியபடி யாரோ தம்முன்னால் நின்று வா வா என அழைப்பதுபோலவும் அங்கு செல்லத் தயாராகவேண்டும் என்பதான பாவமும் வேகமும் தென்பட்டது. இவ்வேகம் பின்னர் வெளிவந்த இவர்கள் நூல்களில் விரிவுபெற்றது.

வர்க்க வேறுபாடுகளைத் தாண்டுவதோடு மனித பரிமாணம் நிற்கப்போவதில்லை. அது தனியாக முழுமையடையப் போவதில்லை. சாதி, சமயம், இனம், மொழிப்பற்று எல்லாமே தாண்டப்படும் ஒரு புதுத்தளப் பாய்ச்சல் ஏக காலத்தில் ஏற்படப்போகிறது. அது மனிதனின் உடல், உயிர், மனம் ஆகியவற்றைத் அவன் இதுவரை பரவலாக அறியாத விஞ்ஞானமய கோசம் ஆனந்த மயகோசம் ஆகியவற்றின் ஆத்மீக ஆளுகைக்கு உட்படுத்தி, முக்குணங்களை மீறும் அகத்தள-புறத்தள உணர்ச்சியினால் கொண்டுவரப்படவிருக்கிறது. சமூகத்தின் சகல துறைகளும் இன்று இவ்வழியிலேயே ஆற்றுப்படுத்தவேண்டும். இனிவரும் யுகத்தில் அறிவும் அனுபவமும் இதுவரை காட்டாத புதுப் பிராந்தியங்களுள் நாம் புகப் போவதால் மிக மிகக் கூர்மையான சொல்லாட்சியும் எழுத்தாட்சியும் நடைபெறப்போகிறது என்பதாக விரிவு பெற்றது.

உண்மையில் இவைபற்றி இன்றுவரை தெளிவற்ற குழப்பங்கள்தான் என்னுள் மிஞ்சியுள்ளது. ஆனால் இவற்றை போலித்தனமாக முன்வைக்கக்கூடிய இயல்புடையவர்கள் இல்லை என்பதை நான் அறிவேன். அறிவும் அனுபவமும் இதுவரை காட்டாத புதுப்பிராந்திய அனுபவத்தை மு.த. தனது 'அண்டை வீடுகள்' படைப்பில்

முன்வைத்ததுபோல் மு.பொ. முன்வைத்ததாக நான் அறிய வில்லை. "இரவு நேரங்களில் ஆழ்ந்த நித்திரையில் நான் என்னை விட்டுக் கழன்று ஓடுகின்ற அனுபவங்கள் பல" என 'நோயில் இருத்தல்' நாவலில் மட்டும் குறிப்பி டுகின்றார்.

மு.பொ. பற்றி அதிக தகவல்களைத் தருவது அவரது 'நோயில் இருத்தல்' தான். அது ஒரு Semi Auto-biographical நாவலேதான். மு.பொ.வுடன் நெருக்கமாகப் பழகியவர்கள் இந்த நாவலில் வரும் பாத்திரங்கள் யார்யாரது பிரதி என்பதை இலகுவில் கண்டுகொள்ளலாம். வைத்தியசாலையில் நோயாளியாக அனுமதிக்கப் பட்டிருந்த இரு சந்தர்ப்பங்களில் வைத்திய சாலையின் சூழலை அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்கள் செயற்பாடுகளை ஒரு பிறத்தியான் போக்கில் அவதா னிப்பதை விபரிக்கின்றது. இந்த பிறத்தியான் போக்கு எப்போதும் அவருக்கு உவப்பானது. விடுபட்ட மனநி லையில், வைத்தியசாலை மட்டுமல்ல, இந்நாடே ஒரு நோய்க்கூறாக அவர்முன் விரிகின்றது. அதில் அரசியல், ஆன்மீகம், ஆயுதப்போராட்டம், புரட்சி ஆகிய அலசல் களுக்கிடையில் தன்னைப்பற்றிய குறிப்புக்களையும் அங்கு வெளிப்படுத்திக்கொள்கின்றார்.

ஒரு காக்கை குருவி இல்லாத வெறித்த வெளியில் என் பூரண அமர்க்களத்தைக் காண்பவன் நான், வெறுமையும், தனிமையும் என் மனநிலையின் உருவங்கள் என்பவன் நான்.

> நான் எங்கு போனாலும் எதைச் செய்தாலும் அதை விடுபட்டுப் பார்த்து நிற்கும் ஒன்றை நான் எப்போதும் உணர்ந்திருக்கிறேன், அதன் அவதானிப்பினால் எப்பொழுதுமே, எதிலுமே என்னை அத்துமீறாமல் பார்த்துக்கொண டிருக்கிறேன்.
>
> வேறு நேரங்களில் எப்போதோ இறந்து போன சிலர் என்னோடு நடத்தும் உரையாடல் இன்னம் சில சந்தர்ப்பங்களில் பூவுலகத்திற்கே அன்னியமான பிரகிருதிககளின் தோற்றங்களின் தொடர் உபாதை. அந்நேரங்களில் நான் அவற்றிலி ருந்து விடுபடுவதற்கு என் முழுச்சக்தியையுமே விரயம் பண்ணியதுபோன்ற வேர்த்துக்கொட்டிய அனுபவங்கள்.
>
> வேண்டியபோது உடலைக் கழற்றிவிட்டு காற்றுவெளியில் புகவும், தேவைப்படும்போது உடலில் புகுந்து வாழ்க்கையின் தித்திப்பைத் தொட்டுக் கொள்ளவும்கூடிய சித்தர்களாய் மாறுவது எப்போது.

புறத்தளப் பார்வையற்றிய இயங்கியல் விதியின்படி எல்லாமே மாற்றங்களிற்கு உள்ளாகிக்கொண்டிருக்கை யில், ஒரு ஆன்மீகவாதியாய் வெளிமாற்றங்களை

**யதார்த்தமும் ஆத்மார்த்தமும் தமிழில் மிக ஆழமாக எழுதப்பட்ட கட்டுரைகளில் ஒன்று. தமிழ் சூழலின், தமிழ் மண்ணின் அகச்சாரத்தில், படைப்பின் ஆழ்மனவேரில் ஒளியேற்றும் திரியினை சுட்டுகிறார். அது கலை, இலக்கியம் சார்ந்த மிக முக்கியமான தொகுதி.**

**அத்தொகுதியிலுள்ள கட்டுரைகள் இன்றும் அதன் ஜீவிதத்தை கொண்டிருக்கிறது. இனியும் கொண்டிருக்கும்.**

அங்கீகரிக்கும் வேளையில் உள்ளுலகில் 'அது' மாறுவதில்லை என இவர்களது அடிப்படையை, புற உலகுதவிர வேறெதுவும் இல்லை என நம்பும் ஒருவரும் நம்பப்போவதில்லை. இவர்களது இந்த நிலையை நோய் கூற்றின் வெளிப்பாடு என இலகுவாக கூறிவிட முடியும். சிலர் அவ்வாறுதான் கூறினார்கள். இதை மு.பொ.வே என்னிடம் கூறியுள்ளார். ஆத்மீக சாதனையாளனாவதற்கான குரு-சிஷ்ய முறையுள் ஏன் என்ற கேள்விக்கு இடமில்லை என்பதை இவரது 'நோயில் இருத்தல்' மூலம் அறிய முடிகிறது. இது ஒரு கடுமையான இராணுவ அமைப்பின் கூறுகளைக் கொண்டதாகவே தெரிகிறது. இரண்டிலும் கேள்விக்கு இடமில்லை. ஒன்றில் அர்ப்பணிப்பு என்ற ஆத்மீகம் சார்ந்த சொல். மற்றதில் ஆணைக்குக் கீழ்ப்ப டிதல் என்ற அரசியல் சார்ந்த சொல். இதனால்தான் வியத் தகு அறிவைக் கொண்டிருந்த ரஜினீஸ்சின் ஆச்சிர மத்தின் செயற்பாடுகள் ஸ்ராலின் கால சோவியத் ரசியாவை நினைவூட்டியது.

ஓகஸ்ட் 15ல்நாள் பக்கிங்காம் மாளிகையில் ஹிட்லர் உணவருந்தவேண்டும் என்ற சபதத்தைக் கேட்ட அரவிந்தர் எதிர்ச்சபதம் எடுப்பதும், ஹிட்லருக்கு எதிராக

அரவிந்தர் தனது பேர்மனப் பொம்பாட்மன்களை அனுப்புவதும், உயிர் ஊசலாடிய இங்கிலாந்தைக் காப்பாற்றி ஹிட்லரின் மனதை வேறுபக்கம் திருப்பிய கணப்பொழுதுகளை தீர்மானித்தது அரவிந்தரின் பேர்மன – சைக்கிக் பொம்பாட்மென்கள்தான் என மு.பொ. கருதுவதை நம்ப நமது மனம் மறுக்கிறது. இதை மு.பொ.வும் உணர்ந்ததால் தான் விஞ்ஞான வெளியுலகு இதை ஏற்புமா? ஏன்ற கேள்வியை முன்வைக்கிறார்.

மு.பொ. இலக்கியச் செயற்பாடுகள் பல துறைகளில் விரிந்திருந்திருக்கிறது. அவற்றில் கவிதை, இலக்கிய விமர்சனம் ஆகியவற்றிலேயே ஆழமான தடங்களைப் பதித்துள்ளார் எனக் கருதுகிறேன். அவரது 'அரைநாள் பொழுது', 'மூடுபனி' போன்ற ஆரம்பகாலச் சிறுகதைகளின் வெளிப்பாட்டுத் திறனை பிற்காலங்களில் ஏனோ கைவிட்டுவிட்டார். அதற்கு அவர் முதன்மைப்படுத்திய ஆத்மீகமும் அதை வளர்த்தெடுக்க அவர் மேற்கொண்ட விசார முறையும் காரணமாயிருக்கலாம். அவர் பிற்காலப் படைப்புக்கள் மு.த.வால் முன்வைக்கப்பட்ட 'மெய்யுள்' ளிற்கு வகைமாதிரியை அமைக்கும் முயற்சியாகவே முடிந்தது. அவைகள் வ.அ.இராசரத்திதின் 'ஒரு காவியம் நிறைவு பெறுகிறது' போன்றோ டொமினிக் ஜீவா தன் தாயாரின் மரணம் பற்றி எழுதிய குறிப்புக்களைப் போன்றோ உணர்வுகளில் உயிரேற்றவில்லை. மு.பொ. பெரிதும் அழுத்தும் ஆத்மீகத் தளங்களை வருடவில்லை. அவரது 'வேட்டை' மிகச் சிறந்த சிறுகதைகளில் ஒன்றாக வந்திருக்கவேண்டிய ஒன்றுதான். அனால் அச்சிறுகதையின் இறுதிப்பகுதி, அதுவரை தொடர்ந்த ஜிம் காபெட்டின் கூர்மையை மழுங்கடித்ததுடன் அக் கதையின் பன்முகத் தளங்களையும் சிதைத்துவிட்டது. எல்லாச் சமயங்களின் இணைவை பெருந்தளவிரிவாகப் பார்ப்பதுபோல், கலை இலக்கிய ஊடகங்களின் உடைவையும் எல்லாவற்றின் இணைவையும் தமது தத்துவார்த்தத்திற்குரிய வெளிப்பாட்டு முறையாக அவர் கருதியிருக்கலாம். இருந்தாலும் ஆத்மார்த்தத் தளத்தினுள் ஒரு கரைவின் தன்மையை அல்லது அதன் பொருள்சார்ந்து விரிவையோ எரிவையே ஏற்படுத்தவேண்டும். 'கடலும் கரையும்'சிறுகதைத் தொகுதியை முன்வைத்தே இக்கருத்தைக் கூறுகிறேன். இத்தொகுப்பிற்குப் பின்னர் மு.பொ. எழுதிய சிறுகதைகளின் தொகுதி ஒன்று மிகச் சமீபத்தில் தமிழகத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக அறிகிறேன். அவை என் கைவசம் இல்லாமையால் அவைபற்றி நான் எதுவும் முன்வைக்க முடியாதுள்ளேன்.

இவருடைய 'யதார்த்தமும் ஆத்மார்த்தமும்' தமிழில் மிக ஆழமாக எழுதப்பட்ட கட்டுரைகளில் ஒன்று. தமிழ் சூழலின், தமிழ் மண்ணின் அகச்சாரத்தில், படைப்பின் ஆழ்மனவேரில் ஒளியேற்றும் திரியினை சுட்டுகிறார். அது கலை, இலக்கியம் சார்ந்த மிக முக்கியமான தொகுதி. அத்தொகுதியிலுள்ள கட்டுரைகள் இன்றும் அதன் ஜீவிதத்தை கொண்டிருக்கிறது. இனியும் கொண்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட சமூக பொருளாதார காலப் பின்னணியில் படைக்கப்பட்ட கலை, இலக்கியங்கள், அக்காலப் பின்னணி நீங்கிய பின்பும் சுவைக்கப் படக்கூடியதாக இருப்பதற்கு, கலை என்றால் என்ன என்ற கேள்வியையும் அதன் ஆத்மார்த்தத் தொடர்புகளையும் மேலைநாட்டு, கீழைநாட்டு படைப்புக்கள்மூலம் அவர் முன்வைக்கும் கருத்துக்கள் அவரது சுய சிந்தனையையும் தனித்துவத்தையும் சுட்டுகிறது. பொதுவாகவே தமிழில் வெளிவரும் இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் மேலைத் தேய சிந்தனைக்கு இசைவாக அல்லது அதை நோக்கி தமிழ் சூழலை முன்னகர்த்தும் முயற்சியாகவே அமைவதுண்டு. மு.பொ.வின் ஆத்மார்த்தத்தை அழுத்தும் இத் தொகுப்பின் பல கட்டுரைகள் கீழைத்தேய சிந்தனை மரபில் வேரோடி விரிகையில் அதற்கு ஒப்பான மேலைத் தேய படைப்புக் களை தமது கருத்துக்கு வலிமையாக்கு கிறார். இது சுய சிந்தனையின் வலிமையையேகாட்டுகிறது.

மு.பொன்னம்பலம் சாராம்சத்தில் ஒரு கவிஞர்தான். அவரது 'மார்கழிக் குமரி' கவிதையை யார்தான் மறக்கமுடியும். அவர் கதை, கவிதை, நாவல், கட்டுரை, ஆத்மீக விசாரம் பத்திரிகை ஆசிரியர் என எல்லாத் துறை களிலும் கால்பதித்திருந்தாலும் அதற்குள் மு.பொ.என்ற கவிஞன் தன்னை பல இடங்களில் வெளிப்படுத்திக் கொள்வதை இலகுவாகக் கண்டுகொள்ளலாம். இன்று புதுக்கவிதை தன் கவிதைத் தன்மையை இழந்து வெறும் வசனமாகவே மாறிக்கொண்டு வருகிறது. எதிர்காலத்தில் புதுக்கவிதைக்கு மீளுயிர் கொடுக்க முனைகையில் கவித்து வங்களிற்கு முன்னுதாரணம் காட்டுவதற்கு குறிப்பிடப்படும் கவிதைகளில் மு.பொன்னம்பலத்தின் கவிதைகள் நிச்சயம் அடங்கும்.

30-07-2010

# முரண்பட்டும் உடன்பட்டும் - மு.பொ. தொடர்பாக...

அ.யேசுராசா

மு.பொன்னம்பலத்துடனான எனது முதற் தொடர்பு முரண்பாட்டுடனேயே ஏற்பட்டது. 1970 இன் பிற்பகுதி-கொழும்பில் புறக்கோட்டை தபாற் தந்திப் பயிற்சிப் பாடசாலையில் பயின்றுகொண்டிருந்தேன். ஒருநாள், இரண்டோ மூன்று `சத்தியம்' மாதப் பத்திரிகைப் பிரதிகள் தபாலில் வந்துகிடைத்தன. சர்வமத சங்கம் - சர்வோதய இயக்கத்தால் வெளியிடப்பட்டதான அப்பத்திரிகையை, மு.பொ. யாழ்ப்பாணத்திலிருந்து நடத்திக்கொண்டிருந்தார். மு.பொ.வுடன் அறிமுகமாகியிருந்த நண்பன் மு. புஷ்பராஜன் எனது முகவரியைக் கொடுத்ததில் அவை எனக்கு அனுப்பப்பட்டதாய்ப் பின்னர் அறிந்தேன்.

தமிழரசுக் கட்சியைத் தாக்கியும், சோசலிச நாட்டத்துடன் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்துக்குச் சார்பாகவும் பல விடயங்கள் அதில் இருந்தன. அவற்றைக் குறிப்பிட்டு, `ஒரு சிங்களத் தேசிய முதலாளித்துவக் கட்சியை ஆதரிப்பது எவ்விதம் சரியாகும்?' என மு.பொ.விற்குக் கடிதம் போட்டேன். அவர் சற்றுக் கிண்டலுடன் காரமாக அஞ்சலட்டை எழுதினார் நான் பதிலேதும் எழுதவில்லை.

பின்னர் `மல்லிகை', `பூரணி' இதழ்களிலும் வேறு பத்திரிகைகளிலும் வெளிவந்த அவரது இலக்கியக் கட்டுரைகள், கவிதைகளைப் படிப்பதில் ஈடுபாடு ஏற்பட்டது. ஒரு தடவை மு. புஷ்பராஜனுடன் புங்குடுதீவுக்குச் சென்றிருந்தேன் மு.தளையசிங்கத்தைக் கண்ட ஒரேயொரு சந்தர்ப்பமும் அதுவேதான். பின்னர் மு.பொ., சு.வில்வரத்தினம் ஆகியோருடனெல்லாம் நெருக்கம் ஏற்பட்டது. பல தடவை அங்கு சென்று வந்துள்ளேன். 1975 தைமாதம் எனது `தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்' சிறுகதைத் தொகுப்பு வெளியீடு நான் படித்த எனதூர்ச் சிறிய பாடசாலையில் நடந்தபோது மு.பொ. தலைமைதாங்கினார். ஆயினும், முரண்பாடும் உடன்பாடுகளும் பிணைந்ததாகவே இன்றுவரை அவருடனான தொடர்பு இருந்து வருகிறது.

0 0 0

அறுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து தொடங்கி எழுபதுகளில் தீவிரவாசகனாக மாறிக்கொண்டிருந்த காலங்களில், மு.பொ.வின் கட்டுரைகள், எதிர்வினைகள் என்னைக் கவர்ந்தன. ஸென் பௌத்தமும் ஹாய்க்கு கவிதைகளும்', `கவிதையில் ஏன் நாடகம் எழுத வேண்டும்?', `மூன்று தத்துவ நோக்குகளும் உண்மையும்', `இலக்கிய ஊழல்கள்' நூல் பற்றிய விமர்சனம் என்பனவெல்லாம் அவ்வாறு வாசித்தவையே. அவரது பரந்த தமிழ் - ஆங்கில இலக்கிய அறிவு, மெய்யியல் ஈடுபாடு, கூர்மையான விமர்சன நோக்கும் இரசனையும் கலந்ததாய் - தர்க்கரீதியில் படைப்புத்திறனுடன் வெளிப்படும் அது வெளிச்சத்தையும் சந்தோஷத்தையும் தருவது. `யதார்த்தமும் ஆத்மார்த்தமும்' நூல் இதற்கு உதாரணமாய் நிற்கிறது. படைப்புத்திறன் வெளிப்படும் இத்தகைய கட்டுரைகளை சண்முகம் சிவலிங்கம், நு.'மான், முருகையன், வெங்கட், சாமிநாதன் முதலியோரிடமும் காண இயலும் விமர்சகர்களாகக் கொண்டாடப்படும் ஆய்வாளர்களான கைலாசபதி, சிவதம்பி போன்றோருடம் இதைக் காண்பதரிது! `அலை' இதழிலும் மு.பொ. வின் முக்கிய கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டோம்.

0 0 0

அறுபதுகளின் முக்கிய கவிஞர்களில் ஒருவராக இருக்கிறார் கவியரங்கங்களிலும் பிரகாசித்திருக்கிறார். `கவிஞன்' இதழில் (பங்குனி-1970) வெளிவந்த `மதிப்பீடு' என்னும் நீண்ட கவிதை அப்போது என்னை மிகக் கவர்ந்தது. `மார்கழிக் குமரி' கவிதையும் அவ்வாறே இக்கவிதையை சு.வி.யின் குரலில் பாடக் கேட்பது பரவசந் தரும் அனுபவம். சமூக, அரசியல், ஆன்மீகத் தள அனுபவங்களை வெளிப்படுத்துபவை அவரது கவிதைகள். எண்பதுகளிலிருந்து கூர்மையற்ற தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை - அரச ஒடுக்குமுறை, போராட்டம் சார்ந்து ஏராளமான தனிக்கவிதைகளையும் நீண்ட கவிதைகளையும் எழுதியிருக்கிறார். `ஆத்மார்த்தம்', `மெய்யுள்' என்ற கோட்பாட்டு நிலைசார்ந்து வெளிப்பாடு கொண்டவை அவை. பலமும் பலவீனமும் அவற்றில் பரவியிருப்பதைக் காணலாம். எனினும், அவருக்கேயுரிய தனி அடையா ளத்தை அவை கொண்டுள்ளன என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

0 0 0

நல்ல கவிஞர்கள் நல்ல சிறுகதைகளை எழுத முடியுமென்று சொல்லப்ப டுவதுண்டு. மு.பொ.வின் இரண்டு சிறுகதை நூல்கள் வெளியாகியுள்ளன. நல்ல சி-றுகதைகள் பலவற்றை அவற்றில் காணலாம் எனினும், `அரைநாள் பொழுது', `யுகங்களை விழுங்கிய கணங்கள்', `கைது செய்யப்பட்ட கிராமம்' முதலியன முக்கியமானவை-வயாய்ப் படுகின்றன. யுகங்களை விழுங்கிய கணங்கள் கதையில் சொல்லப்படுவது, அவர் சம்பந்தப் பட்ட உயிர் அச்சம் சூழ்ந்த உண்மை நிகழ்வு. அது நிகழ்ந்த மறுநாள் `திசை'அலுவலகத்தில் அதுபற்றி எனக்குச் சொல்லியுள்ளார்.

0 0 0

`நியூ ஈரா பதிப்பகத்தினர்' `திசை' வார வெளியீட்டைக் கொண்டுவர முடிவு செய்து, ஆசிரியராக யாரை நியமிப்பது என்பதைத் தீர்மானிக்க தமது நிர்வாக சபையைக் கூட்டி ஆலோசித்தனர் மு.பொ.வின் பெயரும் ஆசிரியர் பதவிக்கு குறிப்பிடப்பட்டிருந்தது. அக்கூட்டத்தில் கலந்துகொண்ட ஏ. ஜே. கனகரத்தினா, `யாழ்ப்பாணத்தின் முக்கிய புத்திஜீவிகளில் ஒருவர் கவிஞர் - விமர்சகர் என மு.பொ. வுக்குச் சார்பாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். ஆ.சபாரத்தினம் மாஸ்ரர் போன்று மற்றையவர்களும் ஏற்றுக்கொண்டதில் மு.பொ. ஆசிரியராகத் தேர்வு செய்யப்பட்டார்.

ஒருநாள் மு.பொ. சைக்கிளில் எனது வீட்டுக்கு வந்தார். எனது வீட்டுக்கு அவர் வந்ததே அந்த ஒரு தட-வைதான்! தன்னை `திசை' வார வெளியீட்டுக்கு ஆசிரி யராக நியமித்திருப்பதாகக் கூறிவிட்டு, `நீதான் எனக்கு அஸிஸ்ரன்ற். வெளிக்கிட்டு வா, பணிப்பாளருக்கு உன்னை அறிமுகப்படுத்த வேணும்' என்றார். பத்திரிகை தொடர்பாகச் சிலவற்றை விசாரித்துவிட்டு, அவருடன் சென்று துணை ஆசிரியராகப் பொறுப்பேற்றேன். மு.பொ.வின் கருத்துநிலையுடன் உடன்பாடும் உறவு தொடர்பில் என்னை விடவும் நெருக்கமும் கொண்டிருந்த வேறு இலக்கியக்காரர் இருந்தபோதிலும், கருத்து நிலையில் முரண்படும் என்னை ஏன் அவர் தெரிந்தார் என்பது அன்று தெளிவாகத் தெரியவில்லை. ஏனெனில், `மெய்யுள்' கோட்பாட்டுடன் உடன்பாடில்லாதவன். கடவுள் நம்பிக்கையுமற்றவன் நான்! ஒருவேளை, உள்ளுணர்வின் அடிப்படையில் அந்த முடிவுக்கு அவர் வந்திருக்கக்கூடும் என்று இன்று தோன்றுகிறது.

`திசை' யாழ்ப்பாணத்தில் வெளிவந்த காலம் (1989 தை - 1990 வைகாசி ) மிகவும் நெருக்கடியான காலம். இந்திய `அமைதிப்படை'யினதும், அதனுடன் சேர்ந்தியங் கிய தமிழ் ஆயுதக் குழுக்களினதும் கெடுபிடிகள் உச்சத்திலிருந்த சூழல். `நியூ ஈரா நிறுவனமோ' தமிழ்த் தேசிய உணர்வற்ற - ஆங்கில மோகங்கொண்ட `பென்சனி யர்'களின் ஆதிக்கத்திலிருந்தது. பத்திரிகையாளர் சிலரும் எழுத்தாளர் சிலரும் பணிப்பாளரைச் சந்தித்து, `சாந்தமாக' எமக்கெதிராகக் கருத்தேற்றம் செய்யவும் முனைந்தனர். அவரும் ஒரு தடவை எம்மிடம் `யூ ஆ றைற்றர்ஸ் நொட் ஜேணலிஸ்ற்' என்று அதைப் பிரதிபலித்தார்! ஆனால் ஏ.ஜே.கனக ரத்தினா, திரு, பத்மநாப ஐயர் போன்றோரின் ஒத்துழைப்புடன் - தனது சாமர்த்தியத்தின் பலத்தில், தடைகள்தாண்டித் `திசை'யை வெற்றிகரமான - பலரும் விரும்பிப் படித்த - முன்னுதாரணமற்ற பத்திரிகையாக மு.பொ. நடத்திக் காட்டினார்.

கலாசாரப் பக்கங்களே (நான்கு) முதலில் எனக்குத் தரப்பட்டவை. பின்னர் வேறு சில பகுதிகளின் பொறுப்பையும் தந்தார். அவரின் எவ்வித தலையீடுமற்று `ஆனால் தேவையான ஒத்துழைப்பைப் பெற்று' சுதந்திரமாக வேலைசெய்த, மனநிறைவைத் தந்த நாள்கள் அவை.

0 0 0

மு.பொ.வுடன் முரண்படுவனவற்றையும் பதிவு செய்ய வேண்டும்.

மஹாகவியும் எஸ்.பொ.வும் ஈழத்துப் படைப்பு லகில் முக்கிய ஆளுமைகள். ஆனால், ` ஆத்மார்த்தம்' என்ற கருத்து நிலையைப் பிரயோகித்து மு.பொ. இவர்களுக்கு உயரிய இடம் வழங்குவதில்லை - குறைத்தே மதிப்பிடுகிறார்.

`கடவுள் இருக்கிறார் என்பதை உணர்தல் மூலம், அதாவது கடவுள் இருக்கிறார் என்பதை உணர்ந்து அவனே எல்லாவற்றுக்கும் காரணன் என்பதை அறிந்து நமது வாழ்க்கையையே அர்ப்பணித்து வாழ்வது' என்பது-வாழ்வை - எல்லாச் செயல்களையுமே கலையாக்கும் என்று சொல்பவர் மு.பொ. (`யதார்த்தமும் ஆத்மார்த்தமும்') கடவுள் மறுப்புவாதிகளாய் மஹாகவியும் எஸ்.பொ.வும் இருப்பதானது, அவர்களைப்பற்றிய மு.பொ.வின் மதிப்பீடுகளில் `குறுக்கீடு' செய்கிறதோவென்ற ஐயம் எனக்கு உண்டு.

மேலும், உடன்பாடான கருத்தை (உள்ளடக்கத்தை) வெளிப்படுத்தும் படைப்புக்களை ஏற்று ஏனையவற்றை நிராகரித்த `முற்போக்குவாதிகள் - தமிழ்த்தேசியவாதிகள்'

போலவே மு.பொ.வும் செயற்படுகிறாரெனத் தோன்றுகிறது.

'மெய்'யை உள்ளடக்கமாகக் கொண்ட 'மெய்யுள்' - வடிவங் கடந்து கலைத்துவத்துடன் இருக்குமென அவர் கருதுகிறார். 'ஆத்மார்த்தத்' தளத்தில் நின்று வெளிப்படுத் தப்படுபவையும் அவ்வாறே அமையுமெனவும் நம்புகிறார். ஆனால், மு.பொ.வின் பிற்காலப் படைப்புகள் பலவற்றில் கருத்துகளே துருத்திநின்று கட்டுரைத் தன்மையைக் கொண்டுள்ளன. அவர் நிராகரிக்கும் வறட்சியான 'முற்போக்கு'த் தயாரிப்புக்களிலிருந்து இவற்றை எவ்வாறு வேறுபடுத்துவது?

0 0 0

மு.பொ.வின் நேர்மை, ஆற்றல், தெளிவு, நிலைப்பாடு என்பவற்றில் எனக்கு மரியாதையுண்டு. தான் சத்தியம் என்று நம்புபவற்றில் துணிவாக - உறுதியுடன் செயற்படுபவர் அவர். சமரசங்கள் அவரிடமில்லை. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றபடி அவர் ஆக்கியளித்த - அளிக்கும் படைப்புகள், விமர்சனங்கள் துணிச்சல் நிறைந் தவை. பலரும் தெரிவிக்க அச்சப்படும் விடயங்களை எழுத்திலும் பேச்சிலும் வெளிப்படுத்தி வருகிறார். எழுத் தாளர்- கலைஞர் எனப்படுவோரில் பலர், புகழ் வேட்டைக்காரராயும் பச்சோந்திகளாயும் உலவும் சூழல் எம்முடையது. 'சாகித்திய இரத்தினங்கள்', 'கேட்டு வாங்கிப்' பெரு மைப்படும் 'கலாபூஷணங் கள்' போன்ற தகுதியற்ற 'பட்டங்கள்' மலிகின்றன. தார்மீக நிலைப்பாடு ஏதுமற்று 'பிரபல மோகத்துடன்' மட்டும் செயற்படும் புதிய இலக்கியக்காரரின் பெருக் கம். 2009வைகாசி மாதத் தின்பின் கழன்று விழுந்த 'முகமூடிகள்' ஏராளம். இந்த முகமூடிகள், புலிசார்பு- புலிஎதிர்ப்பு 'ஜனநாயக' கோஷமிட்ட எழுத்தாளர் பலருக்குச் சொந்தமாயிருந்தவை!

இச்சூழலில், மு.பொ. மேலும் தனித்துத் தெரிகிறார் - தனது நிலைப்பாட்டில் 'இரட்டை வேடம்' ஏதுமில்லாத முன்னுதாரணராய்!

# மு.பொ.வுக்கு என் வாழ்த்துகள் !

- நேமி

# மையம் உடைக்கும் மனத்தளம் ... ... ...

## (மு.பொன்னம்பலம் பற்றிய சொற்கோலம்)

மெலிஞ்சிமுத்தன்

**01**

'யாரோ தள்ளிவிட்டதுபோல இருக்கிறது நான் எழுதிக் கொண்டிருக்கிறேன், பிரக்ஞையற்று எழுதவில்லை, எழுத்துச் சுயமற்றோ, யாரையும் சார்ந்து நின்றோ எழுதவில்லை. ஹெமிங்வேயின் கிழவன் விட்ட தூண்டிற் கயிற்றை பெரிய மீன் இழுத்துச் செல்வதுபோல... ... ...எழுத்து இழுத்துச் செல்கிறது.

'இருமை என்ற இந்தப் பிரபஞ்சச் சிறையின் சிலுவையில் அறையப்பட்ட சீவ ராசிகளுள் என்னைத் தேடாதீர் என்று கூறிய ஓர் எழுத்தாளனின் இலக்கிய முகத்தை என் எழுத்தால் துருவப் பார்க்கிறேன்..... துருவிக் கொள்வதற்கு எழுத்து உகந்த ஒன்றுதானா? எண்களால் ஒரு சமன்பாட்டை செய்து பார்ப்பது போல எழுத்தால் செய்து பார்க்கலாமா? எண்களால் ஒரு விடையைச் சொல்ல முடிகிறது .எழுத்தால் விடை சொல்லலாமா? எழுத்து எப்போதாவது ஒழுங்கான விடை சொல்லி இருக்கிறதா? சரி ஏன் எண்களால் ஒரு இலக்கியம் எழுத முடியவில்லையே? நானே எனக்குள் கேட்டுக் கொள்கிறேன் ... ... ...

எண்கள் போகும் பாதை ஒரு ஒற்றையடிப் பாதை. ஆனால் எழுத்தோ விரியும் தன்மை கொண்டிருக்கிறது என்று ஒருவாறு பதில் சொல்லிக் கொள்கிறேன். இன்று வளர்ந்து நிற்கும் விஞ்ஞானத்தில் எண்களின் பங்களிப்புதானே முக்கியமானது? விஞ்ஞானமும் இலக்கியமும் கை கோர்த்து நிற்கும் காலமொன்றில்தான் இன்று நிற்கிறோம். விஞ்ஞானத்தின் துணை கொண்டு இலக்கியம் தன் சட்டகங்களை உடைத்து விடுதலை உணர்வெழுச்சியை நமக்குள் உருவாக்கி வெற்றிகண்ட 'அவதார்' போன்ற 3D திரைப் படங்கள் வந்திருக்கும் காலம்தானே இது ... ... ...

இவ்வாறெல்லாம் எனக்குள் சில உரையாடல்கள் நடந்துகொண்டிருக்கையில் நான் எழுத்தின் அந்த ரங்கத்தை தேடி நகர்கிறேன். ஈழத்து இலக்கியம் ,தமிழ் நாட்டு இலக்கியம், புலம்பெயர் இலக்கியம் ,கத்தரிக்காய், புடலங்காய்...இவற்றுக்குள் எங்கே நிற்கிறார் மு.பொன்னம்பலம்? எதற்குள்ளும் சிறைப்பட்டுவிடாமல் நகர்ந்துகொண்டிருக்கும் இந்த எழுத்துச் சித்தனின் பின்னாலேயே ஓடிச் செல்கிறேன் ....கொஞ்சம் நில்லுங்கள் நான் உங்களை எழுத முனைகிறேன் ....

'எனக்குள் ஓர் புதுக் குரல் எழு என ஒலிக்கும்
மெல்ல விழிக்கிறேன் இப்போ -இடம் ,வலம்,குறிகள்,
சுழுமுனை ஈர்ப்பில் புது வழி அழைக்கும்'

**02** (சூத்திரர் வருகை)

நம்மை எப்போதுமே எவற்றாலாவது அள்ளி நிறைக்க விரும்புகிறோம் .

நமது பசிகளை பிடுங்கி எறியமுடியவில்லை . இன்னொரு புறம் எவற்றுடனோ கலந்துவிடுவதற்கு தயாரானவர்களாக இருக்கிறோம். `நான் ` என்கின்ற மையம் தொடர்ந்து உடைக்கப் பட்டே தன்னை உருவகித்துக் கொள்கிறது. நாமோ திரும்பத் திரும்ப அள்ளி நிறைக்கிறோம் சிதறடிக்கப் படுவதற்காக நம்மில் எவற்றை எல்லாமோ............... சேர்த்துக் கொள்கிறோம்.

சேர்ப்பதும் சிதைப்பதுமான இந்த `முரண்அனுபவ நீட்சி' எதற்காக? விடுதலையை நோக்கி நகரும் மன-தமனதின் இயங்கு தளமே வாழ்க்கை. அநீதி, நீதி என்ற கட்டுமானங்களை வைத்துக் கொண்டு மனித மனது ஆடுகிறது. அதன் இலக்கு விடுதலையே.'. மனத்தைக் கடக்கும் விடுதலை உணர்வு மனதினுள்ளேயே பதுங்கிக் கிடக்கிறது. மனித மனது அநீதியை சார்ந்து இயங்கும் சாத்தியத்தைக் கொண்டிருப்பதாகவே எனக்குப் புலப்படுகிறது . ஆனால் விடுதலைக்கு உகந்த கட்டுமானமாக அது நீதி வழியையே முன் வைக்கிறது. அதன் அடுத்த கட்டமாக அது இந்தப் பிரபஞ்சத்தையே சத்தியப் பேரியக்கமாகக் காண்கிறது.......

(தீமை எது, நன்மை எது அப்படி ஓர் இருமை இருக்கிறதா? இல்லை இருப்பது ஒன்றுதான். அந்த ஒன்றே இப்படி இரண்டாகி மாயம் புரிகிறது போலும்... மு.பொ- முடிந்து போன தசையாடல் பற்றிய கதை )

மீண்டும் நான்தான்... எனக்குள்ளேயே பேசிக் கொள்கிறேன் அவரைத் தேடித் போகும்போதெல்லாம் அவரது எழுத்துக்கள் எனது அகம் நோக்கியே திருப்பிவிடுகின்றன என் புலன்களை.

**03**

இலக்கியத்தின் இயங்குதளம் `அகம்'தான் புறத்தின் சேகரிப்புகள் அகத்தில் குழுமித்தான் எழுத்தில் விழுகின்றன. அகம் புறத்தில் கண்டதை தன் செறிவுக்கேற்ப அளந்து பார்க்கிறது. மொழியின் திடலில் இறங்கி அகவயமான அசைவொன்று நிகழ்கிறது. ஆயினும் அகவயமாக உணர்ந்த ஒன்றைப் பற்றிப் பேசுவதானால் அது புறவயமான-தாகவே நிகழ்கிறது. மிக மேலோட்டமான பார்வை கொண்டவர்களால் அகவய எழுத்துக்கள் ஒதுக்கப் படுதலும், எழுத்தாளர்கள் பயித்தியக் காரர்கள், அல்லது நரம்பு மண்டல வியாதிக் காரர்கள் என்று கணிக்கப் படலும் நிகழ்ந்து விடுகிறது.

இவை இலக்கியத்துள் கணக்குச் செய்ய வரும் கோட்பாட்டுப் பற்றாளர்களின் வேலையே. இவர்களால் இலக்கியத்தின் சாத்தியமான எல்லைகளை ஒருபோதும் எட்ட முடிவதில்லை .ஈழத்து இலக்கியத்தை அறிய முயலும் ஒருவருக்கு மிக மேலால் தெரியக் கூடியது முற்போக்கு இலக்கியம் தோற்றுவித்த எழுத்துக்களே. ஈழ விடுதலை போராட்ட சூழலிலும் அதன் தாக்கத்தோடு வந்த எழுத்துக்களே பெருவாரியாய் வந்தன. பலர் தம்மிடம் இருந்த 'அரசியல் ரசனையை' இலக்கியத்துள் தேடினர் அல்லது அதற்குப் பெயரே இலக்கியம் என்றும் கண்டனர். யாழ்ப்பாணத்து இடித்த அரிசி மாவு கனடியக் கடைகளில் வாங்குவது போல இன்று ஒரு கவிதை ஆகிப் போனது இந்தப் பாதைவழிப் பயணத்தின் பலன்தான் என்றும் கூற இடமுண்டு .

சொற்களிலிருந்து அர்த்தங்கள் களையப்படுவதிலும் சொற்களின்மேல் அர்த்தங்களின் சுமை ஏற்றி வைக்கப் படும் காலமிது. வடிவங்களில் ஏற்படும் திருப்தியீனங்களால் ஏற்படும் பக்க விளைவு சொற்களுக்குள் அர்த்தங்களை சொருகிவைக்கின்றது. கனதியாக சொற்களின்மேல் ஏறி அமர்ந்திருக்கும் பெரும்பாலான அர்த்தங்களின் காரணிகள் புறச் சூழல் இயக்கத்தின் ஒட்டுதல்களிலிருந்தே.

இலக்கியத்தை யாரை நோக்கி முன் வைக்கிறோம்? மொழி மற்றவர்களுடன் பேசுவதற்கு மட்டும்தானா அப்படியென்றால் நம்மோடு நாம் எதனால் பேசிக் கொள்கிறோம்?நமது இரகசியங்களை எந்த உறையில் போட்டு வைத்துள்ளோம்? மொழி எப்போதுமே நமக்குள் இறங்கி நிற்கிறது. அது நீந்திச் செல்வதற்கான சிறகுகளை மனம்தான் கொடுக்கிறது .மனசிடம்தான் பயணத்துக்கான உந்து சக்தி இருக்கிறது. அப்படியானால் மனதுக்கும் மொழிக்கும் இடையிலான உறவில் எது எதனை மேவுகிறது ? எது எதனை மேவுகின்றதோ அதன் தன்மைக்கேற்ப வெளிப்பாடு நிகழ்கிறது . தொன்மத்திலிருந்து ஊறிய மனதின் படிவுகளிலிருந்து எழும் சமிக்ஞைகளை இறக்கிவைக்க மொழியின் கொள்ளளவு போதுமான-தாக இல்லாத போதிலும் எழுதுதல் நிகழ்ச்சி நடந்துகொண்டே இருக்கிறது. மனம் புறம் நோக்கி மட்டுமல்ல ...தனக்குள்ளும் பயணிக்கிறது .

மு.பொன்னம்பலத்தை பற்றிப் பார்ப்பதற்கு முன்னர் இவ்வாறெல்லாம் யோசிக்க வேண்டியிருப்பது கட்டா யமானது. அதனாலேயே எழுதிச் செல்கிறேன்... ... ...

## 04

உள்ளுணர்வின் உந்துதலில் கண்டடையும் பவ்வியமான சொற்கள்- ஆதியும் ,அந்தமுமாய் நீண்ட சத்தியப்பேரியக்கத்தின் இயல்புத் துண்டுகளே. விஞ்ஞான,சமயஞான உள்ளுறைதலில் தோய்ந்து வெளிப்படும்கருத்தை காவிச்செல்லும் தனித்துவமான வாகனங்களாகவும் அவை இயங்குகின்றன. பரிணாமத்தை அவாவும் இலக்கியக் கடத்தலில் இவ்வாறான சொற்களுக்கு மாற்றுச்சொற்களை இட்டு நிரப்பல் சாத்தியமானதில்லை. இவ்வாறான சொற்களை ஆராய அதேதளத்துக்கே செல்ல வேண்டி இருக்கிறது .சொற்கள் பிறந்து நிற்கும் கருத்தியற்தளம் பற்றிய புரிதலை உள்வாங்கவேண்டி இருக்கிறது .

தமிழ் இலக்கியப் பரப்பில் மு .பொ வைப் பற்றிப் பேச முனைகையில் மு.தளையசிங்கத்தைத் தொடுவது தவிர்க்க முடியாதது. தளையசிங்கம் தமிழ் இலக்கியப்பரப்பில் பிரமிக்கத்தக்க 'பேரியக்க சக்தியாக' நின்றவர் என்பது பலரும் அறிந்ததே அவரது தொடர்ச்சியாக மு .பொன்னம்பலத்தை காண்பவர்களும் உண்டு. ஆயினும் அவரிடமிருந்து வித்தியாசப் பட்டவராகவே மு .பொன்னம்பலம் தொடர்ந்து செல்கிறார்.

ஒரு கோட்பாட்டாளனின் அச்சொட்டான சொற்களுக்கும், ஒரு கவிஞனின் 'மெய்ப்பித்தேறிய' சொற்களுக்கும் இடையிலான வித்தியாசங்களின் புரிதலோடு மு .பொவின் சொற்களை அணுகுதல் வேண்டும் என்றே கருதுகிறேன். எழுத்துள் பல முயல்வுகளைசெய்த மு.பொவின் அந்தரங்கத்தில் செறிந்து நிற்பது அவரது கவித்துவ ஆழுமை என்றே புலப்படுகிறது. கவித்துவம் தத்துவத்தை கதையாடு கிறது. மையத்தில் நிற்பது நீதித் தேடலின் பசியே. ஆனால் தளையசிங்கத்தின் கவித்துவம் என்னை பெரிய அளவில் ஈர்க்கவில்லை. அவர் ஒரு தத்துவவாதி.

நீதிக்கும் ,விடுதலைக்குமான சமன்பாடுகளை மு.பொ எழுத்தில் செய்து பார்க்கிறார் .பல தளத்தில் விடுதலையை நோக்கிய இயக்கமாக அவரது எழுத்துகள் முன்வைக்கப் படுகின்றன. அவரது சத்திய தரிசன நிலையில் கருக் கட்டும் சொற்களால் அவரது இலக்கியம் நிகழ்கிறது. அந்நிலையை 'கருத்து நிலைகளின்மீது ஏறி நிற்கும் கூடிய கணிப்பின் பயன் ' என்றும் ஒருவாறு சொல்லிக் கொள்ளலாம் . ஆனால் என்னிடம் இருப்பதோ இலக்கியத்தின் இயங்குதளத்தில் ஏற்பட்டிருக்கும் முன் அனுமானம் மட்டுமே. எனக்கு சாத்தியமான கருவியைக் கொண்டே மு .பொன்னம்பலத்தை நாடுகிறேன்.

## 05

விசாரத்தின் பல பக்கங்களில் விஞ்ஞானிகள், உளவியலாளர்களின் கருதுகோள்களை வைத்துக் கொண்டு நகர்ந்திருக்கும் கதைகளில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் ஏற்படும் நெகிழ்ச்சியே விஞ்சி நிற்கிறது. இங்கே ஒரு தத்துவ ஆசிரியனின் செயற்பாடே அதிக இயக்கம் கொள்கிறதாகத் தெரிகிறது. இலக்கியம் உருவாக்கும் உணர்வெழுச்சியை இங்கு காண்பது கணிசமாகவே இருக்கிறது .இலக்கியம், தத்துவம் இரண்டுக்குமான கூட்டு சக்திப் பரிமாற்றத்தை இங்கு நான் காணவில்லை என்றே சொல்வேன் .

அவரது 'முடிந்து போன தசையாடல் பற்றிய கதை' என்ற கதைத் தொகுப்பினை விடுதலையின் வெவ்வேறு தளங்களின் பார்வை விரிப்பாகமுன் வைத்தவர் 'சுய தியாகத்திற்கு ஆற்றல் பெற்றிருக்கும் 'ஒரு தேசிய இனத்தைக் காண்பதோடு தேசிய இன விடுதலைக்கான உறுதிப் படுத்தலாகவும் 'தியாகத்தைக்' காண்கிறார் ... அத்தோடு அத்தகைய இனத்துக்குள் 'கொலையே மருந்து' என்ற நிலை தோன்றிவந்ததையும் பதிவு செய்கிறார் ...

'அது, நோயில் இருத்தல், விசாரம், கடலும் கரையும், ஆண்நிலை இயல்பு பற்றிய ஆழமான பார்வை, திறனாய்வு சார்ந்த பார்வைகள், பொறியில் அகப்பட்ட தேசம், மு..தளையசிங்கம் ஒரு அறிமுகம், முற்றத்துப் பூக்கள்' போன்ற பல முக்கிய வெளிப் பாடுகள் அவரிடமிருந்து வந்திருக்கின்றன என்னுடைய பார்வையில் அவருடைய 'சூத்திரர் வருகை' என்ற கவிதைத் தொகுப்பு ஈழத்து கவிதைபண்புகளில் வித்தியாசமான முனைப்புகளைக் கொண்டதாகவே தெரிகிறது

காலம் கருத்தரிக்கும் மூலத்தை
ஆயும் ஒவ்வோர் சமயமும்
பாழில் விழும் நான்
வீழ்ந்தது தெரியாது
எழுகையில்
என்மகள் முற்றத்தில் நின்று
கைசுழற்றிக் கயிறடிப்பில்
காலம் கயிறாய் துடிக்கிறது
அண்ணார்ந்து பார்த்தேன்
நூலிழுத்து கீழிறங்கும் காலத்தில்

ஊஞ்சலிடும் சிலந்தி .

கண் காணா
கால முகட்டில் முடிச்சிட்டு
ஏணையென ஆடும் பிரபஞ்சம் .
ஒவ்வோர் யதார்த்த நிகழ்வுள்ளும்
காலமே ஆயிரமாய் வலை பின்னும் -

மின்னிழையில் இரத்தோட்டம்
துயில்கையில் காலத்தை விழுங்கி
விழிக்கையில் காலத்தை வெளித் தள்ளும் நான் .


விழிப்பில்லை,
துயிலில்லை
காலக் கருத்தரிப்பின் மூலத்தில் ஆழ்கையில்
பாழில் விழும் நான் .

மு.பொ வின் எழுத்துக்களில் கட்டமைக்கப் படும் கருத்துகளிலும் பார்க்க வெளிகளையே அதிகம் காண்கிறேன்...அவரது கவிதைகள் ,கதைகள் பலவற்றுக்குள் வாசகர்கள் நின்று சுய பரிசீலனை ஒன்றைச் செய்வதற்கான இடங்கள் பலவற்றை அவர் விட்டுச் செல்கிறார். அவரது கதைகளின் இடை-வெளிகளுள் நாம் எழுதக் கூடிய கதைகளும் நமக்காகக் காத்துக் கிடக்கின்றன, அவரது இலக்கியப் பேச்சிலும் இலக்கியத்துள் நிகழும் மௌனம் கன-மானதாகவே பலசந்தர்ப்பங்களில் உணரவேண்டி இருக்கிறது. இலக்கியத்துள் நிகழும் மௌனம் இல்லாமையின் மௌனம் இல்லை. அது பேரிருப்பின் மௌனமாக பொதிந்திருக்கிறது.பேரிருப்பின் மௌ-னமே பெரும் பேச்சு.செயல்கள் அபத்தத்தில் முடியும் தருணங்களை நமக்குள் உணர்த்திக் கொண்டிருப்பதும் இந்தப் பேரிருப்பே... பேரிருப்பை உணர்ந்தவர்களுக்கு எழுத்து ஒரு `எட்டுக்கால்' பூச்சி `

விடுதலையை நோக்கி நகரும் இந்த மனநிலை எந்த இலக்கியத் தளத்தில் நின்று பேசுகிறதோ அந்தத் தளத்தையே உடைத்துக் கொண்டு போகுமளவுக்கு உத்வேகம் கொள்கிறது... இதனை தளையசிங்கம் விரிவாகவே சொல்லியிருக்கிறார். `மாற்றமற்ற நிரந்தரமான ஒன்றாகவும்' அது தேக்கமற்றதாகவும் அவரால் காணப்படுகிறது. தேக்கமற்ற அத்தளத்தில் நின்று வைக்கப்படும் சத்தியக் கருத்துநிலை உயர்வானதே. நம்மிடம் இருக்கும் தத்துவங்கள் காலத்துக்குக் காலம் புதிய பிரச்சினைகளால் உடைக்கப்பட்டே வந்திருக்கின்றன . தோன்றிய புதுப் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளையும் முன்வைக்கும் முகமான தத்துவ உருவாக்கங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. மெய்முதல் வாதமென்பது தேக்கமற்ற பயணத்திற்கான பரப்பாகவே நம்முன் வைக்கப் பட்டிருக்கிறது . ஒரு தளைய சிங்கத்தை புரிந்து கொள்ளாதவர்களுக்கு இன்னொரு தளையசிங்கமோ தளைய சிங்கத்தைத் தாண்டிய ஒருவரோ தேவை-யில்லை. இனிவரும் தலை முறைக்கும் தளை-யசிங்கமே அக ஆற்றலையும், விரிவையும் கொடுக்க வல்லவராக இருக்கிறார். புரிந்து கொள்ளத் தெம்பில்லாதவர்கழுக்கு `மெய் முதல் வாதம் தோத்துப்போன தத்துவம்' என்று சொல்வதற்கு என்ன அருகதை இருக்கிறது ?

இதோ ஹெமிங்வேயின் கிழவனை இழுத்துச் சென்ற மீன் கரையில் எலும்பாய் கிடக்கிறது ..... இப்படித்தான் அகத்தில் காணும் தரிசனங்களை கரைக்குக் கொண்டுவரல் கடினமாகிப் போகிறது இதோ.... இந்தக் கட்டுரையை உடையுங்கள் ,நொறுக்குங்கள் உங்கள் செயல்கள் நிறைவேறிற்று என்று தெரிந்தால்...உற்றுப் பாருங்கள் எஞ்சி நிற்பது தளையசிங்கத்தின் சத்தியதரிசனம் மட்டுமே .

மு. பொன்னம்பலத்தை நன்றியோடு வாழ்த்தி நிற்கிறேன்.



# நேர்காணல்

## "அருந்ததிராய், முல்க்ராஜ் ஆனந், அசோகமித்திரன் போன்ற சிறந்த எழுத்தாளர்களோடு நானும் ஒருவனாகக் கணிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டேன்."

## -மு.பொ

ச.இராகவன்

**வடபுலம், தென்புலம் இரண்டிலும் நெருக்கமான வாழ்வியல் ஊடாட்டத்தைக் கொண்டிருந்தவர் என்ற வகையில் உங்கள் நடத்தைக் கோலத்தில் இப்புலங்கள் எவ்வகையில் பாதிப்பை ஏற்படுத்தின? (விரிவான அறிமுகம் எதிர்பார்க்கப்படுகிறது)**

இரு புலங்களினிலும் வாழ்ந்தவன் என்ற காரணத்தினால்தான் தான் (ஏன்.மு.தவுங்கூட) தமிழ்பேசும் இனத்தின் தாயகக் கோட்பாட்டின் அவசியத்தைப் புரிந்தவனாய் இருக்கிறேன் என்பதை முதலில் சொல்லி விட்டு ஏனையவற்றுக்கு வருகின்றேன்.

நான் எட்டு வயதிலிருந்து முப்பது வயதுவரை தென்னிங்கையில் வாழ்ந்த அனுபவத்தைக் கொண்டவன். அதனால் சிங்கள் மக்களின் மனநிலையை நன்கு புரிந்தவன். எனது அநேக நண்பர்கள் சிங்களவர்கள், இடதுசாரிகள். இருப்பினும் ஒரு காலகட்டத்தில் இடதுசாரித் தலைவர்கள் எவ்வாறு தமிழ் மக்களுக்கான உரிமைக்கு குரல் எழுப்புவதையெல்லாம் படிப்படியாகக் கைவிட்டு இனவாதிகளாக மாறினார்களோ, அவ்வாறே என்னோடு பழகிய சிங்கள நண்பர்களும் முன்னைய தலைவர்களின் நிலையையே அடியோட விட்டவர்களாய் இருந்தனர். 70களில் 'தமிழீழத்தை பிரித்துக்கொடு' என்று யாழ்நகர மண்டபத்தில் வந்து பேசிய ட்றொட்ஸ்கிவாதி நண்பர்கள், இப்போ தேசியம் உதவாதென்றும் பிரபாகரன்

> மு.பொ எனக் குறுக்கியழைக்கப்படும் மு.பொன்னம்பலம் 1939 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுதீவுப் பகுதியில் பிறந்தார். தனது வளரிளம் பருவத்தைத் தென்னிலங்கையில் கழித்த மு.பொன்னம்பலம் தென்புலம் - வடபுலம் ஆகிய இரண்டையும் சார்ந்த ஊடாட்டத்தைத் தனது படைப்புக்களில் வெளிப்படுத்தியதில் முதன்மை பெறுகிறார். 1950களின் இறுதியிலிருந்து எழுதிவரும் இவர் நவீன ஈழத்து இலக்கியத்தில் தவிர்த்து நோக்கவியலாத மிகச்சிலரில் ஒருவர். தன்னைத்தானே உணர்ந்து கொள்ளும் உள்ளார்ந்த தேடலில் தொடர்ந்தும் நீர்த்து விடாமல் மு.பொ இயங்கிக் கொண்டிருப்பது அதிசயத்திற்குரிய ஒன்றுதான். அறிவியல் சார்ந்தும் குழந்தை உளவியல் சார்ந்தும் வெவ்வேறு தளங்களில் இவர் தீவிரமாக இயங்குவதும் பிறிதொருவகையில் அதிசயமானதுதான். ஈழத்திலிருந்து உலகத்தரமான புனைகதைகளை எழுதியவர் என்று சொல்வதும் பொருத்தமானது.. இதற்கான சிறந்த எடுத்துக்காட்டுக்களாக அமைவன: *வேட்டை, பயமக்கும் விஷம், அரைநாள் பொழுது, மூடுபனி* போன்ற இவரது புனைகதைகளாகும். இவரது *'வீடும் பல்லக்கும்'* என்ற புனைகதை குறியீட்டுப்பாங்கில் ஆழ்ந்த நோக்கோடு எழுதப்பட்ட முக்கியமான ஈழத்து அரசியல் புனைகதைகளி- லொன்று. விமர்சனம் என்றவகையில் மு.பொ இன்னொருவகையில் முக்கியமானவர். பிரபஞ்ச உணர்வோடும் தர்க்கரீதியாகவும் விமர்சனங்களை முன்வைக்கும் பாங்கு இவரைத் தனித்துவம் வாய்ந்தவராக எடுத்துக்காட்டுகின்றது. மு.தளையசிங்கத்திலிருந்து நமது கொண்டாட்டத்துக்குரியவராக மு.பொ மேற்கிளம்புகின்றார். *பொறியில் அகப்பட்ட தேசம்*, The song of a Liberated Zone, *துயரி, காலிலீலை, சூத்திரர் வருகை* என்பன இவரது முக்கிய படைப்புக்களாகும்.

போன்றவர்களை அழித்தொழிக்க வேண்டும் என்றும் தீவி ரமாக இயங்கினர். காரணம் கேட்டபோது இப்போ தங்களுடைய கட்சிக் கொள்கை மாறிவிட்டதாகக் கூறினர். கொம்யினிஸ்ட் கட்சி நண்பர்கள் வழமைபோலவே இனவா திகளாக இருந்தனர். இதற்கான அடிப்படைக் காரணம் நான் அறிந்தளவில், தமிழ் மக்களுக்கு சமஉரிமை கொடுப் பதென்பது தம்மினத்தை அழிப்பதற்கு சமமானதாகும் என்றே அவர்கள் நம்பினர், பயந்தனர்.

இதைக் கூட மன்னிக்கலாம். ஆனால் மன்னிக்கமு-டியாததாய் எனக்குத் தெரிவது, இடதுசாரிக் கட்சிகளின் உறுப்பினர்களாய் இருந்துகொண்டு அக்கட்சிகளின் சிங்களத் தலைவர்களின் கீழ் வேலை செய்த தமிழர்கள், தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்காக போராட வேண்டும் என்று கட்சிக்குள் குரல் கொடுக்காது நல்ல பிள்ளை வேஷம் போட்டுக் கொண்டு இருந்தே - அப்படிக் குரல் கொடுத்தால் தம்மை தமது சிங்களத் தலைமைகள் தவறாகப் புரிந்துகொண்டு விடுவார்களோ என்றும் அவர்களின் நல்லபிள்ளை அபிப்பிராயத்தை இழக்க வேண்டியேற்பட்டுவிடுமே என்றும் நினைத்து அவர்கள் கூறியவற்றுக்கெல்லாம் ஆமா போட்டுக் கொண்டிருந்ததே இவர்கள் கட்சிவேலையாக இருந்தது.

இவர்களின் கோமாளித்தனத்துக்கு நல்ல உதார ணம் மொஸ்கவ் கொம்யூனிஸ்ட் கட்சியிலிருந்த வி.பொன் னம்பலம் எமக்குச் சொன்ன கதை: வி.பொன்னம்பலத் துக்கு, ஜீ.ஜீ.பொன்னம் பலத்தோடு கதைக்க வேண்டிய தேவை இருந்தது. ஆனால் ஜீ.ஜீ.பொன்னம் பலத்தோடு கதைத்தால் தன்னை கட்சி தவறாக மதிப்பிட்டு விடுமே என்று பயந்து அவரின் தலைவர் பீற்றர் கெனமனிடம் போய் "ஜீ.ஜீ.பொன்னம்பலத்தோடு நான் கதைக்கலாமா?" என்று கேட்டிருக்கிறார். அதற்கு அவர் ஆச்சரியப்பட்ட வராக "ஏன், அவர் தொழுநோய்க்காரரா?" என்று கேலி யாகக் கேட்டுவிட்டு "தாராளமாய்க் கதையுங்கள்" என்று பதிலளித்திருக்கிறார் என்றால் நிலைமையைப் பாருங்கள். நமது இடதுசாரிக் கட்சிகளோடு இருந்த நமது தமிழ்த் தலைமைகள் தமது நல்ல பெயரைக் காப்பாற்றும் தொடை நடுங்கித் தனத்தை விட்டெறிந்து, தமிழ்பேசும் மக்களின் நியாயமான உரிமைகளுக்கு கட்சிக்குள்ளே குரல் கொடுத் திருந்தால் இனப்பிரச்சினைக்கு எப்பவோ தீர்வு கண்டிருக் கலாம். மாறாக தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட் டத்தையெல்லாம் பிற்போக்கு நடவடிக்கைகளாக இவர்கள் கேலி செய்தனர். அப்படிக்கேலி செய்தவர்களில் ஒரு-வரான பீஜிங்-விங் சண்முகதாசன் 1983 ஜுலை கலவரத்தின் பின்னரே "நாங்கள் தமிழருக்கு பெருந்து ரோகம் இழைத்துவிட்டோம்" என்று பாவ ஒப்புக்கொள்ளல் செய்தது வேடிக்கைதான்.

மூன்றாவதாக நான் சிங்களப்பகுதிகளில் தமிழருக்கு எதிரான இனக்கலவரங்களைக் கண்டவன். 1956ல் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகி-யோரின் தலைமையில் தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிரான சத்தியாக்கிரகம் காலி முகத்திடலில் இடம் பெற்றபோது, அவர்களுக்கு நடந்த கல்லெறித் தாக்குதல் மத்தியில் பல சிங்களப் பிரதேசங்களில் இனக்கலவரம் வெடித்தது. நான் வாழ்ந்த இரத்தினபுரியும் அதில் ஒன்று. இனக் கலவரம் இரத்தினபுரிநகரை சூறையாடிக் கொண்டி ருந்தபோது நான் 15 வயதுச் சிறுவனாக பாடசாலையில் இருந்தேன். இனக்கலவரம் வெடித்ததைக் கேள்விப்பட்ட சிங்களச் சிறுவர்கள் ஒரு பரிதாபத்துக்குரிய பிராணியைப் பார்ப்பதுபோல் என்னைப் பார்த்தனர். பாடசாலை காலை 11 மணிக்கே மூடப்பட்டது. நான் எங்களுடைய கடைக்கு எனக்கு பாதுகாப்புக்கு வந்த சிலரோடு சென்றேன். எங்கும் காடையரின் கும்மாளமும் கூப்பாடும் கேட்டுக்கொண்டி ருந்தது. வீதி முழுக்க தமிழ்க் கடைகள் உடைக்கப்பட்டு, பொருட்களும் கண்ணாடி அலுமாரித் துகள்களுமாகச் சித றிக்கிடந்தன. ஒவ்வொரு சிங்களவனின் முகத்திலும் எள்ள லும் ஏளனமும். ஒருவனாவது எம்மைப் பார்த்து பரிதாபப் பட்டதாகத் தெரியவில்லை. றோட்டில் சந்தித்த அவ்வளவு சிங்களவரும் ஏதோ ஓர் பயங்கர மிருகமாகவே காட்சி தந்தனர்.

அடுத்து 1958ல் பெருங்கலவரம் மூண்டபோதும் நான் இரத்தினபுரியிலேயே இருந்தேன். ஆனால் அப்போது அங்கே பொலிஸ் மேலதிகாரியாக இருந்த டிக்மன் என்ற பறங்கியர் எடுத்த முன்னேற்பாட்டின் காரணமாக, சிறுசிறு-கலவரங்களின் மத்தியில் நாம் தப்பிப்பிழைத்தோம். ஆயினும் பாணந்துறையிலிருந்த எனது பெரியம்மாவின் மகன் - அவர் பெயரும் பொன்னம்பலம்தான் - மிகக் குரூர மான முறையில் கொல்லப்பட்டார். பயத்தினால் அவர் மரத்தில் ஏறி ஒளித்திருக்க, அவர் கீழே விழுத்தப்பட்டு - உயிர் தப்புவதற்காக அவர் சிவன் கோயிலுக்குள் ஓடி ஒளிய முயலும்போது இவரோடு கோவிலுக்குள் இருந்த பூசகரையும் சேர்த்து இழுத்துவந்து, கொதிக்கும் தார் பீப்பாவுக்குள் திணிக்கப்பட்டு அவர்கள் கொல்லப்பட்டனர். (இத்தனையும் அங்கேயிருந்து உயிர்தப்பிய உறவினர் கண்ணால் கண்ட காட்சிகள்). இந்தச் சம்பவங்களின் அருட்டலின் விளைவுதான் மு.த. எழுதிய 'இரத்தம்' என்ற சிறுகதையும் ஒரு தனிவீடு என்ற நாவலும் (இரத்தம், ஏ.ஜே.யினால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. ஒரு தனிவீடு A Separate Home என்ற தலைப்பில் காலம் ஆசிரி யர் குழுவைச் சேர்ந்த என்.கே.மகாலிங்கத்தால் மொழி பெயர்க்கப்பட்டு, இந்தியாவிலுள்ள New Horizon Media ன் வெளியீடாக வெளிவந்துள்ளது.

1977ல் மீண்டும் இனக்கலவரம், ஜயவர்த்தனாவின் ஆட்சியின் ஆரம்பத்தினை அறிவிப்பதாய் வெடித்தபோது நான் ஊரில் (யாழ்ப்பாணத்தில்) நின்றேன். அகதிகளாய் சிங்களப் பகுதிகளிலிருந்து கப்பலில் வந்தவர்கள் சிங்கள வர்களுக் கெதிராக, கோபம் கொண்டவர்களாய் வந்தி றங்கினர். உயிர்களை இழந்து உடைமைகளை இழந்து பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டு துயரச் சுமையோடு வந்தவர்கள் கோபங்கொண்டது நியாயமே. அத்தகைய பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு வந்தவர்களும் தமது உறவினர், உற்றாரை இழந்தவராய் ஊரில் இருந்தவர்களும் யாழ்

நகரின் City Bakery க்கு முன்னால் திரண்டனர். நானும் அப்போது அங்கே நின்று கொண்டிருந்தேன். "இந்தச் சிங்கள நாயளைச் கொல்லவேணும்" என்று அவர்கள் கத்தியவர்களாய் சிற்றி பேக்கறி சிங்களர்களை தாக்குவ தற்குத் தயாரானபோது, "ஐயோ பாவம் அவங்களை ஒன்றும் செய்யவேணாம். அவங்களை இங்கே இருந்து அனுப்பினால் போதும்" என்று இன்னொரு கூட்டம் முன்னால் வந்து அதைத்தடுத்தது. நான் வாழ்ந்த புங்குடு தீவிலும் மாத்தறையைச் சேர்ந்த பேக்கறிக்காரர்கள் பலர் இருந்தனர். இவர்களுக்கெதிராக கொழும்பிலிருந்து வந்தபலர் பொல்லுகளோடு திரண்டபோது, நான் உட்பட வேறு பலர் பாவம் பார்த்து அவர்களையும் அங்கிருந்து பக்குவமாய் அனுப்பிவைத்தோம்.

இங்கே ஒரு முக்கியமான வி'யம் நம்முன் எழுகிறது. 1956, 58, 77, 83 என்று சிங்கள நாட்டில் தமிழர்கள், இயக்கங்கள் தோன்றுவதற்கு முன்னர் தொடர்ச்சியாக (சிங்களவர்க ளால்) வன்முறைக்குள்ளாக்கப்பட்ட போதும் வட பகுதியி லிருந்த சிங்களவர்கள் எந்தவித இடையூறு மின்றியே வாழ்ந்தனர். அவர்கள் தமிழர்களால் கொடுமைப்படுத்தப் படவோ, வன்முறைக்குள்ளாக்கப்படவோ இல்லை. இதை எவ்வாறு பார்ப்பது? இது ஒரு evolved ஆன இனத்தின் பண்பாட்டு முதிர்ச்சியின் விளைவால் ஏற்பட்டது எனலாமா? Micheal Roberts உட்பட பல ஆய்வாளர்களோடு நான் கதைத்தபோது இது ஆய்வுக்குரிய விஷயம் எனச் சொன் னேன். அதை அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

பயத்தின் காரணத்தினாலா தமிழர்கள் இப்படி நடந்து கொண்டனர்? இக்கேள்விக்கு இல்லை என்று பல ஆதாரங்கள் காட்டலாம். ஆனால் சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர், புலிகளின் எழுச்சிக்கு முன்னர் பயந்தவர் களாகவே வாழ்ந்து வந்தனர் என்பதும் மறுப்பதற்கு இல்லை. சிங்களவர்களின் வார்த்தைகளில் சொல்வதா னால், "தெமலா பொண்ணையா" (தமிழன் பயந்தவன் பொண்ணைத் தனமானவன்) சிங்களக் காடையன் ஒருவன், தமிழன் ஒருவன் நடத்தும் ஒரு பெட்டிக் கடைக்கு வந்து "ஓய் புண்டே, ஒரு பீடிகுடோய்" என்று சண்டித்தனத்தோடு கேட்க, தலையைக் குனிந்தபடி, மிகப் பவ்வியமாக பீடி யைக் கொடுத்துவிட்டு பேசாமல் நிற்கும் யாழ்ப்பாணக் கடைக்காரர்களை இரத்தினபுரியில் மட்டுமல்ல கொழும் பிலும் ஏனைய சிங்களப் பகுதிகளிலும் பார்த்திருக்கிறேன். இவ்வாறு ஒரு முஸ்லிம் நடத்தும் கடையிலோ மலையாளி யின் கடையிலோ நிகழ்வதில்லை என்பதையும் நான் அறி வேன்.

இவ்வாறு சிங்களவர்கள், சிங்களப் பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் தலையில் வைத்து மிளகாய் அரைத்த கதை, புலிகளின் எழுச்சிக்குப்பின்னர் தானாகவே அடங்கிப் பே- ாயிற்று, அதுமட்டுமல்லாமல் அவர்கள் பெரும் பீதியின் மத்தியில் வாழ்ந்தனர் என்பதும் உண்மை. இதற்கொரு நல்ல உதாரணமாக, நான் அறியக் கூடியதாக நடந்த உண்மைச் சம்பவம் ஒன்றைச் சொல்கிறேன். எனது நண்பரும் ஊரவருமான ஒருவர் சிங்களவர் ஒருவரின் வீட்டில் (வெள்ளவத்தையில்) குடியிருந்தார். வீட்டின் சொந் தக்காரர் மேல்வீட்டை எனது நண்பரின் குடும்பத்துக்கு கூலிக்கு கொடுத்துவிட்டு, தான் குடும்பத்தோடு கீழ் வீட்டில் இருந்தார். அக்காலத்தில் மத்தியவங்கி புலிகளால் தாக்கப்பட்டு கொழும்பே அதிர்ந்தது. அன்றிரவு எனது நண்பரின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. அவர் கதவைத் திறந்தால் அங்கே வீட்டின் சொந்தக்காரர் நின்று கொண்டி ருந்தார். அவர் எனது நண்பரிடம் நடுங்கிய குரலில் "புலிகள் இங்கே வந்தால் நீங்கள் தான் எங்களை காப்பாற்ற வேண்டும். நாங்களும் தமிழர்தான் என்று கூறி அனுப்புங்க" என்று கூறினார் என்றால் பாருங்கள் அவர்க ளிடம் குடிகொண்டிருந்த பயத்தின் உச்சத்தை!

இப்போ மீண்டும் தமிழர் பலவீனப்பட்டதும் பழைய இனவாதம் தலைதூக்கத் தொடங்கிற்று. இனிமேல் இனக்கலவரம் சிங்களப் பகுதியில் வெடிக்கும் பட்சத்தில் எமது சொந்த இடம் என்று முன்னையப்போல் தமிழர் சென்று ஆறுதல் அடைய முடியாத நிலைதான் ஏற்பட்டுள்ளது. அதனால்த்தான் தமிழ்பேசும் மக்களுக்கான தேசியக் கோட்பாடு அவசியமானதும் பாதுகாப்பானதும் என்பேன்.

**ஈழத்து நவீன இலக்கியப்பரப்பெல்லைக்குள் கொண்டாடப் படுற்குரிய மிகச் சிலரில் ஒருவரான மு.தளையசிங்கம் குறித்துப் பலர் கருத்து முன்வைப்பினை மேற்கொண்டிருந்த போதிலும் அவரது சகோதரர் என்ற அடிப்படையில் உங்க ளது மனப் பதிவுகளை நான் முக்கியமானதாக் கருதுகிறேன். அவரைப்பற்றிய உங்களது மனப்பதிவு என்ன?**

அவரது சிந்தனை எவ்வளவு பலமிக்கதாக இருந்ததோ அவ்வாறே அவரிடம் எச்சந்தர்ப்பத்திலும் சவாலை எதிர்கொள்ளும் அஞ்சாமையும் இருந்தது. இதை அவ- ரோடு கூடப்பழகிய என்.கே.மகலிங்கத்தின் கூற்றில் அறி யலாம்: "தைரியம் அவரின் உடன் பிறப்பு. மிக மெலிந்த உருவம். அதற்குள் இருந்த வீரம், அறிவு, தன்னம்பிக்கை அதிசயப்படக்கூடியது. 1971ம் ஆண்டாக இருக்க வேண்டும். ஊர்காவற்றுறை பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு முன்னால் மு.த.நிற்கின்றார். சமூகப்பிரச்சனையில் இவரை யும் இன்னுஞ்சில இளைஞர்களையும் இன்ஸ்பெக்டர் அழைத்துச் சென்றிருந்தார். இன்ஸ்பெக்டர் கேட்ட கேள்வி களுக்கு இவர் மேசையில் ஊன்றிக் கொண்டு பதில் சொல்கிறார். இன்ஸ்பெக்டர் தன் நாட்டாண்மையைச் காட்டு வதற்கு மேசையிலிருந்து கையைஎடுத்து நிமிர்ந்து நிற்கும் படி கட்டளையிடுவதுபோல் ஆங்கிலத்தில் அதட்டுகிறார். 'நான் எப்படி நிற்க வேண்டும் என்பதை நீர் எனக்குச் சொல்லித்தரத் தேவையில்லை' என்று மு.த.பதில் அளிக் கிறார். (மு.தளையசிங்கத்தின் வாழ்க்கையின் சில பக்கங் கள் - காலம் மாசி 1995).

நான் தற்போது எழுதிமுடித்துள்ள 'அடிபெயர்க்கும் நினைவுகள் - புனிதநீர்' என்ற தலைப்பிலான மு.த.வின்

வாழ்க்கை வரலாறு இதை இன்னும் தெளிவாக்கும்.

## மெய்யுள் என்ற கோட்பாட்டை மு.தளையசிங்கம் முன்வைக்க வேண்டிய தேவை என்ன?

மெய்யுள் என்பது ஒரு கோட்பாடல்ல. கோட்பாடெனில் கட்டுப்பெட்டித்தனங்கள் அதனோடு உருவாகும் ஆபத்தைத் தவிர்க்க முடியாது. `சோஷலிஸ்ற் றியலிஸம்' என்பது ஒருகோட்பாடாகி ஸ்ரலின்கால ர்'யாவில் முன்வைக்கப் பட்டபோது ஏனைய இலக்கிய வகையாறாக்களெல்லாம் ஒதுக்கப்பட்டன. அவற்றை எழுதுவோர் தண்டனைக்குள் ளாக்கப்பட்டனர்.

13ம், 14ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அடிப்படை சிந்தனை மாற்றத்தையும், புத்தெழுச்சியையும் பார்த்து ஆய்வாளர் களும் வரலாற்றாசிரியர்களும் மறுமலர்ச்சி என்றனர். இது காலவரை வானுலகையும் நரகத்தையும் சொர்க்கத்தையும் தேவர்களையும் பற்றிப்பேசிய கவிதைகளும் காவியங் களும் மறுமலர்ச்சிக்காலத்தில் அடிப்படை மாற்றத்திற்குள் ளாகின்றன. விண்ணைப் பற்றிப் பேசியவை மண்ணுக்கு வருகின்றன. மண்ணில்வாழும் மக்களையும் அவர்கள் வாழ்க்கையையும் யதார்த்தமாக கவிதையை விட்டு உரைநடையில் பேசத்தொடங்குகின்றன. மார்க்சீயம் கூட அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தாத, மறுமலர்ச்சி காலத்தில் தோன்றிய அறிவுவாதத்தின் இறுதிவடி வமாகவே நிற்கிறது. இன்று மீண்டும் அடிப்படை மாற்றம் ஒன்று ஏற்படப் போகின்றது என்கிறார் மு.த. இது எமது மனதின் பெரும்பாய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட தென்றும் கூறுகிறார். பேர்பெற்ற உயிரியல் விஞ்ஞானி, ஜுலியன் ஹக்ஸ்லி இதையே psychometobolism என்கிறார். Descent of the super mind என்றார் அரவிந்தர். இந்த மாற்றத்தின் குறியீடாகவே மெய்யுள் நிற்கிறது. ஜோர்ஜ் லுயி.ஃபோர்கே, காப்பிரியல் மார்குஸ் போன்ற லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்கள் வில்லியம்.ஃபறோஸ் போன்ற அமெரிக்க எழுத்தாளர்கள் புதிய பாணியில் மஜிகல் றியலிசம், சேர்றியலிசம் போன்றவற்றைப் பாவித்து எழுவதும் அவற்றுக்கு பக்கத்துணையாக நிற்கும் பின்நவீனத்துவ, கட்டவிழ்ப்பு அமைப்பியல், பின் அமைப்பியல் போன்ற கோட்பாடுகளும் வரப்போகும் பெருமாற்றத்தை புத்தி பூர்மவமாக உணராத, அடிமன வெற்று உந்தல்களின் விளைவே. இவற்றைப் புத்திபூர் வமாக உணர்ந்து எழுதுபவன், சாதாரணமான வாழ்க்கைச் சம்பவங்களையே வித்தியாசமான ஒளியில் பார்ப்பான். ஒரு முறை நான் நீண்ட நேரத்தியானத்திற்குப்பின் சிறிது நேரம் துயின்றபோது என்முன் எழுந்த காட்சிகள் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கின. அவற்றை நான் குறிப்பெடுத்து வைத்திருந்து அப்படியே எழுத முயன்று தோற்றேன். பின்னர் அதையே `துயரி' என்ற தலைப்பிட்டு எழுதினேன். விடுதலையின் அவதாரத்தின் குறியீடான `துயரி' எமக்கு நேர்ந்த விடுதலையின் குறியீடாகவே நிற்கிறது, அது மேலும் தொடரலாம்.

மு.த. மெய்யுளை அறிமுகப்படுத்தியபோது `மெய்யும் உள்ளும் மெய்' என்று அதை வித்தியாசமான உரையாடல் கதையாக மல்லிகையில் எழுதினார். அதன்பின்னர் `புதுக்குரல்கள்', `கலைஞனின் தாகம்', `அண்டை வீடுகள்' என்றும் பரிசோதனைகள் செய்தார். `கலைஞனின் தாகத்திற்கு எதிர்வினையாக சு.ரா. எழுதிய `ஜே ஜே சில குறிப்புகள்' என்னும் நாவல் நிற்கிறது.

## மெய்யுளை முன்னெடுத்துச் செல்வதில் மு.த.எதிர்நோக்கிய நெருக்கடிகள் எவை?

அவர் இதை முன்வைத்த காலத்தில் யாருமே இது பற்றிப் பேசவில்லை, காரணம் அக்காலத்தில் முற்போக்கு விமர்ச கர்கள் என்பவர்கள் சமூக யதார்த்தத்தையும் சோஷலிச யதார்த்தத்தையும் ஒன்றோடொன்று போட்டு குழப்பி யடித்துக் கொண்டிருந்த காலத்தில் மு.த.கூறிய இத்தளங்க ளுக்குள் பிரவேசித்து எதிர்வினை எழுப்பும் நிலையில் அவர்கள் இருக்கவில்லை. பின்னர் மு.த. இறந்த பிற்பாடு யேசுராசா, மெய்யுள் என்பது சோஷலிஸ்ற் றியலிஸம் போன்ற இன்னொரு கோட்பாடுதானே எனச் சொன்ன போது, இது கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம் என்பவற்றுக்கெல்லாம் போடப்பட்டிருந்த விதி-களையெல்லாம் உடைப்பதோடு எதிர்காலம் கோரும் சுதந்திரமான கலை, இலக்கிய விரிவின் பெயரே என்றும் புளித்துப்போன பழைய கலை இலக்கிய ரசனைகளைத் தூக்கி எறிந்து புதிய ரசனைக்கான ஊடுருவலை கோரிய ஒரு போக்கு என்றும் நான் கூறினேன்.

## மெய்யுளை உங்களால் முன்னெடுத்துச் செல்ல கூடியதாக இருந்ததா?

எனக்கும் மு.த.வுக்குமிடையில் மெய்யுள் சம்பந்தமாக நடந்த உரையாடலை இங்கு சொல்வது முக்கியம் என நினைக்கிறேன். ஈழத்து பதினொருவர் கவிதைத் தொகுப் பில் இடம்பெறும் பொன்னாலை கிருஷ்ணன் கோவிலுக்கு போவது பற்றிய எனது கவிதையில் வரும் கவித்துவமான சில வரிகள் பற்றியும், அவ்வாறே `மார்கழிக் குமரி' யில் வரும் வரிகளையும் பற்றிக் குறிப்பிடுகையில் அத்தகைய ரசனை மிக்க கவிதைகள் எம்மை பழைய ரசனைக் குள்ளேயே ஸ்தம்பிக்கச் செய்வதால் இவற்றை உடைத்து புதிய ரசனைத் தளங்களுக்கு இட்டுச் செல்லும் முயற்சி யில் ஈடுபடவேண்டுமென்றார். அதை விளக்குவது போல் "எத்தனையோ கோடி ஒளியாண்டுகளுக்கு அப்பால் பிரபஞ்சத்தில் எங்கோவோர் மூலையில் நேர்ந்த 'Super-nova' சிதறலுக்குள்ளான நட்சத்திரக் கோளத்திலிருந்து வரும் ஒளி, இன்னும் பூமியை வந்தடையவில்லை என்பது பெரும் கவிதையாக விரிகிறது" என்றார். "அப்படியானால் புதிய விஞ்ஞானச் செய்தி கவிதையா?" என்று நான் வேண்டுமென்றே கேட்டேன். "இல்லை, அதுதான் இன்றைய சாதாரண சாமான்யனின் கேள்வி. நான் அதைச் சொல்லவில்லை. அச் செய்தியோடு ஒட்டிவரும் Association of Ideas - இப்பிரபஞ்சத்தின் விரிவு, அதன் பின்னணி

யில் பூமியின் அற்பம், அனாதைத்தனம் என்று மாறி மாறி சிந்தனையை விரிக்கும் எண்ணப் பரப்புக்கள்" என்றார் அவர்.

இப்போ வேற்றுலகவாசிகள் என்பதெல்லாம் கட்டுக்கதை என்பது பொய்யாகி அவர்களின் இருப்பு நிரூபிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவிலுள்ள Area 51ல் இருந்து வெளியாகும் கதைகள் மட்டுமல்ல ஐன்ஸ்ரீனுக்குப் பின்னுள்ள இன்றைய கணித மேதையான ஸ்ரீபன் ஹோவக்கிங் என்பவரே தனது கணித அறிவின் மூலம் நிரூபித்துள்ளார். இப்பின்னணியில் எனது மகனோடு நடந்த உரையாடல் ஞாபகம் வருகிறது. 1957ல் வேற்றுலக வாசிகளின் விமானம் விழுந்து அதிலிருந்தவர் இறந்த போது அதைப் Post Mortem செய்த வைத்தியர், "அந்த வேற்றுலக வாசி இறந்தபோது அங்கு சுற்றி நின்ற அனை-வரும் விபரிக்க முடியாத துயர உணர்வால் பீடிக்கப்பட்டனர் என்றார்." ஏன் அந்தத்துயர்? இது இன்னொரு கலை ஆக்கமாகலாம். அதற்கான காரணமாக அவர் கூறியது, "அந்த வேற்றுலகவாசி இறப்பதற்குமுன் எம்மோடு மனரீதியாக தொடர்பு கொள்ள முனைந்ததின் விளைவாக இருக்கலாம்" என்பதாகும்.


இதை விளங்கிக் கொள்ள முடியாமல்போன எமது மனதின் போதாமை துயரமாகக் கவிந்திருக்கலாம். இது இன்னொரு கலை ஆக்கமாக எனக்குள் விரிந்தது.

மேலும் மனிதர் தமது மூளையின் 5% வீதத்தையே பாவிக்கிறார் என்றும் இன்னும் உயர்ந்த சிந்தனை கலையாக்கங்களில் ஈடுபடுவோர் 10% பாவிப்பதாகவும் சொல்லப்படுகிறது. எஞ்சிய 90% வீதத்தையும் பாவிக்கவேண்டுமாயின், அதன் தேவை ஏற்படுமாயின் வித்தியாசமான மனிதர்கள் பிறக்க வேண்டும். அப்படியாயின் இதைத்தான் அரவிந்தர் தான் மறையுங்காலகட்டத்தில், "இனிமேல் நான் வரும்போது உபாதைகளால் பாதிக்கப்படாத உடலோடு வருவேன்"என்று கூறினாரா?

இன்னும் ரமணமகரிஷி, தான் அண்ணாமலைக்கு வந்த ஆரம்பத்தில் தனக்கு கீரை ஆக்கிதந்த கீரைப்பாட்டியே பின்னர் தன் ஆச்சிரமத்திலே நின்ற பசு வென்றும் அதற்கு அவர் முக்தியளித்ததோடு இன்னும் சில பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் அவர் முக்தியளித்துமான நிகழ்வுகள் பச்சை யதார்த்த உண்மை. இந்த நிகழ்வுகளைப் படிக்கும் போது முன்னர் நமது புராணங்களில் பேசப்பட்ட பன்றிக் குட்டிகளுக்கு பால் கொடுத்த, கரிக்கருவிக்கு வரமளித்த விஷயங்கள் வித்தியாசமான ஒளியில் பார்க்கப்பட வேண்டியது அவசியமாகும். இத்தகைய புதிய ஆக்கங்களை எழுதுவதற்கு ஆத்மீக (Mysticism) பயிற்சியும் அதற்கான உள்ளுணர்வும் தேவை.

'சாத்தனின் வாசகங்கள்' என்று சல்மான் ருஷ்டி எழுதிய நாவலால் வெகுண்டெழுந்த இஸ்லாமிய உலகு, அவனுக்கு மரணதண்டனை அளிக்கத் துடித்தது. ஆனால் மாறாக உலக அவதார புருஷர்களின் பின்னணியில், முகமது நபி அவர்களின் பேராற்றலை விளக்கி, வேண்டுமென்றே அவர் தன் பேராற்றலை மறைத்து ஆடிய நாடகத்தை கலைத்துவமாக வெளிப்படுத்தி எதிர்வினை நாவலை ஒருவர் எழுதியிருந்தால் ருஷ்டி தன் அறியாமையை நினைத்து வெட்கப்பட்டிருப்பான். தரிசன முள்ளவன் இப்படி எத்தனையோ புதிய தளங்களுள் பிரவே சிக்கலாம். அவை வித்தியாசமான படைப்புகளாகப் பரிணமிக்கலாம்.

மரபுக்கவிதை எழுதுவதில் ஆரம்பித்த நான், அறுபதுகளின் இறுதியில் மரபுக்கவிதையை விட்டெறிந்து புதுக்கவிதை எழுதினேன். எழுத்திலும் எனது கவிதை பிரசுரமாயிற்று.



1970 - 80 வரை "அகவெளிச்சமிக்ஞைகள்" என்றும் 80-90 வரை "விடுதலையும் புதிய எல்லைகளும்" என்றும் உரைநடை போன்ற பாணியில் எழுதினேன். இத்தகைய பாணி இன்று தமிழ்நாட்டில் சிலரால், குறிப்பாக பிரேம், ரமேஷ் என்பவர்களால் முன்னெடுக்கப்படுகிறது. எனது இத்தகைய ஆக்கங்களை பேராசிரியர் சிவத்தம்பி "கவித்துவ வசனங்கள்" என்றார். சண்முகம் சிவலிங்கம் "Naked Prose" என்றார். இத்தகைய ஆக்கங்களில் ஒன்றான "ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு கவிதையை உயிர்ப்பிப்பாயாக" என்ற கவிதையை "என்னை வசீகரித்த கவிதை" என்று குமுதம் கேள்வி பதிலில் குறிப்பிடப்பட்டது. இத்தோடு நான் நிற்கவில்லை. விமர்சன ரீதியாக நான் தர்முசிவராம் பற்றி சரிநிகரில் எழுதிய

விமர்சனம் வெங்கட் சாமிநாதனால் பாராட்டப்பட்டது. பின்னர் அந்த விமர்சனம் 'சூத்திரர் வருகையில்' வெளிவந்தபோது சுஜாதா பாராட்டினார். சூத்திரர் வருகையிலும் தற்போது நான் வெளியிட்டுள்ள 'கவிதையில் துடிக்கும் காலம்' என்ற தொகுதியிலும் உள்ள காலம் பற்றிய கவிதைகள், கவிதை உலகுக்கு அந்நியமானவை. 'மரணம்', 'முடிந்து போனதசையாடல்', 'பீதி' போன்றவை 'சிறு கவிதைகள்'. காலம் பற்றிய கவிதைகள் ஆத்ம விசாரத்தை முன்னெடுப்பவையாகும். மற்றும் ஆங்கிலக் கவிதை நூல் A Country Entrapped ஜீன் அரசநாயகம் உட்பட சிங்களப் புத்திஜீவிகளால் பாராட்டப்பட்டது. ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்தில் கவிதைக்குப் பொறுப்பாய் இருந்த கவிஞர் Benjamin Zephaniah, அற்புதமான கவிதை என்றார். அதாவது பெருங்காட்சிப் புலத்தையும் அதனுடைய அகண்ட தொடர்புகளையும் பார்க்கும் முறைமை. ரெறி ஈகல்ரனும் பாராட்டிக் கடிதம் எழுதினார். இலங்கை வரலாற்றை வித்தியாசமான பார்வைக்குட் படுத்தும் The song of a Liberated Zone சிங்கள நண்பர்களால் பாராட்டப்பட்டது. இதனால்தான் பேராசிரியர் சிவத்தம்பி என்னுடைய ஆக்கங்கள் பற்றிக்கூறும் போது, "Among the poets of the 1970s, M. Ponnambalam is considered to be highly articulate, -using his poetry to experiment with language" (50 years of Sri Lankan Tamil Literature) என்கிறார்.

இவ்வாறே ஏ.ஜே. உம் "ஈழத்தமிழ் இலக்கியப் பரப்பில் ஏதாவது புதுமையாகச் செய்பவர்களாக இருப்பவர்கள் மு.த. வும் மு.பொ. வுமே" என்று தமது நண்பர்களோடான உரையாடலின் போது குறிப்பிட்டதை இங்கு சொல்லலாம். (தகவல்: சிவபாலன் 'சிற்பி')

ஆகவே இவற்றின் பின்னணியில் வைத்துப்பார்க்கும்போது இனிமேல்தான் மெய்யுளின் முக்கியத்துவம் பெரிதாக விரியும். பழைய ரசனையை விட்டெறிந்து புதிய கலைத்துவ ரசனைக்கு உயர்வதென்பது அறிவின் விசாலிப்போடும் உள்ளுணர்வோடும் இணைந்து வருவது. இதை என்னோடு நெருக்கமுடையர்களுக்கே புரிவது கஷ்டமாகப்படுகிறது. அவர்களுக்கு விளக்குவதற்காகவே புதுமைப்பித்தனின் அகலிகை பற்றிய கதையையும் (சாபவிமோசனம்), மகாஹகவி அகலிகை பற்றி எழுதிய கவிதையையும் ஒப்பிட்டு முன்னதில் உள்ள கலைத்துவ விரிவால் சிறுகதை கவிதையாக உயர்வதைக்காட்டினேன். நான் காலம் பற்றி எழுதிய கவிதைகளே நேரத்தை வேறு கோணத்தில் பார்க்க வைப்பது. நான் முழுநேர எழுத்தாளனாக இருப்பேனாகின் எத்தனையோ புதுமையானவற்றைச் செய்து காட்டலாம்.

**சூத்திரர் வருகை நீங்கள் எதிர்பார்த்தளவுக்கு அதிர்வை ஏற்படுத்தியதா?**

அதிர்வை ஏற்படுத்துவது பற்றிக் கதைக்காதீர்கள். சாமி படத்திலிருந்து வீபூதி கொட்டுண்ணுவதாகச் சொன்னால், சாமி படத்துக்கு சாற்றிய மாலை இரண்டடி வளர்ந்து விட்டதாகச் சொன்னால் ஒருவேளை அவை அதிர்வை ஏற்படுத்தலாம். ஆனால் இந்த மாதிரி அறிவு சார்ந்த விஷயங்களுக்கு அவை நேரப்போவதில்லை. வெளிவரும் பெரும்பாலான நூல்களையெல்லாம் தேடியெடுத்து விமர்சனம் செய்யும் தமிழ் விரிவுரையாளரிடம் இந்நூல் வெளிவந்தவுடனேயே கையளித்தேன். ஆனால் அவர் இற்றைவரை ஒரு வார்த்தைதானும் அது பற்றி பேசவில்லை. ஆனால் இந்நூல் பற்றி ஒரு சிறந்த விமர்சனத்தை கவிஞர் அஸ்வகோஸ் "மு.பொ.வின் கவிதைகள்" என்ற தலைப்பில் எழுதினார். அவரே எனது துயரி பற்றி ஆழமாக விமர்சித்தார். எனது வெளிவரவிருக்கும் 'படுகை' என்னும் நெடுங்கவிதைகள் தொகுப்புக்கு இவரின் விமர்சனத்தையே முன்னுரையாகப் போட்டுள்ளேன். மேலும் இந்நாலில் இடம்பெற்றுள்ள 'காட்டிக்கொடுத்தவன்' என்னும் பாநாடகம், பைபிளில் வரும் யூதாஸ் இஸ்கேறியத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள பாத்திரத்தைக் கேள்விக்குள்ளாக்கிறது. இது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டால் பல வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தும் எனச் சொன்னவர்களும் உண்டு.

**'விசாரம்' போன்ற உளப்பகுப்பாய்வு முயற்சிகளை நீங்கள் ஏன் தொடர்ந்தும் முன்னெடுக்கவில்லை?**

நேரமின்மையே காரணம்.


**'விசாரம்' குறித்து கவனிப்பிற்குரிய எதிர்வினைகள் உங்களுக்கு கிடைத்தனவா?**

விசாரத்தில் இடம் பெற்ற அனேகமான ஆக்கங்கள், 'சரிநிகரில்' தொடர்ந்து வந்தவை. நான் 'திசையில்' இத்தகைய ஆய்வுநிலைப்பட்ட ஆக்கங்களை 'தீட்சண்யன்' என்ற பேரில் எழுதினேன். அவ்வாறு சரிநிகரிலும் தொடர்ந்து எழுதும்படி சேரன் கேட்டார். ஆசிரியர் குழுவைச் சேர்ந்த சிவகுமாரும் ஆதரவு தந்தார். மார்க்சிஸ்ட் சாய்வுடையவர்களாக இருந்த எஸ்.கே. விக்கினேஸ்வரன் போன்றவர்களுக்கு அவர்களுடைய கருத்துக்களை நிராகரிப்பதாக அமைந்த, எனது சில கருத்துக்கள் 'புழுக்க'த்தை ஏற்படுத்தியிருக்கவேண்டும். ஆகவே அவர் 'கணபதிப்பிள்ளை' என்ற பெயரில் 'யார் இந்த சங்கமன்?' (சங்கமன் என்ற பேரிலேயே அவற்றை எழுதினேன்) என்று எதிர்வினை வைத்தார். அ. இரவி லண்டனில் இருந்து என்மீதும் மு.த.மீதும் வைத்திருந்த தனது காழ்ப்புணர்வை அறிவின் பாற்படாது மொட்டையாகக் கக்கினார். பேராசிரியர் சிவசேகரம், Telepathy, Telekinesis போன்ற விஷயங்கள் பற்றி நான் குறிப்பிட்டதையும் அதற்கு நான் உதாரணித்த யூரி கெல்லரை பொய்யன் என்றும் சொல்லி எனது முழுப்புத்தகத்தையும் சிந்தனை வறுமையின் விளைவென திட்டித்தீர்த்தார். யூரி கெல்லர் செய்வதாகக் கூறப்பட்ட விஷயங்கள் இன்று பலரால் செய்து காட்டப்படும் நிலையை எட்டியுள்ளது. எஸ்கிமோ மக்களிடம் இது சர்வசாதாரணமான விடயம். அவர் விசாரம், நூலை விமர்சித்ததிலி

ருந்த பதற்றம் அவரை அது பெரிதாகப் பாதித்திருக்க வேண்டும் என்று தெரிந்தது. ஆயினும் சிவசேகரத்தின் பலதரப்பட்ட ஆற்றல் அதற்கான உழைப்பு என்பவற்றால் நான் அவரை என்றும் மதிக்கிறேன். இராஜமார்த்தாண்டன் அவர் காலமாவதற்கு முன்னர், காலச்சுவட்டில் விசாரம் பற்றி நன்றாகவே எழுதியிருந்தார், அவருக்கே உரிய சிந்தனைக் குறைபாடுகளோடு. எனக்கு எதிர்வினை தந்த விக்கினேஸ்வரனுக்கு விசாரம் முன்னுரையில் பதில் அளித்திருந்தேன். இந்நூல் 500 பிரதிகள் அச்சடிக்கப்பட்டன. மிகச் சொற்பகாலத்தில் அனைத்தும் விற்று முடிந்தன.

**நோயில் இருத்தல் எனும் உங்களது நாவல் ஒரு தற்புதுமையான முயற்சி. இருந்தும் அது உரிய கவனிப்பை பெறாதது ஏன்?**

இம்மாதிரியான நாவல்கள் பேசும் விஷயங்கள் உங்களைக்கவர வேண்டுமாயின், எனது நண்பன் ஒருவர் கூறியது போல் அதற்கான Frequency இருக்க வேண்டும். இத்தகைய தளங்களில் நாவல் எழுதுவோர் குறைவு. அதனால் தான் அது உரிய கவனிப்பை பெறவில்லை எனலாம். ஏன், அதிகம் போவான், செங்கை ஆழியானின் நாவல் பட்டிய லில்கூட அது இடம்பெறவில்லை! ஆனால் அதற்காக எல்லா வாசகரையும் அப்படி மட்டந்த ட்டமுடியாது. இந்நாவலும் எனது ஏனைய எழுத் துக்களும் சிலரின் விசேட கவனத்தைக் கவர்ந் ததன் விளைவே தெற்காசியாவில் LIBRARY OF CONGRESS (USA – DELHI OFFICE) அமைப்பினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 எழுத்தாளர்களில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளன் நான் ஒருவனே என்ற பெருமை எனக்கு 2002 இல் கிடைத்தது. அருந்ததிராய், முல்க்ராஜ் ஆனந், அசோகமித்திரன் போன்ற சிறந்த எழுத்தாளர்களோடு நானும் ஒருவ- னாகக் கணிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டேன். சிங்கள எழுத்தாளர்கள் நால்வர் தெரிவுசெய்யப்பட ஈழத்தமிழ் எழுத்தாளர்களில் நான் ஒருவனே தெரிவு செய்யப்பட்டதற்கு இந் நாவலும் ஒரு காரணம். ஐம்பது ஆண்டு கால ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்ற ஆங்கிலக் கட்டுரையில் பேராசிரியர் சிவத்தம்பி என்னைப்பற்றிக் கூறியதும் பிறிதொரு இடத்தில் எனது நாவல் பற்றி எழுதியதும் இதற்குக் காரணம் எனலாம். இத் தெரிவினால் எனது எழுத்தாக்கங்கள் சில எனது வாசிப்பின் மூலம் பதிவுசெய்யப்பட்டதோடு, நான் உட்பட அனைத்து எழுத்தாளர்கள் உள்ளடக்கப்பட்ட படமும் கிடைத்தது. கூடவே ஒரு இணையத்தளமும் திறந்து அறி- முகப்படுத்தவும்பட்டேன். இம் மாதிரியான சந்தர்ப்பமும் கணிப்பும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் வேறு எவருக்காவது கிடைத்திருந்தால் பெரிய கூட்டம் ஒன்றையே ஒழுங்கு படுத்தி பலரைக் கொண்டு பாராட்டுரைகள் செய்வித்து பொன்னாடைகள் போர்த்தல், படங்கள் எடுத்துப் பத்திரி கைகளில் போடல் என்று அமர்க்களப்படுத்தியிருப்பார்கள். இன்று சந்தர்ப்பம் வந்ததால் எட்டு வருடங்களுக்கு முன் நடந்த இந் நிகழ்வு பற்றிச் சொல்ல வேண்டியதாயிற்று. மேலும் இந்நாவல் எழுத்தாளர் சட்டநாதனைக் கவர்ந்ததால் அதை அவர் ஏ.ஜே.யிடம் கொடுத்து படிக்கத் தூண்டினார். அதன் விளைவு ஏ.ஜே. ஒரு விமர்சனத்தை ஆங்கிலத்தில் எழுதினார். அவர் இந் நாவலை அல்பர்ட் காம்யுவின் Plague நாவலுடன் ஒப்பிட்டு எழுதினார். நாஸி(Nazi) களால்



கௌவப்பட்டிருந்த பிரான்சு தேசம் பிளேக் நோயால் பீடிக்கப்பட்டதாக உருவகப்படுத்தப்பட்ட நாவலே காமுவி னது. அவ்வாறே எனது நாவலும் உருவகப்படுத்தப்பட் டிருந்தால் இன்னும் சிறப்பானதாக இருந்திருக்கும் என்னும் ஏ.ஜே.ன் நோக்கில் எனக்கு உடன்பாடில்லை. பூரண ஆரோக்கியமற்று இருமலும், ஈழையுமான நிலையலேயே முழுநாடும் இருந்தது. முற்று மழுதாக விழுங்கப்பட்ட நிலையில் அல்ல. அந் நிலையில் ஒரு நோயாளியையும் நாட்டையும் கோடிகாட்டிச் செல்லும் உத்தியே சிறப்பா னது என்பதே எனது வாதம். மேலும் ஏ.ஜே கீழைத்தேய ஆத்மீக விரிவு (EASTERN MYSTICISM) பற்றி ஆழமான அறிவில்லாதவராகவே இருந்தார். அதனால்தான் ஒருவ- னின் ஆளுமையையே கையிலெடுத்து ஆட்டும் அரவிந்தர் கூறிய Psychic bombardment பற்றி ஏதும் அறியாத

நிலையில் பிரார்த்தனையுடன் அதை மாறாட்டம் செய்து இவ்வாறான தகவல்களை நாவல் ஆசிரியர் தந்து எமது காலை வாரிவிடவா பார்க்கிறார் என்று அவர் கேலியாகக் கேட்டது எனக்கு அவர்பால் அனுதாபத்தையே தந்தது. மேலும் சாத்தர் எல்.எஸ்.டி பாவித்தது பற்றியும் அவர் அறியாது இருந்ததால் சாத்தரின் சதாகால பெண் கூட்டாளி சைமன் டி புவா இது பற்றிப் பதிவு செய்துள்ளார் என்றும் அவருக்கு விளக்கினேன். நோயில் இருத்தலை அதிகமானோர் வாசித்திருக்காவிட்டாலும் வாசித்தவர்கள் மத்தியில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

**'திசையில்' வெளிவந்த உங்களது 'வேட்டை' ஒரு முக்கியமான புனைகதை. இக் கதைக்கு சாதகமான எதிர்வினை கிடைத்ததா?**

'வேட்டை' பலரிடமிருந்து பாராட்டைப் பெற்றது. அவ்வாறே 'பயம் கக்கும் விஷம்', 'யுகங்களை விழுங்கிய கணங்கள்', 'அரைநாள் பொழுது', 'முடுபனி', போன்றவையும் பாராட்டுக்களைப் பெற்றன. அண்மையில் வெளியான 'கலாவ லஸ்சனாய்' (காடு அழகானது) என்ற சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்ட சிறுகதைத் தொகுப்பிலுள்ள எனது 'பயம் கக்கும் விஷம்' என்ற சிறுகதையைப் படித்த சமூகவிஞ்ஞானிகள் சங்கத்தைச் சேர்ந்த சிங்களப் புத்தி ஜீவிகள் இவ்வளவு உயர்ந்த நிலையிலா உங்கள் சிறுகதைகள் உள்ளன என்று வியந்தனர். எனது அரைநாள் பொழுதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஏ.ஜே. அதை ஜேம்ஸ் ஜோய்சின், டப்ளினேர்சில் உள்ள சிறுகதைகளோடு ஒப்பிட்டார்.

வேட்டை என்ற சிறுகதையை துவிஜன் என்ற பெயரில் திசையில் வெளியிட்டேன். இலக்கியப் பகுதிக்கு நான் நியமித்த யேசுராசா அக்கதை தனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் நான் அதை பிரசுரிக்க வைத்தேன். திசை வெளிவந்த அடுத்த நாளே ரஞ்சகுமார் எனது அலுவலகத்துக்கு வந்து யேசுராசாவின் முன்னிலையில் அதைப் பாராட்டினார். பாவம் யேசுராசா! எனது கதை அவருக்குப் பிடிக்காமல் போனதற்குக் காரணம் எனக்கெதிராக அவர் கொண்டிருந்த மனமுற்சாய்வே (Prejuidice). யேசுராசா என்னோடு நல்லுறவு கொண்டிருந்தபோது அவர் வெளியிட்ட 'அலை'யின் முகப்புக் கவிதையாக எனது கவிதையை வெளியிட்டார். அவரது சிறுகதை நூல் வெளியிட்டு விழாவிற்கு என்னைத் தலைமை தாங்கவிட்டார். பிறகு நமக்கிடையே கருத்துமோதல் ஏற்பட்டதும் எனது படைப்புகள் எல்லாமே பிடிக்காமல் போயின. இவர் கூறியவற்றை விழுங்கிக் கொண்டு எனது கருத்தியல் பற்றி எழுதி mediocre ஆகத்தன்னை சண்முகம் சிவலிங்கம் தாழ்த்திக் கொண்டார். இந்த மனச் சிக்கலால் யேசுராசா தனது நண்பர்களையெல்லம் இழந்து தனித்துப்போனதோடு, தனது எழுத்தாற்றலையும் இழந்தவராக நிற்பதே எனது கவலை. ஒருவன் எவ்வளவு பகைவனாக இருந்தாலும் அவனிடமிருந்து ஏதாவது திறமை வெளிப்படும் பட்சத்தில் அதை பாராட்ட முன்வருவதே Intellectuual Honesty ஆகும். இந்தப்பண்பே மனித நாகரீகத்தை முன்னெடுப்பதாகும். இத்தகையோருக்கு உதாரணமாக ஏ.ஜே, மு.த., சிவத்தம்பி (மு.த.வின் ஆக்கங்களுக்கு எதிராக க.கை. இயங்கியபோதும் 60க்களுக்கு பின் வந்த ஈழத்து இலக்கியத் தேக்கத்தை உடைத்தவர் மு.த எனப் பாராட்டினார்.) இளந்தலை முறையில் இத்தகைய பண்புடையோராக சேரன், சட்டநாதன், மு.புஷ்பராஜன், ரஞ்சகுமார், ரமணேஷ் (கவிஞர் அஸ்வகோஸ்) உள்ளனர்.

**'ஊஞ்சல் ஆடுவோம்' குழந்தை உளவியலில் நீங்கள் ஆழ்ந்த நோக்குடையவர் என்பதை நன்குணர்த்துகிறது. சிறுவர் இலக்கியம் மிகவும் தேக்கமடைந்துள்ளது. ஈழத்து இலக்கியச் சூழலில் இதுபோன்ற முயற்சிகளை நீங்கள் தொடர்ந்து முன்னெடுத்தாலென்ன?**

குழந்தை இலக்கிய முயற்சியிலேயே நான் இக்காலங்களில் கூடுதலாக எனது நேரத்தை செலவிட்டுள்ளேன். Room to Read என்னும் அமைப்பு சிறுவர் இலக்கியத்தை முன்னெடுப்பதை தனது வேலையாக் கொண்டு இயங்குகிறது. இதனோடு நாம் சிலபேர் சேர்ந்து இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இந்த அமைப்பினால் நிகழ்த்தப்பட்ட இலக்கியப் பட்டறைகளுக்குச் சென்றுள்ளேன். சூபிர் சுக்லா என்னும் இந்தியர் சென்ற வருட இறுதியில் வந்து தவணை முறையில் மூன்று மாதங்கள் தனது விரிவுரையை நிகழ்த்தினார். இதற்குமுன்னரும் இன்னொரு அமைப்பு, சிறுகதை ரெலிட்றமா பற்றிய இலக்கியப்பட்டறைக்கு Peter Miller என்பவரை அழைத்திருந்தது. ஏற்கனவே நான் கொண்டிருந்த பல்வகைப்பட்ட வாசிப்பினாலும், இன்னும் இன்றைய நவீனத்துவ பின்னவீனத்துவ கதை சொல்லும் முறைகளோடு பரிச்சயம் பெற்றிருந்ததாலும் இவர்கள் போட்ட நியதிகளோடு எனக்கு ஒத்துப் போக முடியவில்லை. இவர்கள் எல்லாரும் பிரச்சினை, சிக்கல், தீர்வு என்னும் இஸற் (Z) வடிவ கதை சொல்லும் முறையை அறிமுகப்படுத்தியது, எனக்கு ஒத்துப்போவதாய் இல்லை. நான் இவர்களின் பிரச்சனை, சிக்கல், தீர்வு என்ற இஸற் வடிவ முறையை எங்களுடைய பாட்டனார் காலத்தவை என்றேன். இன்றைய நிலையில் ஒவ்வொரு கணமும் பிரச்சனை சிக்கல், தீர்வு என்று அலை அலையாக (Wavy) வரும் வேகமான தாக்கத்துக்கு ஒவ்வொருவரும் முகம் கொடுக்கின்றோம் என்று வாதாடியதோடு 'பலூனும் பையனும்' என்றொரு கதையையும் எழுதிக்காட்டினேன். அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நான் ஒரு பிரச்சினைக்காரனாகவே இருந்தேன். ஆனால் எனது குறிப்பிட்ட கதை சிறுவர் நூலாக வெளிவந்தள்ளது.

இப்போ எனது 'ஊஞ்சலாடுவோம்' தொகுதி "கலைகள் செய்வோம்" என்ற பெயரில் மீள்பிரசுரம் செய்யப்பட்டதோடு "செவ்வாய் மனிதன்" என்றொரு புதிய தொகுதி

யும் வெளிவருகிறது. இதில் நான் சிறுவர் கவிதை முறையில் நிலவுகின்ற தேக்கத்தை உடைக்க வேண்டும் என்ற நோக்கில் புதுக்கவிதைப் போக்கிலும் சிறுவர் கவிதையைப் பரீட்சித்துப் பார்த்துள்ளேன். சிறுவர்களுக்கான வயதெல்லைகளையும் படங்களின் தேவைபற்றியும் இதில் குறிப்பிட்டுள்ளேன்.

**அண்மைக் காலங்களில் கிழக்கிலங்கையிலிருந்து நவீன இலக்கியப் போக்குகளைத் தெளிவாக உள்வாங்கி பயனுள்ள கதையாடல்களை முன்னெடுக்கக்கூடிய இளந்தலை முறை-யொன்றினை அவதானிக்க முடிகிறது. இந்தளவுக்கு வடக்கில் கவனத்தையீர்க்கக் கூடிய செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்படாமைக்குக் காரணம் என்ன?**

இந்தப் போக்கு கிழக்கிலங்கைத் தமிழ் இளந்தலைமுறை ஆற்றல் இலக்கியக் காரர்களிடம் தெரிவதைவிட முஸ்லிம் கவிஞர்கள் எழுத்தாளர்களிடம் கூடுதலாகத் தெரியவந்துள்ளது என்பேன். இதற்குக் காரணம் முஸ்லிம் தேசம் ஒன்றை உருவாக்குவதை தம் கருத்தியலாகக் கொண்டதன் உந்துதலின் விளைவே இது. கூடவே இதில் ஈடுபடுபவர்கள் இன்றைய பின் நவீனத்துவ சிந்னையிலும் அக்கறை கொண்டு அவற்றின் தாக்கத்தை உள்வாங்கிய முறையினாலும் இது வெளிப்படுகிறது எனலாம். இத்தகைய புதிய போக்கின் காரணத்தை உணர்வதற்கு தமிழீழப் போராட்டம் தனது உச்ச நிலையில் இருந்தபோது புதிய வேகத்துடன் புதுமை கொண்ட ஆக்கங்களுடன் வந்த 'மரணத்துள் வாழ்வோம்' நூலை ஒப்பிடுதல் மிக அவசியம். ஒரு புதிய கருத்தியலின் உந்துதல் புத்தாக்கங்களுக்கு வழிவகுக்கும். 1786ன் பிரஞ்சுப் புரட்சிக்குக் கட்டியங் கூறுபவையாகவே வோல்டயர், றூசோ போன்றோரின் சிந்தனைகள் எழுந்தன. அல்குர்ணாஸ், மஜீத், அலறி, டீன்கபூர், மிஹாத், றஹூப், சிறாஜ் போன்ற இளந்தலைமுறையினர் மற்றும் பெருவெளியைச் சுற்றி எழுதுவோர் இதற்குரிய நிமிர்வோடு படைப்புக்களைத் தருபவராய் உள்ளனர். சிறந்த விமர்சகர்களின் ஆற்றுப்படுத்துதல் இவர்களுக்கு அவசியம். அ.மார்க்ஸ் போன்ற Mediocre 'புத்திஜீவிகள்' இவர்களுக்கு உதவப்போவதில்லை. தேசியக் கோட்பாடு பற்றி ஆழமான தெளிவு இல்லாத இவர், முஸ்லிம் மக்கள் முன்வைக்கும் தமது சமய, கலாசாரத்தை முன்னிறுத்திய முஸ்லிம் தேசத்தை இவர் எவ்வாறு பார்க்கப்போகின்றார்.

**நீங்கள் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை ஈழத்தின் விமர்சனத்துறை செம்மையான இயங்குதிசையில் பயணித்து வந்துள்ளதாக கருதுகிறீர்களா?**

இல்லை என்று தான் சொல்லவேண்டும். நாம் எழுதத் தொடங்கிய காலத்தில் (56-60) முற்போக்கு எழுத்தாளர்களின் ஆட்சி நடந்து கொண்டு இருந்தது. ஆனால் க.கைலாசபதி 57ல் தினகரன் ஆசிரியராக வந்ததன் பின்னரே முற்போக்கு பற்றிய பிரக்ஞை மார்க்சிய எழுத்தாளர்களிடம் தொற்றியது எனலாம். ஆனால் அதற்காக மார்க்சிய ரீதியான விமர்சனம் எங்கும் காணப்படவில்லை. இருந்தாலும் இந்திய மூன்றாந்தர எழுத்தாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த தினகரனை அதிலிருந்து விடுவித்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர்களான செ.கணேசலிங்கன், தே.டானியல். டொமினிக் ஜீவா. பொன்னுத்துரை போன்றோருக்கு இடமளித்ததே ஒரு 'மார்க்சிய' விமர்சனமாகப் பார்க்கலாம். இதே காலத்தில் க.கை யின் நண்பர்களான காவலூர் இராசதுரை சில்லையூர் செல்வராசன் ஆகியோர் முறையே நாவலாசிரியர் வரிசையில் மு.வரதராசனாரின் நாவல்கள், காரசாரம் என்ற தலைப்பில் எழுதியவை சீரியஸ்ஸான பார்வைக் குரிய தெறிப்புக்களைக் கொண்டிருந்தன. ஆயினும் மார்க்சீய விமர்சனம் என்றோ வேறு எந்த விமர்சனமோ முறையாக முன்வைக்கப்படவில்லை. மாறாக சமூகயதார்த்தத்தை சோசலிஸ்ற் றியலிசம் என்று கொண்டாடப்பட்ட மாறாட்டமே நிகழ்ந்தது. இக்காலத்தில் மூன்றாம் பக்கம், விமர்சக விக்கிரகங்கள், முற்போக்கு இலக்கியம், ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி என்று மு.தவால் எழுதப்பட்ட கட்டுரைகள் முற்போக்கு எழுத்தாளர்கள் போட்ட கூப்பாட்டை அடக்கியதோடு இவைபற்றி எதுவும் தெரியாது தாழ்வுச் சிக்கலில் கிடந்த யாழ்வட்ட எழுத்தாளர்களுக்கும் ஒரு நிமிர்வை ஏற்படுத்தியது. இக்காலங்களில் மார்க்சிய விமர்சனம் சம்பந்தமான ஏ.ஜே.ஆல் எழுதப்பட்ட விமர்சனங்கள் முற்போக்கு தலைமைகளால் கண்டு கொள்ளப்படாமல் இருந்தன. இவற்றின் மத்தியிலேயே பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் என்ற க.கையின் நூல்வெளிவருகிறது. இதைத் தொடர்ந்து சிவத்தம்பி, க.கை ஆகியோர் தொடர்ந்து நூல்களை வெளியிடுகின்றனர். இவற்றுக்குப் பின்னர். எம்.ஏ.நு.்.மான் மார்க்சிய வழிநின்று எழுதிய நூல்கள் பல இளம் பரம்பரையினருக்கு பெரிதும் உதவியுள்ளன. மேலும் இரண்டாயிரமாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி என்ற தலைப்பில் எம்.ஏ.நு.்.மான், சித்திரலேகா, மௌனகுரு ஆகியோர் கூட்டாக எழுதிய நூல், மு.தளையசிங்கம், மஹாகவி, ஆகியோரையும் உள்ளடக்கிய காரணத்துக்காக க.கையின் கண்டிப்புக்கு உள்ளாகிற்று. "இதை நீங்கள் ஏற்றுக் கொண்டால் இது எங்கே போய் முடியும் என்று தெரியுமா?" என்று அவர் சினந்துபேசியது (அலை 1980 பங்குனி) அவரது அனு-தாபிகளான இந்நூலாசிரியர்களையும் அசௌகரியத்திற்குள்ளாக்கிற்று. இதிலிருந்து பார்க்கும் போது முற்போக்கு பிதாமகர் க.கை. ஒரு ஆரோக்கியமான விமர்சன ஓட்டத்தைப் பேணவில்லை என்பது தெரிகிறது. ஒருவித ZIG – ZAG முறையிலேயே சென்றிருந்தது. அதேநேரத்தில் விமர்சனத்துறையில் எனது பங்களிப்பும் கணிசமானது. 'ஈழத்து இலக்கிய உலகில் மு.பொவின் பங்களிப்பைத் தவிர்த்து யாரும் மதிப்பிட முடியாது' என்று (சரிநிகரில் 1999 ஜூன்) எம்.றஹூப் எழுதியதற்கு ஒப்ப நானும் அறிமுக விமர்சனம், விமர்சனம், ஆய்வுநிலைப்பட்ட விமர்சனம், எதிர்வினை விமர்சனம் என்ற முறையில் எழுதியுள்ளேன். இவ் விமர்சனத் தொகுப்பு திறனாய்வின் புதிய திசைகள் என்ற தலைப்பில் விரைவில் வெளிவர உள்ளது.

**சு.வில்வரத்தினத்துடன் உங்களுக்கு இருந்த தொடர்புகள் பற்றிக் கூறுங்கள்.**

நோயில் இருத்தல் (இரண்டாம் பாகம்) நாவலிலும் அண்மையில் வெளிவந்த எனது சிறுகதையான கைதுசெய்யப்பட்ட கிராமத்திலும் எமக்கிடையே இருந்த சில உறவின் தன்மைகள் வெளிவந்துள்ளன.

**தன்னைத் தான் உணர்ந்து கொள்வதற்கான உள்ளார்ந்த தேடலுக்கான எத்தனிப்புத்தான் ஆன்மீகம் சார்ந்து படைப்புலகில் இயங்குவதாக அமையும். இந்த அடிப்படையில் ஈழத்துப் படைப்பு இலக்கியத்தில் இயங்கிவருபவர் என்கிற அடிப்படையில் கேட்கிறேன்: உங்களை நீங்கள் உணர்ந்து கொள்வதற்கான உள்ளார்ந்த தேடலில் எவ்வளவு தூரம் முன்நகர்ந்திருப்பதாகக் கருதுகிறீர்கள்?**

ஆன்மீகரீதியாக தன்னை உணர்தல் என்பதில் முன்நகர்தல் பின்நகர்தல் என்ற ஒன்றில்லை. எங்குமாய் இருப்பது Self realized state ஒன்றே. அதில் தான் நானிருக்கிறேன். நீங்களும் இருக்கிறீர்கள். இது வேறாக இருப்பதாக நினைப்பது தான், எனக்கும் உங்களுக்கும் இடையிலுள்ள இடைவெளி.

**உண்மையில் 2009 மே மாதத்திற்குப்பின் போர் ஓய்ந்து விட்டதா? இக் காலப்பகுதிக்குப் பின்பாக உள்ள நிலைமைகளை எவ்வாறு மதிப்பீடு செய்கிறீர்கள்?**

போரில் ஈடுபட்டதாகச் சொல்லப்பட்ட 'புத்திஜீவிகள்' இப்போ அதற்கு எதிரான மறுபாதிகளை காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இயங்கியல் பற்றி நன்கு புரிந்தவன் போர் எத்தனையோ தளங்களில் தொடர்ந்து கொண்டிருப்பதை மெய்யுளாக எழுதலாம். நாம் ஒவ்வொருவரும் utopia is the most real possible of all real possibilities என்பதைத் தெரிந்திருப்பது நல்லது.

**அண்மைக் காலங்களில் ஈழத்தின் புனைகதைப் போக்குகளில் கவனிப்பைப் பெறும் ஏதாவது பிரதி உங்களால் இனங்காண முடிகிறதா?**

அண்மைக் காலங்களில் ச.இராகவனின் கதைகள் என் பார்வைக்குக் கிட்டின. பல்வகையான சோதனைகளை அவர் செய்துள்ளார். கேள்வித்தாள் வடிவிலான கதையில் இன்றைய அரசைப் பற்றிய அங்கதம் மிக அருமையாகவே வெளிப்படுத்தப்பட்டது. மற்றது மனுபுத்திரனின் எழுத்துலகம் யாழ் பல்கலைக் கழக வட்டத்தில் பல அதிர்வுகளை ஏற்படுத்தியது அதன் சமூகப் பெறுமானமாகும். திசேராவின் 'ஏவிவிடப்பட்ட பேய்' எனக்குப் பூரணமாகப் படிக்கக் கிடைக்கவில்லை. ஆனால் படித்த பகுதிகள் நன்றாய் இருந்தன. இவர்களின் கதைகளை கோணங்கியின் கதைகளோடு மாறாட்டம் செய்யக் கூடாது. இவ்விரு தரப்பினரிடமும் extreme ஆன போக்குண்டு கோணங்கியின் extreme போக்கு காலத்தின் திருத்த வேலைக்குரியது. இராகவன், திசேரா ஆகியோர் தாமே சிந்தித்து இன்னோர் மூன்றாந் தளத்திற்கு உயரலாம். அது அவரவர் உள்ளுணர்வைப் பொறுத்தது. 'மனுபுத்திரனின் எழுத்துலகம்' எடுத்த குறிக்கோள் ஏனைய உப கதைகளால் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது என்று சொல்வோரும் உண்டு. தாக்குப்பட்டவர்கள் அவ் உப கதைகளைக் காட்டி தமக்குரிய கோணத்தில் காட்ட முன்வரலாம் அவற்றை வேறோர் தனித் கதையில் பாவித்திருந்தால் பெருவெற்றி ஏற்பட்டிருக்கும். அல்லது இவை அனைத்தையும் ஒரு நாவலாகவே எழுதியிருக்கலாம்.

**9/11 தாக்குதலை மையப்படுத்தி 'பொறியில் அகப்பட்ட தேசம்' எழுதினீர்கள். 2009 மே மாதம் அளவில் ஈழத்தமிழினத்தையே பேரவலத்துக்குள் வீழ்த்திய கூட்டுக் கொடுஞ்செயல் பற்றி ஏதும் எழுதும் எண்ணமுண்டா?**

எழுதினால் அதுவே எனது Ambitious ஆக்கமாக இருக்கும். பலதடவை முயன்றும் ஏனோ முன்னேற முடியவில்லை. ஒரு inspired ஆன நிலை ஏற்பட்டால் ஒரு சொற்ப நேரத்திற்குள்ளும் அது முடிவுறலாம்.

# அரைநாள் பொழுது

காமினி காலையிலேயே வந்துவிட்டிருந்தான். அவன் எனது சிங்கள நண்பன். ஒரு மாதத்திற்கு நான்கு ஐந்து தடவையாவது என்னைச் சந்திக்க எனது அறைக்கு வருவான். அன்றும் அப்படித்தான் ஒரு வருகை. அவன் முகம் வெளுப்பேறி இருந்தது. கொஞ்சம் மெலிந்திருந்தான். அவனை நினைத்தாலே மெலிவுதான் நினைவுக்கு வரும். ஆனால் அன்று அந்த மெலிவில் கூடுதலான அழுத்தம். காரணம் ஒரு குதூகலமும் இல்லாமல் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தானாம். கூடவை தேவைக்கு அதிகமாக புத்தகங்களையும் வாசித்தானாம்.

வந்தவுடனேயே எனக்கு எதிரேயிருந்த ஈசிசெயரில் உடம்பை வளர்த்திவிட்டு முகட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரம் மௌனம்.

"பிறகு மச்சான்" நான்தான் மீண்டும் கதையைத் தொடங்கினேன். இந்தமுறை கொஞ்சம் கூடுதலாகத்தான் வீட்டில் தங்கிவிட்டாய், என்ன?" அவன் சொன்னதையேதான் கேள்வியாகக் கேட்டேன், காரணத்தையறிய.

"இங்கு வருவதற்கு காசில்லை அதனால் நின்று விட்டேன்" அவன் பதில் சொன்னான்." மீண்டும் மௌனம்.

"டீ குடிக்கப் போவோமா?" நான் மௌனத்தைக் கலைத்துக்கொண்டே சிங்களத்தில் கேட்டேன்

"தற்ஸ் ஏ குட் ஐடியா, மச்சான்" ஆங்கிலத்தில் விளையாட்டாக ஆமோதித்தான். இருவரும் வெளியே வெளிக்கிட்டோம்.

தெருவில் காலடி வைத்தபோது அவன் காற்சட்டைப் பைக்குள் கையைப் போட்ட வண்ணம், இரண்டு குதிகளையும் உயர்த்தியவனாய் "இஸ்" என்று நாக்கை இழுத்தான், பிறகு என்னைப் போல ஒருவன் இருப்பானா?" என்றான் அமைதி இழந்தவனாய்.

"என்ன விஷயம்?"

"கண்டக்டரிடம் ஐந்து ரூபாவைக் கொடுத்து விட்டு மிச்சசல்லியை வாங்காமல் மறந்து போய் வந்துவிட்டேன். இன்றோடு இப்படி மூன்று தடவை: நான் ஒரு முட்டாள்" அவன் தன்னையே திட்டிக் கொண்டான்.

"அப்போ என்ன செய்யலாம்?"

"ஒருக்கால் பஸ்ராண்டுக்கு ஓடிவிட்டு வருவோம் இன்னும் அந்த பஸ் எங்கும் போயிருக்காது"

நாங்கள் பஸ்நிலையத்துக்கு வேகமாகப் போய்க் கொண்டிருந்தோம். திடீரென்று அவன் தன் நடையின் வேகத்தைத் தளர்த்தி, "மச்சான் அந்த பஸ் எங்காவது போயிருக்கும். நாங்கள் ஓடுவதில் அர்த்தமில்லை" என்றான்.

"ஏன்?"

"நான் உன்னிடம் வருவதற்கு முன் அரை மணித்தியாலமாக லைப்பிரரியில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தேன், அது இப்போதுதான் நினைவுக்கு வருகிறது... அந்த பஸ் எங்காவது போயிருக்கும்"

"எப்படியிருந்தாலும் போய்ப் பார்ப்போமே. ஒருவேளை அந்த பஸ் இன்னும் அங்கேயே நின்று விட்டால் அதிஷ்டமல்லவா?"

அவன் தலையை அசைத்துக் கொண்டே நடந்தான். பஸ் நிலையத்தில் அந்த பஸ் அங்கே நிற்கவில்லை. அருகிலிருந்த அலுவலகத்தில் விசாரித்தோம். அந்த பஸ் கொஞ்சம் முந்தியாகத்தான் நிலையத்தைக் காலிசெய்திருக்கிறது. இப்போது அது இதங்கொடைக்கு போயிருக்கிறது. திரும்பிவர 12.15 ஆகும். அவர்கள் சொன்னார்கள் இப்போது நேரம் 10.20 அங்கிருந்து திரும்பினோம்.

நிலையத்தை விட்டுவந்து நெடுந்தெருவில் விழுந்த போது தாகம் எடுப்பதுபோல் இருந்தது. நான் டீக்கடை ஒன்றுக்குள் நுழைந்தேன். அந்தக்கடை எங்களுக்குப் பழக்கமானதுதான். காமினி டீக்கடையின் படிகளில் ஏறியபடி காற்சட்டைப் பைகளுக்குள் கையைவிட்டுத் துழாவியபடி "என்னிடம் ஒற்றைச் சதம்கூட இல்லை என்றான்".

நான் பதிலளிக்காமலே உள்ளேபோய் உட் கார்ந்தவனாய் ஒருபிளையின் டீக்கு ஓடர் பண்ணினேன். காமினி எனக்கு எதிரே வந்து உட்கார்ந்து கொண்டான்.

ஒரு பிளேயின்டீ இருவருக்குமிடையே பங்கா டப்பட்டது. அவன் கோப்பையோடு குடித்தான். எனக்கு கோப்பையின் கீழிருந்த தட்டோடு. வெறும்டீ இன்னும் வெளிறியிருந்தது, வெள்ளைத் தட்டில்.

"ஒரு சிகரட் கொண்டுவரவா?" ஹோட்டல் பையன் கேட்டான். அவனுக்கு எங்களைப் பற்றி தெரியும்.

ஒரு திறிறோஸஸ் கொண்டு வரப்பட்டது. கூடவே அதைப் பற்றவைக்க ஒருசின்ன விளக்கையும் கொண்டு வந்து வைத்தான். அந்த சின்ன விளக்குக்கு சிமினி இருக்கவில்லை. அது ஒரு ஆழமான பெட்டிக்குள் அதிகப் படியாகத் துண்டிவிடப்பட்டு வளைந்து வளைந்து எரிந்தது. சிகரட்டுக்கும் பிளையின் டீக்கு நேர்ந்த கதி. பாதிபாதி!

"படுமுட்டாள்தனமாக எரிகிறது" என்றான் காமினி சிகரட்டைப் பற்றவைத்துவிட்டு, எரிந்த விளக்கைச் சுட்டிக்காட்டி. அதில் ஒரு நகைச்சுவை லேசாக நின்றது.

"அது ஒரு கழைக்கூத்தாடி மாதிரி" என்றேன் நான்.

"இல்லை யாரோ அனாவசியமாகத்தன் கெட்டித னத்தை விளம்பரபடுத்தவதுபோல் இருக்கிறது..... எனக்கு எரிச்சல்தான் வருகுது" என்றவன் ஆத்திரத்தோடு அதை ஊதி அணைத்தான்.

நான் சிரித்தேன். எனக்கு அதை உணரமுடிந்தது. ஆனால் விளக்கு செத்தும் மண்ணெண்ணெய் புகையின் குமைச்சல் எம்மை வஞ்சம் தீர்த்துக் கொண்டது. எழுந்து ஹோட்டல் முன்மேசைக்கு வந்தபோது "சத்தாஹசயாய் மாத்தையா" என்றகுரல் பின்னால் கேட்டது. எங்களுக்குப் பரிமாறிய பையனில் குரல்.

"முதலாளி, கணக்கை எழுதிவையுங்கள், பிறகு தாறன்" என்றேன்.

"முந்தியும் கொஞ்சம் இருக்கு" என்றார் அவர்.

"எல்லாத்தையும் சேர்த்து தாறன்" என்று நான் கூறிய போது அவர் முகம், ஒரு பக்கம் நீண்டு கோணலாகியது.

சரியாகப் 12 மணிக்கு நாங்கள் மீண்டும் பஸ் நிலையத்துக்குப் போனோம். இதங்கொடை யிலிருந்து அந்தப் பஸ் இன்னும் வரவில்லை. அலுவ லகத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள். அந்த அலுவ லகத்தின் குட்டிச்சுவர்களில் கைகளை முட்டுக் கொடு த்து முகத்தைத் தாங்கியபடி எதிரே கலகலப்பாய் கிடந்த பஸ் நிலையத்தைப் பார்த்துக் கொண்டு நின்றோம். அங்கும் இங்குமாக சிற்பாக்குக ளோடு ஆடவர்களின் நடமாட்டம். சில இடங்களில் க்கியூ வாிசைகள் சலிந்தும் சடைத்தும் ஆட்களின் போக்குக்கு ஏற்றதோற்றம் எடுத்துக்கொண்டி ருந்தது. அரை நேரத்தோடு மூடப்படும் பள்ளிக்கூட மாணவ மாணவிகள், திடீரென எங்கிருந்தோ படையெடுத்தவர்களாய், பஸ்களை நோக்கிப் பந்தயம் பிடித்தவர்கள்போல் ஓடிக்கொண்டிருந்தனர். ஒருவித விடுபட்ட பார்வையில் எல்லாமே பைத்தியக்காரத் தனமாகப்பட்டது.

"அங்கை பாரேன், பண்டா படும்பாட்டை!" திடீரெனக் காமினி எங்கள் அமைதியைக் கலைத்துக் கொண்டே கத்தினான். அவன் சுட்டிக்காட்டிய திசையில் பார்வையை விட்டேன். எங்களுக்குத் தெரிந்த ஆசிரியர் ஒருவர் கை நிறையப் பார்சல்களோடு ஆஸ்பத்திரிக்குப் போகும் பஸ்ஸாக்குக் கியூவில் நின்றுகொண்டிருந்தார்.


"ஆஸ்பத்திரியில்அவனுடைய மனைவி பிரசவத்துக்காய் விடப்பட்டிருக்கிறாள், இவன் அங்கு போகிறான்" என்று கூறிவிட்டு அவன் லேசாகக் சிரித்தான்.

"இவனுக்கேன் இந்த அவஸ்தை? காசுள்ளவன் டாக்ஸியில் போகலாமே?" நான் பதிலை எதிர்பார்க்காமலே கேட்டேன்.

"இப்பதான் பிறிமிட்டிவ் அக்கியுமிலேஷன் (ஆரம்பச் சேகரிப்பு) நடக்குது. அதனால் அவஸ்தைப்படுகி றான்."

காமினி பதில் சொன்னான். நான் சிரித்தேன். ஆனால் எனது சிரிப்பையும் மேவிக் கொண்டு இன்னொரு சிரிப்பு எனக்கு அண்மையில் கேட்டது. நான் எனது பார்வையை அருகிழுத்தேன்.

எதிரே ஒரு மாணவி, சிரிப்போய்ந்த முகத்தோடுதனது தோழிக்கு கைகாட்டிவிட்டு நடந்துகொண்டிருந்தாள். "காமினி அதோ ராணி போகிறாள்" என்றேன்,



எதிரே கைகாட்டிவிட்டுப் போனவளைக் காட்டி.

"எந்த ராணி?"

"எங்களோடு சிவனொளிபாத மலைக்கு வந்தாளே, அவள்".

"ஓ அவளா! கூப்பிடன்"

"கூப்பிட்டு என்ன பயன், கொடுப்பதற்கு என்ன இருக்கிறது? அதுவும் இந்த நேரத்தில்" நான் கூறினேன்.

காமினி சிரித்துக்கொண்டே அவளின் பின்புறத்தைப் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டுச் சொன்னான். "டிக்கி அபாரமாக இருக்கிறது."

நாங்கள் காத்திருந்த இதங்கொடைக்குப் போயிருந்த பஸ் ஒருபடியாக வந்து சேர்ந்தது. அன்று வழக்கத்துக்கு மாறாக சுணக்கம். 12.15க்கு வரவேண்டியது சரியாக 1.15க்கு வந்தது. அதே கண்டக்டர்தானாம். காமினி கண்டக்டரிடம் விஷயத்தை விளக்கியபோது அவன் ஒருக்கால் நெற்றியைச் சுழித்துவிட்டு பிறகு ஒப்புக்கொண்டான். அவனிடம் மிகுதிப் பணத்தைப் பெற்றுக்கொண்டு நகரின் நடுப் பகுதிக்கு வந்தபோது நேரம் இரண்டுக்கு மேல்ஆகிவிட்டது. வயிற்றைப் பசிநிரப்பியது. வழக்கமான எங்கள் டீக்கடைக்குள் நுழைந்தோம். இருவர் சாப்பிடக் கூடிய ஒரு ரூபா சாப்பாடு அங்கேதான் உண்டு. ஆனால் நாங்கள் நேரத்தைத் தப்பவிட்டதால் சோறு காலியாகியிருந்தது. மத்தியானமும் பாண் சாப்பிடுவதற்கு இன்னும் பயிற்றப்படவில்லை. பழைய பழக்கம் இன்னும் கொஞ்சம் ஒட்டிக் கொண்டுதான் இருந்தது. அடுத்த கடைக்குப் போனோம். அங்கும் அப்படி. இன்னொரு கடையில் ஈக்களின் "ஙொய்" என்ற இரைச்சல். கடைபிசுபிசுத்துக் கொண்டிருந்தது. திரும்பினோம். எங்களுக்கு எதிரே கொஞ்சம் பசையுள்ளவர் களுக்குரிய ஹோட்டல் ஒன்று அருந்தது. எங்கள் கையிலிருந்த நான்கு ரூபாவின் தைரியத்தோடு அங்கு போனோம். சாப்பாட்டை தவிர மற்றவை எல்லாம் வசதியாய் இருந்தன. சாப்பாடு முடிய எதிரே தட்டில் வைக்கப் பெட்டிருந்த பழம் ஒன்றை எடுத்து அவன் உரித்தான்.

"அது கோளிகூட்டுப் பழம்" எச்சரித்தேன் நான்.

"இல்லை புளிவாழை" என்றான் அவன்

"இல்லை அது நன்றாகப் பழுக்காததால் உனக்குத் தெரியவில்லை. கடித்துப்பார் தெரியும்" என்றேன் நான்.

"வீணாக இருபதுசதம் காலி" முகத்தைச் சுழித்தான்.

"கவலைப்படாதே" என்று நான் கூறியபோது எங்களுக்குச் சற்றுத்தொலைவில் பூட்ஸ் கால்கள் சப்திக்கும் ஓர் உருவம் தெரிந்தது. நான் நிமிர்ந்து பார்த்தேன். அந்த உருவம் எங்களைப் பார்த்து விட்டுக் காணாதது போல் முகத்தைத் திருப்பிக் கொண்டது. ஆனால் நான் விடவில்லை. அவனை அடையாளங் கண்ட கொண்டு வேண்டுமென்றே "ஹலோ லம்பெட்" என்று கத்தினேன். அவன் எங்கள் பக்கம் திரும்பி யோசிப்பவன் போல் பாசாங்கு செய்துவிட்டு அப்போதுதான் எங்களை அடையாளங் கண்டுகொள்பவன் போல் "ஹலோ!" என்று போலியாகச் சிரித்துக்கொண்டு அருகே வந்தான்.

"வா மச்சான் வா, கன காலத்துக்குப் பிறகு" என்று கூறிக்கொண்டே காமினி அவனை அருகே அமரவைத்தான். அவன் மிகுந்த அசௌகரியத்தோடு சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே உட்கார்ந்தான்.

லம்பெட் எங்களோடு பள்ளியில் படித்தவன். ஓர் பிரபல தேயிலைத்தோட்டச் சொந்தக்காரன். "டீ குடிப்போமா?" என்றுகேட்ட அவன் குரலில் ஒரு அவசரம் நின்றது.

"இல்லை, இப்போதுதான் சாப்பிட்டோம், புறுட்சலட் என்றால் நல்லாய் இருக்கும்" என்றான் காமினி சிறிதும் கவலையில்லாமல்.

எதுவித பேச்சுமில்லாமல் இரண்டு புறுட்சலட்டுக்கும் தனக்கு ஒரு டீக்கும் ஓடர் கொடுத்தான். கூடவே சிகரட்டுகளும் வரவழைக்கப்பட்டன.

காமினி என்னைப் பார்த்துக் கண்ணைக் காட்டினான். நான் விஷமமாகச் சிரித்தேன். டீயைப் பருகிய லம்பெட் மேல் விழிகளால் எங்களை நோக்கினான். எங்கள் உடையும் தோற்றமும் அவனை ஆறுதலாய் இருக்கவிடவில்லை என்பது அவனது மூக்கு நுனியின் துடிப்பில் தெரிந்தது. நான் சேர்ட் அணிந்து சாரம் உடுத்தியிருந்தேன். காமினி வேர்வை ஏறிய சேட்டும் மங்கற் கால்சட்டையுமாய் குந்தியிருந்தான். லம்பெட்டின் அசௌகரியத்தை ரசித்துக் கொண்டே நாம் புறுட்சலட் அருந்தினோம்.

சிகரட்டை பற்றவைத்த போது எங்கள் பில்லைக் கொண்டுவந்து வைத்தான் சேர்வர். எங்களது சாப்பாட்டுக்குமாக இரண்டு பில் இருந்தது. இரண்டு பில்லையும் லம்பெட்டே எடுத்துக் கொண்டான். அவற்றுக்குரிய பணத்தைக் கட்டியவன் தாமதிக்கவில்லை. "எனக்கொரு அவசரமான விஷயம்" என்று கூறிக் கொண்டு வெளியேறியவன் காரிலே போய்விட்டான்.

"எப்படி திருப்தியா?" என்றேன் நான் காமினியைப் பார்த்து.

"லம்பட்டும் அவர்கள் சம்பிரதாயங்களும்" என்று பகிடி பண்ணியவன், "இனி இரவு சாப்பாட்டுக்கு கவலையிலலை" என்றான் அதே உற்சாகத்தோடு

"அதற்கும் இன்னொரு லம்பட்கிடைப்பான்" என்றேன் நான்

அவன் சிரித்தான். "இப்படியே எல்லா லம்பட்டுகளையும் சாப்பிட்டுவிடலாம்"

வெளியே வந்தபோது வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது.

(1964) (1970 மல்லிகையில் வெளிவந்தது)


NOT
WITHOUT A LIFE INSURANCE POLICY FUTURE IS FRIENDLY
KenKirupa
Insurance Agent
உங்கள் அனைத்து ஆயுட் காப்புறுதி தேவைகளுக்கும்
Liland Insurance Inc, 759 Warden Ave, Scarborough, ON 416.830.8191




## காப்புறுதி உங்களுக்காகவும் உங்களின் அன்புக்குரியவர்களுக்காகவும்..

- **ஆயுட்காப்புறுதி**
  சேமிப்புடன் கூடியது 10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்
- **மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி**
  வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவரும் இணைந்து கொள்ளலாம்.
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
  2 மில்லியன் வரை காப்புறுதித் தொகையாகப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டம்**
  20 வீத அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.

கனடாவின் சிறந்த காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்கள் வசதிக்கேற்ப குறைந்த செலவில் காப்புறுதி பெற்றுக் கொள்ளவும் மற்றும் காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்

# சிறீதரன் துரைராஜா

காப்புறுதி முகவர் (Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x:407





INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

LILAND INSURANCE INC.

RBC Insurance

Digi Media Creations